அமிதசாகரர் இயற்றிய

# யாப்பருங்கலக்காரிகை

மூலமும் உரையும்



T. 24708

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 573

அமிதசாகரர் இயற்றிய

# யாப்பருங்கலக்காரிகை

## மூலமும் உரையும்

சரசுவதி மகால் நூலகச்
சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்

முனைவர் **சோ. கண்ணதாசன்**, M.A., M.Phil.Ph.D

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மன்னர் சரபோசி அரசுக் கல்லூரி (தன்னாட்சி),
தஞ்சாவூர் -5.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம் மற்றும்
ஆய்வு மையம்,
தஞ்சாவூர்.**

2016] [விலை: ரூ. **150-00**

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | யாப்பருங்கலக்காரிகை |
| பதிப்பாசிரியர் | : | முனைவர்<br>சோ.கண்ணதாசன் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர்,<br>சரசுவதி மகால் நூலகம்,<br>தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 573 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2016 |
| தாள் | : | TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : | 21 X 14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 284 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சுக்கோப்பு<br>மற்றும் ஒளி அச்சு,<br>சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | லேமினேசன் அட்டை |
| பொருள் | : | இலக்கணம் |
| ISBN | : | 978-93-85343-11-7 |
| விலை | : | ரூ. 150-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

உலகில் மிகப் பழமையான நூலகங்களுள் தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகமும் ஒன்று. இந்நூலகத்தில் தமிழ் மறை, வேதம், இலக்கியம், இலக்கணம், ஆயுர்வேதம், சோதிடம், சித்த வைத்தியம் முதலிய அனைத்து துறைகளிலும் பன்மொழிகளிலும் சுவடி வடிவில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதோடு மட்டுமின்றி இச்சுவடிகளில் வெளிவராத அரிய தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அவற்றை நூலக மொழிப் பண்டிதர்களைக் கொண்டோ அல்லது துறை சார்ந்த வல்லுநர்கள், பேராசிரியர்கள், உதவிப்பேராசிரியர் ஆகியோர்களை நூலக சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்களாக நியமித்தோ அவர்களின் மூலம் (சுவடிகளை) நூல்களாகப் பதிப்பித்து அச்சிட்டு வெளியிடும் பணி தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றது. யாப்பருங்கலக் காரிகை என்னும் நூல் தற்பொழுது முதல் பதிப்பாக வெளிவருகிறது.

தமிழிலக்கணத்தில் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பெரும் பிரிவுகள் சொல்லப்பட்டன. பொருள் இலக்கணம் பிற்காலத்தில் அகப்பொருள், புறப்பொருள், அணியியல், யாப்பியல் என்பதாக வளர்ந்து தனித்தனியே நூல் வடிவம் பெற்றன. இதனடிப்படையில் யாப்பிலக்கண நூல்கள் பல எழுந்தன. அவற்றுள் அமிதசாகரர் இயற்றிய யாப்பருங்கலக் காரிகை என்னும் நூல் இலக்கணம் பயிலும் மாணவர்களுக்கு தனித்தன்மை வாய்ந்த நூலாகத் திகழ்கின்றது எனில் அது மிகையாகாது. இச்சுவடி கையெழுத்துப் பிரதியில் காணப்படும் எழுத்தாளரது பிழைகளை சரி செய்து இதனை பிற அச்சுப் புத்தகங்களுடன் ஒப்பிட்டு பாடபேதங்கள் மற்றும் அவற்றில் இடம்பெற்றுள்ள மேற்கோள்களையும் தந்து, பின்னிணைப்பில் கட்டளைக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை இலக்கணங்கள், இயல்வாரியாக தொகுக்கப்பட்ட நூலின் அளவு

எண்ணிக்கை குறித்த விவரப்பட்டியல், இயல் வாரியாக காரிகைகளின் அகர வரிசைப்பட்டியல் ஆகியவற்றுடன் பதிப்பித்தளித்த நூலக சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் முனைவர் சோ. கண்ணதாசன் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதியுதவி நல்கிய அரசுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திருமதி **அ. பூங்கோதை,** M. A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M. A., B.Lit. M.L.I.S. Ph.D அவர்களுக்கும், சரசுவதி மகால் நூலக ஒளி அச்சுப்பிரிவினருக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் தமிழிலக்கணம் பயிலும் மாணவர்களுக்கும், தமிழ்மொழி ஆர்வலர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் அரிய பொக்கிஷமாகும்.

தஞ்சாவூர்,
16-04-2016

**டாக்டர் என். சுப்பையன், இ. ஆ. ப.,**
**மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்**
**இயக்குநர்.**

# பதிப்புரை

பழந்தமிழர்களின் கருத்து வெளிப்பாட்டிற்கான தொடர்பு சாதனங்களில் சுவடியும் ஒன்றாகும். இவற்றின் வாயிலாகத் தத்தம் காலத்து விழுமியங்கள், நம்பிக்கைகள், பட்டறிவு போன்றவற்றைப் பதிவு செய்தனர். இத்தகைய பழமையும் முதன்மையும் வாய்ந்த தொடர்பு சாதனத்தைப் பாதுகாப்பதையும் அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்வதையும் பயிற்றுவிப்பதையும் தன்னுடைய முதன்மைப் பணியாகக் கொண்டு தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகம் செயலாற்றிக் கொண்டு வருகிறது. இவ்வகையில் இந்நூலகம் அரிய சுவடிகளின் கருவூலமாகத் திகழ்ந்து வருவதோடு, பன்மொழிச் சுவடிகளைப் பதிப்பித்து நூல்களாக வெளியிடும் பணியினையும் பயனுற ஆற்றி வருவது இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகு பணியின் பயனாக, யாப்பிலக்கண நூல். பதிப்பிக்கப் பெற்று இந்நூலக வெளியீடாக வெளிவருகின்றது பண்டைய காலத்தில் எழுத்து, சொல், பொருள் என மூன்றாய் வழங்கிய பிரிவில், பொருளின் ஒரு கூறாக யாப்பு விளங்கியது. இப்பொருளதிகாரமே பிற்காலத்தில் அகப்பொருள், புறப்பொருள், அணியியல், யாப்பியல் எனத் தனித்தனி அதிகாரங்களாக வளரத் தலைப்பட்டன.

இவ்வகையில் சங்க யாப்பு, அவிநயம், நற்றத்தம், காக்கைபாடினியம், சிறுகாக்கைபாடினியம், பல்காயம், பாட்டியல், மயேச்சுரம், யாப்பியல், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்பனவாகத் தனித்துத் தோன்றிய யாப்பிலக்கண நூல்கள் பலவாகும்.

**நூலாசிரியர்**

மேற்சுட்டிய யாப்பிலக்கண நூல்களுள் இன்று பலராலும் பயிலப்படும் தனித்தன்மை வாய்ந்த நூலாகத் திகழ்வது அமிதசாகரர் இயற்றிய "யாப்பருங்கலக்காரிகை" எனும் நூலாகும். இந்நூலாசிரியரை அமிதசாகரர், அமுதசாகரர், அமிர்தசாகரர் எனப் பலவாறாகக் குறிப்பிட்டு வழங்குகின்றனர். எனினும் "அமிதசாகரர்" எனும் பெயரே வழங்கியமையை யாப்பருங்கலப்பாயிரத்தில் வரும்,

"அளப்பருங் கடற்பெயர் அருந்தவத் தோனே" என்னும் தொடராலும் அறியலாம். இவ்வாறே நீடூர்க் கல்வெட்டிலும், "தண்டமி ழமித சாகர முனியை" எனக் குறிப்பிடப் பட்டிருப்பதாலும் தெளியலாம்.

**ஊர்**

இவர் சமண சமயத்தவர் என்பதை, "கந்த மடிவில்" எனத் தொடங்கும் தற்சிறப்புப்பாயிரமும் வெளிப்படுத்தக் காணலாம். மேற்குறித்த நீடூர்க் கல்வெட்டின் வழி, இவர் இந்நூலினை இயற்றிய இடம் "குளத்தூர்"என்பதும், பின்னர் இவ்வூர்க் "காரிகைக் குளத்தூர்" என வழங்கப்பெற்று வருவதைக்கொண்டும் உணரலாம். வீரசோழிய உரைக்காரராகிய பெருந்தேவனார் காட்டிய எடுத்துக்காட்டாலும், குலோத்துங்க சோழனின் நீடூர்க் கல்வெட்டில் காணப்பெறும் குறிப்புக் கொண்டும் இவரைக் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவராகக் கருதலாம்.

இந்நூல் தாமியற்றிய யாப்பருங்கலம் என்னும் நூலிற்குத் துணை (சார்பு) நூலாகத் தோன்றியமையை, "யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய், அலங்காரம் உடைத்தாய் செய்யப்பட்டமையால், யாப்பருங்கலக்காரிகை என்னும் பெயர்த்தாயிற்று" என்ற உரையாசிரியர் குணசாகரர் கூற்றும் மெய்ப்பிக்கக் காணலாம்.

**உரையாசிரியர்**

இந்நூலுரையாசிரியர் குணசாகரர் பெயரும், அமிதசாகரருடைய ஆசிரியர் பெயரும் ஒன்றாயிருத்தலால் இருவரும் ஒருவரே எனச் சிலர் கருதுவர். ஆயினும், இருவரும் வெவ்வேறானவர் என்பதே அறிஞர்களின் கருத்தாகும். பாட்டன் பெயரினைப் பேரனுக்கு இட்டு வழங்குவது போல, ஓர் ஆசிரியர் தம் மாணவருக்குத் தம் ஆசிரியர் பெயரை வழங்குவதும் மரபாகும். இம்மரபின் உண்மையை ஞானாசிரியர்கள் பரம்பரையிலும் காணலாம். இவ்வகையில் அமிதசாகரர் தம்மாசிரியர் பெயராகிய குணசாகர பட்டாரகர் பெயரினைத் தம் மாணவருக்கும் இட்டு வழங்கியிருக்கலாம். இவ்வாறாயின் இவருடைய காலம் கி.பி.பதினொன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி எனக் கருதலாம்.

எனினும், இவர் இன்ன ஊரினர் என்றோ, பெற்றோர் இன்னோர் என்றோ அறிய இயலவில்லை என்றாலும், இவர் சோழ நாட்டினர் என்பதைச் "செந்தமிழ் நிலமாவது சோணாடே" என்பதற்குக் காட்டியுள்ள ஆசிரியப்பாக் கொண்டு ஊகித்தறிய முடிகிறது. இவர் தம்முரையில் எடுத்துக்காட்டியுள்ள சமணச் சார்புடைய பாடல்கள் வழி இவரையும் சமண சமயம் சார்ந்தவரெனக் கருத இடமுண்டு.

இவரது வரலாற்றைத் தெளிவாக அறியமுடியாத நிலையில், அவருடைய புலமைத் திறத்தினை நமக்கு இவரின் உரையானது தெற்றெனப் புலப்படுத்திடக் காணலாம்.

இவ்வுரையாசிரியர் குறிப்பிடும் இந்நூலிற்கான பெயர்க்காரணம் ஒருபுறம் இருந்தாலும், ஆசிரியர் காரிகைகளைக் கட்டளைக் கலித்துறையில் மகடூஉவை முன்னிலைப்படுத்திக் கூறுவதால், "யாப்பருங்காலக்காரிகை" எனும் பெயரினைப் பெற்று வழங்கலாயிற்று எனக் கூறலும் பொருத்தமுடைத்தாகும்.

இந்நூல் தமிழிலக்கியம் பயில்வோருக்குப் பாடநூலாக விளங்கி வருவதால், பல்வேறு பதிப்பகங்கள் வாயிலாக வெளிவந்துள்ளன. எனினும், இந்நூற்பதிப்பு முதன்முதலாக சரசுவதி மகால் நூலகச் சுவடியை அடிப்படையாகக் கொண்டு பதிப்பிக்கப்பெறுகிறது. இவ்வகையில் பதிப்பிக்க எடுத்துக்கொண்ட இச்சுவடிப்பிரதி மூலமும் உரையுமென இருபகுதிகளைக் கொண்டு திகழ்கிறது.

## பதிப்புமுறை

சரசுவதி மகால் நூலகத்தில் 642, 644 சுவடி எண் கொண்ட யாப்பருங்கலக்காரிகை சுவடிகள் இரண்டு மட்டுமே இடம்பெற்றுள்ளன. இவற்றுள் ஏடுகள் பல சிதைந்த நிலையில் சுவடி எண். 644 காணப்படுகிறது. இதன் காரணமாக இச்சுவடியை விடுத்து, சிற்சில ஏடுகள் மட்டுமே எழுத்துக்கள், சொற்கள், சொற்றொடர்கள் என்ற நிலையில் ஆங்காங்கே சிதைந்து காணப்படுகின்ற சுவடி எண். 642ஐப் பதிப்பிப்பதற்கு எடுத்துக் கொண்ட நிலையில், இச்சுவடியின் கையெழுத்துப் பிரதி கொண்டு, பதிப்பிப்பதற்கு மேற்கொண்ட முறைமைகள் வருமாறு..

மேற்குறித்த சுவடியைப் பதிப்பிக்கும் போது கையெழுத்துப் பிரதியில் காணப்பெற்ற எழுத்துப் பிழைகள், தொடர்ப் பிழைகள் ஆகியன பிற அச்சுப்பிரதிகளுடன் ஒப்புநோக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பெற்றன. மேலும் காரிகை தொடங்கும் இடத்தில் காரிகைகளுக்கான தொடர் எண்ணும் அக்காரிகைகளின் உரை முடிவில் தடித்த எழுத்தில் அந்தந்த இயல்களுக்கான தொடர் எணணும் தரப்பட்டுள்ளன.

இவ்வாறே உரையாசிரியரால் இயற்றப்பட்டனவாக ஒவ்வோர் இயல்களின் இறுதியிலும் இடம்பெற்றுள்ள சூத்திரங்களின் முதனினைப்புக் காரிகைகள், உரைச் சூத்திரக் காரிகைகள் ஆகியன தொடங்கும் இடத்தில் "உரையாசிரியர்" என்பதன் சுருக்கமாகிய "உ .ஆ." என்பதுடன் தொடர் எண்ணும், அச்சூத்திரங்களின் முடிவில் தடித்த எழுத்தில் அவ்வவ்வியல்களுக்கான தொடர் எண்ணும் தரப்பட்டுள்ளன.

இச்சுவடிக் கையெழுத்துப் பிரதியிலும், பிற அச்சுப் பிரதிகளிலும் இடம்பெற்றுள்ள இலக்கண, இலக்கிய மேற்கோள்களில் பாடபேதங்கள் காணப்பெறுகின்றன. அவற்றை இப்பதிப்பில் சுட்டிக் காட்டாமல், வித்துவான் எம்.வி. வேணுகோபாலப்பிள்ளையால் 1960இல் பதிப்பிக்கப் பெற்று விருத்தியுரையாக வெளிவந்துள்ள "யாப்பருங்கலம்" எனும் நூலில் காணப்பெறும் ஒருமைப்பாடு கருதி இந்நூலின் பாடங்களே பாடபேதமின்றி மேற்கோள்களாக இப்பதிப்பில் எடுத்தாளப்பெற்றுள்ளன.

அதே நேரத்தில் மேற்சுட்டிய விருத்தியுரையில் பாடபேதங்களுடன் உரைமேற்கோள்கள் இடம் பெற்றிருந்தால், அப்பாடபேதச் சொற்களின் மேல் சிறிதாக எண்ணிட்டு, அச்சொற்களின் பாடபேதங்கள் அந்தந்த பக்கங்களின் கீழ்த்தரப்பட்டுள்ளன.

இவ்வாறே இச்சுவடிப் பிரதியைப் பிற அச்சுப் பிரதிகளுடன் ஒப்புநோக்கியபோது, "மாஞ்சீர் கலியுட் புகா" (காரிகை-38) எனத் தொடங்கும் காரிகைக்கு மேற்கோளாக இச்சுவடியில்,

> இயற்சீர் நேரில தன்தளை யடைய
> கலிக்கியல் பிலவே காணுங் காலை
> வஞ்சி யுள்ளும் வந்த தாகா
> வாயினும் ஒரோவிடத் தாகு மென்ப.

என்ற பல்காயனார் நூற்பா காட்டப்பட்டுள்ளது.

இங்குக் காட்டப்பட்டுள்ள இம்மேற்கோள் நூற்பா, நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் செய்து தந்த திருத்தங்களுடன் முல்லை நிலைய வெளியீடாக வந்துள்ள காரிகை நூலில்,

இயற்சீர் நேரீற்றுத் தன்தளை யடைதல்
கலிக்கியல் பிலவே காணுங் காலை
வஞ்சி யுள்ளும் வரத்தகா வாயினும்
ஒரோவிடத் தாகு மென்ப. (ப. 160)

என்று பாட வேறுபாட்டுடன் இடம்பெற்றிருக்கிறது.

இவ்வாறே வித்துவான் எம். வி. வேணுகோபாலப்பிள்ளை விருத்தியுரையாகப் பதிப்பித்துள்ள "யாப்பருங்கலம்" எனும் நூலில் மேற்கோளாக இடம்பெற்றுள்ள, மேற்குறித்த பல்காயனார் நூற்பா கீழ்வருமாறு,

இயற்சீர் இறுதிதேர் இற்ற காலை
வஞ்சி யுள்ளும் வந்த தாகா
வாயினும் ஒரோவிடத் தாகு மென்ப
(யா. வி. சூ. 15 உரைமேற்.)

என்று பாட வேறுபாட்டுடன் இடம் பெற்றுள்ளது.

இங்ஙனமே ச. வே. சுப்பிரமணியன் பதிப்பித்த "தமிழ் இலக்கண நூல்கள்" எனும் நூற்றொகுப்பில் "பல்காயம்" எனும் தலைப்பில் இடம்பெற்றுள்ள பகுதியில்,

இயற்சீர் நேரிறல் தன்தளை யடைய
கலிக்கியல் பிலவே காணுங் காலை
வஞ்சி யுள்ளும் வரத்தகா வாயினும்
ஒரோவிடத் தாகு மென்பனார் புலவர் (ப. 117)

எனும் இந்நூற்பா வேறுபாட்டுடன் காணப்படுவதை நோக்கும்போது, இப்பல்காயனார் நூற்பா ஒவ்வொரு நூலிலும் வேறுபாடுகளுடன் இடம்பெற்றுள்ளதை இச்சான்றுகளால் அறியலாம்.

**குறியீடுகள்**

இச்சுவடிப் பதிப்பில் பதிப்பாசிரியரின் இயல், காரிகை பற்றிய கருத்துச் சுருக்கம் ( ) எனும் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளது.

இப்பதிப்பில் இடம்பெற்றுள்ள மேற்கோள்கள் இன்ன நூலினது என்பதை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக, ஏனைய அச்சுப்பிரதிகளின் உதவியோடு, அம்மேற்கோள் குறித்த விவரங்கள் (தொல். எழுத்து. 5) என்பதாக அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளன.

மேலும், ஒரே நூலிலிருந்து அம்மேற்கோள் விவரங்கள் தொடர்ந்து இடம்பெற்றிருந்தால், ஒவ்வொரு மேற்கோள்களுக்கும் தனித்தனியே அடைப்புக்குறிக்குள் விவரம் தரப்படாது, இறுதியாக இடம்பெற்றுள்ள மேற்கோளின் முடிவில் மட்டும் (தொல். பொருள். 526-545) என்பதான விவரம் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

இவ்வகையில் விருத்தியுரையில் இன்ன நூலின என்று அறிய முடியாத மேற்கோள்கள், காரிகையுரையிலும் இடம்பெற்றிருந்தால் அம்மேற்கோள் குறித்த விவரங்கள் (யா. வி. சூ. 8 உரைமேற்.) என்பதாக அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளன.

இத்தகைய விருத்தியுரை மேற்கோள்கள் காரிகையுரையில் தொடர்ந்து கையாளப்பெற்றிருந்தால், அம் மேற்கோள்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே விவரம் அடைப்புக்குறிக்குள் தரப்படாது. அம்மேற்கோள்களின் முடிவில் மட்டும் (யா. வி. சூ. 3 உரைமேற்கோள்கள்) என்பதாக விவரம் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

இவ்வகையில் இரண்டு மேற்கோள்கள் விருத்தி, காரிகை உரைகளில் ஒரே விதமாக இடம்பெற்றிருக்க, மற்ற அச்சுப்பிரதிகளில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இந்நிலையில் சுவடி, விருத்தி மூலத்தை முதலில் தந்த பின்னர் அவ்விடத்திலேயே பிற அச்சுப்பிரதி மூலம் பகர [ ] அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

இங்ஙனமே, இந்நூலகச் சுவடிப் பிரதியில் இடம் பெறாது பிற அச்சுப்பிரதிகளில் இடம்பெற்றுள்ள கருத்துக்கள், மேற்கோள்கள், பயில்வோர் நலன் கருதிப் பகர அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளன.

இச்சுவடிப்பிரதியில் எழுத்துக்கள், சொற்கள், செற்றொடர்கள் ஆங்காங்கே சிதைந்து காணப்பட்ட பகுதிகள், பிற அச்சுப்பிரதிகளின் துணைகொண்டு பதிப்பிக்கப் பெற்றன என்பதைப் பயில்வோர் அறிந்திடும் வகையில், அப்பகுதிகள் இருபுறமும் வெளியே உடுக்குறியுடன் கூடிய பகர அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

இவ்வாறே இச்சுவடிப்பிரதியில் மட்டும் காணப்படுகின்ற பகுதிகளின் முடிவில் உடுக்குறியிட்டு, அடிக்குறிப்பாக அப்பக்கத்தின் கீழே தொடங்கும் சொல்லுடன் தொடர்ப்புள்ளியிட்டு இறுதிச் சொல்லின் முடிவில் உடுக்குறியிட்டு, எனும் இப்பகுதி இச்சுவடிப்பிரதியில் மட்டுமே காணப்படுகிறது. பிற அச்சுப்பிரதியில் காணப்பெறவில்லையென்ற குறிப்பும் தரப்பட்டுள்ளது.

**பின்னிணைப்புகள்**

பிற அச்சுப்பிரதிகளில் பின்னிணைப்பாக இடம் பெற்றுள்ள கட்டளைக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை இலக்கணங்கள், கற்போர் பயன் கருதி, இச்சுவடிப் பதிப்பிலும் பகர அடைப்புக்குறிக்குள் பின்னிணைப்பு-1 என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

இயல்வாரியாகத் தொகுக்கப்பெற்ற நூலின் அளவு, எண்ணிக்கைக் குறித்த விவரப்பட்டியல் பின்னிணைப்பு- 2இல் தரப்பட்டுள்ளது.

உரையாசிரியர் குணசாகரரின் உரைச்சூத்திரக்காரிகைகளின் அளவு எண்ணிக்கை குறித்த விவரப் பட்டியல் பின்னிணைப்பு-3இல் தரப்பட்டுள்ளது.

இதேபோன்று காரிகைகளின் அகர வரிசைப்பட்டியல் இயல் வாரியாகப் பின்னிணைப்பு-4, 5, 6இல் தரப்பட்டுள்ளன. இவ்வாறே உரைச்சூத்திரக்--காரிகைகளின் அகரவரிசைப்பட்டியல் பின்னிணைப்பு-7இல் தரப்பட்டுள்ளது. இங்ஙனம் சுவடிப் பதிப்பின் வாயிலாகப் பல்வேறு பாடபேதங்கள் இவண் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**நன்றியுரை**

நிறைவாக, இத்தகையதொரு தமிழ்ச்சுவடி நூலினைப் பதிப்பித்து வெளியிட மகிழ்வுடன் அனுமதி வழங்கிய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநருமான **டாக்டர் என். சுப்பையன்,** இ.ஆ.ப., அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்நூல் வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திருமதி. **அ. பூங்கோதை,** M. A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M.A., B.Lit. M.L.I.S. Ph.D அவர்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் நூலினைப் பதிப்பிக்க ஆலோசனைகள் வழங்கிய சரசுவதி மகால் நூலகத் தமிழ்ப்பண்டிதர் திரு. மணி. மாறன் அவர்களுக்கும், பதிப்பிப்பதற்கு நுண்ணாய்வு உரை வழங்கிய முனைவர் வெ. சத்யநாராயணன், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, மன்னர் சரபோசி அரசு கல்லூரி அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

இந்நூலை நன்கு அச்சிட்டுத் தந்த நூலக ஒளி அச்சுக்கோப்புப் பிரிவினருக்கும் மற்றும் நூலகப் பணியாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*தஞ்சாவூர்,*
*07-04-2016.*

**சோ. கண்ணதாசன்**

அமிதசாகரர் இயற்றிய

# யாப்பருங்கலக் காரிகை

## மூலமும் உரையும்

### தற்சிறப்புப்பாயிரம்

(பாயிரம் என்பதன் பொருள் நூலின் வரலாறு என்பதாகும். இப்பாயிரத்தின் இன்றியமையாமையை,

ஆயிரம் முகத்தான் அகன்ற தாயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே *(நன். : 54)*

என்பதனால் உணரலாம், இப்பாயிரம் இருவகைப்படும் என்பதனை,

பாயிரம் பொதுச்சிறப் பெனவிரு பாற்றே *(நன். : 2)*

என்ற வழியும் அறியலாம். இவற்றுள் சிறப்புப் பாயிரத்தை இன்ன இன்னார் செய்தற்குரியர் என்பதனை,

தன்னா சிரியன் றன்னொடு கற்றோன்
தன்மா ணாக்கன் றகுமுரை காரனென்
றின்னோர் பாயிர மியம்புதல் கடனே *(நன். : 51)*

என்று சுட்டிக் கூறியிருப்பதன் வழி அறியலாம். இக்கூற்றின் வழி நூலாசிரியனே பொதுப்பாயிரத்தை இயற்றலாம் என்பதையும், சிறப்புப் பாயிரத்தை இயற்றும் மரபின்மையையும் தெளியலாம். இம்மரபினின்று நூலாசிரியனே விலகி வணக்கம், அதிகாரம் இரண்டையும் தாமே பாயிரமாக இயம்பின் அது தற்சிறப்புப் பாயிரம் ஆகும் என்பதனை,

**தெய்வ வணக்கமும் செயப்படு பொருளும்**
**எய்த உரைப்பது தற்சிறப் பாகும்**

(தற்சிறப்புப்பாயிர மேற்கோள்)

எனும் இம்மேற்கோள் வழி அறியலாம்.

இத்தகு இயல்பினையுடைய தற்சிறப்புப்பாயிரத்தைக் கூறுமிடத்து,

**தோன்றா தோன்றித் துறைபல முடிப்பினும்**
**தான்றற் புகழ்தல் தகுதி யன்றே**

(நன்.: 52)

என்ற கூற்றிற்கொப்பவே அவையடக்கமும் இயம்புவர்.

இவ்வகையில் காரிகையாசிரியர் தற்சிறப்புப் பாயிரத்தைத் தாமே இயற்றி உள்ளவழி, அவைக்கு அடங்கிய அடக்கம். அவையை அடக்கிய அடக்கம் என்ற இருவகை அரங்கேற்ற உத்திகளைக் கையாண்டு அவையடக்கமும் கூறியுள்ளார்.

இனி, இத்தகு தற்சிறப்புப்பாயிரத்திற்கு உரையாசிரியர் குணசாகரர் உரை கூறுமிடத்து நூற்பெயர், காரணம், ஆக்கியோன் பெயர், அளவு. பயன் முதலான பல செய்திகளை விளங்கக் கூறியுள்ளதை இனிக் காண்போம்.)

1. **கந்த மடிவிற் கடிமலர்ப் பிண்டிக்கண் ணார்நிழற்கீழ்**
**எந்த மடிக ளிணையடி யேத்தி யெழுத்தசைசீர்**
**பந்த மடிதொடை பாவினங் கூறுவன் பல்லவத்தின்**
**சந்த மடிய அடியான் மருட்டிய தாழ்குழலே.**

என்பது காரிகை. நூலையுரைக்குமிடத்து நூற்பெயரும், காரணமும், ஆக்கியோன் பெயரும், அளவும், பயனுமுரைத் துரைக்கற் பாற்று [1].

---

1. எடுத்துரைக்கற்பாற்று

அற்றேல், இந்நூல் என்ன பெயர்த்தோ எனின், பாளித்தியம் என்னும் பாகத இலக்கணமும், பிங்கலம் என்னும் சந்தோபிசிதமும் போலக் காரிகை யாப்பிற்றாய்க் குணகாங்கியம் என்னும் கருநாடக சந்தமே போல மகடூஉ முன்னிலைத்தாய் அவையடக்கமும் உடைத்தாய், மயேச்சுரர் யாப்பே போல உதாரணம் எடுத்தோதி, இசைத்தமிழ்ச் செய்யுள்துறைக்கோவையே போலவும், அருமறையகத் தட்டகவோத்தின் வருக்கக் கோவையே போலவும், உருபாவதாரத்திற்கு நீதகச் சுலோகமே போலவும், முதனினைப் புணர்த்திய இலக்கியத்தாய், வேதத்திற்கு நிருத்தமும், வியாகரணத்திற்குக் காரிகையும், அவிநயர் யாப்பிற்கு நாலடி நாற்பதும் போல 'யாப்பருங்கலம்' என்னும் யாப்பிற்கு அங்கமாய், அலங்காரம் உடைத்தாகச் செய்யப்பட்டமையால் 'யாப்பருங்கலக்காரிகை' யென்னும் பெயர்த்தாயிற்று.

இந்நூல் யாது காரணமாகச் செய்யப்பட்டதோ எனின் பண்டையோர் உரைத்த தண்டமிழ் யாப்பிற் கொண்டிலாத குறியினோரைக் குறிக்கொளுவுதல் காரணமாகவும் தொல்லைப் பனுவல் துணிபொருள் உணர்ந்த நல்லவையோரை நகுவிப்பது காரணமாகவும் செய்யப்பட்டது,

இந்நூல் யாவரால் செய்யப்பட்டதோ எனின், ஆரிய மென்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகையாக்கித் தமிழ்ப் படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமிதசாகரர் என்னும் ஆசிரியராற் செய்யப்பட்டது.

இந்நூல் எவ்வளவைத்தோ எனின், ஒத்து[1] வகையான் மூன்றும், காரிகை வகையால் நாற்பத்து நான்கும், கிரந்த வகையால் தொண்ணூறு கிரந்தமும், இருபத்தெட் டெழுத்தாமெனக் கொள்க. அவற்றுள் ஒரு கிரந்தமாவது ஒற்றொழித்து உயிரும் உயிர்மெய்யு மாகிய முப்பத்திரண்

1. இயல்.

டெழுத்தாமெனக் கொள்க. அவற்றுள் நேரசை முதலாகிய காரிகை இருபத்தொன்றும், நிரையசை முதலாகிய காரிகை இருபத்துமூன்றுமெனக் கொள்க.

நேரசை முதலாகிய காரிகை ஒன்றினுக்கு எழுத்து அறுபத்து நான்கும் நிரையசை முதலாகிய காரிகை ஒன்றினுக்கு எழுத்து அறுபத்தெட்டுமெனக் கொள்க. இவ்விரு திறமுங் கூட்டி உறழ இரண்டாயிரத்துத் தொள்ளாயிரத்தெட்டு எழுத்தாமெனக் கொள்க. நேரசை முதலாகிய காரிகை ஒற்றொழித்து ஓரடிக்கெழுத்துப் பதினாறும், நிரையசை முதலாகிய காரிகை ஒற்றொழித்து ஓரடிக்கெழுத்துப் பதினேழுமெனக் கொள்க. என்னை,

**அடியடி தோறு மைஞ்சீ ராகி**
**முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்**
**கடையொரு சீரும் விளங்கா யாகி**
**நேர்பதி னாறே நிரைபதி னேழென்**
**றோதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே**[1]

என்றாராகலின்,

இந்நூலாற் பயன் யாதோவெனின், யாப்பாராய்தல் பயன்.

யாப்பு ஆராயவே பா, தாழிசை, துறை, விருத்தங்களால் ஆக்கப்பட்ட அறம் பொருள் இன்பம் வீடு என்னும் இவற்றின் மெய்ம்மையறிந்து, விழுப்பமெய்தி இம்மை மறுமை வழுவாமல் நிகழ்வாராதலின் இருமைக்கும் உறுதிபயப்பது யாப்பெனக் கொள்க.

யாப்பெனினும், பாட்டெனினும், தூக்கெனினும், தொடர்பெனினும், செய்யுளெனினும் ஒக்கும். என்னை,

---

1. இச்சுவடிப் பிரதியில் இறுதி ஈரடிகளே காணப்படுகின்றன.

யாப்புந்

தூக்கும் பாட்டும் தொடர்புஞ் செய்யுளை

நோக்கிற் றென்ப நுணங்கி யோரே[1]

(யா.வி.சூ.1 உரைமேற்.)

என்றாராகலின்.

இந்நூல் உறுப்பியலோத்தும், செய்யுளியலோத்தும், ஒழிபியலோத்தும் என மூவகைப்படும்[2]

அவற்றுள் இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின், எழுத்தும், அசையும், சீரும், தளையும், அடியும், தொடையும் ஆகிய ஆறு உறுப்பினையும் உணர்த்திற்றாதலால் உறுப்பியலோத்து என்னும் பெயர்த்து [3].

இவ்வோத்தினுளிக் காரிகை என்னுதலிற்றோயெனின், தற்சிறப்புப்பாயிரம் உணர்த்துதல் நுதலிற்று. என்னை;

வணக்க மதிகார மென்றி ரண்டுஞ் சொல்ல

சிறப்பென்னும் பாயிர மாம்

(யா.வி.சூ.1 உரைமேற்.)

என்றார் அவிநயனார்.

தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளு

மெய்த வுரைப்பது தற்சிறப் பாகும்.

என்றாராகலின்,

## அருஞ்சொற்பொருள்

[கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்கண் ணார்நிழற்கீழ்

எந்த மடிக ளிணையடி யேத்தி.

கந்தம்-நறு நாற்றம், மடிவு-கேடு, இல்-இல்லாமை, கடி-மிகுதி, மலர்-பூ, பிண்டி-அசோகு, கண்-இடம்,

---

1. நுணங்கி னோரே. 2. இயலோத்து - ஒருபொருட் பன்மொழி

3. பெயர்த்தாயிற்று.

ஆர்தல்-நிறைதல், நிழல்-சாயை, கீழ்-பக்கம், எம்மும் தம்மும் இடைச்சொற்கள், அடிகள்-சுவாமிகள், இணையடியேத்தி-இணையான சீர்ப் பாதங்களை வாழ்த்தி.

**எழுத்தசைசீர், பந்த மடிதொடை பாவினங் கூறுவன்**

எழுத்து-அசைக்குறுப்பாகும் தன்மையின் அடிப் படையில் பதின்மூன்று பெயர் வேறுபாடுகளை உடைய எழுத்துக்கள் உயிர்,மெய், சார்பு ஆகிய முப்பத்து மூன்று. அசை-நேரும் நிரையுமாக அவ்வெழுத்துக் கூடின அசை யிரண்டு. சீர்-அவ்வசை கூடின சீர்முப்பது. பந்தம்-அச்சீர் கூடின தளை ஏழு. அடி-அத்தளை கூடின அடி ஐந்து. தொடை-அவ்வடி கூடின தொடை நாற்பத்துமூன்று. பா-அத்தொடை கூடின பா ஐந்து. இனம்-அப்பாக் கூடின இனம் மூன்று. கூறுவன்-இவ்வெட்டினையும் சொல்லுவன்.

**பல்லவத்தின், சந்த மடிய வடியான் மருட்டிய தாழ்குழலே**

பல்லவம்-தளிர், சந்தம்-நிறம், மடிய-கெட, அடியான்-பாதத்தான், மருட்டிய-மயக்கிய, தாழ்குழல்-நீண்டு தாழ்ந்த கூந்தல்.]

### பொழிப்புரை

'கந்த மடிவில்...........தாழ்குழலே' என்பது முருகு விரியும் மொய்ம்மலரசோகின் கீழிருக்கும் அருகனது அடி வணங்கி எழுத்தும், அசையும், சீரும், தளையும், அடியும், தொடையும், பாவும், பாவினமும் ஆமாறுரைப்பன். தளிர்புரையுஞ் சிறுமெல்லடித் தகை நெடுங்குழற் றையலாய் என்றவாறு. என்னை,

> பொழிப்பெனப் படுவது பொருந்திய பொருளைப்
> பிண்ட மாகக் கொண்டுரைப் பதுவே
>
> *(யா.வி.சூ.1 உரைமேற்.)*

என்றாராகலின்,

[கந்த மடிவில்.........இணையடி யேத்தி என வணக்கம் சொல்லப் பட்டது.

'எழுத்து........இனங்கூறுவன்' என அதிகாரம் கூறப்பட்டது.] என்னை,

வழிபடு தெய்வ வணக்கஞ் செய்து
மங்கல மொழிமுதல் வகுத்து
எடுத்துக் கொண்ட இலக்கண இலக்கியம்
இடுக்கண் ணின்றி இனிது முடியும்

*(யா. வி. சூ.1 உரைமேற்.)*

என்பவாகலின் ஈண்டு வணக்கம் செய்யப்பட்டது.

இனி யெழுத்து முதலாகிய எட்டினையுங் காரணக் குறியான் வழங்குமாறு. என்னை;

எழுதப் படுதலின் எழுத்தே; அவ்வெழுத்
தசைத்திசை கோடலின் அசையே; அசையியைந்து
சீர்கொள நிற்றலின் சீரே; சீரிரண்டு
தட்டி நிற்றலின் தளையே; அத்தளை
அடுத்து நடத்தலின் அடியே; அடியிரண்டு
தொடுத்தல் முதலாயின தொடையே; அத்தொடை
பாவி நடத்தலிற் பாவே; பாவொத்து
இனமா நடத்தலின் இனமெனப் படுமே

பந்தம் எனினும்; தளையெனினும் ஒக்கும். என்னை;

பகுத்தெதிர் நிற்றலிற் பந்தந் தளையென
வகுத்தனர் மாதோ வண்டமி ழோரே

*(யா. வி. சூ.1 உரைமேற்.)*

என்றாராகலின் வரலாறு.

'பல்லவத்தின்; சந்த மடிய வடியான் மருட்டிய தாழ்குழலே' என்பது மகடூஉ முன்னிலை, ஏகாரம் ஈற்றசை. (1)

## அவையடக்கம் - 1

(காரிகையாசிரியர் உயர்ந்த தமிழை என் சிறுமை பொருந்திய நாவைக் கொண்டு கூறினேன் என உரைப்பது அவைக்கு அடங்கியது)

**2. தேனார் கமழ்தொங்கல் மீனவன் கேட்பத்தெண்**
**ணீரருவிக்**
**கானார் மலயத் தருந்தவன் சொன்னகன்**
**னித்தமிழ்நூல்**
**யானா நடாத்துகின் றேனென் றெனக்கே நகைதருமால்**
**ஆனா வறிவின வர்கட்கென் னாங்கொலெ னாதரவே**

இக்காரிகை நூலினது பெருந்தன்மையும் தனது உள்ளக் குறையும் உணர்த்திய முகத்தான் அவையடக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

[(பொருள்:)தேன் நிறைந்த மணம் கமழ்கின்ற வேப்ப மாலையைத் தரித்த பாண்டியன் கேட்க, தெளிந்த அருவி நீரையுடைய சந்தனச் சோலை சூழ்ந்த, பொதிய மலையில் எழுந்தருளியிருக்கின்ற, அரிய தவத்தினையுடைய, முதலாசிரிய ராகிய அகத்திய முனிவரால் அருளிச் செய்யப்பட்ட, அழிவின்றி நிலைபெற்ற முத்தமிழுள், இயற்றமிழின் கூறாகிய யாப்பிலக்கண நூலை யானும் அவாவினால் எனது புல்லிய நாவைக்கொண்டு சொல்லத் தொடங்கினேன். இஃது அறிவிலியாகிய எனக்கே நகையினை விளைக்குமாயின் குறைவில்லாத அறிவினை உடையவர்க்கு யாதாகுமோ (எ-று.)

ஏ-அசைநிலை ; இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. 'யானா நடத்துகின்றேன்' என்பதற்கு வேறுபொருள் கூறுவாரு முளர்.] (2)

## அவையடக்கம் - 2

(சிறந்த நூற்புலமையுடையார்முன் யான் மொழிந்த சிறப்பில்லாத பொருளும் சிறந்த நுண்பொருளாம் எனக் கூறியிருப்பது அவையை அடக்கியது)

3. சுருக்கமில் கேள்வித் துகளர் புலவர்முன்
யான்மொழிந்த
பருப்பொரு டானும் விழுப்பொரு ளாம்பனி மாலிமயப்
பொருப்பகஞ் சேர்ந்தபொல் லாக்கருங் காக்கையும்
பொன்னிறமாய்
இருக்குமென் றிவ்வா றுரைக்குமென் றோஇவ்
விருநிலமே.

இக்காரிகை புலவரது சிறப்புணர்த்திய முகத்தான் அவையடக்கம் உணர்த்துதல் நுதலிற்று.

[(இ-ள்.) பனி தோய்ந்த நெடிய இமயவரையிடத்தைச் சேர்ந்த இழிவாகிய கரிய காக்கைப் புள்ளும் பொன்னிறம் உற்றிருக்கு மென்று பரந்த இவ்வுலகத்தவர் சொல்வர். இவ்வாறே குற்றம் தீர்ந்த அளவில்லாத நூற்கேள்வியையுடைய புலவர்க்கு முன் யான் கூறிய சிறப்பில்லாத பிண்டப்பொருளும் சிறந்த நுண்பொருளாம் (எ-று)

அன்று, ஓ, ஏ - அசை நிலை] (3)

தற்சிறப்புப்பாயிரம் முற்றும்.

-----

யாப்பரு. காரிகை-2

## உறுப்பியல்

(தற்சிறப்புப் பாயிரத்தில் செய்யுட்களுக்குறுப்பாக வரும் எழுத்து முதலாகத் தொடை ஈறாகக் கூறப்பட்ட ஆறு உறுப்புக்களின் இலக்கணங்களைக் கூறுவதால் இவ்வியல் உறுப்பியல் என்னும் காரணப்பெயரைப் பெறுவதாயிற்று.

உரையாசிரியர் குணசாகரர் இந்நூலின் அளவை கூறிய விடத்து நாற்பத்து நான்கு காரிகைகளைக் கொண்டது எனக் குறிப்பிட்டுள்ளமையை அறிவோம்.

ஆனால், இந்நூலில் மொத்தம் அறுபது காரிகைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் ஒவ்வோர் இயலின் இறுதியிலும் இடம்பெற்றுள்ள செய்யுட்களின் முதற்குறிப்புக் காரிகை மூன்றோடு, செய்யுளியலில் "உரை சூத்திரம்" என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்பட்டுள்ள உரை சூத்திர இலக்கிய முதலினைப்புக் காரிகை பதின்மூன்றுமாக, மொத்தம் பதினாறு காரிகைகளை உரையாசிரியரே படைத்துக் கொண்டு உரையெழுதி யுள்ளமையைக் காண முடிகிறது.

மேற்குறித்தவண்ணம் இவ் முதலியலில் காரிகைகளுள் உறுப்பியற் செய்யுட்களின் முதற்குறிப்புக் காரிகை நீங்கலாக, இவ்வியல் தற்சிறப்புப் பாயிரம் ஒன்று, அவையடக்கம் இரண்டு, உறுப்பியல் காரிகை பதினேழு ஆக மொத்தம் இருபது காரிகைகளைக் கொண்டதாகத் திகழ்கிறது. இக்காரிகைகளுள் பதினொன்று இலக்கணம் உணர்த்துவன. ஆறு உதாரண இலக்கிய முதனினைப்பு உணர்த்துவன.

மேற்சுட்டிய இருபது காரிகைகளுள் பதினொன்று நேரசையைக் கொண்டு தொடங்குவன. ஒன்பது நிரையசையைக் கொண்டு தொடங்குவன. இவற்றின் மொத்த எழுத்தெண்ணிக்கை ஓராயிரத்து முந்நூற்றுப் பதினாறாகும். இவற்றின் மொத்த கிரந்தம் நாற்பத்தொரு கிரந்தமும் நான்கு எழுத்துமாகும்.)

## 1. எழுத்து

(எழுப்பப்படுவதாலும், எழுதப்படுவதாலும் எழுத்தெனப் பட்டது. ஆகவே, இது காரணப் பெயராயிற்று. இவ் வெழுத்துக்களின் தொகையினை,

> எழுத்தெனப் படுவ
> அகர முதல்
> னகர இறுவாய் முப்பஃ தென்ப
> சார்ந்துவரல் மரபின் மூன்றலங் களடையே
>
> (தொல். எழுத்து. 1)

என்றும்,

> மூன்றுதலை யிட்ட முப்பதிற் றெழுத்தின்
>
> (தொல். எழுத்து. 103)

என்றும் தொல்காப்பியம் சுட்டியிருப்பதன் வழியும் அறியலாம்.

இத்தொகையினைக் கொண்ட எழுத்துக்கள், செய்யுட்களில் அசைக்குறுப்பாகும் இயல்பைப் பொறுத்து 1.குறில், 2. நெடில், 3.உயிர், 4. குற்றியலுகரம், 5. குற்றியலிகரம், 6. ஐகாரக் குறுக்கம், 7.ஆய்தம், 8. மெய், 9. வல்லினம், 10. மெல்லினம், 11. இடையினம், 12. உயிர்மெய், 13. அளபெடை எனப் பதின்மூன்று வகையாகப் பெயர் வேறுபடுத்தி வழங்கப்படுமென்பதைச் சுட்டும் இவ்வியல் முதற்காரிகையின் கருத்துக்களை உரையாசிரியர் குணசாகரர் வழி நின்று இனிக் காண்போம்.)

4. குறில்நெடில் ஆவி குறுகிய மூவுயிர் ஆய்தமெய்யே
மறுவறு மூவினம் மைதீர் உயிர்மெய் மதிமருட்டும்
சிறுநுதற் பேரமர்க் கட்செய்ய வாயைய
நுண்ணிடையாய்
அறிஞர் உரைத்த அளபும் அசைக்குறுப் பாவனவே

இக்காரிகை மேலதிகாரம் பாரித்த எட்டனுள் அசைக் குறுப்பாம் எழுத்துக்களது பெயர் வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

## 1. குறில்

குறிலாவன : அ, இ, உ, எ, ஒ எனவிவை. என்னை,

**அவற்றுள்**
**அ, இ, உ**
**எ, ஒ என்னு மப்பா லைந்து**
**மோரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப**

*(தொல். எழுத்து. 3)*

என்றாராகலின்,

## 2. நெடில்

நெடிலாவன : ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ-எனவிவவை. என்னை,

**ஆ, ஈ, ஊ, ஏ, ஐ,**
**ஓ, ஔ என்னு மப்பா லேழு**
**மீரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப**

*(தொல். எழுத்து. 4)*

என்றாராகலின்,

## 3. ஆவி - உயிர்

ஆவியாவன : அகர முதல் ஔகாரமீறாய்க்கிடந்த பன்னிரண்டெழுத்துமெனக் கொள்க. ஆவியெனினும் உயிரெனினு மொக்கும். என்னை,

**ஔகார விறுவாய்ப்**
**பன்னீ ரெழுத்து முயிரென மொழிப**

*(தொல். எழுத்து. 8)*

என்றாராகலின்,

4, 5, 6 குறுகிய மூவுயிர்

குறுகிய மூவுயிராவன: குற்றியலுகரமும், குற்றிய லிகரமும், ஐகாரக் குறுக்கமும் என விவை. இவை மேலே சொல்லுதும்.

## 7. ஆய்தம்

ஆய்தம் என்பது அஃகேனம். அஃகேனம் எனினும், ஆய்தம் எனினும், தனி நிலை எனினும், புள்ளி எனினும், ஒற்றெனினும் ஒக்கும். என்னை,

**அஃகேனம் ஆய்தம் தனிநிலை புள்ளி**
**ஒற்றிப் பால ஐந்தும் இதற்கே**

*(யா. வி. சூ. 2 உரைமேற்)*

என்றார் அவிநயனார்.

வரலாறு:- எஃகு-கஃசு-கஃடு-கஃது-கஃபு-கஃறு என வரும். என்னை,

**குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி**
**உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே**

*(தொல். எழுத்து. 9)*

என்றாராகலின்,

## 8. மெய்

மெய்யாவன: ககர முதல் னகர மீறாய்க் கிடந்த பதினெட் டெழுத்துமெனக் கொள்க. என்னை,

**னகார விறுவாய்ப்**
**பதினெண் எழுத்து மெய்யென மொழிப.**

*(தொல். எழுத்து. 5)*

என்றாராகலின்,

மெய்யெனினும், உடம்பெனினும், உறுப்பெனினும், ஒற்றெனினும், புள்ளியெனினும் ஒக்கும். என்னை,

**மெய்யுடம் புறுப்பொற் றிவைதாம் ஒருபொருள்**
**செய்யும் என்று செப்பினர் புலவர்**

**மெய்யினி யற்கை புள்ளியொடு நிலையல்**

*(தொல். எழுத்து. 15)*

**எகர வொகரத் தியற்கையு மற்றே**

*(தொல். எழுத்து. 10)*

**மெய்யினி யக்க மகரமொடு சிவணும்**

*(தொல். எழுத்து. 13)*

**மெய்யுயிர் நீங்கிற் றன்னுரு வாகும்**

*(தொல். எழுத்து. 139)*

என்றாராகலின்,

ஏகாரம் எண்ணேகாரம். என்னை,

**எண்ணே கார யிடையிட்டுக் கொளினு**
**மெண்ணுக் குறித்தியலு மென்மனார் புலவர்**

*(தொல். சொல். 288)*

என்றாராகலின்,

## 9, 10, 11- மூவினம்

மறுவறு மூவினமாவன: வல்லினமும், மெல்லினமும், இடையினமும் எனவிவை.

வல்லினமாவன :- கசடதபற
மெல்லினமாவன:- ஙஞணநமன
இடையினமாவன:- யரலவழள. என்னை,

**வல்லெழுத் தென்ப கசட தபற**
**மெல்லெழுத் தென்ப ஙஞண நமன**
**இடையெழுத் தென்ப யரல வழள**

*(தொல். எழுத்து.19- 21)*

என்றாராகலின்,

'மறுவறு மூவினம்' என்று சிறப்பித்த அதனால் அவை உயிர்மெய்யாகிய காலத்தும் அப்பெயரானே வழங்கப்படு மெனக் கொள்க. என்னை,

**விதப்புக் கிளவி வேண்டியது விளைக்கும்**

*(யா.வி.சூ.9 உரைமேற்.)*

என்றாராகலின்,

## 12. உயிர்மெய்

உயிர்மெய்யாவன: உயிரும் மெய்யும் கூட்டி உச்சரிக்கப்படா நின்ற பன்னிரு பதினெட்டு இருநூற்றொரு பத்தாறெழுத்தும் எனக் கொள்க.

அவையாவன: கஃகான்[1] முதல் னஃகானீறாய்க்[2] கிடந்த பன்னிரு பதினெட்டு இருநூற்றொரு பத்தாறெழுத்துமெனக் கொள்க. என்னை,

**உயிரீ ராறே மெய்ம்மூ வாறே**
**அம்மூ வாறும் உயிரொ டுயிர்ப்ப**
**இருநூற் றொருபத் தாறுயிர் மெய்யே**

*(யா.வி.சூ. 2 உரைமேற்.)*

என்பது பல்காயம்.

**புள்ளி யில்லா எல்லா மெய்யு**
**முருவுரு வாகி யகரமொ டுயிர்த்தலு**
**மேனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலு**
**மாயீ ரியல வுயிர்த்த லாறே**

**மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே**

*(தொல். எழுத்து. 17, 18)*

என்றாராகலின்,

---

1. ககரம். 2. னகரம்.

'மைதீருயிர்மெய்' யென்று சிறப்பித்தவதனால் - ஏறிய வுயிரினளவே யுயிர்மெய்க்குமளவெனக் கொள்க. என்னை,

**உயிர்மெய்க் களவே யுயிரள வென்ப**

என்றாராகலின்,

'மதிமருட்டும்........நுண்ணிடையாய்' என்பது மகடூஉ முன்னிலை, என்னை,

## வெண்பா

**இடம்பட மெய்ஞ்ஞானம் கற்பினும் என்றும்**
**அடங்காதார் என்றும் அடங்கார் - தடங்கண்ணாய்**
**உப்பொடு நெய்பால் தயிர்காய் பெய்தடினும்**
**கைப்பறா பேய்ச்சுரையின் காய்**

*(நாலடியார்-116)*

எனப் பிறரும் 'தடங்கண்ணாய்' என்று மகடூஉ முன்னிலை சொன்னார் உளரெனக் கொள்க.

'மதி' என்பது ஈண்டுப் பிறை; அஃது,

**இருகோட் டொருமதி யெழில்பெற மிலைச்சினை**

(நக்கீரர் - திருவெழுகூற்று.)

என்றாற் போலக் கொள்க. அல்லதூஉம் அறிவினை மயக்குஞ் சிறுநுதல் முதலாகிய உறுப்புக்களையுடையாயென்றுமாம்.

## 13. அளபெடை

அறிஞருரைத்த அளபுமென்பது: புலவராற் சொல்லப்பட்ட அளபெடைகளும் எ-று. அளபெனினும், அளபெடையெனினும், புலுதமெனினும் ஒக்கும். என்னை,

**அளபே புலுத மாயிரு பெயரு**
**மளபெடை யென்ப அறிந்திசி னோரே**

என்றாராகலின்,

[அவை போக்கிச் சொல்லுதும்]

'அசைக்குறுப் பாவனவே' யென்பது இப்பதின்மூன்று திறத்தெழுத்து மசைக் குறுப்பாவனவே என்றவாறு.

ஈற்றசை ஏகாரம், தேற்றேகார மெனினும் அமையும்.

என்னை,

**தேற்றம் வினாவே பிரிநிலை யெண்ணே**
**யீற்றசை யிவ்வைந் தேகா ரம்மே**

*(தொல். சொல். 257)*

என்றாராகலின்,

**குறில்நெடி லளபெடை யுயிருறுப் புயிர்மெய்**
**வலிய மெலிய இடைமையோ டாய்தம்**
**இ-உ-ஐயென் மூன்றன் குறுக்கமோ**
**டப்பதின் மூன்று மசைக்குறுப் பாகும்.**

*(யா.வி.சூ. 2 உரைமேற்.)*

என்றார் காக்கைபாடினியாருமெனக் கொள்க.

இனி மூவுயிர்க்குறுக்கமு மளபெடையு மாமாறு சொல்லுதும்.

## குற்றியலுகரம்

நெடிற்கீழும், நெடிலொற்றின் கீழும் குறிலிணைக் கீழும், குறிலிணையொற்றின்கீழும், குறினெடிற்கீழும், குறினெடி லொற்றின் கீழும், குற்றொற்றின் கீழும் என்றிவ்வேழிடத்தும் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து 'உகரம்' வந்தால், அது குற்றியலுகர மென்று வழங்கப்படுமெனக் கொள்க. என்னை,

**[நெடிலே குறிலிணை குறினெடி லென்றிவை**
**ஒற்றொடு வருதலொடு குற்றொற் றிறுதியென்**
**றேழ்குற் றுகரக் கிடனென மொழிப]**

*(யா. வி. சூ. 2 உரைமேற்.)*

என்றாராகலின்.

எழுவகை இடத்தும் குற்றிய லுகரம்
வழுவின்றி வரூஉம் வல்லா றூர்ந்தே

(யா.வி. சூ. 2 உரைமேற்.)

என்றார் பல்காயனார்.

வரலாறு;

நாகு-காசு-காடு-காது-காபு-காறு என நெடிற்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

நாக்கு-காச்சு-காட்டு-காத்து-காப்பு-காற்று என நெடிலொற்றின்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

வரகு-முரசு-முருடு-மருது-துரபு-கவறு எனக் குறிலிணைக் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

அரக்கு-பொரிச்சு-தெருட்டு-குருத்து-பொருப்பு-சிரற்று எனக் குறிலிணையொற்றின் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

அசோகு-பலாசு-மலாடு-கெடாது-புதாபு-விராறு எனக் குறிநெடிற்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

தமாக்கு-தடாச்சு-பனாட்டு-கடாத்து-புதாப்பு-விராற்று எனக் குறிநெடிலொற்றின் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

அக்கு-கச்சு-கட்டு-கத்து-கப்பு-கற்று எனக் குற்றொற்றின் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம் வந்தவாறு.

[இனிக் குற்றியலுகரம் ஆறுவகைப்படும் என்பாரும் உளர். அவையாவன:- ஈரெழுத்தொருமொழி, உயிர்த் தொடர்மொழி, [இடைத்தொடர்மொழி, ஆய்தத்தொடர் மொழி,] வன்றொடர் மொழி, மென்றொடர்மொழி என்றிவை. என்னை,

**ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொட ரிடைத்தொட**
**ராய்தத் தொடர்மொழி வன்றொடர் மென்றொட**
**ராயிரு மூன்றே யுகரங் குறுகிடன்**

*(தொல். எழுத்து. 406)*

*என்றாராகலின்,]*

## குற்றியலிகரம்

*இனிக் குற்றியலிகரத்துக்குச் சொல்லுமாறு:-*

உகரந்திரிந்தும் திரியாதும் யகரமோ டியைபின்கண் வந்த இகரம் குற்றியலிகரம் என்று வழங்கப்படும் என்றவாறு. என்னை,

**வல்லெழுத் தாறோ டெழுவகை யிடத்து**
**முகர மரையாம் யகரமோ டியைபி**
**னிகரமுங் குறுகு மென்மனார் புலவர்**

*(யா.வி. சூ. 2 உரைமேற்.)*

*என்றார் அவிநயனார்.*

**யகரம் வருவழி யிகரங் குறுகு**
**முகரக் கிளவி துவரத் தோன்றாது**

*(தொல். எழுத்து. 410)*

*என்றாராகலின்,*
*வரலாறு;*

*நாகியாது-காசியாது-காடியாது-காதியாது-*
காபியாது-காறியாது என வரும். ஒழிந்தனவும் இவ்வாறே ஒட்டிக்கொள்க.

இனித் திரியாது வந்த குற்றியலிகரம் வருமாறு கேண்மியா, சென்மியா எனக் கொள்க. என்னை,

குற்றிய லிகர நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்
காவயின் வரூஉ மகர மூர்ந்தே

(தொல். எழுத்து. 34)

என்றாராகலின்,

## ஐகாரக் குறுக்கம்

இனி ஐகாரக் குறுக்கத்திற்குச் சொல்லுமாறு:- அளபெடுத்தற் கண்ணும், தனியே சொல்லுதற்கண்ணும் அன்றி அல்லாதவழி வந்த ஐகாரம் தன்னளவிற் சுருங்கி ஒன்றரை மாத்திரையும், ஒரு மாத்திரையுமாகக் குறுகுமெனக் கொள்க. ஐகாரம் குறுகுமிடத்து மொழி முதலிடை கடையென மூன்றிடத்துங் குறுகும். என்னை,

அளபெடை தனியிரண் டல்வழி ஐஒள
வுளதா மொன்றரை தனிமையு மாகும்[1]

(யா.வி. சூ. 2 உரைமேற்.)

என்றார் அவிநயனார்

வரலாறு:- ஐப்பசி- மைப்புறம், மடையன்-இடையன், குவளை-தவளை, தினை-பனை என முதலும் இடையும் கடையும் குறுகியவாறு கண்டுகொள்க.

[என்னை,

மொழிமுத லிடைகடை யெனமூன் றிடத்து
மழியா தைகா ரங்குறு கும்மே.

என்றாராகலின்,]

---

1. தனியும்ஐ ஆகும்.

## அளபெடை

இனி அளபெடைக்குச் சொல்லுமாறு:- அளபெடை இரண்டு வகைப்படும்.

**உயிரள பெடையும் ஒற்றள பெடையுமென்**
**றாயிரண் டென்ப வளபெடை தானே**

*(யா.வி. சூ. 2 உரைமேற்.)*

*என்றாராகலின்,*

## உயிரளபெடை

*அவற்றுள் உயிரளபெடைக்குச் சொல்லுமாறு:- உயிருள் நெட்டெழுத்து ஏழும் அளபெடுக்கும்; அவை அளபெடுக்கு மிடத்து ஐகாரம் இகரத்தோடும், ஔகாரம் உகரத்தோடும் அளபெடுக்கும் ஒழிந்தனவும் தமக்கினமாகிய குற்றெழுத் தோடு அளபெடுக்கும் எனக்கொள்க. என்னை,*

**குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கும்**
**நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே**

*(தொல். எழுத்து. 41)*

**ஐ, ஔ வென்னு மாயீ ரெழுத்திற்**
**இகர வுகர மிசைநிறை வாகும்**

*(தொல். எழுத்து. 42)*

*என்றாராகலின்,*

*உயிரளபெடை யெழுத்து நோக்க ஏழாம்; இடம் நோக்க நான்காம்; எழுத்தும் இடமும் உறழ்ந்து நோக்க இருபத்தெட்டா மெனக் கொள்க. என்னை,*

**தனிநிலை முதனிலை இடைநிலை ஈறென**
**நால்வகைப் படூஉமள பாய்வரு மிடனே**

*(யா.வி. சூ. 2 உரைமேற்.)*

*என்றாராகலின்,*

வரலாறு:-

ஆஅ-ஈஇ-ஊஉ-ஏஎ-ஐஇ-ஓஒ-ஔஉ என இவை யேழும் தனிநிலை அளபெடை.

ஆஅரிடம்-ஈஇரிலை-ஊஉரிடம்-ஏஎரிகள்-ஐஇயவி-ஓஒரிகள்-ஔஉவியம் என இவையெழும் முதனிலை அளபெடை.

படாஅகை- பரீஇயம்- கழூஉமணி- பரேஎரம்- வளைஇயம்- புரோஒசை- அதௌஉகம் என இவையெழும் இடைநிலை அளபெடை.

கடாஅ- குரீஇ- கழூஉ- மிலேஎ- கடைஇ- அரோஒ- அநௌஉ என இவையெழும் இறுதிநிலை அளபெடை.

உயிரளபெடை ஏழு நான்கு இருபத்தெட்டும் வந்தவாறு கண்டுகொள்க

## ஒற்றளபெடை

இனி ஒற்றளபெடைக்குச் சொல்லுமாறு:- ஒற்றுக்களுள் ஙஞணநமன வயலள ஆய்தம் என்னும் பதினோரொற்றும் குறிற் கீழும், குறிலிணைக்கீழும் வந்து அளபெடுக்கும் எனக்கொள்க. என்னை,

**ஙஞண நமன வயலள வாய்த**
**மெனுமிவை யீரிடத் தளபெழு மொரோவழி**

(யா. வி. சூ. 3 உரைமேற்.)

**வன்மையொடு ரஃகான் ழஃகான் ஒழிந்தாங்கு**
**அன்மை ஆய்தமோ டளபெழு மொரோவழி**

என்றாராகலின்.

வரலாறு;

மங்ங்கலம்- மஞ்ஞ்சு- மண்ண்ணு- பந்ந்து- அம்ம்பு- மின்ன்னு- தெவ்வ்வர்- வெய்ய்யர்- செல்ல்க- கொள்ள்க- எஃஃகு எனக் குறிற்கீழ்ப் பதினோரொற்றும் அளபெழுந்தவாறு கண்டுகொள்க.

அரங்ங்கம்- முரஞ்ஞ்சு- முரண்ண்டு- பருந்ந்து- அரும்ம்பு- முரன்ன்று- குரவ்வ்வை- அரய்ய்யர்- குரல்ல்கள்- திரள்ள்கள்- வரஃஃகு எனக் குறிலிணைக் கீழ்ப் பதினோரொற்றும் அளபெழுந்தவாறு கண்டுகொள்க.

இவ்விருபத்திரண்டு புள்ளி அளபெடையும் செய்யுளகத் தல்லது பரவை[1] வழக்கினுள் வாரா எனக்கொள்க. என்னை,

**மாத்திரை வகையாற் தளைதபக் கெடாநிலை**
**யாப்பழி யாமைநின் றளபெடை வேண்டும்**

*(யா. வி. சூ. 3 உரைமேற்.)*

என்றாராகலின்,

'அறிஞருரைத்த அளபும்' என்று சிறப்பித்த வதனால் குற்றெழுத்தும் ஒற்றளபெடையும் ஒரோ ஒன்று ஒரு மாத்திரை. நெட்டெழுத்து இரண்டு மாத்திரை. உயிரளபெடைக்கு மூன்று மாத்திரை. ஆய்தமும், மெய்யும், குற்றியலுகரமும், குற்றியலிகரமும் ஒரோ ஒன்று அரை மாத்திரை. ஐகாரக் குறுக்கம் ஒன்றரை மாத்திரை. மகரக் குறுக்கமும் ஆய்தக் குறுக்கமும் ஒரோ ஒன்று கால் மாத்திரை என்னை,

**ஒன்றிரண் டொருமூன் றொன்றரை யரைகா**
**லென்றனர் பொழுதிவை இமைநொடி யளவே**

*(யா.வி. சூ. 2 உரைமேற்.)*

**கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை**
**நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே**

(தொல். எழுத்து. 7)

---

1. உலக வழக்கு (பேச்சு வழக்கு)

ஒற்றுக்கு மாத்திரை ஒன்றே அளபெழுந்தால்
தெற்றக் குறிலதுவே யாம்

[உன்னல் காலே ஊன்றல் அரையே
முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே.]

என்றார் பிறருமெனக் கொள்க. *(1)*

## 2. அசை

(செய்யுள் உறுப்புக்களுள் இரண்டாவதாக இடம் பெற்றுள்ள அசை என்பது மேற்குறித்த எழுத்துக்களுள் ஒன்றைத் தனித்தோ, ஒன்றினோடு மற்றொன்றை இணைத்தோ 'அசைத்து இசைத்தலின்' அசை எனப்பட்டதோடு, இது காரணப்பெய ராகவும் அமையலாயிற்று. இத்தகு அசை குறித்த காரிகைச் செய்திகளை உரையாசிரியர் குணசாகரர் வழிநின்று காண முற்படுவோம்.)

5. குறிலே நெடிலே குறிலிணை யேனைக் குறினெடிலே
நெறியே வரினு நிரைந்தொற் றடுப்பினும்
நேர்நிரையென்
றறிவேய் புரையுமென் றோளி யுதாரண
மாழிவெள்வேல்
வெறியே சுறாநிறம் விண்டோய் விளாமென்று
வேண்டுவரே.

இக்காரிகை நிரனிறைப் பொருள்கோள் வகையால் நேரசையும் நிரையசையும் ஆமாறும், அவற்றிற்குதாரணம் ஆமாறும் உணர்த்துதல் நுதலிற்று.

'குறிலே நெடிலே குறிலிணை ஏனைக் குறினெடிலே நெறியே வரினும் நிரைந் தொற்றடுப்பினும் நேர்நிரை யென்றறி ' என்பது, குற்றெழுத்துத் தனியே வரினும்

நெட்டெழுத்துத் தனியே வரினும், குற்றெழுத்து ஒற்றடுத்து வரினும், நெட்டெழுத்து ஒற்றடுத்து வரினும் நேரசையாம். குறிலிணைந்து வரினும், குறினெடில் இணைந்து வரினும், குறிலிணைந்து ஒற்றடுத்து வரினும், குறினெடில் இணைந்து ஒற்றடுத்து வரினும் நிரையசையாம் என்றவாறு. [என்னை,

**நெடில் குறில் தனியாய் நின்றுமொற் றடுத்தும்**
**நடைபெறும் நேரசை நால்வகை யானே**

*(யாப்பருங்கலம்-6)*

**குறிலிணை குறினெடி றனித்து மொற்றடுத்து**
**நெறிமையி னான்காய் வருநிரை யசையே**

*(யாப்பருங்கலம்-8)*

என்றாராகலின்]

'வேய்புரையு மென்றோளி' என்பது மகடூஉ முன்னிலை.

உதாரணம்,'ஆழிவெள்வேல் வெறியே சுறாநிறம் விண்டோய் விளாமென்று வேண்டுவரே' என்பது நேரசைக்கு உதாரணம்:- ஆ-ழி-வெள்-வேல் எனவும், நிரையசைக்கு உதாரணம்:- வெறி-சுறா-நிறம்-விளாம் எனவும் சொல்லுவர் புலவர் என்றவாறு.

அஃலம் உரையிற் கொள்க. அகலம் எனினும் விருத்தியுரை யெனினும் ஒக்கும். என்னை,

**அகல மென்ப தாசறக் கிளப்பின்**
**விகல மின்றி விரித்துரைப் பதுவே**

*(அகப்பொருள். சூ. 1 உரைமேற்.)*

என்றாராகலின்,

'விண்டோய் விளாம்' என்று சிறப்பித்தவதனால் நேரசை ஓரலகுபெறும், நிரையசை ஈரலகு பெறுமெனக் கொள்க.

ஆ-எனத்தனி நெடில் நேரசையாயினவாறு. ழி-எனத் தனிக்குறில் நேரசை ஆயினவாறு. வெள்- எனக் குற்றெழுத்து ஒற்றடுத்து நேரசை யாயினவாறு. வேல்- என நெட்டெழுத்து ஒற்றடுத்து நேரசையாயினவாறு. வெறி- எனக் குறிலிரண்டு இணைந்து நிரையசை யாயினவாறு. சுறா- எனக் குறினெடி லிணைந்து நிரையசையாயினவாறு. நிறம்-எனக் குறிலிணை ஒற்றடுத்து நிரையசை யாயினவாறு. விளாம்- எனக் குறினெடில் ஒற்றடுத்து நிரையசையாயினவாறு. அவற்றுக்குச் செய்யுள் வருமாறு.

### நேரிசை ஆசிரியப்பா

**போது சாந்தம் பொற்ப வேந்தி**
**ஆதி நாதற் சேர்வோர்**
**சோதி வானந் துன்னு வோரே**

*(யா.வி. சூ.5 உரைமேற்.)*

இது நேரசை நான்கும் வந்த செய்யுள்.

### நேரிசை ஆசிரியப்பா

**அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய**
**மணிதிக ழவிரொளி வரதனைப்**
**பணிபவர் பவநனி பரிசறுப் பவரே**

*(யா.வி. சூ. 8 உரைமேற்.)*

இது நிரையசை நான்கும் வந்த செய்யுள்.

'குறிலே நெடிலே' என்னும் இக்காரிகை தன்னையே இலக்கியமாக அலகிடினும் இழுக்காது. என்னை,

**குறிலே நெடிலே குறிலிணை குறினெடி**
**லொற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி**
**நேரு நிரையு மென்றிசிற் பெயரே**

*(தொல். பொருள். 315)*

என்றார் தொல்காப்பியனார்.

**கோழி வேந்தன் நேரசை நிரையசை**
**யாழ்புனல் வாழ்க்கை வெறிகுரா நிறங்குரால்**

என்று உதாரண மெடுத்தோதினாரு முளரெனக் கொள்க.(2)

## 3. சீர்

*(மேற்குறித்த நேர், நிரை அசைகள் தனித்தோ, இயைந்தோ சீர் (ஓசை) கொள நிற்றல் சீர் எனப்படும். இதனையே, 'அசை இயைந்துசீர்கொள நிற்றல்சீர்' எனும் கூற்றும் வலியுறுத்தக் காணலாம். இவ்வாறு சீர்கொள அவ்வசைகள் தனித்தோ, இயைந்தோ நிற்பதன் அடிப்படையில் 1. ஓரசைச்சீர்-2. 2.ஈரசைச்சீர்-4, 3. மூவசைச்சீர்-8, 4. நாலசைச்சீர்-16 என வரும். நாற்பெரும் பிரிவில் அசைகள் இடம்பெறும் தன்மையைப் பொறுத்துச் சீர் முப்பது வகைப்படும் என்பதைச் சுட்டும் காரிகை களுக்குரையாசிரியர் குணசாகரர் தரும் விளக்கங்களை இனி நிரலே காண்போம்.)*

6. **ஈரசை நாற்சீ ரகவற் குரியவெண் பாவினமாம்**
**நேரசை யாலிற்ற மூவசைச் சீர்நிரை யாலிறுப**
**வாரசை மென்முலை மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீர்**
**ஓரசை யேநின்றுஞ் சீராம் பொதுவொரு நாலசையே.**

இக்காரிகை அவ்வசைகளானாகிய சீர்களது பெயர் வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

'ஈரசை நாற்சீ ரகவற் குரிய' என்பது இரண்டசையினால் ஆகிய நான்கு சீரும் ஆசிரிய உரிச்சீர் எனப்படும் என்றவாறு.

அகவ லெனினும், ஆசிரியமெனினும் ஒக்கும். என்னை,

**அகவ லென்ப தாசிரியப் பெயரே**

*(யா.வி. சூ. 16 உரைமேற்.)*

என்பது சங்க யாப்பு ஆகலின்,

'வெண்பா வினமாம் நேரசை யாலிற்ற மூவசைச்சீர்' என்பது நேரசை இறுதியாகிய மூவசைச்சீர் நான்கும் வெண்பா உரிச்சீர் எனப்படும் என்றவாறு.

'வாரசை மென்முலை மாதே' யென்பது மகடூஉ முன்னிலை.

'நிரையாலிறுப வஞ்சிக்குரிச்சீர்' என்பது நிரையசை யிறுதியாகிய மூவசைச்சீர் நான்கும் வஞ்சி உரிச்சீர் எனப்படும் என்றவாறு.

'ஓரசையே நின்றுஞ்சீராம்' என்பது ஒரோவிடத்து நேரசை தானே நின்றுஞ்சீராம் நிரையசை தானே நின்றுஞ்சீராம்; அவை அசைச்சீர் எனப்படும் என்றவாறு.

'பொதுவொரு நாலசையே' என்பது நாலசையி னானாகிய சீர் பொதுச்சீர் எனப்படுமென்றவாறு.

[நான்கென்பதனை எல்லாவற்றோடுங் கூட்டி மத்திம மாகப் பொருளுரைத்துக் கொள்க.] என்னை;

ஈரசை கூடிய சீரியற் சீரவை
ஈரிரண் டென்ப ரியல்புணர்ந் தோரே

மூவசைச் சீருரிச் சீரிரு நாகனுள்
நேரிறு நான்கும் வெள்ளை யல்லன
பாவினுள் வஞ்சியின் பாற்பட் டனவே

[நாலசைச் சீர்பொதுச் சீர்பதி னாறே
ஓரசைச் சீருமஃ தோரிரு வகைத்தே]

(யாப்பருங்கலம். 11-14)

என்பன யாப்பருங்கலம்.

நாலசை யானு நடைபெறு மோரசை
சீர்நிலை யெய்தலுஞ் சிலவிடத் துளவே

(யா. வி. சூ. 13 உரைமேற்.)

என்றார் காக்கைபாடினியார். (3)

7. தேமா புளிமா கருவிளங் கூவிளஞ் சீரகவற்
காமாங் கடைகா யடையின்வெண் பாவிற்கந்
தங்கனியா
வாமாண் கலையல்குல் மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீர்
நாமாண் புரைத்த வசைச்சீர்க் குதாரண நாண்மலரே.

இக்காரிகை முறையானே முதல் நான்கு சீருக்கும் உதாரணம் ஆமாறுணரத்துதல் நுதலிற்று.

'தேமா புளிமா கருவிளங் கூவிளஞ் சீரகவற்காம்' என்பது:- நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரையாகிய தேமா, புளிமா கருவிளம், கூவிளம் என்னும் நான்கு சீரும் ஆசிரிய உரிச்சீருக்குதாரணமாம் என்றவாறு.

'ஆங்கடைகாய் அடையின் வெண்பாவிற்கு' என்பது அவை, கடையிற் 'காய்' என்னுஞ் சொற்பெற்றுத் தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் என வரும் நான்கு சீரும் வெண்பா உரிச்சீருக்குதாரணமாம் என்றவாறு.

'அந்தங் கனியா வகுத்த வஞ்சிக்குரிச்சீர்' என்பது இவ்வீற்றின்கண் 'கனி' என்னுஞ் சொற்பெற்றுத் தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி என வரும் நான்கு சீரும் வஞ்சியுரிச்சீருக்குதாரணமாம் என்றவாறு.

'வாமாண் கலையல்குல் மாதே' என்பது மகடூஉ முன்னிலை.

'நாமாண் புரைத்த அசைச்சீர்க் குதாரணம் நாள் மலரே' என்பது ஒரோவிடத்தாமென்றுரைக்கப்பட்ட ஓரசைச்சீருக் குதாரணம் நாள் என்பதூஉம், மலர் என்பதூஉமாம் என்றவாறு.

'ஆம்' என்பதனை எல்லாவற்றொடுங் கூட்டி மத்திம தீபமாகப் பொருளுரைத்துக் கொள்க.

**இன்னிசை வெண்பா**

**அம்ம் பவள்ள் வரிநெடுங்கண் ணாய்வஞ்சிக்**
**கொம்ம் பவள்ள் கொடிமருங்குல் கோங்கின்**
**அரும்ம் பவள் முலைஒக்குமே ஒக்கும்**
**கரும்ம் பவள்வாயிற் சொல்**

என்னும் பொய்கையார் வாக்கினுள், ஒக்கும் என்பதனை எல்லா வற்றொடுங் கூட்டிப் பொருளுரைத்துக் கொண்டாற் போலக் கொள்க. (4)

8. **தண்ணிழ றண்பூ நறும்பூ நறுநிழ றந்துறழ்ந்தால்**
**எண்ணிரு நாலசைச் சீர்வந் தருகு மினியவற்றுட்**
**கண்ணிய பூவினங் காய்ச்சீ ரனைய**
**கனியொடொக்கும்**
**ஒண்ணிழற் சீரசைச் சீரியற் சீரொக்கு**
**மொண்டளைக்கே.**

இக்காரிகை பொதுச்சீருக்குதாரண மாமாறும் அவற்றெண்ணும் பொதுச்சீரும் அசைச்சீரும் செய்யுளகத்து வருங்கால் தளைவழங்கும் முறைமையும் உணர்த்துதல் நுதலிற்று.

தண்ணிழ றண்பூ நறும்பூ நறுநிழற் தந்துறழ்ந்தால் எண்ணிரு நாலசைச்சீர் வந்தருகு மென்பது.

மேல் நின்ற அதிகாரத்தாற் தேமா, புளிமா, கருவிளம், கூவிளமென்று நான்கினொடுந் தண்ணிழ, றண்பூ நறும்பூ, நறுநிழலென்னும் நான்கினையுமுறையானே கொணர்ந் துறழ்ந்தால் பதினாறு நாலசைச் சீருக்குமுதாரணமா மென்றவாறு.

'அருகும்' என்பதனால் அச்சீர் செய்யுளகத்து அரிதாக அன்றி வாரா எனக்கொள்க. அவை வருமாறு.

| | |
|---|---|
| தேமாந்தண்ணிழல் | தேமாந்தண்பூ |
| புளிமாந்தண்ணிழல் | புளிமாந்தண்பூ |
| கருவிளந்தண்ணிழல் | கருவிளந்தண்பூ |
| கூவிளந்தண்ணிழல் | கூவிளந்தண்பூ |
| தேமாநறும்பூ | தேமாநறுநிழல் |
| புளிமா நறும்பூ | புளிமாநறுநிழல் |
| கருவிளநறும்பூ | கருவிளநறுநிழல் |
| கூவிளம்நறும்பூ | கூவிளம்நறுநிழல் |

எனவுங் கொள்க.

'இனி அவற்றுள் கண்ணிய பூவினங் காய்ச்சீரனைய' என்பது;- அந்நாலசைச்சீர் பதினாறனுள்ளும், பூவென்னுஞ் சொல்லிறுதி யாகிய நேரீற்றுப்பொதுச்சீரெட்டையும் காயென்னும் சொல் லிறுதியாகிய வெண்பா உரிச்சீரே போலக்கொண்டு வருஞ்சீர் முதலசையோடொன்றுவது வெண்டளையாகவும், ஒன்றாதது கலித்தளையாகவும் வழங்கப்படும்; என்றவாறு.

'கனியொடொக்கும் ஒண்ணிழற்சீர்' என்பது நிழலென்னுஞ் சொல்லிறுதியாகிய நிரையீற்றுப் பொதுச் சீரெட்டும், கனியென்னுஞ் சொல்லிறுதியாகிய வஞ்சி உரிச்சீரே போலக் கொண்டு வருஞ்சீர் முதலசையோ டொன்றினும் ஒன்றாவிடினும் வஞ்சித்தளை யென்று வழங்கப்படும் என்றவாறு.

'அசைச்சீர் இயற்சீரொக்கும்' என்பது ஓரசைச் சீரையியற்சீர் போலக்கொண்டு வருஞ்சீர் முதலசையோ டொன்றுவது ஆசிரியத் தளையாகவும் ஒன்றாதது இயற்சீர் வெண்டளையாகவும் வழங்கப்படும் என்றவாறு.

இயற்சீர் என்னும் ஆசிரிய உரிச்சீர் எனினும் ஒக்கும். என்னை,

**இயற்சீ ரெல்லாம் ஆசிரிய உரிச்சீரே**

(யா. வி. சூ. 11 உரைமேற்.)

என்றார் காக்கைபாடினியார்.

'ஒண்தளைக்கே' என்பது ஒள்ளியதளை வழங்குமிடத்து என்றவாறு.

'ஒண்தளை' என்பதனை இறுதி விளக்காகப் பொருளுரைத்துக் கொள்க. 'கண்ணிய பூவினம்' என்று சிறப்பித்தவதனால் வெண்பாவினுள் நாலசைச்சீர் வாரா. கலியினுள்ளும் பெரும்பான்மையும் குற்றுகரம் வந்துழியின்றி வாரா. வஞ்சியுட் குற்றுகரம் வாராதேயும் வரப்பெறும், வஞ்சியுள் இரண்டு நாலசைச்சீர் ஓரடியுள் அருகிக் கண்ணுற்று நில்லா; பாவினத்துள்ளும் பயின்று வாரா வெனக்கொள்க. ஒண்ணிழற்சீர் என்று சிறப்பித்தவதனால் நிழல் என்னுஞ் சொல்லுறுதியாகிய நிரையீற்றுப் பொதுச்சீர் எட்டும் வஞ்சியுள் அல்லது வாரா எனக் கொள்க.

**நாலசை யான்நடை பெற்றன வஞ்சியுள்**
**ஈறொன் றிணைதலு மேனுழி யொன்றுசென்**
**றாகலும் அந்தம் நிரையசை[1] வந்தன**
**கூறிய வஞ்சிக் குரியன ஆகலும்[2]**
**ஆகு மென்ப அறிந்திசி னோரே.**

*(யா. வி.சூ.15 உரைமேற்.)*

என்றார் காக்கைபாடினியார்.

இனி, ஒரு சாரார் வெண்பாவினுள் அளபெழுந்தால் நாலசைச்சீர் வருமென்பார் உளராயினும் அவ்வாறலகிட்டு உதாரண வாய்பாட்டால் ஓசையூட்டும் பொழுது செப்பலோசை பிழைக்குமென்பதூஉம் ஆண்டுச் சீரும் தளையுஞ் சிதைய வாராமையான் அளபெடுப்பனவுமல்ல. அளபெடுப்பினும் அளபெடைகள் அலகு காரியம் பெறுவனவும் அல்லவென்பதூஉம் காக்கைபாடினியார் முதலாகிய தொல்லாசிரியர் துணிவு. அதுவே இந்நூலுடையார்க்கு உடன்பாடு. **(5)**

---

1. இணையசை. 2. வஞ்சிக் குணத்த ஆகலும்.

## உதாரண இலக்கிய முதனினைப்புச் செய்யுள்

9. குன்றக் குறவ னகவல்பொன் னாரம்வெண்
பாட்டுவஞ்சிக்
கொன்று முதாரணம் பூந்தா மரையென்ப
வோரசைச்சீர்
நன்றறி வாரிற் கயவரும் பாலொடு நாலசைச்சீர்க்
கன்றதென் னாரள்ளற் பள்ளத்தி டோடங்கண்
வானத்துமே.

இக்காரிகை முறையானே ஐந்து வகைப்பட்ட சீரானும் வந்த இலக்கியங்கட்கு முதனினைப்புணர்த்துதல் நுதலிற்று.

குன்றக் குறவன் அகவல் என்பது,

### ஆசிரியப்பா

குன்றக் குறவன் காதல் மடமகள்
வரையர மகளிர் புரையுஞ் சாயலள்
ஐயள் அரும்பிய முலையள்
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே
*(ஐங். குன்றக்குறவன் பத்து-5)*

இந்நேரிசை ஆசிரியப் பாட்டினுள் ஆசிரிய உரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டு கொள்க.

'பொன்னாரம் வெண்பாட்டு' என்பது,

### வெண்பா

பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்
உன்னேனென் றூழுலக்கை பற்றினேற் - கென்னோ[1]
மனனொடு வாயெல்லாம் மல்குநீர்க் கோழிப்
புனனாடன் பேரே வரும்.
*(முத்தொள்ளாயிரம்-66)*

---

1. கன்னோ

இந்நேரிசை வெண்பாவினுள் வெண்பா உரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டுகொள்க.

'வஞ்சிக்கொன்று முதாரணம் பூந்தாமரை என்ப' என்பது,

**வஞ்சிப்பா**

பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நாளும்
மகிழும் மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே

(யா. வி. சூ. 9 உரைமேற்.)

இக்குறளடி வஞ்சிப்பாட்டினுள் வஞ்சியுரிச்சீர் நான்கும் வந்தவாறு கண்டுகொள்க.

'ஓரசைச்சீர் நன்றறி வாரிற் கயவரும் பாலொடு' என்பது;

**குறள் வெண்பா**

நன்றறி வாரிற் கயவர் திருவுடையார்
நெஞ்சத் தவல மிலர் (குறள்-1072)

இக்குறள் வெண்பாவினுள் 'இலர்' என நிரையசைச்சீர் வந்தவாறு கண்டுகொள்க.

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர் (குறள்-1121)

இக்குறள் வெண்பாவினுள் 'நீர்' என நேரசை வந்தவாறு கண்டுகொள்க. என்னை;

இசைநிலை நிறைய நிற்கும் பாவினு
ளசைநிலை வரையா ரிசைநிலை பெறவே

(தொல். பொருள். 336)

என்றாராகலின்*

'நாலசைச்சீர்க் கன்ற தென்னார் அள்ளற் பள்ளத் தினேடங்கண் வானத்தும்' என்பது

அள்ளற்பள்ளத் தகன்சோணாட்டு
வேங்கைவாயில் வியன்குன்றூரன்

என்னும் பழம் பாட்டினுள் ஓரடியுள் இரண்டு நாலசைச்சீர் வந்தவாறு கண்டுகொள்க. இதனைக் குறளடி வஞ்சியாக அலகிட்டுக் கொள்க.

## வஞ்சிப்பா

அங்கண்வானத் தமரரரசரும்
வெங்களியானை வேல்வேந்தரும்
வடிவார்கூந்தல் மங்கையரும்
கடிமலரேந்திக் கதழ்ந்திறைஞ்சச்
சிங்கஞ்சுமந்த மணியணைமிசைக்
கொங்கவிரசோகின் குளிர்நிழற்கீழ்ச்[1]
செழுதீர்ப்பவளத் திரள்காம்பின்
முழுமதிபுரையு முக்குடைநீழல்
வெங்கண்வினைப்பகை விளிவெய்தப்
பொன்புனைநெடுமதில் புடைவளைப்ப
அனந்தசதுட்டய மவையெய்த

---

* என்னை.......என்றாராகலின். இது சுவடிப் பிரதியில் மட்டுமே காணப்படுகிறது.

1. கொழு நிழற்கீழ்ச்

நனந்தலையுலகுடை நவைநீங்க
மந்தமாருதம் மருங்கசைப்ப
அந்தர துந்துபி நின்றியம்ப
இலங்குசாமரை யெழுந்தலமர
நலங்கிளர்பூமழை நனிசொரிதர
இனிதிருந்
தருணெறி நடாத்திய ஆதிதன்
திருவடி பரவுதுஞ் சித்திபெறற் பொருட்டே
(திருப்பாமாலை)

இக்குறளடி வஞ்சிப்பாவினுள் நாலசைச்சீர் பதினாறும் அடிதோறும் முதற்கண்ணே வந்தவாறு கண்டுகொள்க.

[இதனுள், நேரீற்றுப் பொதுச்சீர் நின்று தன்வருஞ்சீர் முதலசையோடொன்றுவது வெண்சீர் வெண்டளையாகவும், ஒன்றாதது கலித்தளையாகவும், நிரையீற்றுப் பொதுச்சீர் நின்று தன்வருஞ்சீர் முதலசையோ டொன்றினும் ஒன்றாவிடினும் வஞ்சித்தளையாகவும் கொண்டு வழங்கப்படும் என்றவாறு.]

பிறருமிலக்கியங்களை முறைமைப்படுத்திச் சொன்னாரு முளரெனக் கொள்க. என்னை;

குன்று கூதிர் பண்பு தோழி
வளியிசை முத்துறழ் என்றிவை யெல்லாம்
தெளிய வந்த செந்துறை செந்துறை

என்று உதாரண மெடுத்தோதினாரெனக் கொள்க.

['அன்றதென்னார்' என்பதை அன்ற வென்னா ரெனக் கொள்க.] (6)

## 4. தளை

(நின்றசீரின் ஈற்றசைக்கும், வருஞ்சீரின் முதலசைக்கும் உள்ள சீர்களின் (ஓசை) உறவுநிலையே தளையெனப்படும். இக்கருத்தைச் 'சீரிரண்டு தட்டி நிற்றல் தளை' என வரும் தொடரும் உணர்த்தக் காணலாம். இக்கருத்தே நின்றசீரின் ஈற்றசையோடு வருஞ்சீரின் முதலசை ஒன்றினும் ஒன்றாவிடினும் தளையென்றே வழங்கப்பெறும் என்பதையும் வெளிப்படுத்திடக் காணலாம். இவ்வாறு வரும் தளை ஏழனுள், ஒன்றிவந்த தளைகள் நான்கு, ஒன்றாமல் வந்த தளைகள் மூன்று என இருபெரும் பிரிவாகப் பகுக்கப்பெறும். இத்தகு தளைகள் குறித்த செய்திகளையும், சான்றுகளையும், வரும் காரிகைகள் வழிநின்று காண்போம்.)

### தளை வகைகள்

**10. தன்சீர் தனதொன்றிற் றன்றளை யாந்தண**
**வாதவஞ்சி**
**வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குரித்துவல் லோர்வகுத்த**
**வெண்சீர் விகற்பங் கலித்துறை யாய்விடும்**
**வெண்டளையாம்**
**ஒண்சீ ரகவ லுரிச்சீர் விகற்பமு மொண்ணுதலே.**

இக்காரிகை நின்றசீரி னீற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் தம்முளொன்றுவதும் ஒன்றாததுமாகிய ஏழ்தளையும் ஆமாறுணர்த்துதல் நுதலிற்று.

'தன்சீர் தனதொன்றின் தன்றளையாம்' என்பது தன்சீர் நின்று தன்வருஞ்சீர் முதலசையோடொன்றுவது தன்தளையாம் என்றவாறு.

எனவே, ஆசிரிய உரிச்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு நேராயொன்றுவது நேரொன்றிய

ஆசிரியத்தளையாம். நிரையாய் ஒன்றுவது நிரையொன்றிய ஆசிரியத்தளையாம். வெண்பா உரிச்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடொன்றுவது வெண்சீர் வெண்தளையாம், வஞ்சி உரிச்சீர் நின்று தன்வருஞ்சீர் முதலசையோ டொன்றுவது ஒன்றிய வஞ்சித்தளையாம்; என்றவாறு.

'தணவாத' என்று மிகுத்துச் சொல்லியவதனால் தன்சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோடொன்றுவதூஉந் தன் தளையே சிறப்பின்றாயினுமெனக் கொள்க.

'வஞ்சி வண்சீர் விகற்பமும் வஞ்சிக்குரித்து' என்பது:- வஞ்சி உரிச்சீர் நின்று தன்வருஞ்சீர் முதலசையோ டொன்றாததூஉம் ஒன்றாத வஞ்சித்தளையாம் என்றவாறு.

'வண்சீர்' என்று சிறப்பித்த வதனால் வஞ்சி உரிச்சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோ டொன்றாததூஉம் ஒன்றாத வஞ்சித்தளையே சிறப்பின்றாயினும் எனக்கொள்க.

'வல்லோர் வகுத்த வெண்சீர் விகற்பங் கலித்தளையாய் விடும்' என்பது:- வெண்பா உரிச்சீர் நின்று தன்வருஞ்சீர் முதலசையோடொன்றாதது கலித்தளையாம் எ-று.

'வல்லோர் வகுத்த' என்று சிறப்பித்தவதனால் வெண்பா உரிச்சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோ டொன்றாததூஉம் கலித்தளையே சிறப்பின்றாயினும் எனக்கொள்க.

'வெண்தளையாம் ஒண்சீ ரகவல் உரிச்சீர் விகற்பமும்' என்பது:- ஆசிரிய உரிச்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோ டொன்றாதது இயற்சீர் வெண்டளையாம் என்றவாறு.

'ஒண்சீர்' என்று சிறப்பித்தவதனால் ஆசிரிய உரிச்சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோ டொன்றாததூஉம் இயற்சீர் வெண்தளையே சிறப்பின்றாயினும் எனக்கொள்க. என்னை,

வெண்சீர் ஒன்றலும் இயற்சீர் விகற்பமும்
என்றிரண் டென்ப வெண்டளைக் கியல்பே*

*(யாப்பருங்கலம்-18)*

*என்பதி யாப்பருங்கலம்.*

இயற்சீ ரிரண்டு தலைப்பெயல் தம்முள்
விகற்ப மிலவாய் விரவி நடப்பின்
அதற்பெய ராசிரி யத்தளை யாகும்

இயற்சீ ரிரண்டு தலைப்பெயல் தம்முள்
விகற்ப வகையது[1] வெண்டளை யாகும்

உரிச்சீ ரதனுள் உரைத்தமை யன்றிக்
கலக்குந் தளையெனக் கண்டிசி னோரே

வெண்சீர் இறுதிக் கிணையிசை பின்வரக்
கண்டன வெல்லாம் கலித்தளை யாகும்

[தன்சீ ரிரண்டு தலைப்பெயல் தம்முளொத்
தொன்றினும் ஒன்றா தொழியினும் வஞ்சியின்
பந்தம் எனப்பெயர் பகரப் படுமே

*(யா. வி. சூ. 21 உரைமேற்.)*

*என்றார் காக்கைப் பாடினியார்.]* (7)

'ஒண்ணுதலே' என்பது மகடூஉ முன்னிலை.

---

வெண்சீர்-கியல்பே* எனும் இப்பகுதி இச்சுவடிப் பிரதியில் மட்டுமே காணப்படுகிறது. 1. நடையது.

## உதாரண இலக்கிய முதனினைப்புச் செய்யுள்

11. திருமழை யுள்ளா ரகவல் சிலைவிலங்
காகும்வெள்ளை
மருளுறு வஞ்சிமந் தாநிலம் வந்துமை தீர்கலியின்
தெரிவுறு பந்தநல் லாய்செல்வப் போர்க்கதக்
கண்ணனென்ப
துரிமையின் கண்ணின்மை ஓரசைச் சீருக் குதாரணமே.

*இக்காரிகை அத்தளைகளான் வந்த இலக்கியங்கட்கு முதலினைப்புணர்த்துதல் நுதலிற்று.*

*'திருமழை யுள்ளா ரகவல்'* என்பது

### ஆசிரியப்பா

திருமழை தலைஇய இருணிற விசும்பின்
விண்ணதிர் இமிழிசை கடுப்பப்
பண்ணமைந் தவர்தேர் சென்ற வாறே [1]

*இது நிரையொன்றிய ஆசிரியத்தளையான் வந்த செய்யுள்.*

### ஆசிரியப்பா

உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
அலங்குகுலை ஈந்தில் சிலம்பிபொதி செங்காய்
துகில்பொதி பவளம் ஏய்க்கும்
அகில்படு கள்ளியங் காடிறந் தோரே

*(ஐங்குறுநூறு-தனிப்பாடல்-2)*

*இது நேரொன்றிய ஆசிரியத்தளையான் வந்த செய்யுள்.*

*'சிலைவிலங் காகும்வெள்ளை'* என்பது

### செய்யுள்

சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள் – மலைவிலங்கு

1. முழங்கப். 2. இதன் முதலிரண்டடிகள் மலைபடுகடாம். 1-2

தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போது (தண்டி.சூ.16 மேற்கோள்)

இது வெண்சீர் வெண்டளையானும் இயற்சீர் வெண்டளை யானும் வந்த செய்யுள்.

'மருளறு வஞ்சிமந் தாநிலம் வந்து' என்பது:-

**வஞ்சியப்பா**

மந்தாநிலம் வந்தசைப்ப
வெண்சாரை புடைபெயர்தரச்[1]
செந்தாமரை நாண்மலர்மிசை
எனவாங்கு
இனிதின் ஒதுங்கிய இறைவனை
மனமொழி மெய்களான் வணங்குதும் மகிழ்ந்தே
(திருப்பாமாலை)

இது மயக்கமற வகுத்த வஞ்சித்தளை ஒன்றாததூஉம் ஒன்றியதூஉமாக வந்த செய்யுள்.

மைதீர்கலியின் தெரிவுறு பந்தம் செல்வப்போர்க் கதக்கண்ணன் என்பது:-

**கலிப்பா**

செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ இடைநுழையு மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே
(யா. வி. சூ. 32 உரைமேற்)

இது மயக்கமில்லாக் கலித்தளையான் வந்த செய்யுள்.

'நல்லாய்' என்பது மகடூஉ முன்னிலை.

'உரிமையின் கண்ணின்மை ஒரசைச்சீருக்குதாரணமே' என்பது:-

1. புடையிரட்ட

**வஞ்சி விருத்தம்**

உரிமை யின்கண் ணின்மையால்
அரிமதர் மழைக் கண்ணாள்
செருமதி செய் தீமையால்
பெருமை கொன்ற என்பவே *(யா.வி.15 உரைமேற்.)*

இம்மூச்சீரடி வஞ்சி விருத்தத்துள் 'மழை' என்னும் நிரையசைச்சீர் இயற்சீரே போல நின்று வருஞ்சீர் முதலசையோடொன்றாமையின் இயற்சீர் வெண்டளையாயிற்று; 'செய்' என்னும் நேரசைச்சீர் இயற்சீரே போல நின்று வருஞ்சீர் முதலசையோ டொன்றினமையின் ஆசிரியத்தளையாயிற்று. (8)

## 5. அடி

(தளைகள் பொருந்தி நடப்பதற்கேற்ப இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சீர்கள் தொடர்ந்து நிற்பது அடியெனப்படும். இதனை, 'அத்தளை அடுத்து நடத்தலின் அடியே' என்னும் தொடர் விளக்குவதோடு அடி என்பது காரணப்பெயராயிற்று என்பதையும் வெளிப்படுத்திடக் காணலாம். ஓரடியில் தளைகள் ஒன்றோ பலவோ அமைவதற்கேற்ப இடம்பெறும் சீர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே, அவ்வடி குறளடி, சிந்தடி, அளவடி (அ)நேரடி, நெடிலடி, கழிநெடிலடியெனப் பெயரிட்டு வழங்கப் பெறுகிறதென்க.

மேலும், அவ்வடிகளால் அமையப்பெறும் வெண்பா முதலான பாக்களை இத்தனை அடிகளுக்குக் கீழ்ப் பாடக்கூடாது என்பதையும் பாடுபொருளுக்கேற்ப பாடுவோன் அடிவரையின்றி எத்துணை அடிகள் வேண்டுமானாலும் பேரெல்லையாகக் கொண்டு நீட்டித்துப் பாடலாமென்பதையும் வெளிப்படுத்தும் காரிகைகளை உரையாசிரியர் குணசாகரர் வழி நின்று நிரல்படக் காண்போம்.)

## அடி வகைகள்

12\. குறளிரு சீரடி சிந்துமுச் சீரடி நாலொருசீர்
அறைதரு காலை யளவொடு நேரடி யையொருசீர்
நிறைதரு பாத நெடிலடி யாநெடு மென்பணைத்தோள்
கறைகெழு வேற்கணல் லாய்மிக்க பாதங் கழிநெடிலே.

இக்காரிகை அத்தளைகளான் வந்த அடிகளது பெயர் வேறுபாடுணர்த்துதல் நுதலிற்று.

'குறளிருசீரடி' என்பது இருசீரான் வந்த அடி 'குறளடி' எனப்படும் என்றவாறு.

'சிந்துமுச்சீரடி' என்பது முச்சீரான் வந்த அடி சிந்தடி எனப்படும் என்றவாறு.

'நாலொருசீர் அறைதருகாலை யளவொடு நேரடி' என்பது நாற்சீரான் வந்த அடி அளவடி என்றும் நேரடி என்றும் சொல்லப்படும் என்றவாறு.

'ஐயொருசீர் நிறைதரு பாதநெடிலடியாம்' என்பது ஐஞ்சீரான் வந்த அடி நெடிலடி எனப்படும் என்றவாறு.

'நெடுமென் பணைத்தோள் கறைகெழு வேற்கணல்லாய்' என்பது மகடூஉ முன்னிலை.

'மிக்க பாதங் கழிநெடில்' என்பது ஐஞ்சீரின் மிக்க சீரான் வரும் அடியெல்லாம் கழிநெடிலடி எனப்படும் என்றவாறு.

அகலம் உரையிற் கொள்க. என்னை;

இருசீர் குறளடி சிந்தடி முச்சீர்
அளவடி நாற்சீர் ஐஞ்சீர் நெடிலடி
அறுசீர் - கழிநெடில் ஆகு மென்ப

எண்சீர் எழுசீர் விவையாங் கழினெடிற்
கொன்றிய என்ப வுணர்த்தி சினோரே *

*(யாப்பருங்கலம்-24, 25 மேற்கோள்)*

*என்பன காக்கைபாடினியம்*

குறளடி சிந்தடி யிருசீர் முச்சீர்
அளவடி நெடிலடி நாற்சீ ரைஞ்சீர்
நிரனிறை வகையான் நிறுத்தனர் கொளலே
கழினெடி லடியே கசடறக் கிளப்பி
னறுசீர் முதலா வையிரண் டீறா
வருவன பிறவும் வகுத்தனர் கொளலே

*(யாப்பருங்கலம் 24-25 )*

*என்பன யாப்பருங்கலம்*

குறளொடு பந்தமா மிருதளை சிந்தா
முத்தளை யளவடி நாற்றளை நெடிலடி
யைந்தளைக் கழினெடி லென்றி சினோரே.

*என்றார் பிறரும் எனக்கொள்க.** (9)

## உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகை

13. திரைத்தவிருது குறள்சிந் தளவடி தேம்பழுத்து
விரிக்கு நெடிலடி வேனெடுங் கண்ணிவென்
றான்வினையின்
இரைக்குங் கணிகொண்ட மூவடி வோடிடங்
கொங்குமற்றுங்
கரிக்கைக் கவான்மருப் பேர்முலை மாதர் கழிநெடிலே.

இக்காரிகை அவ்வடிகளான் வந்த இலக்கியங்கட்கு முதனினைப்புணர்த்துதல் நுதலிற்று.

---

* இருசீர்........சினரே எனும் இப்பகுதி இச்சுவடிப் பிரதியில் மட்டுமே காணப்படுகிறது.

* குறளொடு;........கொள்க. எனும் இப்பகுதி இச்சுவடிப் பிரதியில் மட்டுமே காணப்படுகிறது.

'திரைத்த விருது குறள்சிந்து' என்பது

### வஞ்சித்துறை

திரைத்த சாலிகை
நிரைத்த போனிரந்
திரைப்ப தேன்களே
விரைக்கொள் மாலையாய்

(*சூளாமணி சீயவதை : 179*)

இது குறளடியான் வந்த செய்யுள்.

### வஞ்சி விருத்தம்

இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றுறக் கத்தினோ
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடங் கையினாய்

(*சூளாமணி. சீயவதை : 171*)

இது சிந்தடியான் வந்த செய்யுள்.

'அளவடி தேம்பழுத்து' என்பது:-

### கலி விருத்தம்

தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியும்
மாம்பழக் கனிகளும் மதுத்தண் டீட்டமும்
தாம்பழுத் துளசில தவள மாடமே.

(*சூளாமணி நகர் : 14*)

இது அளவடியான் வந்த செய்யுள்

'விரிக்கு நெடிலடி வென்றான் வினையின்' என்பது.

## கலித்துறை

வென்றான் வினையின் தொகையாய[1] விரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த உணர்வின்ஒழி யாது மற்றும்
சென்றான் திகழுஞ் சுடர்சூழொளி மூர்த்தி யாகி
நின்றான் அடிக்கீழ்ப் பணிந்தார்வினை நீங்கி நின்றார்

*(சூளாமணி-காப்பு)*

இது நெடிலான் வந்த செய்யுள்.

'இரைக்கும் கணிகொண்ட மூவடிவோடிடங் கொங்கு மற்றும்'

## அறுசீர் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இரைக்கு மஞ்சிறைப் பறவைக ளெனப்பெயர் இனவண்டு புடைசூழ
நுரைக்க ளென்னுமக் குழம்புகள் திகழ்ந்தெழ நுடங்கிய விலையத்தால்
திரைக்க ரங்களிற் செழுமலைச் சந்தனத் திரள்களைக் கரைமேல்வைத்
தரைக்கு மற்றிது குணகடல் திரையொடு பொருதல தவியாதே.

*(சூளாமணி-கல்: 51)*

இது அறுசீர் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

## எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

கணிகொண் டலர்ந்த நறவேங்கை யோடு
கமழ்கின்ற காந்த ளிதழால்
அணிகொண் டலர்ந்த வனமாலை சூடி
அகிலாவி குஞ்சி கமழ

1. தொகையாகி

மணிகுண் டலங்கள் இருபாலும் வந்து
வரையாக மீது திவளத்
துணிகொண் டிலங்கு சுடர்வேலி னோடு
வருவானி தென்கொல் துணிவே.

*(சூளாமணி. அரசி : 197)*

## எண்சீர் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

மூவடிவி னாலிரண்டு சூழ்சுடரும் நாண
முழுதுலக மூடியெழின் முளைவயிரம் நாற்றித்
தூவடிவி னாலிலங்கு வெண்குடையி னீழற்
சுடரோய்நின்[1] அடிபோற்றிச் சொல்லுவதொன் றுண்டால்
சேவடிகள் தாமரையின் சேயிதழ்கள் தீண்டச்
சிவந்தனவோ சேவடியின் செங்கதிர்கள் பாயப்
பூவடிவுக் கொண்டனவோ பொங்கொளிகள் சூழ்ந்து
புலங்கொள்ளா வாலெமக்கெம்[2] புண்ணியர்தங் கோவே

*(சூளாமணி. துறவு. 64)*

*இது எண்சீர் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.*

## ஒன்பதின்சீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்

இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியின் எதிர்ந்த தானையை
இலங்கும் ஆழியின் விலங்கியோன்
முடங்கு வாலுளை மடங்கல் மீமிசை முனிந்து சென்றுடன்
முரண்ட ராசனை முருக்கியோன்
வடங்கொள் மென்முலை நுடங்கு நுண்ணிடை மடந்தை சுந்தரி
வணங்கொள் பூண்முலை[3] மகிழ்ந்தகோன்
தடங்கொள் தாமரை இடங்கொள் சேவடி தலைக்கு வைப்பவர்
தமக்கு வெந்துயர் தவிர்க்குமே.

*(யா. வி. சூ. 25 உரைமேற்.)*

*இது ஒன்பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.*

---

1. சுடரோ யுன் 2. வாதலமக்குப். 3. பூமழை

## பதின்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

கொங்கு தங்கு கோதை யோதி மாத ரோடு
கூடும் நீடும் ஓடை நெற்றி
வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத
நாத வென்று நின்று தாழ
அங்க புவ்வ மாதி யாய வாதி நூலின்
நீதி யோது மாதி யாய
செங்கண் மாலை காலை மாலை சேர்வுர் சேர்வர்
சோதி சேர்ந்த சித்தி தானே.

*(யா. வி. சூ. 53 உரைமேற்.)*

இது பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

'மற்றும்' என்பதனால் பதின்சீரின் மிக்கு வருவனமுள; அவை யாப்பருங்கல விருத்தியுள் கண்டு கொள்க.

'வேனெடுங்கண்ணி ' என்பதும் 'கரிக்கைக் கவான் மருப்பேர் முலைமாதர் ' என்பதும் மகடூஉ முன்னிலை.

'கழிநெடிலே' என்பது அவை எல்லாங் கழிநெடி லடியாம் என்றவாறு.

'விரிக்கு நெடிலடி' என்று சிறப்பித்தவதனால் எண்சீரின் மிக்க சீரான் வருமடிகள் சிறப்பிலவெனக் கொள்க என்று சொல்லிய தறிவித்தற்கெனக் கொள்க. என்னை,

இரண்டு முதலா எட்டு ஈறாகத்
திரண்ட சீரான் அடிமுடி வுடைய
இறந்ன வந்து நிறைந்தடி முடியுனும்
சிறந்த வல்ல செய்யு ளுள்ளே

*(யா. வி. சூ. 25 உரைமேற்.)*

என்றார் காக்கைப்பாடினியர்.

## நான்கு பாக்களுக்கும் உரிய அடியின் சிறுமையும் பெருமையும்

14. வெள்ளைக் கிரண்டடி வஞ்சிக்கு மூன்றடி மூன்றகவற்
கெள்ளப் படாக்கலிக் கீரிரண்ட டாகு மிழிபுரைப்போர்
உள்ளக் கருத்தி னளவே பெருமையொண்
போதலைத்த
கள்ளக் கருந்நெடுங் கட்சுரி மென்குழற் காரிகையே.

இக்காரிகை அவ்வடிவரையான் வந்த நான்கு பாவிற்குஞ் சிறுமை பெருமை உணர்த்துதல் நுதலிற்று.

'வெள்ளைக் கிரண்டடி இழிவு' என்பது வெண்பாவிற்கு இரண்டடியே சிறுமையென்றவாறு.

'வஞ்சிக்கு மூன்றடி இழிவு' என்பது வஞ்சிப்பாவிற்கு மூன்றடியே சிறுமை என்றவாறு.

'மூன்றகவற்கு இழிவு' என்பது ஆசிரியப்பாவிற்கு மூன்றடியே சிறுமை என்றவாறு.

'எள்ளப் படாக்கலிக் கீரிரண்டாகும் இழிவு'' என்பது கலிப்பாவிற்கு நான்கடியே சிறுமையென்றவாறு.

'இழிவு' என்பது நான்கு பாவிற்கும் சிறுமை என்றவாறு.

'உரைப்போர் உள்ளக் கருத்தினளவே பெருமை' என்பது நான்கு பாவிற்கும் பெருமைக்கெல்லை பாடுவேன் பொருள் முடிவுக் குறிப்பே; வரையறையில்லை; என்றவாறு.

'ஒண்போதலைத்த..........காரிகையே' என்பது மகடூஉ முன்னிலை.

'எள்ளப்படாக் கலிக்கு' என்று சிறப்பித்தவதனால் துள்ளலோசையிற் சிறிதும் வழுவாது நாற்சீர் நாலடியான் வருவது தரவுக்கொச்சகக் கலிப்பா என்றும், துள்ளலோசையிற் சிறிது வழுவி நாற்சீர் நாலடியான் வருவது கலிவிருத்தம் என்றும் தெரிந்துணரப்படும் எனக்கொள்க.

'வெள்ளைக் கிரண்டாம் அகவற்கு மூன்று கலிக்கடி நான்கெள்ளப்படா வஞ்சிப்பாவிற்கு மூன்றாம் இழிவு' என்று பாக்களை முறையிற் கூறாது தலைதடுமாற்றமாகக் காரிகை சொல்ல வேண்டிய தென்னையோ எனின் தலைதடுமாற்றந் தந்து புணர்ந்துரைத்த லென்பது தந்திர வுத்தியாகலின். அன்றியும் மயேச்சுரர் முதலாகிய ஒரு சார் ஆசிரியர் வஞ்சிப்பா இரண்டடியானும் வரப்பெறும் என்றாரென்பதூஉம் ஆசிரியப்பா இரண்டடிச் சுரிதமாய் வரப்பெறும் என்றார் என்பதூஉம் அறிவித்தற்கு எனக்கொள்க. என்னை,

வெண்பா ஆசிரியங் கலியே வஞ்சியென
நுண்பா உணர்ந்தோர் நுவலுங் காலை
இரண்டும் மூன்றும் நான்கும் இரண்டும்
திரண்ட அடியின் சிறுமைக் கெல்லை.

*(யா. வி. சூ. 93 உரைமேற்.)*

என்றெடுத்தோதிய மயேச்சுரர் வஞ்சிச் சிறுமைக்குக் காட்டும் பாட்டு;

**வஞ்சிப்பா**

பூந்தண்சினை மலர்மல்கிய பொழிற்பிண்டி
வேந்தன்புகழ் பரவாதவர் வினைவெல்லார்
அதனால்,
அறிவனை தடியிணை பரவப்
பெறுகுவர் யாவரும் பிறவியில் நெறியே.

(திருப்பாமாலை)

இதனை மூச்சீரடி வஞ்சியாக அலகிட்டு இரண்டடி யாமாறு கண்டு கொள்க.

என்னை,

ஒருதொடை ஈரடி வெண்பாச் சிறுமை
இருதொடை மூன்றா மடியி னிழிந்து
வருவன ஆசிரிய மில்லென மொழிப
வஞ்சியு மப்பா வழக்கின ஆகும்.

நான்காம் அடியினும் மூன்றாந் தொடையினும்
தாழ்ந்து கலிப்பா தழுவுத லிலவே
(யா. வி. சூ. 32 உரைமேற்.)

உரைப்போர்[1] குறிப்பினை நீக்கிப் பெருமை
வரைத்தித் துணையென வைத்துரை யில்லென்று
உரைத்தனர் மாதோ உணர்ந்திசி னாரே
(யா. வி. சூ. 32 உரைமேற்கள்)

என்றார் காக்கைபாடினியார். (11)

## உதாரண இலக்கிய முதனிணைப்புக் காரிகை

15. அறத்தா றிதுவென வெள்ளைக் கிழிபக வற்கிழிபு
குறித்தாங் குரைப்பின் முதுக்குறைந் தாங்குறை யாக்கலியின்
றிறத்தா றிதுசெல்வப் போர்ச்செங்கண் மேதிவஞ் சிச்சிறுமை
புறத்தாழ் கருமென் குழற்றிரு வேயன்ன பூங்கொடியே.

இக்காரிகை அவ்வடி வரையறையான் வந்த இலக்கியங்கட்கு முதனினைப்புணர்த்தல் நுதலிற்று.

அறத்தாறிதுவென வெள்ளைக்கிழிபு என்பது;

---

1. படைப்போர்.

### குறள் வெண்பா

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை (குறள் : 38)

இது இரண்டடியான் வெண்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

'அகவற்கிழிபு குறித்தாங் குரைப்பின் முதுகுறைந்தாம்' என்பது;

### ஆசிரியப்பா

முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலையன் ஒள்வேற் கண்ணி
முலையும் வாரா[1] முதுக்குறைந் தனளே
(யா. வி. சூ. 32 உரைமேற்.)

இது மூன்றடியான் ஆசிரியப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

'குறையாக் கலியின் திறத்தா றிதுசெல்வப்போர்' என்பது,

### தரவு கொச்சகக் கலிப்பா

செல்வப்போர்க் கதக்கண்ணன் .........பாய்ந் தொளித்ததே
(காரிகை. 11 மேற்.)

இது நான்கடியாற் கலிப்பாவிற்குச் சிறுமை வந்தவாறு.

---

1. முலையினும் வாரார்.

'செங்கண்மேதி வஞ்சிச் சிறுமை' என்பது;

வஞ்சிப்பா

செங்கண்மேதி கரும்புழக்கி
அங்கணீலத் தலரருந்திப்
பொழிற்காஞ்சி நிழற்றுயிலும்
செழுநீர்
நல்வயற் கழனி யூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே

*(யா. வி. சூ. 15 உரைமேற்.)*

இது மூன்றடியான் வஞ்சிப்பாவிற்குச் சிறுமை என்றவாறு.

புறத்தாழ் கருமென் குழல்திரு வேயன்ன பூங்கொடி என்பது; 'மகடூஉ' முன்னிலை.

[ ஆங்கு : அசை ] (12)

## 6. தொடை

(தொடை என்பது செய்யுளுறுப்புகளுள் ஒன்றைக் குறிக்கும் இலக்கணக்கலைச்சொல்லாகும். மாலைகளில் பூக்களை அழகு பெறத் தொடுப்பது போலப் பாக்களில் இடம்பெறும் அடிகளில் சீர்களில் எழுத்துக்கள் அழகுபெறத் தொடுக்கப்படுவதால் தொடையெனப் பட்டது. இக்கருத்தை, 'அடியிரண்டு தொடுத்தல் முதலாயின தொடையே' என்னும் கூற்றும் சுட்டுவதோடு, தொடை என்பது காரணப்பெயராயிற்று என்பதையும் சுட்டிடக் காணலாம். இவற்றுள், அடிகள்தோறும் (மேலிருந்து கீழாக) எழுத்துக்களை அழகுபெறத் தொடுப்பது அடித்தொடை எனப்படும். அவ்வடிகளில் இடம்பெற்றுள்ள சீர்களில் (இடமிருந்து வலமாக) எழுத்துக்களை அழகுபெற தொடுப்பது தொடை விகற்பம் எனப்படும். இவ்விரு வகைகளுள் அடித்தொடை என்பது மோனை, இயைபு, எதுகை, அளபெடை, முரண், அந்தாதி, இரட்டைத்தொடை,

செந்தொடை என எட்டு வகைப்படும். மற்றொரு வகையான தொடை விகற்பம் இணை, பொழிப்பு, கூழை, ஒரூஉ, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என ஏழு வகைப்படும். இத்தொடை விகற்பங்கள் முறையே மேற்குறித்த முதல் ஐந்து அடித்தொடையினையேற்று உறழத் தொடை விகற்பங்கள் முப்பத்தைந்தாகும். இவற்றுடன் அடித்தொடை எட்டினைக் கூட்டிடாத் தொடைகள் நாற்பத்து மூன்று வகைப்படும். இத்தொடைகள் குறித்த காரிகை செய்திகளை உரையாசிரியர் குணசாகரர் வழிநின்று இனிக் காண்போம்.)

## தொடை வகைகள்

16. எழுவா யெழுத்தொன்றின் மோனை யிறுதி
யியைபிரண்டாம்
வழுவா வெழுத்தொன்றின் மாதே எதுகை மறுதலைத்த
மொழியான் வரினு முரணடி தோறு மொழிமுதற்கண்
அழியா தளபெடுத் தொன்றுவ தாகு அளபெடையே.

**இக்காரிகை :-**

| | | |
|---|---|---|
| *1.* | அடிமோனை | கூழைமோனை |
| | இணைமோனை | மேற்கதுவாய்மோனை |
| | பொழிப்புமோனை | கீழ்க்கதுவாய்மோனை |
| | ஒரூஉமோனை | முற்றுமோனை எனவும், |
| *2.* | அடியியைபு | கூழையியைபு |
| | இணையியைபு | மேற்கதுவாயியைபு |
| | பொழிப்பியைபு | கீழ்க்கதுவாயியைபு |
| | ஒரூஉவியைபு | முற்றியைபு எனவும், |
| *3.* | அடியெதுகை | கூழையெதுகை |
| | இணையெதுகை | மேற்கதுவாயெதுகை |
| | பொழிப்பெதுகை | கீழ்க்கதுவாயெதுகை |
| | ஒரூஉயெதுகை | முற்றெதுகை எனவும், |

4. அடிமுரண் கூழைமுரண்
இணைமுரண் மேற்கதுவாய்முரண்
பொழிப்புமுரண் கீழ்க்கதுவாய்முரண்
ஒரூஉமுரண் முற்றுமுரண் எனவும்,

5. அடியளபெடை கூழையளபெடை
இணையளபெடை மேற்கதுவாயளபெடை
பொழிப்பளபெடை கீழ்க்கதுவாயளபெடை
ஒரூஉவளபெடை முற்றளபெடை எனவும்,

அந்தாதித்தொடை, இரட்டைத் தொடை, செந்தொடை என்னும் தொடையும், தொடை விகற்பமும் ஆமாறுணர்த்துவான் எடுத்துக் கொண்டார்.

அவற்றுள் இக்காரிகை அடிமோனையும், அடியியைபும், அடியெதுகையும், அடிமுரணும், அடியளபெடையும் ஆமாறு ணர்த்துதல் நுதலிற்று.

'எழுவாய் எழுத்தொன்றின் மோனை' என்பது; அடிதோறும் முதலெழுத்தொன்றி வரத்தொடுப்பது அடிமோனைத் தொடை எனப்படும் என்றவாறு.

எழுவாயெனினும், ஆதியெனினும், முதலெனினும் ஒக்கும். மோனையெனினும் முதற்றொடை யெனினும் ஒக்கும்.

'இறுதியியைபு' என்பது:- அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தானும், சொல்லானும் ஒன்றிவரத் தொடுப்பது அடியியைபுத்தொடை எனப்படும் என்றவாறு.

'இரண்டாம் வழுவா வெழுத்தொன்றின் எதுகை' என்பது:- அடிதோறும் முதற்கண் இரண்டாமெழுத் தொன்றிவரத் தொடுப்பது [*அடியெதுகைத் தொடை] எனப்படும் என்றவாறு.

'மாதே' என்பது:- மகடூஉ முன்னிலை.

'இரண்டாமெழுத்தொன்றி னெதுகை' என்னாது 'வழுவா வெழுத்து' என்று மிகுத்துச் சொல்லிய வதனால், இரண்டாமெழுத் தொன்றிவரினும் முதலெழுத்தெல்லாந் தம்முள் ஒத்த அளவினவாய் வந்து கட்டு என்பதற்குப் பட்டு என்பதல்லது பாட்டு என்பது எதுகையாகாது, காட்டு என்பதற்குப் பாட்டு என்பதல்லது பட்டு என்பது எதுகையாகாது எனக்கொள்க.

'மறுதலைத்த மொழியான் வரினுமுரண்' என்பது; அடிதோறும் முதற்கண் சொல்லானும் பொருளானும் மறுதலைபடத் தொடுப்பது அடிமுரண்தொடை எனப்படும் என்றவாறு.

'மொழியான் வரினும்' என்ற உம்மையாற் பொருளான் வரினும் என்பதாயிற்று. அடிதோறும் என்பது மத்திம தீபம் எனக்கொள்க.

'முதன்மொழிக்கண் அழியா தளபெடுத் தொன்றுவ தாகும் அளபெடையே' என்பது, அடிதோறும் முதற்கண் உயிரானும் ஒற்றானும் அளபெடுத்தொன்றிவரத் தொடுப்பது அடியளபெடைத் தொடை எனப்படும் என்றவாறு.

'அழியாது' என்று மிகுத்துச் சொல்லிய வதனால் நான்கு அளபெடையும், இரண்டொற்றளபெடையும் தம்முள் ஒன்றிவரத் தொடுப்பது சிறப்புடைத்து; தொடை விகற்பத்துள் நான்கு உயிரளபெடையும் இரண்டொற்றள பெடையும் தம்முள் மறுதலைப்படத் தொடுப்பினும் இழுக்காது எனக் கொள்க.

என்னை,

முதலெழுத் தொன்றின் மோனை யெதுகை
முதலெழுத் தளவோ டொத்தது முதலா
அஃதொழித் தொன்றி னாகு மென்ப

(யா. வி. சூ. 36 உரைமேற்.)

என்றார் பல்காயனார்.

ஆயிரு தொடைக்குங் கிளையெழுத் துரிய
மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே
இறுவாய் ஒப்பினஃ தியைபென மொழிப

(தொல். பொருள். 403-405)

என்றார் தொல்காப்பியனார்.

அளபெடைத் தொடைக்கே அளபெடை ஒன்றும்

(யா. வி. சூ. 41 உரைமேற்.)

என்றார் நற்றத்தனார். (13)

17. அந்த முதலாத் தொடுப்பதந் தாதி யடிமுழுதும்
வந்த மொழியே வருவ திரட்டை வரன்முறையான்
முந்திய மோனை முதலா முழுதுமொவ் வாதுவிட்டால்
செந்தொடை நாமம் பெறுநறு மென்குழற்
றேமொழியே.

இக்காரிகை அந்தாதித் தொடையும் இரட்டைத் தொடையும் செந்தொடையும் ஆமாறுணர்த்துதல் நுதலிற்று.

'அந்தாதி முதலாத் தொடுப்ப தந்தாதி ' என்பது அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தானும், அசையானும், சீரானும், அடியானும் மற்றையடிக் காதியாகத் தொடுப்பது அந்தாதித் தொடை எனப்படும் என்றவாறு.

'அடிமுழுதும் வந்த மொழியே வருவ திரட்டை வரன்முறையான்' என்பது ஓரடி முழுவதும் ஒரு சொல்லே] * வரத் தொடுப்பது இரட்டைத்தொடை எனப்படும் என்றவாறு.

'வரன்முறையான்' என்று மிகுத்துச் சொல்லிய வதனால் ஈற்றெழுத்தொன்று குறையினும் இழுக்காது; நாற்சீரின் மிக்குவரப் பெறாது எனக்கொள்க.

'முந்திய மோனை முதலா முழுதும் ஒவ்வாது விட்டால் செந்தொடை நாமம் பெறும்' என்பது மேற்சொல்லப்பட்ட மோனை முதலாகிய தொடையும், தொடைவிகற்பமும் போலாது வேறுபடத் தொடுப்பது செந்தொடை எனப்படும் என்றவாறு.

'முந்திய' என்று மிகுத்துச் சொல்லியதனால்[1] அசையுஞ் சீரும் தம்முள் மறுதலைப்படத் தொடுப்பது சிறப்புடைத்தெனக் கொள்க. என்னை;

> அடியுஞ் சீரும் அசையும் எழுத்தும்
> முடிவு முதலாச் செய்யுள் மொழியினஃ
> தந்தாதித் தொடையென் நறைதல் வேண்டும்
>
> *(நற்றத்தனார் யா.வி. ப. 203)*

என்றார் நற்றத்தனார்.

> ஒருசொலடி[2] முழுதும் வருவ திரட்டை
>
> *(யா. வி. சூ. 51 உரைமேற்.)*

எனவும் சொன்னார் மயேச்சுரர்.

> சொல்லிய தொடையொடு வேறுபட் டியலிற்
> சொல்லியற் புலவரது செந்தொடை யென்ப
>
> *(தொல். பொருள். 409)*

---

*[அடியெதுகை...........ஒரு சொல்லே] ஆங்காங்கே என்பது வரையில் சிதைந்து போன சுவடிப்பகுதிகள் பிற அச்சுப்பிரதி துணைகொண்டு பதிப்பிக்கப்பெற்றன.

1. சிறப்பித்த வதனால். 2. ஒருசீரடி.

அசையினுஞ் சீரினு மிசையினும் எல்லாம்
இசையா தாவது செந்தொடை தானே
(யா. வி. சூ. 50 உரைமேற்.)

என்றார் பல்காயனார். (14)

நறுமென் குழல் தேமொழியே என்பது மகடூஉ முன்னிலை

## உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகை

18. மாவும்புண் மோனை யியைபின் னகைவடி
யேரெதுகைக்
கேவின் முரணு மிருள்பரந் தீண்டள பாஅடிவளிய
ஒவிலந் தாதி யுலகுட னாமொக்கு மேயிரட்டை
பாவருஞ் செந்தொடை பூத்தவென் றாகும்
பணிமொழியே.

இக்காரிகை அடிமோனை முதலாகிய முதற்றொடை எட்டினாலும் வந்த இலக்கியங்கட்கு முதனினைப் புணர்த்துதல் நுதலிற்று.

'மாவும்புண் மோனை' என்பது,

### நேரிசை யாசிரியப்பா

மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடை
மாயோன் இன்னுயிர்ப் புறத்திறுத் தன்றே.
(யா. வி. சூ. 35 உரைமேற்.)

இஃ்தடிதோறும் முதலெழுத்தொன்றிவரத் தொடுத்தமையான் அடிமோனைத் தொடை என்றவாறு.

'இயைபின் னகையென்பது'

### நேரிசை யாசிரியப்பா

இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் அணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
ஆடமைத் தோளி ஊடலும்[1] அணங்கே
அரிமதர் மழைக்கணும் அணங்கே
திருநுதற் பொறித்த திலகமும் அணங்கே.

*(யா. வி. சூ. 40 உரைமேற்.)*

இஃது அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றிவரத் தொடுத்தமையான் அடியியைபுத் தொடை என்றவாறு.

'வடியே ரெதுகைக்கு' என்பது,

### இன்னிசை வெண்பா

வடியேர்கண் ணீர்மல்க வான்பொருட்கட் சென்றார்
கடியார் கணங்குழாய் காணார்கொல் காட்டில்
இடியின் முழக்கஞ்சி யீர்ங்கவுள் வேழம்
பிடியின் புறத்தசைத்த கை

*(யா. வி. சூ. 36 உரைமேற்.)*

இஃது அடிதோறும் இரண்டாமெழுத்தொன்றிவரத் தொடுத்தமையான் அடியெதுகைத் தொடை என்றவாறு.

'ஏவின் முரணு மிருள்பரந் தென்பது'

### நேரிசை யாசிரியப்பா

இருள்பரந் தன்ன[2] மாநீர் மருங்கில்
நிலவுக்குவிந் தன்ன வெண்மண லொருசிறை

---

1.கூடலும் 2. விரிந்தன்ன

இரும்;பி னன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னி னன்ன நுண்டா துறைக்குஞ்
சிறுகுடி பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணு முடையவா லணங்கே.

*(யா. வி. சூ. 36 உரைமேற்.)*

இஃது அடிதோறும் முதற்கண்ணே எல்லாம் மறுதலைபடத் தொடுத்தமையான் அடிமுரண் தொடை; என்றவாறு.

['ஏவின் முரணு'மென்பது எல்லா முரண் தொடையாலும் வரப்பெறும் என்றவாறு.]

'ஈண்டஎ பாஅவளிய' என்பது

**பஃறொடை வெண்பா**

ஆஅ வளிய வலவன்றன் பார்ப்பினோ
டீஇ ரிரையுங்கொண் டீரளைப் பள்ளியுள்
தூஉந் திரையலைப்பத் துஞ்சா துறைவன்றோள்
மேஎ வலைப்பட்ட நம்போல் நறுநுதால்
ஓஒ உழக்குந் துயர்.

*(யா.வி. சூ. 41 உரைமேற்.)*

இஃதடிதோறும் முதற்கண்ணே அளப்பெடுத் தொன்றிவரத் தொடுத்தமையான் அடியளபெடைத் தொடை என்றவாறு.

'ஒவிலந்தாதி யுலகுடனா மொக்குமே யிரட்டை' என்பது

**நேரிசை யாசிரியப்பா**

உலகுடன் விளங்கும் ஒளிதிகழ்[1] அவர்மதி
மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை

1. ஒளிகிளர்.

முக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி னறிவன்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவனை
அறிவுசேர் உள்ளமோ டருந்தவர் புரிந்து
துன்னிய மாந்த ரஃ தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை உலகே.

(திருப்பாமாலை)

நான்கந்தாதித் தொடையும் வந்த செய்யுள்.

['ஒவிலந்தாதி' என்றவதனால் எல்லா வந்தாதியும் வரப்பெறும் என்று கொள்க.]

'ஒக்குமே இரட்டை' என்பது;

**இன்னிசைச் சிந்தியல் வெண்பா**

ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
விளக்கினிற் சீறெரி யொக்குமே யொக்குங்
குளக்கொட்டிப் பூவின் நிறம்

(யா.வி. சூ. 51 உரை மேற்.)

இஃது ஓரடி முழுவதும் ஒரு சொல்லே வரத் தொடுத்தமையால் இரட்டைத்தொடை என்றவாறு.

[இஃது இறுதிச்சீர் ஏகாரத்தாற் குறைபடினும் இழுக்காது; நாற்சீரின் மிக்கு வரப்பெறாது எனக்கொள்க.]

'பாவருஞ் செந்தொடை பூத்தவென்றாகும்' என்பது;

**நேரிசை யாசிரியப்பா**

பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலினம் அகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே

(தமிழ்நெறி. பொருள். 17 உரைமேற்.)

இது மோனை முதலாகிய தொடையும் தொடை விகற்பமும் போலாது வேறுபடத் தொடுத்தமையாற் செந்தொடை. பாவரு மென்பதனை இறுதி விளக்காகக் கொண்டு பொருளுரைத்துக் கொள்க.

'பணி மொழியே' என்பது; மகடூஉ முன்னிலை. (15)

## தொடை விகற்பம்

19. இருசீர் மிசையிணை யாகும் பொழிப்பிடை
யிட்டொரூஉவாம்
இருசீ ரிடையிட்ட தீறிலி கூழை முதலிறுவாய்
வருசீ ரயலில மேல்கீழ் வகுத்தமை தீர்கதுவாய்
வருசீர் முழுவது மொன்றின்முற் றாமென்ப
மற்றவையே.

இக்காரிகை இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடை விகற்பமும் ஆமாறுணர்த்துதல் நுதலிற்று.

'இருசீர் மிசையிணை யாகும்' என்பது:- முதலிரு சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது இணைத்தொடை எனப்படும் என்றவாறு.

'பொழிப்பிடையிட்டு' என்பது முதற்சீர்க் கண்ணும் மூன்றாஞ் சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது பொழிப்பு எனப்படும் என்றவாறு.

'ஒரூஉவாம் இருசீர் இடையிட்டது' என்பது நடுவிரு சீர்க்கண்ணுமின்றி முதற்சீர்க்கண்ணும் இறுதிச் சீர்க்கண்ணும் மோனை முதலாயினவரத் தொடுப்பது ஒரூஉ எனப்படும் என்றவாறு.

'ஈறிலி கூழை' என்பது; இறுதிச் சீர்க்கணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது கூழை எனப்படும்.

'முதலிறுவாய் வருசீ ரயலில மேல்கீழ் வகுத்தமை தீர்க்கது வாய்' என்பது முதலயற்சீர்க்கணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது மேற்கதுவாய் என்றும், ஈற்றயற்சீர்க் கணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது கீழ்க்கதுவாய் என்றும் சொல்லப்படும் என்றவாறு.

இது நிரனிறையெனக் கொள்க. என்னை;

**கடையயல் முதலயல் கதுவாய் கீழ்மேல்**

*(யா. வி. சூ. 47 உரைமேற்.)*

என்றார் பிறரும்.

முதலயற்சீர்க்கண் இல்லாததனைக் கீழ்க்கது வாயென்றும், ஈற்றயற்சீர்க்கண் இல்லாததனை மேற்கதுவாய் என்றும் வேண்டினார் கையடனார் முதலாகிய ஒருசார் ஆசிரிய ரென்பதறிவித்தற்கு 'மைதீர் கதுவாய்' என்று விதப்புரைத்தார் எனக்கொள்க.

**விதப்புக் கிளவி வேண்டுவது விளைக்கும்**

*(காரிகை -4 மேற்கோள்)*

'வருசீர் முழுவதும் ஒன்றின முற்றாமென்ப' என்பது; எல்லாச் சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத்தொடுப்பது முற்று எனப்படும் என்றவாறு.

['மற்றவையே' என்பது இணைமோனை முதலிய முப்பத்தைந்து தொடை விகற்பமும் என்றவாறு.]

மற்றவையே யென்பது: இறுதி விளக்கெனக் கொள்க.

'சீர்முழுது மொன்றின் முற்றாம்' என்னாது, 'வருசீர்' என்று சிறப்பித்தது. இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடை விகற்பமும் அளவடிக் கண்ணே வழங்கப்படும் என்பதூஉம், 'இணையியைபு' முதலாகிய ஏழு விகற்பமும் இறுதிச் சீரை முதற்சீராகக் கொண்டு வழங்கப்படும் என்பதூஉம் அறிவித்தற்கெனக் கொள்க.

இயைபுத் தொடைக்கு ஏழு விகற்பமும் காட்டினார் கையடனார் முதலாகிய வொருசாரார் ஆசிரியரெனக் கொள்க. என்னை;

இருசீர் மிசைவரத் தொடுப்ப திணையே
முதலொடு மூன்றாஞ் சீர்த்தொடை பொழிப்பே
சீரிரண் டிடைவிடத் தொடுப்ப தொரூஉத்தொடை
மூவொரு சீரு முதல்வரத் தொடுப்பது
கூழை யென்மனார் குறியுணர்ந் தோரே
முதலயற் சீரொழித் தல்லன மூன்றின்
மிசைவரத் தொடுப்பது மேற்கது வாயே
ஈற்றயற் சீரொழித் தெல்லாந் தொடுப்பது
கீழ்க்கது வாயின் கிழமைய தாகும்
சீர்தொறுந் தொடுப்பது முற்றெனப் படுமே

*(யாப்பருங்கலம் 42-48)*

என்றாராகலின்.

மோனை எதுகை முரணியை பளபெடை
பாதம் இணையே பொழிப்பொ டொரூஉத் தொடை
கூழை கதுவாய் மிசையதூஉம் கீழதூஉம்
சீரிய முற்றொடு சிவணுமா ரவையே

*(யாப்பருங்கலம்-34)*

என்பதி யாப்பருங்கலம். (16)

## உதாரண இலக்கிய முதலிணைப்புக் காரிகை

20. மோனை விகற்ப மணிமலர் மொய்த்துட னாமியைபிற்
கேனை யெதுகைக் கினம்பொன்னி னன்ன
வினிமுரணிற்
கான விகற்பமுஞ் சீறடிப்பேர தளபெடையின்
தான விகற்பமுந் தாஅட்டாஅ மரையென்ப தாழ்குழலே.

யாப்பரு. காரிகை-9

இக்காரிகை இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடை விகற்பங்களால் வந்த இலக்கியங்கட்கு முதனினைப் புணர்த்துதல் நுதலிற்று.

'மோனை விகற்பம் அணிமலர்' என்பது;

### நேரிசை ஆசிரியப்பா

அணிமல ரசோகின் தளிர்நலங் கவற்றி
அரிற்குரற் கிண்கிணி யரற்றுஞ் சீரடி
அம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி
அகன்ற வல்கு லந்நுண் மருங்குல்
அரும்பிய கொங்கை அவ்வளை யமைத்தோன்
அவிர்மதி யன்னைய திருநுத லரிவை
அயில்வே லனுக்கி யம்பலைத் தமர்ந்த
கருங்கயல் நெடுங்க ணோக்கமென்
திருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே

(யா. வி. சூ. 35 உரைமேற்.)

இதனுள் இணைமோனை முதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டு கொள்க.

'மொய்த்துடனா மியைபிற்கு' என்பது;

### நேரிசையாசிரியப்பா

மொய்த்துடன் தவழு முகிலே பொழிலே
மற்றத னயலே முத்துறழ் மணலே
நிழலே இனியத னயலது கடலே
மாதர் நகிலே வல்லே யியலே
வில்லே நுதலே வேற்கண் கயலே
பல்லே தளவம் பாலே சொல்லே

புயலே குழலே மயிலே யியலே அதனால்,
இவ்வயின் இவ்வுரு இயங்கலின்
எவ்வயி னோரு மிழப்பர்தந் நிறையே
(யா. வி. சூ. 40 உரைமேற்.)

இதனுள் இணையியைபு முதலிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டு கொள்க.

'ஏனையெதுகைக் கினம்பொன்னி னன்ன' என்பது;

**நேரிசைய்யாசிரியப்பா**

பொன்னி னன்ன பொறிசுணங் கேந்திப்
பன்னருங் கோங்கின் நன்னலங் கவற்றி
மின்னவி ரொளிவடந் தாங்கி மன்னிய
நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி
என்னையு மிடுக்கண் துன்னுவித் தின்னடை
அன்ன மென்படை போலப் பன்மலர்க்
கன்னியம் புன்னை யின்னிழல் துன்னிய
மயிலேர் சாயலவ் வாணுதல்
அயில்வேல் உண்கணெம் அறிவுதொலைத் தனவே.
(யா. வி. சூ. 36 உரைமேற்.)

இதனுள் இணையெதுகை முதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

இனி 'முரணிற்கான விகற்பமுஞ் சீறடிப் பேரகு' என்பது;

**நேரிசையாசிரியப்பா**

சீறடிப் பேரகல் அல்குல் ஒல்குபு
சுருங்கிய நுசுப்பிற் பெருகுவடந் தாங்கி
குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து

சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன்
வெள்வளைத் தோளுகளுஞ் சேயரிக் கருங்கணும்
இருக்கையு நிலையும் ஏந்தெழி லியக்கமும்
துவர்வாய்த் தீஞ்சொலு முவுவந்தெனை முனியாது
என்றும் இன்னண மாகுமதி
பொன்றிகழ் நெடுவேற் போர்வல் லோயே

*(யா. வி. சூ. 38 உரைமேற்.)*

இதனுள் இணைமுரண் முதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டுகொள்க.

'அளபெடையின் தானவிகற்பமுந் தாஅட்டாஅ மரையென்ப' என்பது;

## நேரிசையாசிரியப்பா

தாஅட் டாஅ மரைமலர் உழக்கிப்
பூஉக் குவளைப் போஒ தருந்திக்
காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய்
மாஅத் தாஅள் மோஒட் டெருமை
தேஎம் புனலிடைச் சோஒட் பாஅல்
மீஇ னாஅர்த் துகளுஞ் சீஇர்
ஏஎ னாஅ நீஇ ணீஇர்
ஊரன் செய்த கேண்மை
ஆய்வளைத் தோளிக் கலரா னாவே

*(யா. வி. சூ. 41 உரைமேற்.)*

இதனுள் இணையளபெடை முதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்தவாறு கண்டு கொள்க.

['தான விகற்பம்' என்று சிறப்பித்தவதனால் இரண்டள பெடையும் வரப்பெறும் எனக்கொள்க.]

'தாழ்குழலே' என்பது; மகடூஉ முன்னிலை

நனைமலர்ப் பிண்டி நாதன் சேவடி
மனமொழி மெய்யால் வணங்குறும் மகிழ்ந்தே* (17)

## உறுப்பியற் செய்யுட்களின் முதனினைப்புக் காரிகை

உ.ஆ.1. கந்தமுந் தேனுஞ் சுருக்கமுங் காதற் குறில்குறிலே
சந்தமுந் தீரசை தேமாந்தண் குன்றந்தண் சீர்திருவுங்
கொந்தவிழ் கோதாய் குறடிரை வெள்ளைக்
கறத்தெழுவாய்
அந்தமு மாவு மிருசீரு மோனையு மாமுறுப்பே. (1)

உறுப்பியல் முற்றும்

---

* நனைமலர்ப்.......மகிழ்ந்தே எனும் கடவுள் வாழ்த்து இச்சுவடிப் பிரதியில் காணப்படுகிறது.

## செய்யுளியல்

(எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் ஆறு உறுப்புக்களானானது செய்யுளாகும். யாப்பெனினும், பாட்டெனினும், தூக்கு எனினும், தொடர்பெனினும், செய்யுள் எனினும் ஒக்கும்.

**யாப்பும்**
**தூக்கும் பாட்டும் தொடர்புஞ் செய்யுளை**
**நோக்கிற் றென்ப நுணங்கி யோரே**
*(துற்சிறப்புப்பாயிர மேற்கோள்)*

என்றாராகலின். இதனை,

**எழுத்து முதலா ஈண்டிய அடியிற்**
**குறித்த பொருளை முடிய நாட்டல்**
**யாப்பென மொழிப யாப்பறி புலவர்**
*(தொல். பொருள். 387)*

எனத் தொல்காப்பியர் யாப்பென்றும்,

**பல்வகைத் தாதுவின் உயிர்க் குடல்போல்**
**பல்வகைச் சொல்லான் பொருளுக் கிடனாக**
**வல்லோர் அணிபெற செய்வன செய்யுள்**
*(நன்னூல். சொல். 11)*

எனப் பவணந்தியார் செய்யுள் என்றும் சுட்டியுள்ளதன் வழியும் அறியலாம்.

இச்செய்யுளை வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற நான்குவகை பாக்களாகவும் இவை ஒவ்வொன்றையும் தாழிசை, துறை, விருத்தம் என மும்மூன்று இனங்களாகவும் பாகுபடுத்தி இலக்கணம் கூறி இப்பாக்கள் ஒவ்வொன்றையும் வகைப்படுத்தி விளக்கியிருப்பதால் இவ்வியல் செய்யுளியல் என்னும் காரணப்பெயரால் வழங்கலாயிற்று.

இவ்வியலில் காரிகையாசிரியரால் இயற்றப்பட்டன வாகப் பதினைந்து காரிகைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் செய்யுளியல் வகைகளுக்கு இலக்கணம் சுட்டும் நேரசையைக் கொண்டு தொடங்கும் காரிகை ஏழும், நிரையசையைக் கொண்டு தொடங்கும் உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகை ஒன்றும் அடங்கும். இதனுள் நேரசை காரிகைகளுக்கு எழுத்து நானூற்று நாற்பத்தெட் டெழுத்து. நிரையசை காரிகைகளுக்கு எழுத்து ஐந்நூற்று நாற்பத்து நான்காம். இவ்விரு திறமும் கூட்ட எழுத்துத் தொள்ளாயிரத் தொண்ணூற்றிரண்டெழுத்தாம். இவற்றின் மொத்த கிரந்தம் முப்பத்தொன்றாகும்.

உரையாசிரியர் குணசாகரர் இந்நூலைப் பயில்வோர், உரைமேற்கோள் பாடல்களை நினைவிற் கொள்ளும் பொருட்டு உரைசூத்திர முதனினைப்புக் காரிகை பதின்மூன்றும், இவ்வியல் இறுதியில செய்யுளியல் சூத்திர முதற்குறிப்புக் காரிகை ஒன்றும் ஆகப் பதினான்கு காரிகைகளைத் தாமே இவ்வியலில் படைத்துக் கொண்டுள்ளார். இவற்றுள் நேரசையைக் கொண்டு தொடங்கும் காரிகை பதினொன்றும், நிரையசையைக் கொண்டு தொடங்கும் காரிகை மூன்றும் இடம் பெற்றுள்ளன.)

## பாக்களுக்குரிய அடியும் ஓசையும்

செய்யுளுறுப்புகளுள் ஒன்றாகிய அடி ஐந்து வகைப்படும் என்பதை முன்பே கண்டோம். அவ்வடிகளுள் எவ்வெவ்வடிகள் எவ்வெவ்பாக்களுக்குரியன என்பதையும் எவவெவ்பாக்களுக்கு எவ்வெவ்வோசைகள் உரியன வென்பதையும் சுட்டிடும் காரிகையை உரைவழி நின்று காண்போம்.

21. வெண்பா அகவற் கலிப்பா வளவடி வஞ்சியென்னும்
ஒண்பா வடிகுறள் சிந்தென் றுரைப்ப வொலிமுறையே
திண்பா மலிசெப்பல் சீர்சா லகவற்சென்
றோங்குதுள்ளல்
நண்பா வமைந்த நலமிகு தூங்க னறுநுதலே.

என்பது காரிகை. இவ்வோத்தென்ன[1] பெயர்த்தோவெனின் வெண்பா, வெள்ளொத்தாழிசை, வெண்டுறை, வெளி விருத்தம், ஆசிரியப்பா, ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம், கலிப்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம், வஞ்சிப்பா, வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம், மருட்பாவெனக் கிடந்த செய்யுட்களை ஆமாறு உணர்த்திற்றாதலாற் செய்யுளோத் தென்னும் பெயர்த்து.

[வெண்பா முதலா விளம்புநாற் பாவொலி
செப்ப லகவல் சீர்கெழு துள்ளல்
தூங்க லென்ப தொன்னூற் புலவர்
என்றாராகலின்,]

இவ்வோத்தினுளிக் காரிகை யென்னுதலிற்றோ எனின் வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்னும் நான்கு பாவிற்கு மடியும் ஓசையுமாமாறு உணர்த்துதற்பாற்று.

'வெண்பா வகவல் கலிப்பா அளவடி' என்பது, வெண்பாவு மாசிரியப்பாவுங் கலிப்பாவுந் நாற்சீரடியான் வரும் என்றவாறு.

'வஞ்சியென்னும் ஒண்பாவடி குறள் சிந்தென்றுரைப்ப' வென்பது; வஞ்சிப்பா இருசீரடியானும், முச்சீரடியானும் வரும் என்பர் புலவர் என்றவாறு.

---

1. இவ்வியல்

'வஞ்சியென்னு மொண்பா' என்று சிறப்பித்தவதனால் வெண்பாவின் ஈற்றடியும் நேரிசை யாசிரியப்பாவின் ஈற்றயலடியும், கலிவெண்பாவின் ஈற்றடியும் முச்சீரான் வரப்பெறும் என்றவாறு. [இணைக்குறள் ஆசிரியப்பாவின் இடையடிகள் இரண்டும் பலவும் குறளடியானும் சிந்தடியானும் வரப்பெறுமென்றும்] கலியினுள் ஒருசாரார் அம்போதரங்க வுறுப்பு மிருசீரடியானும், மூச்சீரடியானும் வருவனமுள எனவும்; அராகவுறுப்புகள் அளவடி முதலாய எல்லாவடியானும் வருவனவுமுள. இவை போக்கித் தத்தம் இலக்கணம் சூத்திரத்துள்ளே காட்டுதும். என்னை,

**சிந்தடி குறளடி யென்றிரண் டடியான்**
**வஞ்சி நடக்கும் என்மனார் புலவர்**

**கலியொடு வெண்பா வகவல் கூறிய**
**அளவடி தன்னா னடக்கு மன்னவையே**

*(யாப்பருங்கலம்-26, 27)*

என்றாராகலின்,

'ஒலிமுறையே திண்பா மலிசெப்பல் சீர்சால் அகவல் சென்றோங்கு துள்ளல் நண்பா வமைந்த நலமிகு தூங்கல்' என்பது வெண்பா செப்பலோசையான் வரும். ஆசிரியப்பா அகவல் ஓசையான் வரும். கலிப்பா துள்ளலோசையான் வரும். வஞ்சிப்பா தூங்கலோசையான் வரும் என்றவாறு. 'நறுநுதலே' என்பது மகடூஉ முன்னிலை.

'திண்பா மலிசெப்பல்' என்று சிறப்பித்தவதனால் செப்பலோசை மூன்று வகைப்படும். ஏந்திசைச் செப்பலும், தூங்கிசைச் செப்பலும், ஒழுகிசைச் செப்பலும் என, விவை வருமாறு.

**வெண்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை**
**ஏந்திசைச் செப்ப லென்மனார் புலவர்**

**யாப்பரு. காரிகை-10**

**இயற்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை**
**தூங்கிசைச் செப்ப லென்மனார் புலவர்**

**வெண்சீர் ஒன்றலும் இயற்சீர் விகற்பமும்**
**ஒன்றிய பாட்டே யொழுகிசைச் செப்பல்**

*(சங்க யாப்பு. 21,22,23)*

*அவற்றிற்குச் செய்யுள் வருமாறு:-*

**குறள் வெண்பா**

**யாதானு நாடாமல் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையும் கல்லாத ஆறு** *(குறள்:397)*

*[இது வெண்சீர் வெண்டளையாள் வந்தமையால் ஏந்திசைச் செப்பலோசை.]*

**குறள் வெண்பா**

**பாலொடு தேன்கலந் திற்றே பணிமொழி**
**வாலெயி லூறிய நீர்** *(குறள்: 1121)*

*[இது வெண்சீர் வெண்டளையான் வந்தமையால் தூங்கிசைச் செப்பலோசை.]*

**குறள் வெண்பா**

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிருந் தொழும்** *(குறள்: 290)*

*[இது வெண்சீர் வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும் விரவி வந்தமையால் ஒழுகிசைச் செப்பலோசை]* என முறையே காண்க.

*'சீர்சாலகவ' லென்று சிறப்பித்த வதனாலகவலோசை* மூன்று வகைப்படும்.

ஏந்திசை யகவலும், தூங்கிசை யகவலும், ஒழுகிசை யகவலும் என. அவை வருமாறு;

நேர்நே ரியற்றளை யான்வரு மகவலும்
நிரைநிரை யியற்றளை யான்வரு மகவலும்
ஆயிரு தளையுமொத் தாகிய வகவலும்
ஏந்தல் தூங்கல் ஒழுகல் என்றிவை
ஆய்ந்த நிரனிறை ஆகும் என்ப

*(யா. வி. சூ. 69 உரைமேற்.)*

என்றாராகலின்.

இவற்றிற்குச் செய்யுள் வருமாறு.

**நேரிசையாசிரியப்பா**

போது சாந்தம்..........துன்னு வாரே

*(காரிகை-5 மேற்கோள்)*

[இது நேரொன்றிய ஆசிரியத்தளையான் வந்தமையால் ஏந்திசை யகவலோசை.]

**நேரிசையாசிரியப்பா**

அணி நிழல்..........பரிசறுப் பவரே

*(காரிகை-5 மேற்கோள்)*

[இது நிரையொன்றிய ஆசிரியத்தளையான் வந்தமையால் தூங்கிசை யகவலோசை.]

**நேரிசையாசிரியப்பா**

குன்றக் குறவன்.............சுணங்கே

*(காரிகை-9 மேற்கோள்)*

[இது நேரொன்றாசிரியத்தளையும், நிரையொன் றாசிரியத் தளையும் விரவி வந்தமையால் ஒழுகிசை யகவலோசை] என முறையானே காண்க.

'சென்றோங்கு துள்ளல்' என்று சிறப்பித்தவதனால் துள்ளலோசை மூன்று வகைப்படும்.

ஏந்திசைத்துள்ளலும், அகவற்றுள்ளலும், பிரிந்திசைத் துள்ளலும் என. என்னை;

**ஏந்திசைத் துள்ளல் கலித்தளை யியையின்**

**வெண்டளை தன்றளை யென்றிரண் டியையி**
**னொன்றிய வகவற் றுள்ளலென் றோதுக.**

**தன்றளை பிறதளை யென்றிவை யனைத்தும்**
**பொருந்தி வரினே பிரிந்திசைத் துள்ளல்**

என்றாராகலின். இவற்றிற்குச் செய்யுள் வருமாறு.

## தரவுகொச்சகக் கலிப்பா

**முருகவிழ்தா மரைமலர்மேல் முடியிமையோர் புடைவரவே**
**வருசினனார் தருமறைநூல் வழிபிழையா மனமுடையார்**
**இருவினைபோய் விழமுறியா வெதிரியகா தியையெறியா**
**நிருமலராய் அருவினராய் நிலவுவர்சோ தியினிடையே**

*(யா. வி. சூ.78 உரைமேற்.)*

[இது கலித்தளையான் வந்தமையால் ஏந்திசைத் துள்ளலோசை]

## தரவுகொச்சகக் கலிப்பா

**செல்வப்போர்.........ஒளித்ததே**

*(காரிகை-11 மேற்கோள்)*

[இது வெண்சீர் வெண்டளையும், கலித்தளையும் விரவி வந்தமையால் அகவல் துள்ளலோசை]

## கலிப்பா

குடநிலைத் தண்புறவிற் கோவலர் எடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவில் தகையேறு மரம்பாய்ந்து
வீங்குமணிக்[1] கயிறொரீஇத் தாங்குவனத் தேறபோய்க்[2]
கலையினோடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப
என வாங்கு,
கானொடு புல்லிப் பெரும்புதல்[3] முனையும்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே.

(யா. வி. சூ. 22 உரைமேற்.)

[இது பலதளையும் விரவி வந்தமையால் பிரிந்திசைத் துள்ளலோசை] என முறையானே காண்க.

'நலமிகு தூங்கல்' என்று சிறப்பித்தவதனால் தூங்லோசை மூன்ற வகைப்படும். ஏந்திசைத் தூங்கலும் அகவற் றூங்கலும், பிரிந்திசைத் தூங்கலும் என. என்னை;

ஒன்றிய வஞ்சித் தளையே வரினும்
ஒன்றா வஞ்சித் தளையே வரினும்
என்றிவை யிரண்டும் பிறவு மயங்கினும்
ஏந்த லகவல் பிரிந்திசைத் தூங்கலென்
றா்ய்ந்த நிரனிறை யாகு மென்ப

என்றாராகலின். இவற்றிற்குச் செய்யுள் வருமாறு.

### குறளடி வஞ்சிப்பா

வினைத்தின்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்த்தாளிணை
நினைத்தன்பொடு தொழுதேத்தினர்
நாளும்
மயலார் நாற்கதி மருவார்
பெயரா மேற்கதி பெறுகுவர் விரைந்தே

---

1.வீங்குபிணிக், 2. தோன்றப் போய்க், 3. பெரும்புறா.

[இது ஒன்றிய வஞ்சித்தளையான் வந்தமையால் ஏந்திசைத் தூங்கலோசை.]

### குறளடி வஞ்சிப்பா

வானோர்தொழ வண்தாமரைத்
தேனார்மலர் மேல்வந்தருள்
ஆனாவருள் சுரறிவினைக்
கானார்
மலர்கொண் டேத்தி வணங்குநர்
பலர்புகழ் முத்தி பெறுகுவர் விரைந்தே

[இது ஒன்றாத வஞ்சித்தளையான் வந்தமையால் அகவல் தூங்கலோசை.]

### வஞ்சிப்பா

மந்தாநிலம்...............மகிழ்ந்தே
(காரிகை-11 மேற்கோள்)

[இது பலதளையும் விரவி வந்தமையால் பிரிந்திசைத் தூங்கலோசை] என முறையானே காண்க. (1)

## உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகை

22. வளம்பட வென்பது வெள்ளைக் ககவற்
குதாரணஞ்செங்
களம்படக் கொன்று கலிக்கரி தாயகண்
ணார்கொடிபோல்
துளங்கிடை மாதே சுறமறி தொன்னலத் தின்புலம்பென்
றுளங்கொடு நாவல ரோதினர் வஞ்சிக் குதாரணமே.

இக்காரிகை அந்நாற்பாவிற்கும் அடியானும் ஓசையானும் வந்த இலக்கியங்கட்கு முதனினைப்புணர்த்துதற் பாற்று.

வளம்படவென்பது வெள்ளைக்கு என்பது:-

### இன்னிசை வெண்பா

வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்றால்
விளங்காய் திரட்டினா ரில்லை - களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்

*(நாலடியார்-103)*

இது நாற்சீரடியானும் செப்பலோசையானும் வந்த இன்னிசை வெண்பா.

அகவற் குதாரணஞ் செங்களம் படக்கொன்று என்பது;

### நேரிசை ஆசிரியப்பா

செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பிற் செங்கோட் டியானை
கழல்கொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே *(குறுந்தொகை-1)*

இஃதளவடியானும் அகவலோசையானும் வந்த நேரிசையாசிரியப்பா.

'கலிக் கரியதாய' என்பது;

### நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா

அரிதாய அறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி

இது தரவு;

அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே

இன்பத்தின் இகந்தொரீஇ யிலைதீய்ந்த உலவையால்
துன்புறூஉந் தகையவே காடென்றார் அக்காட்டுள்
அன்புகொள் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே.

கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலால்
துன்னரூஉந் தகையவே காடென்றார் அக்காட்டுள்
இன்னிழ லின்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு
முரைத்தனரே.

*இவை மூன்றுந் தாழிசை;*

என வாங்கு,

*இது தனிச்சொல்;*

இணைநலம் உடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
பல்லெழில் உண்கணு மாடுமால் இடனே
*(கலித்தொகை-11)*

*இது சுரிதகம்*

*இஃதளவடியானுந் துள்ளலோசையானும் வந்த நேரிசையொத்தாழிசைக் கலிப்பா.*

*'கண்ணார் கொடிபோல் துளங்கிடை மாதே' என்பது மகடூஉ முன்னிலை.*

'சுறமறி தொன்னலத்தின் புலம்பென் றுளங்கொடு நாவலரோதினர் வஞ்சிக் குதாரணமே' என்பது;

### குறளடி வஞ்சிப்பா

சுறமறிவன துறையெல்லாம்
இறவீன்பன வில்லெல்லாம்
மீன்திரிவன கிடங்கெல்லாம்
தேன்தாழ்வன பொழிலெல்லாம்
என வாங்கு,
தண்பணை தழீஇய விருக்கை
மண்கெழு நெடுமதின்[1] மன்ன னூரே
(யா. வி. சூ. 12 உரைமேற்.)

இஃதிருசீரடியானும், தூங்கலோசையானும் வந்தமையால் குறளடி வஞ்சிப்பா.

### சிந்தடி வஞ்சிப்பா

தொன்னலத்தின் புலம்பலைப்ப தொடித்தோண்மேல்
பன்னலத்த கலந்தொலையப் பரிவெய்தி
என்னலத்தகை யிதுவென்னென எழில்காட்டிச்
சொன்னலத்தகைப் பொருள்கருத்தி னிற்சிறந்தாங்
கெனப்பெரிதும்
கலங்கஞு ரெய்தி விடுப்பவும்
சிலம்பிடைச் செலவுஞ் சேணிவந் தற்றே.
(யா. வி. சூ. 26 உரைமேற்.)

இது முச்சீரடியானும் தூங்கலோசையானும் வந்த சிந்தடி வஞ்சிப்பா.

'உதாரணமே' என்பது இறுதி விளக்காகக் கொள்க. (2)

1. செங்கோல்

# வெண்பா வகைகளும் அவற்றின் இனங்களும்

[அந்தணர் தம்முடைய ஆச்சாரங்களிலிருந்து விலகாமல் ஒரே தன்மைத்தாக இருப்பது போல பிறசீரும் தளையும் விரவாமல், தனக்கேயுரிய சீரும் (இயற்சீர், வெண்சீர்) தளையும் (இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை) பெற்றுத் தனித்த இயல்புடன் திகழும் தலைமை சான்ற வெண்பா, வெண்பா வகைகள் அவற்றின் இனங்கள் குறித்த காரிகை செய்திகளை உரையாசிரியர் குணசாகரர் வழி நின்று காண்போம்].

### குறள் வெண்பா, நேரிசை வெண்பா

23. *[ஈரடி வெண்பாக் குறள்குறட் பாவிரண் டாயிடைக்கண்
சீரிய வான்றனிச் சொல்லடி மூய்ச்செப்ப லோசைகுன்றா
தோரிரண் டாயு மொருவிகற் பாயும் வருவதுண்டேல்
நேரிசை யாகும் நெறிசுரி] * பூங்குழ னேரிழையே.

இக்காரிகைக் குறள்வெண்பா, நேரிசை வெணபா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனவும்,

நேரிசையாசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா நிலை மண்டிலயாசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா எனவும்,

நேரிசையொத்தாழிசைக் கலிப்பா, அம்போதாங்க வொத்தாழிசைக் கலிப்பா, வண்ணக வொத்தாழிசைக் கவிப்பா, கலிவெண்பா, வெண்கலிப்பா, தரவு கொச்சகக் கலிப்பா, தரவிணைக் கொச்சகக் கலிப்பா, சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா எனவும்,

குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா எனவும்,

---

* [ஈரடி.......நெறிசுரி] இச்சுவடியில் இப்பகுதி முழுதும் ஆங்காங்கே சிதைந் துள்ளதால் பிற .அச்சுப்பிரதி நோக்கி பதிப்பிக்கப்பட்டது.

புறநிலை வாழ்த்து மருட்பா, கைக்கிளை மருட்பா, வாயுறை வாழ்த்து மருட்பா, செவியறிவுறூஉ மருட்பா எனவுங் கிடந்த பாவிகற்பங்களுள் செப்பலோசை யுடைத்தாய், ஈற்றடி முச்சீராய் ஏனையடி நாற்சீராய், வெண்சீரும், இயற்சீரும் வந்து வெண்டளை தட்டு, வேற்றுத் தளை விரவாது; காசு, பிறப்பு, நாள், மலர் என்னும் வாய் பாட்டாலிறும் வெண்பாவினை அடியானும், தொடை யானும், ஓசையானும் பெயர் வேறுபாடுணர்த்து வான் எடுத்துக் கொண்டார்.

அவற்றுள் இக்காரிகை குறள்வெண்பாவும், நேரிசை வெண்பாவும் ஆமாறுணர்த்துதற்பாற்று.

ஈரடி வெண்பாக்குறள் என்பது:- இரண்டடியான் வரும் வெண்பாக் குறள்வெண்பா எனப்படும் என்றவாறு.

என்னை;

**தொடையொன் றடியிரண் டாகி வருமேற்**
**குறளின் பெயர்க்கொடை கொள்ளப் படுமே.**

*(யா.வி. சூ. 59 உரைமேற்.)*

என்றார் காக்கைபாடினியார்

**[ஈரடி இயைந்தது குறள்வெண் பாவே**

*(யா.வி. சூ. 59 உரைமேற்.)*

என்றார் அவிநயனார்]

## குறள் வெண்பா

**உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்**
**கச்சாணி யன்னார் உடைத்து.** *(குறள்: 667)*

**உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்**
**கடையரே கல்லா தவர்** *(குறள்: 395)*

இவை இரண்டடியான் இரண்டு விகற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் வந்த குறள்வெண்பா.

'குறட்பா விரண்டா யிடைக்கட் சீரிய வான்றனிச் சொல்லடி மூய்ச் செப்ப லோசை குன்றாதோரிரண்டாயும் ஒரு விகற்பாயும் வருவதுண்டேல் நேரிசையாகும்' என்பது,

இரண்டு குறள் வெண்பாவாய் நடுவு தொடைக்கேற்ற தனிச்சொல்லால் அடிமூய்ச் செப்பலோசை வழுவாது முதலிரண்டடியும் ஒரு விகற்பமாய்க் கடையிரண்டடியும் மற்றொரு விகற்பமாய் வரினும், நான்கடியும் ஒரு விகற்பமாய் வரினும் இருகுறள் நேரிசை வெண்பா எனப்படுமென்றவாறு.

*வரலாறு :-*

**நேரிசை வெண்பா**

தடமண்டு தாமரையின் தாதா டலவன்
இடமண்டிச் செல்வதனைக் கண்டு - பெடைஞெண்டு
பூழிக் கதவடைக்கும் புத்தூரே பொய்கடிந்
தூழி நடாயினா னூர்.

*(யா. வி. சூ. 60 உரைமேற்.)*

அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் கொண்டு - தெரியிற்
கரிய வரைநிலையார் காய்ந்தாலென் செய்வார்
பெரிய வரைவயிரங் கொண்டு

(நீதி வெண்பா)

இவை இரண்டு குறள் வெண்பாவாய் நடுவு முதற்றொடைக் கேற்ற தனிச்சொல்லான் அடி நிரம்பச் செப்பலோசை வழுவாது இரண்டு விகற்பத்தானும், ஒருவிகற்பத்தானும் வந்த இருகுறள் நேரிசை வெண்பா.

குற்றிய லுகர முதற்குறள் வெண்பா
முற்றி னிருகுற ணேரிசை யாகும்

என்றாராகலின்*.

---

*குற்றிய.......என்றாராகலின் எனும் இப்பகுதி இச்சுவடிப் பிரதியில் காணப்படுகிறது.

'சீரிய வான்றனிச் சொல்லடிமூய்' என்று சிறப்பித்த வதனால் முதற்குறட்பாவினோடு தனிச்சொல் இடை வேறுபட்டிசைப்பின் ஒற்றுமைப்படாத வுலோகங்களை யொற்றுமைப்படப் பற்றாசிட்டு விளக்கினாற்போல முதற்குறட்பாவினிறுதிக்கண் ஒன்றுமிரண்டுமசை கூட்டி யுச்சரிக்கப்பட்டிரண்டு விகற்பத் தானும், ஒரு விகற்பத்தானும் வருவனவுமுள. அவை ஒரு சார் ஆசிடை நேரிசை வெண்பா எனக் கொள்க.

அவை வருமாறு:-

### நேரிசை வெண்பா

தாமரையின் றாதாடித் தண்டுவலைச் சேறளைந்து
தாமரையின் நாற்றமே தானாறுந் - தாமரைபோற்
கண்ணான் முகத்தான் கரதலத்தான் சேவடியென்
கண்ணார்வஞ் செய்யுங் கருத்து.

கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா - ஒருநிலையே
முட்டின்றி மூன்று முடியுமேல் அஃதென்ப
பட்டினம் பெற்ற கலம். *(நாலடியார்: 259)*

இவை முதற்குறட்பாவின் இறுதிக்கண் ஈரசையானும் ஓரசையானும் ஆசிட்டு இரண்டு விகற்பத்தான் வந்த ஆசிடை நேரிசை வெண்பா.

ஆர்த்தன அறிவின ராண்டிளைளு ராயினும்
காத்தோம்பித் தம்மை யடக்குப - மூத்தொறூஉம்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெரிவைபோற்[1]
போத்தறார் புல்லறிவி னார்.

*(நாலடியார்: 357)*

1. தெரிதந் தெருவைபோல்

**வஞ்சியே னென்றவன்ற னூருரைத்தான் யானுமவன்**
**வஞ்சியா னென்பதனால் வாய்நேர்ந்தேன் - வஞ்சியான்**
**வஞ்சியேன் வஞ்சியே னென்றுரைத்தும் வஞ்சித்தான்**
**வஞ்சியாய் வஞ்சியார் கோ.**

*(யா. வி. சூ. 60 உரைமேற்.)*

இவை முதற்குறட்பாவின் இறுதிக் கண் ஓரசையானும் ஈரசையானும் ஆசிட்டு ஒரு விகற்பத்தான் வந்த ஆசிடை நேரிசை வெண்பா .

'நெறிசுரி பூங்குழனேரிழையே' என்பது மகடூஉ முன்னிலை.

**வெண்பா வகவல் கலிப்பா வளவடி வஞ்சி**

*(செய். காரிகை. 1)*

என்னும் காரிகையுள் வெண்பா செப்பலோசையான் வருமென்றும், ஈண்டுஞ் செப்பலோசை குன்றாதென்றுங் கூறியது கூறிற்றாகாது [என்னை;

**கூறியது கூறினுங் குற்ற மில்லை**
**வேறொரு பொருளை[1] விளக்கு மாயின்**

*(யா. வி. சூ. 57 உரைமேற்.)*

என்றாராகலின்]

ஒருசார் பிற பாக்களைத் தத்தம் உதாரண வாய்பாட்டால் ஓசையூட்டும் பொழுது தத்தமோசையிற் சிறிது வழுவி வருவன உளவாயினும், வெண்பாவிற்குச் சிறிதும் செப்பலோசை வழுவலாகாதென்று யாப்புறுத்தற் பொருட்டாகவும், செப்பலோசையிற் சிறிது வழுவி வந்த நேரிசை இன்னிசை வெண்பாக்களை ஒருபுடை ஒப்புமை நோக்கி வெண்டுறைப் பாற்படுத்து வழங்கினும் இழுக்காதென்பது அறிவித்தற்காகவும் எனக் கொள்க.

---

1. வேறுமொரு பொருள

தத்தம் பாவினத் தொப்பினுங் குறையினும்
ஒன்றொன் றொவ்வா வேற்றுமை வகையாற்
பாத்தம் வண்ண மேலா வாயிற்
பண்போல் விகற்பம் பாவினத் தாகும்.

*என்றார் கையடனார்.*

[குறட்பா இரண்டனவ நால்வகைத் தொடையாய்
முதற்பாத் தனிச்சொலின் அடிமூய் இருவகை
விகற்பின் நடத்தல் நேரிசை வெண்பா
*(யா. வி. சூ. 60 உரைமேற்.)*

*என்றார் அவிநயனார்.*

இரண்டா மடியின் ஈறொரூஉ வெய்தி
முரண்ட வெதுகைய தாகியு மாகா
திரண்டு துணியாய் இடைநனி போழ்ந்து
நிரந்தடி நான்கின] நேரிசை வெண்பா.
*(யா. வி. சூ. 60 உரைமேற்.)*

*என்றார் காக்கைபாடினியார்.* (3)

## 2. உரைச் சூத்திரக் காரிகை

## உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகை

உ. ஆ. 2.உருவுகண் டௌ்ளா வுடையார் குறண்மட
வாய்தடமண்
டரிய வரைகீண் டிருகுற னேரிசை தாமரையின்
கருமமு மார்த்தவும் வஞ்சியுங் காமர்தனிச்
சொன்முன்னர்
நெரிநுண் கருங்குழ னேரிழை யாசிட்ட நேரிசையே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே குறள் வெண்பாவிற்கும், நேரிசை வெண்பாவிற்கும்,ஆசிடை நேரிசை வெண்பாவிற்குங் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க. (1)

## இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா

24. ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடி
யாய்த்தனிச்சொல்
இன்றி நடப்பினஃ தின்னிசை துன்னு மடிபலவாய்ச்
சென்று நிகழ்ப பஃறொடை யாஞ்சிறை வண்டினங்கள்
துன்றுங் கருமென் குழற்றுடி யேரிடைத் தூமொழியே.

இக்காரிகை இன்னிசை வெண்பாவும் பஃறொடை வெண்பாவும் ஆமாறுணர்த்துதற்பாற்று.

'ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடியாய்த் தனிச் சொல்லின்றி நடப்பினஃ தின்னிசை துன்னும்' என்பது;

ஒரு விகற்பத்தானும், பல விகற்பத்தானும் வந்து, நான்கடியாய்த் தனிச்சொல்லில்லாமல் நடப்பின் அஃது இன்னிசை வெண்பா எனப்படும் என்றவாறு.

வரலாறு:-

### இன்னிசை வெண்பா

வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.

(நாலடியார்:39)

துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.

(நாலடியார்:2)

இவை நான்கடியாய்த் தனிச் சொல்லின்றி யொரு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா றறம். (நாலடியார்: 36)

இது நான்கடியாய்த். தனிச்சொல்லின்றிப் பல விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

'ஒன்றல்லன வெல்லாம் பல' என்பது தமிழ்நடை. என்னை,

ஒன்றல் லவைபல தமிழ்நடை வடநூல்
இரண்டல் லவைபல என்றிசி னோரே

என்றாராகலின்.

ஒன்றும் பலவும் விகற்பமொடு நான்கடியாய்த் தனிச் சொல்லின்றி நடப்பின் இன்னிசை என்னாது 'துன்னும்' என்று மிகுத்துச் சொல்லியவதனால், இரண்டாமடியின் இறுதி தனிச் சொற்பெற்று மூன்று விகற்பத்தான் வருவனவும், மூன்றாமடியின் இறுதி தனிச்சொற்பெற்று இரண்டு விகற்பத்தான் வருவனவும், பல விகற்பாகி அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்று வருவனவும், பிறவாற்றானும் நேரிசை வெண்பாவிற் சிறிது வேறுபட்டு நான்கடியான் வருவனவும் இன்னிசை வெண்பா எனக்கொள்க.

வரலாறு:-

அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுந் சான்றோரு மொப்பர்மற் - றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின் (நாலடியார்: 151)

மலிதேரான் கச்சியும் மாகடலுந் தம்முள்
ஒலியும் பெருமையு மொக்கும் - மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ வெல்லாம் படும். (தண்டி. 49. உரைமேற்)

இவை இரண்டாமடியின் இறுதி தனிச்சொற் பெற்று மூன்று விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

வளம்பட வேண்டாதார்........செய்தாரு மில்

(காரிகை-22 மேற்கோள்)

இது மூன்றாமடியின் இறுதி தனிச்சொற் பெற்று இரண்டு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

[மழையின்றி மாநிலத்தார்க் கில்லை; மழையும்
தவமிலா ரில்வழி யில்லை; தவமும்
அரசிய லில்வழி இல்லை; அரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில்

(நான்மணிக்கடிகை: 48)

இவை அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்றுப் பல விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா];

குடற்குட்டம் போழ்வார் கலவர் – படைக்குட்டம்
பாய்மா உடையான் உடைக்கிற்குந் – தோமில்
தவக்குட்டம் தன்னுடையான் நீந்தும் அவைக்குட்டம்
கற்றான் கடந்து விடும். (நான்மணிக்கடிகை-18)

எனவும்,

இன்னாமை வேண்டி னிரவெழுக – இந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக – தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க – வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

(நான்மணிக்கடிகை: 19)

இவை அடிதோறுந் தனிச்சொற்பெற்று மூன்று விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா. பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

தனிச்சொல் தழுவல வாகி விகற்பம்
பலபல தோன்றினு மொன்றே வரினும்
இதற்பெய[1] ரின்னிசை யென்றிசி னோரே
*(யா. வி. சூ. 61 உரைமேற்.)*

என்றார் காக்கைபாடினியார்.

ஒருவிகற் பாகித் தனிச்சொல் லின்றியும்
இருவிகற் பாகித் தனிச்சொல் லின்றியுஞ்
தனிச்சொற் பெற்றுப் பலவிகற் பாகியும்
தனிச்சொ லின்றிப் பலவிகற் பாகியும்
அடியடி தோறும் ஒரூஉத்தொடை அடைநவும்
எனவைந் தாகும் இன்னிசை தானே.
*(யா. வி. சூ. 61 உரைமேற்.)*

என்றாருமுளரெனக் கொள்க.

'அடிபலவாய்ச் சென்று நிகழ்ப பஃறொடையாம்' என்பது;

நான்கடியின் மிக்க பலவடியான் வருவது பஃறொடை வெண்பா எனப்படும் என்றவாறு.

நேரிசை வெண்பாவிற்கும், இன்னிசை வெண்பாவிற்கும் நான்கடியே உரிமை சொன்னமையால், நான்கடியின் மிக்க பலவடியால் வருமென்பது ஆற்றலாற் போந்த பொருளெனக் கண்டுகொள்க.

வரலாறு:-

### ஐந்தடிப் பஃறொடை வெண்பா

சேற்றுக்கால் நீலஞ் செருவென்ற வேந்தன்வேல்
கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகயல்
தோற்றந் தொழில்வடிவு தம்முள் தடுமாற்றம்
வேற்றுமை யின்றியே ஒத்தன மாவடர்[2]
ஆற்றுக்கா லாட்டியர் கண். *(யா. வி. சூ. 62 உரைமேற்)*

இஃது ஐந்தடியான் வந்த ஒரு விகற்பப் பஃறொடை வெண்பா.

1. அதற்பெயர். 2. மாவேடர்

### ஆறடிப் பஃறொடை வெண்பா

பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவில்[1]
என்னொடு நின்றா ரிருவர் அவருள்ளும்
பொன்னோடை நன்றென்றாள் நல்லளே
பொன்னோடைக்
கியானைநன் றென்றாளும் அந்நிலையள்யானை
எருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருத்தார்நன் றென்றேன் தியேன்.

(யா. வி. சூ. 62 உரைமேற்.)

இஃதாறு அடியான் வந்த பல விகற்பப் பஃறொடை வெண்பா.

### ஏழடிப் பஃறொடை வெண்பா

வையக மெல்லாங் கழனியா - வையகத்துச்
செய்யகமே நாற்றிசையும்[2] தேயங்கள் - செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு - வான்கரும்பின்
சாறேஅந் நாட்டுத் தலையூர்கள் - சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் - கட்டியுள்[3]
தானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சி யகம்.

(யா. வி. சூ. 62 உரைமேற்.)

இது பல விகற்பத்தான் வந்த ஏழடிப் பஃறொடை வெண்பா.

இனி, ஏழடியின் மிக்க பஃறொடை வெண்பாக்களை யாப்பருங்கல விருத்தியுள்ளும் தேசிகமாலை முதலிய வற்றுள்ளுங் கண்டுகொள்க.

அடிபலவாய் நிகழ்ப பஃறொடையென்னாது 'சென்று நிகழ்ப' என்று சிறப்பித்தது. செப்பலோசையிற் சிறிது வழுவி

1. பெருந்தெருவில். 2. நாற்றிசையின். 3. கச்சியுள்

வந்த பஃறொடை வெண்பாக்களை ஒருபுடை ஒப்புமை நோக்கி வெண்கலிப்பாற்படுத்து வழங்கினும் இழுக்காது என்பது அறிவித்தற்கெனக் கொள்க.

'சிறை வண்டினங்கள் துன்றுங் கருமென் குழற் றுடியேரிடைத் தூமொழியே' என்பது மகடூஉ முன்னிலை.

தொடையடி யித்துணை யென்னும் வழக்கம்
உடையதை யன்றி யுறுப்பழி வில்லா
நடையது பஃறொடை நாமங் கொளலே.

*(யா. வி. சூ. 62 உரைமேற்.)*

*என்றார் காக்கைபாடினியார்.* (4)

### 3. உரைச் சூத்திரக் காரிகை

### உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகை

உ.வே. 3.வைகலும் வைக றுகஎர் கடற்குட்ட மின்றுமங்கண்
எய்து மலிதேர் வளமழை யின்னாமை
யின்னிசைபோல்
வையக மெல்லாம் பலவிகற் பேற்றது சேற்றொருகால்
பையர வல்குல்பன் மாடம் பஃறொடைப்[1] பல்விகற்பே.

இவ்வுரைச் சூத்திரக்காரிகையின் வழியே இன்னிசை வெண்பாவிற்கும் பஃறொடை வெண்பாவிற்கும் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க. (2)

### சிந்தியல் வெண்பா, வெண்பாவின் ஈற்றடி

25. நேரிசை இன்னிசை போல நடந்தடி மூன்றின்வந்தால்
நேரிசை இன்னிசை சிந்திய லாகுநிக ரில்வெள்ளைக்
கோரசைச் சீரு மொளிசேர் பிறப்பும்ஒண் காசுமிற்ற
சீருடைச் சிந்தடி யேமுடி வாமென்று தேறுகவே.

---

1. ஈண்டு ஆய்தம் குறிலே போல நின்று அலகுபெற்றது.

இக்காரிகை நேரிசைச் சிந்தியல் வெண்பா வாமாறும் இன்னிசைச் சிந்தியல் வெண்பாவாமாறு மெல்லா வெண்பாவிற்கு மீற்றடி யாமாறுணர்த்துதற்பாற்று.

'நேரிசை யின்னிசை போல நடந்தடி மூன்றின் வந்தால் நேரிசை இன்னிசைச் சிந்தியலாகும்' என்பது;

நேரிசை வெண்பாவே போல இரண்டாம் அடியினிறுதி தனிச்சொற்பெற்று இரு விகற்பத்தானும் ஒரு விகற்பத் தானும் மூன்றடியான் வருவன நேரிசைச் சிந்தியல் வெண்பா எனவும், இன்னிசை வெண்பாவே போலத் தனிச்சொலின்றி ஒரு விகற்பத்தானும், பல விகற்பத்தானும் மூன்றடியான் வருவன இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனவும் வழங்கப்படும் என்றவாறு. என்னை;

**நேரிசைச் சிந்தும் இன்னிசைச் சிந்துமென்**
**நீரடி முக்கால் இருவகைப் படுமே**
*(யா. வி. சூ. 59 உரைமேற்.)*

என்றாருமுளரெனக் கொள்க.

வரலாறு:-

**நேரிசைச் சிந்தியல் வெண்பா**

**நற்கொற்ற வாயில் நறுங்குவளைத் தார்கொண்டு**
**சுற்றும்வண் டார்ப்ப புடைத்தாளே – பொற்றேரான்**
**வாயின் மகள்** *(யா.வி.சூ.59 உரைமேற்.)*

**அறிந்தானை ஏத்தி யறிவாங் கறிந்து**
**சிறந்தார்க்குச் செல்வ னுரை – சிறந்தார்**[1]
**சிறந்தமை யாராய்ந்து கொண்டு**
*(யா.வி.சூ.59 உரைமேற்.)*

இவை இரண்டாமடியினிறுதி தனிச்சொற்பெற்று இரு விகற்பத்தானும், ஒரு விகற்பத்தானும் வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா.

---

1. செறிந்தார்க்குச் செல்வன் உரைப்பச் செறிந்தமை.

### இன்னிசைச் சிந்தியல் வெண்பா

நறுநீல நெய்தலுங் கொட்டியுந் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
பறநாட்டுப் பெண்டி ரடி.

(யா. வி.சூ. 59 உரைமேற்.)

இது தனிச்சொல்லின்றி ஒரு விகற்பத்தால் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை. (யா. வி. சூ. 59 உரைமேற்.)

எனவும்,

முல்லை முறுவலித்துக் காட்டின மெல்லவே
சேயிதழ்க் காந்தள் துடுப்பீன்ற போயினார்
திண்டேர் வரவுரைக்குங் கார்.

(யா. வி. சூ. 59 உரைமேற்.)

இவை பல விகற்பத்தான் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

## 4. உரைச் சூத்திரக் காரிகை

### உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகை

உ.ஆ.4. நற்கொற்ற வாயிலறிந்தா னையுநறும் பூங்குழலாய்
சொற்பெற்ற நேரிசைச் சிந்திய லாஞ்சுரை யாழவம்மி
நிற்றற் குரிய நறுநீல நெய்தலு முல்லையுமென்
றெற்றப் படாதன வின்னிசைச் சிந்தியற் கிலக்கியமே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே நேரிசை சிந்தியல் வெண்பாவிற்கும் இன்னிசைச் சிந்தியல் வெண்பாவிற்கும் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.

(3)

'நிகரில் வெள்ளைக் கோரசைச்சீரு மொளிசேர் பிறப்பு மொண்காசு மிற்ற, சீருடைச் சிந்தடியே முடிவாமென்று தேறுகவே' என்பது- எல்லா வெண்பாவிற்கும் 'நாள்' என்னும் நேரசைச் சீரானும், 'மலர்' என்னும் நிரையசைச் சீரானும் காசு, பிறப்பு என்னும் வாய்ப்பாட்டிற் குற்றியலுகர மீறாகிய நேரீற்றியற்சீரானும் இற்ற முச்சீரடியே யீற்றடியாவதென்று தெளிக என்றவாறு.

வெண்பாவி னிறுதிச் சீருக்குக் குற்றியலுகரம் ஈறாக வேறுதாரண மெடுத்தோதியதூஉம் அசைச்சீருக்குதாரணம் வேறு காட்டிப் போந்ததூஉம் வெண்பாவினை அலகிட்டு உதாரண வாய்ப்பாட்டான் ஓசையூட்டும்பொழுது, பிற வாய்பாட்டான் ஒசையூட்டலாகாதாகலின் காசு, பிறப்பு, நாள், மலர் என்னும் வாய்ப்பாட்டான் ஓசையூட்டுதற்கெனக் கொள்க.

இனி, அவ்வாற்றான் ஓசையூட்டுமாறு,

'**பாலொடு தேன்.......வாலெயி லூறிய நீர்**' *(குறள்-1121)*

என்பதனை அலகிட்டு முறையானே கூவிளம், கூவிளம், தேமா, கருவிளம், கூவிளம், கூவிளம், நாள் என்றோசையூட்டுக.

**நன்றறி வாரின் கயவர் திருவுடையார்**
**நெஞ்சத் தவல மிலர்** *(குறள்-1072)*

என்பதனை அலகிட்டு முறையானே கூவிளம், தேமா, புளிமா, கருவிளங்காய், தேமா, புளிமா, மலர் என்று ஓசையூட்டுக.

**கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை**
**சொல்லா நலத்தது சால்பு** *(குறள்-984)*

என்பதனை அலகிட்டு முறையானே தேமா, கருவிளம், தேமா, புளிமாங்காய், தேமா, கருவிளம், காசு என்றோசையூட்டுக*.

---

கொல்லா நலத்தது.......யூட்டுக* எனும் இப்பகுதி இச்சுவடிப் பிரதியில் மட்டும் காணப்படுகிறது.

[மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு (குறள் : 60)

என்பதனை அலகிட்டு முறையானே கூவிளம், தேமா, புளிமாங்காய், கூவிளம், கூவிளம், தேமாங்காய் காசு என்றோசை யூட்டுக.]

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே உலகு (குறள் : 1)

என்பதனை அலகிட்டு முறையானே புளிமா, புளிமா, புளி மாங்காய், தேமா, புளிமா, பிறப்பு என்றோசையூட்டுக.

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு (குறள் : 5)

என்பதனை அலகிட்டு முறையானே புளிமா, கருவிளங்காய், தேமா, புளிமா, கருவிளம், கருவிளங்காய் காசு என்றோசை யூட்டுக*.

பிற வெண்பாக்களையும் இவ்வாறலகிட்டு ஓசையூட்டிச் செப்பலோசை வழுவாமற் கண்டு கொள்க.

'நிகரில் வெள்ளைக்கு' என்று சிறப்பித்த வதனால் குறள் வெண்பாவினை ஓரடி முக்கால் என்றும், சிந்தியல் வெண்பாவினை ஈரடி முக்கால் என்றும், நேரிசை வெண்பாவினை நேரிசை மூவடி முக்கால் என்றும், இன்னிசை வெண்பாவினை இன்னிசை மூவடி முக்கால் என்றும், பஃறொடை வெண்பாவினைப் பலவடி முக்கால் என்றும் பெயரிட்டும் வழங்கப்படும் என்றவாறு.

---

இருள்சேர்.....யூட்டுக* எனும் இப்பகுதி இச்சுவடிப் பிரதியில் மட்டும் காணப்படுகிறது.

'ஒளிசேர் பிறப்பும் ஒண்காசும்' என்று சிறப்பித்த வதனால் காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டான் முற்றியலுகர மீறாகிய நேரீற்றியற்சீர் இறுதியாகிய மூச்சீரடியானும் இறுவதாகி வருவனவுமுள ஒருசார் வெண்பா எனக்கொள்க.

வரலாறு:-

**குறள் வெண்பா**

மஞ்சுசூழ் சோலை மலைநாட மூத்தாலும்
அஞ்சொன் மடவாட் கருளு

(யா. வி. சூ. 57 உரைமேற்.)

இது பிறப்பென்னும் வாய்பாட்டான் முற்றியலுகர மீறாயிற்ற வெண்பா.

**குறள் வெண்பா**

இனமலர்க் கோதாய் இலங்குநீர்ச் சேர்ப்பன்
புனைமலர்த் தாரகலம் புல்லு

(யா. வி. சூ. 57 உரைமேற்.)

இது காசு என்னும் வாய்பாட்டான் முற்றியலுகரம் ஈறாய் இற்ற வெண்பா.

செய்யுளியலுடையார் காட்டியவெனக் கொள்க. என்னை,

குறள்சிந் தின்னிசை நேரிசை பஃறொடை
எனஐந் தாகும் வெண்பாத் தானே

ஈரடி குறள்சிந் திருதொடை யியற்றே

நாலோ ரடியாய்த் தனியிரண் டாவதன்
ஈறொரூஉ வாய்முற் றிருவிகற் பொன்றினும்
நேரிசை வெண்பா எனப்பெய ராகும்

விகற்பொன் றாகியும் மிக்கும் தனிச்சொல்
இயற்றப் படாதென இன்னிசை வெண்பா

பாதம் பலவரின் பஃறொடை வெண்பா*

(*யாப்பருங்கலம்-58-62*)

செப்ப லிசையன வெண்பா மற்றவை
யந்தடி சிந்தடி யாகலு மவ்வடி
யந்த மசைச்சீ ராகலும் பெறுமே (*யாப்பருங்கலம்-57*)

என்றாராகலின். (5)

## 5. உரைச் சூத்திரக் காரிகை

உ.ஆ. 5. மாவாழ் புலிவாழ் சுரமுள வாக மணியிறுவாய்
ஓவா தளபெடுத் தூஉங் கெழூஉவு முதாரணமாய்
நாவார் பெரும்புகழ் நத்தத்தர் யாப்பி னடந்ததுபோல்
தேய்வா முகரம்வந் தாலியற் சீரிங்குச் செப்பியதே

இவ்வுரைச் சூத்திரக் கருத்தாவது மாவாழ்சுரம், புலிவாழ்சுரம் என்றும் இவ்வஞ்சியுரிச் சீரண்டு முளவாக வைக்குந் தோறும் நோக்கித் தூஉமணி கெழூஉமணி என்றளபெடுத்து நேர்நடுவாகிய வஞ்சியுரிச்சீருக்குதாரணம் எடுத்துக்காட்டினார் நத்தத்தனார் என்னுமாசிரியரது போல இன்னூலுடையாரும் வெண்பாவின் இறுதிச் சீருக்குதாரண வாய்பாட்டானோசை யூட்டுதற் பொருட்டாகக் குற்றியலுகர மீறாகிய காசு பிறப்பு என்னும் வாய்பாட்டான் நேரீற்றியற் சீரீறாக வேறுதாரணமெடுத்தோதி னாரெனக் கொள்க. (4)

### குறள்வெண் செந்துறை, குறட்டாழிசை

26. அந்தமில் பாத மளவிரண் டொத்துமுடி யின்வெள்ளைச்
செந்துறை யாகுந் திருவே யதன்பெயர் சீர்பலவாய்
அந்தங் குறைநவுஞ் செந்துறைப் பாட்டி
னிழிபுமங்கேழ்ச்
சந்தஞ் சிதைந்த குறளுங் குறளினத் தாழிசையே.

---

குறள்சிந்.தின்னிசை........பஃறொடைவெண்பா* வரையிலான இப்பகுதிகள் இச்சுவடிப் பிரதியில் மட்டுமே காணப்படுகின்றன.

இக்காரிகை குறள்வெண்பாவிற்கினமாகிய துறையும் தாழிசையும் ஆமாறுணர்த்துதற்பாற்று.

'அந்தமில் பாதம் அளவிரண்டொத்து முடியின் வெள்ளைச் செந்துறையாகும்' என்பது; இரண்டடியாய்த் தம்முள் அளவொத்து வருவது வெண்செந்துறை என்றும், செந்துறை வெள்ளை என்றும் பெயரிட்டு வழங்கப்படும் என்றவாறு.

சீர் வரையறுத்திலாமையால் எனைத்துச் சீரானும் அடியானும் வரப்பெறும்.

'அந்தமில் பாதம்' என்று சிறப்பித்தவதனால் விழுமிய பொருளதாகியு மொழுகிய வோசையதாகியும் வருவதெனக் கொள்க.

**ஒழுகிய வோசையின் ஒத்தடி யிரண்டாய்**
**விழுமிய பொருளது வெண்செந் துறையே**

*(யாப்பருங்கலம்-63)*

என்பராகலின்.

அதற்குச் செய்யுள் வருமாறு.

## வெண் செந்துறை

**ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்**
**ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை**

*(முதுமொழிக்காஞ்சி: 1)*

எனவும்,

**கொன்றை வேந்தன் செல்வ னடியிணை**
**என்று மேத்தித் தொழுவோ மியாமே**

*(கொன்றைக் காப்பு)*

எனவும் வரும்.

இவை விழுமிய பொருளும் ஒழுகிய வோசையுமாய் வந்தமையான் வெண்செந்துறை.

'திருவே' என்பது மகடூஉ முன்னிலை.

'சீர்பலவாய் அந்தங் குறைநவும்' என்பது நாற்சீரின் மிக்க பலசீரான் வந்த அடியின்கண் ஈற்றடி குறைந்து வருவனவுங் குறள் வெண்செந்துறையில் சிதைந்து வருவனவும் குறள் வெண்பாவிற் சிசைந்து வருவனவுங் குறட்டாழிசை எனப்படும் என்றவாறு.

இரண்டடியென்ப ததிகாரத்தான் வருவித்துரைக்கப் பட்டது. [குறட்டாழிசை எனினும் தாழிசைக் குறளெனினும் ஒக்கும்]. சீர் வரையறுத்திலமையால் எனைத்துச் சீரானும் [அடியானும்] வரப்பெறும்.

வரலாறு:-

**குறட்டாழிசை**

**நண்ணு வார்வினை நைய நாடொறு நற்ற வர்க்கர**
**சாய ஞானநற்**
**கண்ணினா னடியே[1] அடைவார்கள் கற்றவரே**
(*யா. வி. சூ. 64 உரைமேற்.*)

எனவும்,

**நீல மாகடல் நீடு வார்திரை நிறைபோல்[2] பொங்கிப்**
**பொன்றுமால்[3]**
**காலம் பலகாலுஞ் சென்றுஞ் செல்வர் யாக்கை**
**கழிதலுமே**
(*யா. வி. சூ. 64 உரைமேற்.*)

எனவும் வரும்.

இவை ஈற்றடி குறைந்து இரண்டடியாய்ப் பல சீரான் வந்தமையால் குறட்டாழிசை.

செந்துறைப் பாட்டி னிழிபும் என்பது.

அடியிரண்டாய் அளபொத்து விழுமிய பொருளும் ஒழுகிய வோசை மின்றி இவ்வாறே செந்துறை வெள்ளையிற் சிதைந்து வருவனவெல்லாம் செந்துறைச் சிதைவுத் தாழிசைக்குறள் எனப்படும் என்றவாறு.

---

1. நுண்ணி னானடி. 2. நின்ற நின்றபோல. 3. பொன்றுமாங்கவை.

வரலாறு :

குறட்டாழிசை

பிண்டியி னீழற் பெருமான் பிடர்த்தலை
மண்டிலந் தோன்றுமால் வாழி யன்னாய்
(யா. வி. சூ. 64 உரைமேற்.)

*[அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கவுந்தி
மறுவறு பத்தினி போல்வையி னீரே
(யா.வி.சூ. 64 உரைமேற்)

இவை விழுமிய பொருளும் ஒழுகிய வோசையுமின்றி இரண்டடியுந் தம்முள் ஒத்து வந்தமையிற் செந்துறைச் சிதைவுத் தாழிசைக் குறள்.

'அங்கேழ்ச் சந்தஞ் சிதைந்த குறளுங் குறளினத் தாழிசையே' என்பது;

செப்பலோசையிற் சிதைந்து, வேற்றுத்தளை தட்டுக் குறள்வெண்பாவிற் சிதைந்து வருவனவெல்லாம் குறள் வெண்பாவிற்கினமாகிய குறட்டாழிசை எனப்படும் என்றவாறு.

வரலாறு:-

குறட்டாழிசை

வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய ளல்லள் படி
(யா. வி. சூ. 64 உரைமேற்.)

இது சந்தஞ் சிதைந்த தாழிசைக்குறள். எனவும் சொன்னா ரெனக் கொள்க]* .

---

* [அறுவர்க்......... சொன்னாரெனக் கொள்க..]* இப்பகுதியும் சுவடியில் சிதைந்து காணப்படுவதால் பிற அச்சுப் பிரதியை ஒப்புநோக்கி பதிப்பிக்கப்பெற்றது.

[என்னை,

அந்தடி குறைநவுஞ் செந்துறைச் சிதைவுஞ்
சந்தழி குறளுந் தாழிசைக் குறளே.

உரைத்தன இரண்டுங் குறட்பா வினமே

(யாப்பருங்கலம்-64-65)

என்பதி யாப்பருங்கலம்]. (6)

## வெளிவிருத்தம், வெண்டாழிசை, வெண்டுறை

27. *[மூன்றடி யானு முடிந்தடி தோறு முடிவிடத்துத்
தான்றனிச் சொற்பெறுந் தண்டா விருத்தம்வெண்
டாழிசையே
மூன்றடி யாய்வெள்ளை போன்றிறு மூன்றிழி
பேழுயர்வாய்
ஆன்றடி தாஞ்சில வந்தங் குறைத்திறும்
வெண்டுறையே.

இக்காரிகை வெளிவிருத்தமும், வெண்டாழிசையும் வெண்டுறையும் ஆமாறுணர்த்துதல் நுதலிற்று.

'மூன்றடி யானும் முடிந்தடி தோறும் முடிவிடத்துத் தான்றனிச் சொற்பெறுந் தண்டா விருத்தம்' என்பது,

மூன்றடி யானும் முற்றுப்பெற்று அடிதோறும் ஒரு சொல்லே இறுதிக்கண் தனிச்சொல்லாய் வருவது வெளி விருத்தம் எனப்படும் என்றவாறு.

'மூன்றடி யானும்' என்ற உம்மையால் நான்கடியானும் வரப்பெறும் எனக்கொள்க. என்னை;

ஒருமூன் றொருநான் கடியடி தோறுந்
தனிச்சொல் தழுவிட நடப்பன வெள்ளை
விருத்த மெனப்பெயர் வேண்டப் படுமே.

(யா. வி. சூ. 68 உரைமேற்.)

என்றார் காக்கைபாடினியாரும் எனக்கொள்க.

'தண்டா விருத்தம்' என்று சிறப்பித்த வதனால் நாற்சீரடியுட் பட்டு அடங்காது வேறாய் வருவது ஈண்டுத் தனிச்சொல் எனக் கொள்க].*

## வெளிவிருத்தம்

**கொண்டன் முழங்கினவாற் கோபம் பரந்தனவா - லென்செய்கோயான்**
**வண்டு வரிபாட வார்தளவம் பூந்தனவா - லென்செய்கோயான்**
**எண்டிசைந்[1] தொகை யிருந்தகவி யேங்கினவா லென்செய்கோயான்**

இது மூன்றடியான் 'என்செய்கோயான்' என்னுந் தனிச் சொற்பெற்று வந்த வெளிவிருத்தம்.

## வெளிவிருத்தம்

**ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா - ரொருசாரார்**
**கூகூ வென்றே கூவிளி கொண்டா - ரொருசாரார்**
**மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா - ரொருசாரார்**
**ஏகீர் நாய்கீ ரென்செய்து மென்றா - ரொருசாரார்**

*(யா. வி. சூ. 68 உரை மேற்கோள்கள்)*

இது நான்கடியாய் 'ஒரு சாரார்' என்னுந் தனிச்சொற் பெற்றுவந்த வெளிவிருத்தம்.

'வெண்டாழிசையே மூன்றடியாய் வெள்ளை போன்றிறும்' என்பது;

மூன்றடியான் ஈற்றடி வெண்பாவே போல முச்சீரடியான் இறுவது வெண்டாழிசை என்றும் வெள்ளொத் தாழிசை யென்றும் வழங்கப்படும். என்றவாறு என்னை;

* [மூன்றடி யானும் முடிந்தடி ............தனிச்சொல் .எனக்கொள்க.]* எனும் இப்பகுதியும் இச்சுவடியில் அங்காங்கே சிதைந்து காணப்படுவதால் பிற அச்சுப்பிரதியை ஒப்புநோக்கி பதிப்பிக்கப்பெற்றது. 1. வண்டிசைந்.

அடியொரு மூன்றுவந் தந்தடி சிந்தாய்
விடினது வெள்ளொத் தாழிசை யாகும்.

*(யாப்பருங்கலம்:66)*

என்பதி யாப்பருங்கலம்.

வரலாறு:-

## வெண்டாழிசை

நண்பி[1] தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவு[2] செய்யார்
அன்பு வேண்டு பவர்

*(யா.வி.சூ. 15 உரைமேற்.)*

இஃது நேரிசை ஆசிரியத்தளையான் வந்த வெண்டாழிசை.

'மூன்றிழி பேழுயர்வாய், ஆன்றடி தாஞ்சில அந்தம் குறைந்திறும் வெண்டுறையே' என்பது;

மூன்றடிச் சிறுமையா யேழடிப்பெருமை யாயிடை யிடை நான்கடியானும், ஐந்தடியானும் ஆறடியானும் வந்து பின்பிற் சிலவடி சிலசீர் குறைந்து வருவன வெண்டுறை யெனப்படுமென்றவாறு.

*[ஆன்றடிதாம் என்று சிறப்பித்த வதனால் முன்பிற் சிலவடி ஓரோசையாயும், பின்பிற் சிலவடி மற்றோரோ சையாயும் வருவன ஒருசார் வேற்றொலி வெண்டுறை எனக் கொள்க. என்னை;

மூன்றடி முதலா ஏழடி காறும்வந்
தீற்றடி சிலசில சீர்தப நிற்பினும்
வேற்றொலி விரவினும் வெண்டுறை யாகும்.

*(யாப்பருங்கலம்-67)*

என்பதி யாப்பருங்கலம்.

---

1. நண்பி. 2. முனிவ.

### வெண்டுறை

தாளாள ரல்லாதார் தாம்பல ராயக்கா
லென்னாமென்னாம்
ஆளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்ந்து விடும்பிளிற்றி யாங்கே
(யா. வி. சூ. 67 உரைமேற்.)

இது மூன்றடியாய் ஈற்றடி யிரண்டும் இரண்டுசீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

### வெண்டுறை

குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட்
குலைமேற்பாய
அழலெரியின் மூழ்கினவால் அந்தோ அளியவென்
றயல்வாழ்மந்தி
கலுழ்வனபோல் நெஞ்சயர்ந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாடன் நீப்பனோ வல்லன்.
(யா. வி. சூ. 67 உரைமேற்.)

இது நான்கடியாய் ஈற்றடி யிரண்டும் இரண்டு சீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

### ஓரொலி வெண்டுறை

வெறியுறு கமழ்கண்ணி வேந்தர்கட் காயினும்
உறவுற வரும்வழி யுரைப்பன வுரைப்பன்மன்
செறிவுறு தகையினர்[1] சிறந்தின ரிவர்நமக்
கறிவுறு தொழிலரென் றல்லவை சொல்லன்மின்
பிறபிற நிகழ்வன பின். (யா. வி. சூ. 67 உரைமேற்.)

இது ஐந்தடியாய் ஈற்றடி ஒன்றொரு சீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

---

1. எழிலினர்.

கல்லாதார் நல்லவையுட் கல்லேபோற் சென்றிருந்தாற் கருமம்
யாதாம்
இல்லாதார் செல்வரைக்கண் டிணங்கியே ஏமுற்றால் இயைவ
தென்னாம்
பொல்லாதார் நன்கலன் மெய்புதையப் பூண்டாலும் பொலிவ
தென்னாம்
புல்லாதார் பொய்க்கேண்மை புனைந்துரைத்தா லாவ தென்னே
அல்லாதார் பொய்யாவ தறிபவேல் அமையாதோ

(யா.வி.சூ. 67 உரைமேற்.)

இது ஐந்தடியாய் ஈற்றடியிரண்டும் இரண்டுசீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

முழங்கு களியானை மூரிக் கடற்படை முரித்தார் மன்னர்
வழங்கு மிடமெல்லாந் தன்புகழே போக்கிய வைவேல் விண்ணன்
செழுந்தண்பூம் பழைசையுட் சிறந்ததுநா ளுஞ்செய
எழுந்தசே திகத்துள் ளிருந்தஅண் ணல்லடி
விழுந்தண்பூ மலர்களால் வியந்துநா ளுந்தொழத்
தொடர்ந்துநின் றவ்வினை துறந்துபோ மாலரோ.

(யா.வி.சூ. 67 உரைமேற்.)

இது ஆறடியாய் முதலிரண்டு அடியும் அறுசீராய்ப் பின் நான்கடியும் நாற்சீராய், முதலிரண்டடியும் ஓரோசையாய்ப்பின் நான்கடியும் மற்றோர் ஓசையாய் வந்த வேற்றொலி வெண்டுறை.

முழங்குதிரைக் கொற்கை வேந்தன்
முழுதுலகு மேவல்செய முறைசெய்கோமான்
வழங்குதிறல் வாண்மாறன் மாச்செழியன் றாக்கரிய
வைவேல் பாடிக்
கலங்கிநின் றாரெலாங் கருதலா காவணம்
இலங்குவா ளிரண்டினா லிருகைவீ சிப்பெயர்ந்
தலங்கன்மா லையவிழ்ந் தாட வாடும்மிவள்

பொலங்கொள்பூந் தடங்கட்கே புரிந்துநின் றாரெலாம்

விலங்கியுள் ளந்தப விளிந்துவே றாபவே.

(யா.வி.சூ. 67 உரைமேற்.)

இது ஏழடியாய் முதலிரண்டடியும் அறுசீராய் ஓரோசை யாய்ப் பின் ஐந்தடியும் நாற்சீராய் வேறோர் ஓசையாய் வந்த வேற்றொலி வெண்டுறை.

மூன்றடி யாய்வெள்ளை போன்றிறுந் தாழிசை

மூன்றிழிபேழ்

ஆன்றடி தாஞ்சில வந்தந் தடிக ளவைகுறைந்து

தோன்றுந் துறைவெள்ளை தண்டா விருத்தந்

தனிச்சொல்வந்து

மூன்றடி யானு முடியு முடியுமோர் நான்கினுமே.

என்று வெண்பாவிற்கு இனமாகிய தாழிசை, துறை, விருத்தங்கட்கு முறையானே இலக்கணஞ் சொல்லாதே தலை தடுமாற்றமாகக் காரிகை சொல்ல வேண்டியது என்னையோ எனின், ஒருசார் வெண்டுறை ஈற்றடி ஒன்றொருசீர் குறைந்து வருதலும் உள்ளதென்பதூஉம் வெள்ளொத் தாழிசையின் முதல் இரண்டடியும் நான்கு சீரான் வருமென்பதூஉம், சிந்தியல் வெண்பா ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வருவனயெல்லாம் வெள்ளொத்தாழிசை என்று வழங்கப்படும் என்பதூஉம் அறிவித்தற்கு வேண்டப்பட்டது. தலை தடுமாற்றந் தந்து புணர்ந்துரைத்தல் என்பது தந்திர வுத்தியாகாலான்.

வெள்ளொத்தாழிசை முதலிரண்டடியும் நாற்சீராய் வருவது 'நண்பிது' (காரிகை-27 மேற்கோள்) என்னும் இலக்கியத்துட் கண்டுகொள்க.

## வெள்ளொத்தாழிசை

அன்னா யறங்கொ ளலங்கிளர் சேட்சென்னி

ஒன்னா ருடைபுறம் போல நலங்கவர்ந்து

துன்னான் துறந்து விடல்

ஏடீ யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
கூடா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
நீடான் துறந்து விடல்.

பாவா யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
மேவா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
காவான் துறந்து விடல்.

(யா. வி. சூ. 66 உரைமேற்.)

இவை சிந்தியல் வெண்பா ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வந்தமையான் வெள்ளொத்தாழிசை. என்னை;

ஈரடி முக்கா லிசைகொள நடந்து
மூன்றுட னடுக்கித் தோன்றினொத் தாழிசை

என்றாராகலின். (7)

## 6. உரைச்சூத்திரக் காரிகை

### உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகை

உ.ஆ.6. கொண்டன் முழுங்கின வாவா விருத்தங் குழலிசைய
வண்டினம் வெண்டுறை தாளாண் முழுங்கொடு தாழிசையே
நண்பிதென் றார்கலி கொன்றைவெண் செந்துறை நீலநண்ணும்
பிண்டி யறுவர்வண் டார்வெறி தாழிசை பெய்வளையே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே வெண்பா வினங்கட்குக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க.]* (5)

வெண்பாவும் அதனினமும் முற்றும்.

---

* [ஆன்றடிதாம் என்று சிறப்பித்த .........முதனினைத்துக் கொள்க.]*
இப்பகுதி இச்சுவடிப் பிரதியில் பெரும்பாலும் ஆங்காங்கே சிதைந்து காணப்படுவதால் பிற அச்சுப்பிரதியை ஒப்புநோக்கி பதிப்பிக்கப்பெற்றது..

## 2. ஆசிரியப்பாவும் இனமும்

[நால்வகைப் பாக்களுள் ஆசிரியப்பா என்பது மயில் அகவுவது போன்ற ஓசையினையும், ஆசிரியரைப் போல சொல்லும் இயல்பினை உடைமையாலும் காரணப் பெயர்த்தாயிற்று. இத்தகு பாவின் இலக்கணம் அவற்றின் வகைகள், இனங்கள் குறித்த நூலாசிரியரின் கருத்துக்களை உரையாசிரியர் குணசாகரர் உரைவழிக் காண்போம்.]

### நான்கு வகை ஆசிரியப்பா

28. கடையயற் பாதமுச் சீர்வரி னேரிசை காமருசீர்
இடைபல குன்றி னிணைக்குற ளெல்லா வடியுமொத்து
நடைபெறு மாயி னிலைமண் டிலநடு வாதியந்தத்
தடைதரு பாதத் தகவ லடிமறி மண்டிலமே.

இக்காரிகை அகவலோசையோடு அளவடித்தாகியும், இயற்சீர் பயின்றும் அயற்சீர் விரவியும் தன்றளை தழுவியும், பிறதளை மயங்கியும் நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீர் வருதலில்லா ஆசிரியப்பாவினை அடியானும் தொடையானு மோசையானும் பொருளானும் பெயர் வேறுபாடுணர்த்துவான் எடுத்துக் கொண்டார். அவற்றுள், இக்காரிகை நேரிசை ஆசிரியப்பாவும் இணைக்குறள் ஆசிரியப்பாவும், நிலைமண்டில ஆசிரியப்பாவும் அடிமறி மண்டில ஆசிரியப்பாவும் ஆமாறுணர்த்தற்பாற்று.

'கடையயற் பாதமுச்சீர் வரின்நேரிசை' யென்பது; ஈற்றடியினயலடி முச்சீரான் வருமெனினது நேரிசை யாசிரிப்பாவென்று வழங்கப்பெறுமென்றவாறு.

[ஈற்றதன் அயலடி[1] ஒருசீர் குறைய
நிற்பது நேரிசை ஆசிரி யம்மே]

(யா. வி. சூ. 71 உரைமேற்.)

என்றார் அவிநயனார்

---

1. மேலடி.

அந்த அடியின் அயலடி சிந்தடி
வந்தன நேரிசை யாசிரி யம்மே

(யாப்பருங்கலம்:71)

என்பதி யாப்பருங்கலம்.

வரலாறு:-

## நேரிசையாசிரியப்பா

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே

(குறுந்தொகை-3)

இஃதீற்றடியின்னயலடி முச்சீரான் வந்தமையால் நேரிசையாசிரியப்பா.

காமருசீ ரிடைடபல குன்றி னிணைக்குறள் என்பது;

ஈற்றடியும் முதலடியும் ஒழிந்து அல்லாத நடுவிலடி யிரண்டும் பலவும் இருசீருமொரு சீருங் குறைந்து வருவன இணைக் குறளாசிரியப்பா எனப்படுமென்றவாறு.

[இடைபல குறைவ இணைக்குற ளாகும்]

(யா. வி. சூ. 72 உரைமேற்.)

என்றார் அவிநயனார்.

அளவடி யந்தமு மாதியு மாகிக்
குறளடி சிந்தடி யென்றா யிரண்டும்
இடைவர நிற்ப திணைக்குற ளாகும்.

(யா. வி. சூ. 72 உரைமேற்.)

என்றார் காக்கைபாடினியார்.

இடையிடை சீர்தபின் இணைக்குற ளாகும்

(யா. வி. சூ. 72 உரைமேற்.)

என்றார் சிறுகாக்கைப்பாடினியார்.

*வரலாறு:-*

### இணைக்குறளாசிரியப்பா

**நீரின் தண்மையுந் தீயின் வெம்மையும்**
**சாரச் சார்ந்து**
**தீரத் தீரும்**
**சாரல் நாடன் கேண்மை**
**சாரச் சாரச் சார்ந்து**
**தீரத் தீரத் தீர்ப்பொல் லாதே**

*இஃது முதலடியும், ஈற்றடியும் நாற்சீராய் இடையடி குறளடியான் சிந்தடியான் வந்தமையானிணைக் குறளாசிரியப்பா.*

### இணைக்குறளாசிரியப்பா

சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானு நனிபல கலத்தன் மன்னே
பெருஞ் சோற் றானு நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடுவழி யெல்லாம் எமக்கீயு மன்னே
அம்பொடு வேல்நுழை வழியெல்லாம் தானிற்கு மன்னே
நரந்த நாறுந் தன்கையாற்
புலவு நாறு மென்றலை தைவரு மன்னே
அருந்தலை இரும்பாண ரகன் மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புண்கண் பாவை சோர
அஞ்சொனுண் தேர்ச்சிப் புலவர் நாவிற்
சென்றுவீழ்ந் தன்றவன்
அருதிறத் தியங்கிய வேலே

ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப் பாடுநரு மில்லை
பாடுநர்க்கொன் றீகுநரு மில்லைப்
பனித்துறைப் பகன்றை நறைக்கொண் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க்கொன்
றீயாது வீயு முயிர்தவப் பலவே.

*(புறம் : 235)*

இஃது இருசீரடியும் மூச்சீரடியு மிடை யிடை வந்த இணைக்குறளாசிரியப்பா.

'காமருசீர்' என்று சிறப்பித்தவதனால் ஆசிரியப்பா நான்கிற்கும் 'ஏ' என்னும் அசைச்சொல்லான் இறுவதே சிறப்புடைத்து. பிறவெழுத்தினால் வரப்பெறுமாயினுமெனக் கொள்க.

அகவ யிசையன அகவல் மற்றவை
ஏஓ ஈஆய் என் ஐயென் றிறுமே

*(யாப்பருங்கலம்:69)*

என்றாராகலின்.

'எல்லா வடியுமொத்து நடைபெறுமாயின் நிலைமண்டிலம்' என்பது எல்லாவடியும் அகவற்சீரான் தம்முள்ளொத்து வருமெனினது நிலைமண்டில வாசிரியப்பாவெனப்படுமென்றவாறு.

*வரலாறு:-*

**நிலைமண்டில ஆசிரியப்பா**

வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கியவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே

*(குறுந்தொகை : 18)*

இஃதெல்லா வடியுமொத்து வந்தமையான் நிலை மண்டில வாசிரியப்பா. இந்நிலை மண்டில ஆசிரியப்பா 'என்' னென்னும் அசைச்சொல்லான் இறுவது சிறப்புடைத்து. மற்றொரு சாரோர் உயிரானும் ஒற்றானும் ஈறாய் வரப்பெறுமாயினுமெனக் கொள்க.

**ஒத்த வடித்தாய் உலையா மண்டிலம்**
**என்னென் கிளவியை யீறா கப்பெறும்**
**அன்ன பிறவுமந் நிலைமண் டிலமே**

*(யா. வி. சூ. 74 உரைமேற்.)*

என்றார் காக்கைபாடினியார்[1].

'நடுவாதி யந்தத் தடைதரு பாதத் தகவ லடிமறி மண்டிலமே' என்பது;

எல்லாவடியு மொத்து முதனடு விறுதியாக வுச்சரித்தாலு மோசையும் பொருளும் பிழையாமல் வருவதடிமறி மண்டில வாசிரியப்பா வெனப்படு மென்றவாறு.

**மனப்படு மடிமுத லாயிறின் மண்டிலம்**

*(யாப்பருங்கலம்:73)*

என்பதி யாப்பருங்கலம்.

**உரைப்போர் குறிப்பா னுணர்வகை யன்றி[2]**
**இடைப்பால் முதலீறென்றிவை தம்முள்**
**மதிக்கப் படாதன மண்டில யாப்பே**

என்றாராகலின்.

**[எழுவா யிரட்டித் திறுதி யொன்றாய்**
**வரினது மண்டில வாசிரி யம்மே[3].]**

*(யா. வி. சூ. 73 உரைமேற்கோள்கள்)*

என்றாராகலின்.

---

1. அவிநயனார். 2. இன்றி. 3. மாகும்

வரலாறு:-

## அடிமண்டில வாசிரியப்பா

சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரல் எனினே யானஞ் சுவலே
சாரல் நாட நீவர லாறே

இஃதெல்லா வடியு முதனடு விறுதியாக வுச்சரித்தாலும் ஓசையும் பொருளும் பிழையாமல் வந்தமையால் அடிமறி மண்டில வாசிரியப்பா வெனக்கொள்க. (8)

## 7. உரைச்சூத்திரக் காரிகை

### உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகை

உ.ஆ.7.நேரிசை யாகு நிலத்தினு மென்ப திணைக்குறட்பா
நீரின் சிறிய நிலைமைய தாநிலை மண்டிலப்பா
வேரலென் றாகும் விரைமலர்க் கோதைவில் லோர்நுதலாய்
சூரப்பம் பென்ப தடிமறி யாகத் துணிந்தனரே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே ஆசிரியப்பா நான்கிற்குங் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க. (6)

## ஆசிரியத்தாழிசை, துறை, விருத்தம்

29. தருக்கில் தாழிசை மூன்றடி யொப்பன நான்கடியாய்
எருத்தடி நைந்து மிடைமடக் காயு மிடையிடையே
சுருக்கடி யாயுந் துறையாங் குறைவிறொல் சீரகவல்
விருத்தங் கழிநெடி னான்கொத் திறுவது மெல்லியலே.

இக்காரிகை ஆசிரியத் தாழிசையும், ஆசிரியத்துறையு மாசிரிய விருத்தமுமா மாறுணத்துதற்பாற்று.

'தருக்கியல் தாழிசை மூன்றடி ஒப்பன' என்பது; மூன்றடியுந் தம்முளொத்து வருவன ஆசிரியத்தாழிசை யெனப்படும் என்றவாறு.

'தருக்கியல் தாழிசை' என்று மிகுத்துச் சொல்லிய வதனால் ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வருவது சிறப்புடைத்துத் தனியே வரப்பெறு மாயினுமெனக் கொள்க. என்னை;

[அடிமூன் றொத்திறி னொத்தா ழிசையே
என்றார் காக்கைப் பாடினியார்.]

ஒத்த வொரு பொருள் மூவடி முடியினஃ
தொத்தா ழிசையா முடன்மூன் றடுக்கின்
*(யா. வி. சூ. 75 உரைமேற்கோள்கள்)*

*என்றார் மயேச்சுரர்.*

மூன்றடி யொத்த முடிபின வாய்விடின்
ஆன்ற அகவல் தாழிசை ஆகும்.
*(யாப்பருங்கலம்: 75)*

என்றாராகலின்.

*வரலாறு:-*

## ஆசிரியத்தாழிசை

கன்று குணிலாக் கனியுகுத்த[1] மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி

1. கனியுதிர்த்த

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குறம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லிநம் மானுள் வருமே லவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி

*(சிலம்பு. ஆய்ச்சியர் குரவை 1-3)*

இவை யொருபொருண்மேல் மூன்றடுக்கி வந்த ஆசிரியத் தாழிசை.

**ஆசிரியத்தாழிசை**

வானுற நிமிர்ந்தனை வையகம் அளந்தனை
பால்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ணநின் நிரைகழல் தொழுதனம்

*(யா. வி. சூ. 75 உரைமேற்.)*

இது தனியே வந்த ஆசிரியத்தாழிசையாம். சீர் வரையறுத் திலாமையால் எனைத்துச் சீரானும் அடியானும் வரப்பெறுமெனக் கொள்க.

நான்கடியா யெருத்தடி நைந்து மிடை மடக்காயு மிடையிடையே சுருக்கடியாயுந் துறையாமென்பது;

நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வருவனவும், நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து இடைமடக்காய் வருவனவும், நான்கடியாய் இடையிடை குறைந்து வருவனவும், நான்கடியாய் இடையிடை குறைந்து இடைமடக்காய் வருவனவும் எல்லா ஆசிரியத்துறையெனப் படுமென்றவாறு.

'இடைமடக்காய்' என்பதனை ஒரு காலிரு தலையுங் கூட்டி, 'நான்கடியாய்' என்பதனை யெல்லா வற்றொடுங் கூட்டி மத்திமமாகப் பொருளுரைக்கப்படும்.

சீர் வரையறுத்திலாமையால் எனைத்துச் சீரானு மடியானும் வரப்பெறுமெனக் கொள்க. [முதலடி குறைந்தும், நடுவீரடி குறைந்தும் மிக்கும் வருவன ஆசிரியத்துறையாம். அல்லது ஓரடி குறைந்து வருவன ஆசிரிய நேர்த்துறையென்றும், ஈரடி குறைந்து வருவன ஆசிரிய இணைக் குறட்டுறை என்றும் கொள்க.]

வரலாறு:-

### ஆசிரியத்தாழிசை

கரைபொரு கான்யாற்றங் கல்லத ரெம்முள்ளி
வருதிராயி
னரையிருள் யாமத் தடுபுலியோ நும்மஞ்சி[1]
யகன்று போக
நரையுரு மேறுங்கை வேலஞ்சு[2] நும்மை
வரையர மங்கையர் வெளவுத லஞ்சுதும் வாரலையோ
*(தொல். பொருள். சூ. 376 உரைமேற்.)*

இது நான்கடியா யீற்றயலடி குறைந்து எல்லா வடியுந் தம்முளளவொத்து வந்த ஆசிரியத்துறை.

### ஆசிரியத்துறை

வண்டுளர் பூந்தார் வளங்கெழு செம்பூட் சேய் வடிவே
போலத்
தண்டளிர்பூம் பிண்டித் தழையேந்தி மாவினவித்
தணந்தோன்யாரே
தண்டளிர்ப் பூம்பிண்டித் தழையேந்தி வந்துநம்
பண்டைப் பதிவினவிப் பாங்கு படமொழிந்து படர்ந்தோ னன்றே
*(யா. வி. சூ. 76 உரைமேற்.)*

இது நான்கடியா யீற்றலயடி குறைந்திடை மடக்காய் வந்த வாசிரியத்துறை.

1. அடுபுலியோ நும்மஞ்சி 2. நரையுருமே றுங்கை வேலஞ்சுக

## ஆசிரியத்துறை

கொன்றார்ந் தமைந்த குருமுகத் தொழில்நிறக்
குருதிக் கோட்டின் இருந்தாட் பெருங்கைக்
குன்றாமென அன்றாமெனக்
குமுறா நின்றன கொடுந்தொழில் வேழம்

வென்றார்ந் தமைந்த விளங்கொளி இளம்பிறைத்
துலங்குவாளி லங்கெயிற்று அழலுளைப் பரூஉத்தாள்
அதிரும் வானென வெதிருங் கூற்றெனச்
சுழலா நின்றன சுழிக்கண் யாளி

சென்றார்ந் தமைந்த சிறுநுதி வள்ளுகிர்ப்
பொறியெருத் தெறுழ்வலிப் புலவுநா றழல்வாய்ப்
புனலாமெனக் கனலாமெனப்
புகையா நின்றன புலிமா னேற்றை

என்றாங்கு இவையிவை இயங்கலின் எந்திறத்து
இனிவரல் வேண்டலம் தனிவர லௌத்தலை
விலக்கலி னிறுவரை மிசையெறி குறும்பிடை
இதுவென் னெனஅது நோனார்கரவிர விடைக்கள
உளது கற்றாரது கற்பன்றே

*இது நான்கடியாய் முதலடியும் மூன்றாமடியும் பதினான்கு சீராய் அல்லாத அடியிரண்டும் பதினாறுசீராய் இடையிடை குறைந்துவந்த ஆசிரியத்துறை.*

## ஆசிரியத்துறை

இரங்கு குயின்முழவா இன்னிசையாழ் தேனா
அரங்கு மணிபொழிலா ஆடும் போலு மிளவேனில்
அரங்கு மணிபொழிலா ஆடு மாயின்
மரங்கொல் மணந்தகன்றார் நெஞ்சமென் செய்ததிள வேனில்

*(யா. வி. சூ. 76 உரைமேற்.)*

இது நான்கடியாய் இடையிடை குறைந்து இடை மடக்காய் வந்த ஆசிரிய இணை குறட்டுறை.

**கடையதன் அயலடி கடைதபு நடையவும்**
**நடுவடி மடக்காய் நான்கடி யாகி**
**இடையிடை குறைநவும் அகவல் துறையே.**

*(யாப்பருங்கலம்:76)*

என்பதி யாப்பருங்கலம்.

'குறைவில்தொல் சீரகவல் விருத்தங் கழிநெடினான் கொத்திறுவது' என்பது

கழினெடிலடி நான்காய்த் தம்முளளவொத்து வருவன ஆசிரிய விருத்தம் எனப்படும் என்றவாறு.

'குறைவில்தொல்சீர்' என்று சிறப்பித்தவதனால் எண்சீரின் மிக்க சீரான் வருவன சிறப்பிலவெனக் கொள்க.

வரலாறு:-

**ஆசிரிய விருத்தம்**

**விடஞ்சூ ழரவி னிடைநுடங்க மின்வாள்[1] வீசி விரையார்வேங்**
**கடஞ்சூழ் நாடன் காளிங்கன் கதிர்வேல் பாடும் மாதங்கி**
**வடஞ்சேர் கொங்கை மலைதாம்தாம்[2] வடிக்கண் ணீல**
**மலர்தாம்தாம்**
**தடந்தோ ளிரண்டும் வேய்தாம் தாமென்னுந் தன்னகத்**
**தண்ணுமையே**

(யா. வி. சூ. 77 உரைமேற்.)

இஃது அறுசீர்க் கழிநெனடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

---

1. விறல் வாள். 2. மடஞ்சேர் நோக்கம் மாதாந்தாம்

1. கணிக்கொண்ட துணிவே; இஃது எழுசீர்க் கழிநெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

2. மூவடிவி னாலிரண்டு; இஃதெண்சீர்க் கழிநெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

3. இடங்கை வெஞ்சிலை; இஃதொன்பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

4. கொங்கு தங்கு; இது பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம். (காரிகை 13, 1-4 மேற்கோள்)

பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

கழிநெடி லடிநான் கொத்திறின் விருத்தமஃ
தழியா மரபின தகவ லாகும் (யாப்பருங்கலம்:77)

என்பது யாப்பருங்கலம்.

மெல்லியலே என்பது மகடூஉ முன்னிலை. (9)

## 8. உரைச் சூத்திரக் காரிகை

## உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகை

உ.ஆ.8.கன்று குணில்வா னுறத்தா ழிசையாங் கரைபொருகான்
என்றலும் வண்டுளர் பூந்தா ரிரங்கு குயின்முழவாக்
கொன்றாற்ந் தமைந்த வகவற் றுறைகுறை யாவிருத்தம்
பின்றாழ் குழலி விடங்கணி மூவடி வாதியவே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே ஆசிரியப்பா வினங்கட்குக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க. (7)

ஆசிரியப்பாவும் அதன் இனமும் முற்றும்.

# 3. கலிப்பாவும் இனமும்

(நால்வகைப் பாக்களுள் கலிப்பா என்பது கன்று துள்ளிக் குதிப்பது போன்ற துள்ளல் ஓசைத்தாய் விளங்கும் காரணத்தால் காரணப்பெயர்த்தாயிற்று. இத்தகு ஓசை நயத்தால் சிறப்புற்று விளங்கும் கலிப்பாவின் இலக்கணம் அவற்றின் வகைகள், இனங்கள் குறித்த அமிதசாகரின் கருத்துக்களை உரையாசிரியர் வழிநின்று விளங்கக் காண்போம்.)

## கலிப்பா வகைகள்

### நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா
### அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

30. தரவொன்று தாழிசை மூன்று தனிச்சொற் சுரிதகமாய்
நிரலொன்றி னேரிசை யொத்தா ழிசைக்கலி
நீர்த்திரைபோல்
மரபொன்று நேரடி மூச்சீர் குறணடு வேமடுப்பின்
அரவொன்று மல்குலஃ தம்போ தரங்கவொத்
தாழிசையே.

துள்ளல் ஓசைத்தாய், நேரீற்றியற்சீரும் நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வாராது நிரை முதலாகிய வெண்பாவுரிச்சீர் மிக்கு நேரடித்தாய்க் கலித்தளையும் அயற்றளையுந் தட்டுத் தரவு, தாழிசை என்னும் முதல் உறுப்பும் அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் துணை உறுப்பும் உடைத்தாய் ஒத்தாழிசைக்கலி, வெண்கலி, கொச்சகக்கலி என்னும் வேறுபாட்டாற் கிடந்த கலிப்பாக்களை உறுப்பினானும், ஓசையானும் பொருளானும் பெயர் வேறுபாடு உணர்த்துவான் எடுத்துக்கொண்டார்.

அவற்றுளிக் காரிகை நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவும் அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவுமா மாறுணர்த்தற் பாற்று.

'தரவொன்று தாழிசை மூன்று தனிச்சொற் சுரிதகமாய் நிரலொன்றினேரிசையொத்தாழிசைக் கலி' யென்பது; முன்னொரு தரவு வந்ததன் பின் மூன்று தாழிசை வந்ததன் பின்னொரு தனிச்சொல் வந்ததன் பின்னாசிரியமானும், வெண்பாவானுஞ் சுரிதக உறுப்பு வந்து சொன்ன பெற்றுயிற் றிரியாது வருவது நேரிசையொத்தாழிசைக் கலிப்பா வெனப்படு மென்றவாறு.

தரவெனினு மெருத்தமெனினு மொக்கும், தாழிசை எனினும் இடைநிலைப்பாட்டெனினும் ஒக்கும் தனிச்சொல் எனினும் [விட்டிசை எனினும் கூன் எனினும்] தனிநிலை எனினும் ஒக்கும். இவ்வாறே சுரிதகம் எனினும் அடக்கியல் எனினும் வாரம் எனினும் வைப்பெனினும் போக்கியல் எனினும் ஒக்கும். என்னை,

**தந்துமுன் நிற்றலின் தரவே, தாழிசை**
**ஒத்தா ழுந்தின[1] தொத்தா ழிசையே**
**தனிதர நிற்றலிற் தனிநிலை; குனிதிரை**
**நீர்ச்சுழி போல நின்றுசுரிந் திறுதலிற்**
**சோர்ச்சியில் புலவர் சுரிதகம் என்ப**

*(யா. வி. சூ.82 உரைமேற்.)*

என்றாராகலின்

இனித் தரவு, தாழிசைகட்கு அடியளவு வருமாறு 'சுருங்கிற்று மூன்றடி' (காரிகை:42) என்னும் காரிகையுள் போக்கிச் சொல்லுதும்.

---

1. ஒத்தாழ்ந் திறினஃ

*வரலாறு:-*

## நேரிசையொத்தாழிசைக் கலிப்பா

வாணெடுங்கண் பனிசுர வண்ணம்வே றாய்த்திரிந்து
தோணெடுங் தகைதுறந்து துன்பங்கூர் பரப்பினவாய்ப்
பூணொடுங்கு[1] முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ.

*இது தரவு.*

சூருடைய கருங்கடங்கள் சொலற்கரிய வென்பவால்
பீருடைய நலந்தொலையப் பிரிவாரோ பெரியவரே

சேணுடைய கடுங்கடங்கள் சொலற்கரிய வென்பவாற்
நாணுடைய நலந்தொலைய நடப்பாரோ நலமிலரே

சிலம்படைந்த வெங்கானஞ் சீரிலவே வென்பவாற்
புலம்படைந்து நலந்தொலையப் போவாரோ பொருளிலரே

*இவை மூன்றுந் தாழிசை.*

*என வாங்கு;*

*இது தனிச்சொல்.*

அருளெனு மிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்
பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னெடுந்[2] தேரொடு தானையிற் பொலிந்தே

*இது சுரிதகம்.*

*தரவு மூன்றடியாய்த் தாழிசை மூன்று மிரண்டடியாய்த் தனிச்சொற்பெற்று மூன்றடி யாசிரியச் சுரிதகத்தாலிற்ற நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா.*

---

1. பூண்டுங்கு. 2.பொன்னொடும்

வெள்ளைச் சுரிதகத்தாலிற்றன யாப்பருங்கல விருத்தியுட் கண்டுகொள்க.

தரவொன் றாகித் தாழிசை மூன்றாய்த்
தனிச்சொல் லிடைக்கிடந்து சுரிதகந் தழுவ
வைத்த மரபின தொத்தா ழிசைக்கலி

என்றார் மயேச்சுரர்.

தரவு தாழிசை தனிநிலை சுரிதக
மெனநான் குறுப்பின தொத்தா ழிசைக்கலி

தன்னுடைய யந்தந் தாழிசை யாதியுந்
துன்னு மிடத்துத் துணிந்தது போலிசை
தன்னோடு நிற்றலிற் றரவுக் கியல்பே

தத்தமு ளொத்துத் தரவி னகப்பட
நிற்பன் மூன்று நிரந்தவை தாழிசை

ஆங்கெனக் கிளவி யடையாத் தொடைபட
நீங்கி யிசைக்கும் நிலையது தனிச்சொல்

ஆசிரியம் வெண்பா எனவிவை தம்முள்
ஒன்றாகி அடிபெற் றிறுதி வருவது
சுழியம் எனப்பெயர் சுரிதக மாகும்

*(யா. வி. சூ. 82 உரைமேற்கோள்கள்)*

என்றார் காக்கைபாடினியார்.

[வெள்ளைச் சுரிதகத்தாலிற்ற நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குச் செய்யுள் வருமாறு.

## நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா

முத்தொடு மணிதயங்கு முக்குடைக்கீழ் முனைவனாய்
எத்திசையும் பல்லுயிர்க ளின்புற வினிதிருந்து
பத்தறு திசையனைத்தும்[1] பகைபசி பிணிநீங்க
உத்தமர்க டொழுதேத்த வொளிர்வரைபோற் செலவினோய்[2]

*இது தரவு.*

எள்ளனைத்து மிடரின்றி யெழின்மாண்ட பொன்னெயிலின்
உள்ளிருந்த வுன்னையே வுறுதுணையென்[3] றடைந்தோரை
வெள்ளில்சேர் வியன்காட்டு ளுறைகென்றல் விழுமிதோ

குணங்களின் வரம்பிகந்து கூடிய பன்னிரண்டு
கணங்களும்வந் தடியேத்தக் காதலித்துன் அடைந்தோரை
பிணம்பிறங்கு பெருங்காட்டு ளுரைகென்றல் பெருமையோ

விடத்தகைய வினைநீக்கி வெள்வளைக்கைச் செந்துவர்வாய்
மடத்தகைய மயிலனையார் வணங்கநின் னடைந்தோரைத்
தடத்தகைய காடுறைக வென்பதுநின் தகுதியோ

*இவை மூன்றுந் தாழிசை.*

என வாங்கு;

*இது தனிச்சொல்.*

அனைத்துணையை யாயினு மாகமற் றுன்கட்
டினைத்துணையுந் தீயவை யின்மையிற் சேர்தும்
வினைத்தொகையை வீட்டுக வென்று.

*இது சுரிதகம்.*]

'நீர்த்திரை போன் மரபொன்று நேரடிமுச்சீர் குறணடுவே மடுப்பின், அது அம்போதரங்க வொத்தாழிசையே' என்பது;

---

1. காவதம்
2. ஒளிவரைபோற் செவ்வியோய்
3. உயிர்த்துணை, உயர்துணை

கரைசார கரைசார யொருகாலைக்கு ஒருகாற் சுருங்கி வருகின்ற நீர்த்தரங்கம் போல நாற்சீரடியு முச்சீரடியு மிருசீரடியு மாகிய அசையடிகளைத் தாழிசைக்குந் தனிச்சொற்கு நடுவே தொடுத்துத் தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகமென்னும் ஐந்துறுப்பு முடைத்தாய் வருவது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா வெனப்படு மென்றவாறு.

'அரவொன்று அல்குல்' என்பது மகடூஉ முன்னிலை.

'மரபொன்று நேரடி' என்று சிறப்பித்தவதனால், அசையடிதாம் ஈரடியாலிரண்டும் ஓரடியான் நான்கு முச்சீரானெட்டு மிருசீராற் பதினாறுமாய் வருவது சிறப்புடைத்து. எட்டும் பதினாறும் என்று சொல்லப்பட்டன நான்கும் எட்டுமாகச் சுருங்கிவரப் பெறுமாயினும் எனக் கொள்க. என்னை;

**ஈரடி யிரண்டு மோரடி நான்கும்**
**முச்சீ ரெட்டு மிருசீ ரிரட்டியும்**
**அச்சீர் குறையினும் அம்போ தரங்கம்**

(*யா. வி. சூ. 83 உரைமேற்.*)

என்றாராகலின்.

அம்போதரங்கம் எனினும், அசையடியெனினும், பிரிந் திசைக்குறள் எனினும், சொற்சீரடி எனினும், எண்ணெனினும் ஒக்கும்.

அவற்றைப் பேரெண், அளவெண், இடையெண், சிற்றெண் என்று பெயரிட்டு வழங்குவாருமுளர்.

**அனைய வாகிய அசையடி நான்குந்**
**தனியொடு தாழிசை யிடைவரு மென்ப**

*வரலாறு:-*

## அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

கெடலரும் மாமுனிவர் கிளர்ந்துடன் தொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் வாலுளைஇ
அழலவிர் சுழல்செங்க ணரிமாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
ஆர்புன லிழிகுருதி யகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்

*இது தரவு.*

முரசதிர் வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்லர்
அடியொடு முடியிறுப்புண் டயர்ந்தவர்[1] நிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ;

கலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வும்
மாதரா[2] குடம்பொடு மறம்பிதிர வெதிர்கலங்கச்
சேணுய ரிருவிசும்பிற் செகுத்ததுநின்[3] சினமாவோ

படுமணி யினநிரைகள் பறந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வெரிநொடு மருப்பொசிய[4] வீழ்ந்துநிறம்[5] வேறாக
வெருமலி பெருந்தொழுவி னிறுத்ததுநின் னிகலாமோ

*இவை மூன்றுந் தாழிசை.*

இலங்கொளி மரகத மேழின்மதி[6] வியன்கடல்
வலம்புரித் தடக்கை[7] மாஅல் நின்னிறம்
விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை

---

1.அயர்ந்தவன், 2. மாணாதா, 3. சேர்த்தது, 4. மருப்பொடிய, 5. வீழ்ந்து திறல், 6.மேழின்மிகு, 7. தடக்கையின்

இவையிரண்டும் பேரெண், இவை நாற்சீரடி யிரண்டு அம்போதரங்கம்.

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை;
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை,
ஒலியிய லுவண மோங்கிய கொடியினை,
வலிமிகு சகட மாற்றிய வடியினை;

இவை நாற்சீரடி நான்கம் போதரங்கம். (அளவெண்)

போரவுணர்க் கடந்தோய் நீ;
புணர்மருதம் பிளந்தோய் நீ;
நீரகில மளந்தோய் நீ;
நிழல்திகழ்ஐம் படையோய் நீ;

இவை மூச்சீர் அடி நான்கம்போதரங்கம். இவை யிடையெண்.

ஊழி நீ; உலகு நீ;
உருவு நீ அருவு நீ;
ஆழி நீ; அருளுநீ;
அறமும் நீ; மறமும் நீ;

இவை இருசீர் அடி எட்டம்போதரங்கம். இவை சிற்றெண்.

என வாங்கு;

தனிச்சொல்.

அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
தொடுகழற் கொடும்பூண் பகட்டெழின் மாா்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்
தொன்றுமுதிர் கடலுலகம் முழுதுடன்
ஒன்றுபுரி திகிரி யுருட்டுவோ னெனவே.

இது ஆசிரியச் சுரிதகம்.

இது எட்டும் பதினாறும் என்று சொல்லப்பட்ட அம்போதரங்க உறுப்பு நான்கும் எட்டுமாய் வந்த அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா.

## அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

நலங்கிளர் திருமணியும் நன்பொன்னுங் குயின்றழகார்
இலங்கெயிற் றழலரிமா னெருத்தஞ்சே ரணையின்மேல்
இருபுடையு மியக்கரச ரிணைக்கவரி யெடுத்தசைப்ப[1]
விரிதாமத் துயல்வரூஉம் வெண்குடைமூன் றுடனிழற்ற
வண்டரற்ற நாற்காதம் வகைமாண வுயர்ந்தோங்குந்
தண்டளிர்ப்பூம் பிண்டிக்கீழ்த் தகைபெறவீற் றிருந்தனையே

என்னும் அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா எட்டும் பதினாறுமென்று சொல்லப்பட்டன குறையாதே வந்தவாறு யாப்பருங்கல விருத்தியுட் கண்டுகொள்க.

நீர்த்திரை போல நிரலே முறைமுறை
யாக்கஞ் சுருங்கி யசையடி தாழிசை[2]
விட்டிசை விரியத்[3] தொடுத்துச் சுரிதகந்
தாங்கித் தழுவும்[4] தரவினோ டைந்தும்
யாப்புற் றமைந்தன வம்போ தரங்கம்

*(யா. வி. சூ. 83 உரைமேற்.)*

என்றார் காக்கைபாடினியாருமெனக் கொள்க. (10)

## 9. உரைச்சூத்திரக் காரிகை
## உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகை

உ.ஆ.9.வாணெடுங் கண்பனி நேரிசை யாகு மதர்த்திருண்டு
சேணுற வோடிக் குழையி டறிச்செருச் செய்யும்விழி
நாணுந் திருவு மறிவுஞ் செறிவு முடைய நல்லாய்
ஏனுங் கெடலரு மாமுனி யம்போ தரங்கமென்னே.

1. யெடுத்தெரிய, 2. அசையடித்தாகி, 3. வீயத், 4. தொடுத்த.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே நேரிசை யொத்தாழிசைக் கலிப்பாவிற்கும் அம்போதரங்க யொத்தாழிசைக் கலிப்பாவிற்கும் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க. (௮)

## வண்ணகயொத்தாழிசைக் கலிப்பா, வெண்கலிப்பா

31. அசையடி முன்ன ரராகம்வந் தெல்லா
வுறுப்புமுண்டேல்
வசையறு வண்ணக வொத்தா ழிசைக்கலி
வான்றளைதட்
டிசைதன தாகியும் வெண்பா வியைந்துமின்
பான்மொழியாய்
விசையறு சிந்தடி யாலிறு மாய்விடின் வெண்கலியே.

இக்காரிகை வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவும், வெண்கலிப்பாவும் ஆமாறுணர்த்தற்பாற்று.

'அசையடி முன்ன ரராகம் வந்தெல்லா வுறுப்பு முண்டேல் வசையறு வண்ணக வொத்தாழிசைக்கலி' யென்பது.

அம்போதரங்க வுறுப்பிற்குந் தாழிசைக்கும் நடுவே அராக உறுப்புப்பெற்றுத் தரவு, தாழி, அராகம், அம்போதரங்கம், தனிச்சொற் சுரிதக மென்னு மாறுறுப்பு முடைத்தாய் வருமெனினது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா எனப்படும் என்றவாறு.

அராகம் எனினும், அடுக்கியல் எனினும், முடுகியல் எனினும் வண்ணகம் எனினும் போக்கியல் எனினும் ஒக்கும்.

வசையறு வண்ணகமென்று சிறப்பித்த வதனால் அராக உறுப்புத்தான் அளவடி முதலாய வெல்லா வடியானும் வரப்பெறுமெனக் கொள்க.

அடிவரையறையாவது சிறுமை நான்கடிப் பெருமை யெட்டடி யிடையிடை ஐந்தடியானும் ஆறடியானும் ஏழனடியானும் வரப்பெறுமெனக் கொள்க. என்னை;

அளவடி முதலா வனைத்தினும் நான்கடி
முதலா யிரட்டியு முடுகியல் நடக்கும்
(*யா. வி. சூ. 84 உரைமேற்.*)

*என்றாராகலின்,*

*வரலாறு:-*

**வண்ணக யொத்தாழிசைக் கலிப்பா**

விளங்குமணிப் பசும்பொன்னின் விரித்தமைத்துக் கதிர்கான்ற
துளங்குமணிக் கனைகழற்காற் றுறுமலர் நறும்பைந்தார்ப்
பரூஉத்தடக்கை மதயானைப் பகட்டெழி பனையெருத்தின்
மிசைத்தோன்றும்[1]
குரூஉக்கொண்ட மணிப்பூணோய் குறையிரந்து
முன்னாட்கண்
மாயாத வனப்பினையாய் மகிழ்வார்க்கும் அல்லார்க்கும்
தாயாகித் தலையளிக்குந் தண்டுறை ஊரகேள்.

*இது தரவு.*

காட்சியால் கலப்பெய்தி எத்திறத்தும் கதிர்ப்பாகி
மாட்சியால் திரியாத[2] மரபொத்தாய் கரவினாற்
பிணிநலம் பெரிதெய்திப் பெருந்தடந்தோள் வனப்பழிய
அணிநலந் தனியேவந் தருளுவதும் மருளாமோ.

அன்பினா லமிழ்தளைஇ யறிவினாற் பிறிதின்றிப்
பொன்புனை பூணாகம் பசப்பெய்தப் பொழிலிடத்துப்
பெருவரைத்தோ ளருளுதற் கிருளிடைத் தமியையாய்க்
கருவரைத்தோள் கதிர்ப்பிக்குங் காதலுங் காதலோ

---

1. பகட்டெழி லெரிஞ்சி 2. மாட்சி யறியாத.

பாங்கனையே வாயிலாப் பல்காலும் வந்தொழுகுந்
தேங்காத காவினையுந் தெரியாத விருளுடைக்கட்
குடவரைவேய்த் தோளிணைகள் குளிர்ப்பின்னான் தமியையாய்த்
தடமலர்த்தார் அருளுநின் தகுதியுந் தகுதியோ;

*இவை மூன்றுந் தாழிசை..*

தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை தழலெனு விரிவன
பொழில்
போதுறு நறுவிரை புதுமலர் தெரிதரு கருநெய்தல் விரிவன கழி,
தீதுறு திறமறு கெனநனி முனமுனம் துணையொடு
பிணைவன துறை
மூதுறு மொலிகலி நுரைதரு திரையொடு கழிதொடர்புடைய கடல்

*இவை நான்கும் அராகம்.*

கொடுந்திற லுடையன சுறவேறு கொட்பதனால்
இடுங்கழி யிராவருதல் வேண்டாவென் றுரைத்திலமோ
கருநிறத் தடுதொழிற் கராம்பெரி துடைமையால்
இருணிறத் தொருகான லிரவரா லென்றிலமோ

*இவை நாற்சீரானீரடி இரண்டம்போதரங்கம்.*

நாணொடு கழிந்தன்றாற் பெண்ணரசி நலத்தகையே
துஞ்சலு மொழிந்தன்றாற் றொடித்தோளி தடங்கண்ணே.
அரற்றொடு கழிந்தன்றா லாரிருளெம் மாயிழைக்கே
நயப்பொடு கழிந்தன்றால் நனவினும் நன்னுதற்கே

*இவை நாற்சீரோரடி நான்கம்போதரங்கம்.*

அத்திறத்தா லிசைந்தன தோள்;
அலர்தற்கு மெலிந்தன கண்;
பொய்த்துரையாற் புலர்ந்தது முகம்;
பொன்னிறத்தாற் போர்த்தன முலை;
அழலினா லசைந்தது நகை;

அணியினா லொசிந்த திடை;
குழலினா லவிர்ந்தது முடி;
குறையினாற் கோடிற்றுநிறை;

*இவைமுச்சீரோரடி யெட்டம்போதரங்கம்.*

உட்கொண்ட தகைத்தொருபால்;
உலகறிந்த வலத்தொருபால்;
கட்கொண்டல் துளிர்த்தொருபால்;
கழிவெய்தும் படித்தொருபால்;
பிரிவுறூஉந் தகைத்தொருபால்;
படர்வுறூஉம் பசப்பொருபால்;
இரவுறூஉந் துயரொருபால்;
இளிவந்த எழிற்றொருபால்;
மெலிவுறூஉந் தகைத்தொருபால்;
விளர்புவந் தடைத்தொருபால்;
பொலிவுசென் றகன்றொருபால்;
பொறைவந்து கூர்ந்தொருபால்;
காதலிற் கதிர்ப்பொருபால்;
கட்படாத் துயரொருபால்;
ஏதில்சென் றணைந்தொருபால்;
இயனாணிற் செறிவொருபால்;

*இவை இருசீரோரடிப் பதினாறம் போதரங்கம்.*

என வாங்கு,

*இது தனிச்சொல்.*

இன்னதிவ் வழக்கம் இத்திறம் இவணலம்
என்னவு முன்னாட் டுன்னா யாகிக்
கலந்த வண்மையை யாயினு நலந்தகக்
கிளையொடு கெழீஇத் தளையவிழ் கோதையைக்

கற்பொடு காணிய யாமே
பொற்பொடு பொலிகநும் புணர்ச்சி தானே

(யா. வி. சூ. 84 உரைமேற்.)

இது சுரிதகம்.

இது ஆறு உறுப்புங் குறைவின்றி வந்த வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா.

அச்சொல்லப் பட்ட உறுப்போ டராகவடி
வைத்த நடையது வண்ணக மாகும்

(யா. வி. சூ. 84 உரைமேற்.)

என்றார் காக்கைபாடினியார்.

'வான்றளை தட்டிசைதன தாகியும் வெண்பா வியைந்தும் விசையறு சிந்தடியாலிறு மாய்விடின் வெண்கலியே' என்பது;

கலித்தளைத் தட்டுக் கலியோசை தழுவியும் வெண்டளைத் தட்டு வெள்ளோசை தழுவியும் வந்து ஈற்றடி முச்சீரான் வருமெனினது வெண்கலிப்பா வென்றுங் கலிவெண்பா வென்றும் பெயரிட்டு வழங்கப்படு மென்றவாறு.

'இன்பான் மொழியாய்' என்பது மகடூஉ முன்னிலை.

'விசையறு சிந்தடி' யென்று சிறப்பித்த வதனால் வேற்றுத்தைத் தட்டு அருகி வரப்பெற்றுமெனக் கொள்க.

வரலாறு :-

## வெண் கலிப்பா

வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்கக்
கோளார்ந்த பூணாகங் குழைபுரளக் கோட்டெருத்தின்

மாலைதாழ் கூந்தலார் வரன்முறையான் வந்தேத்தச்
சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தந் சொன்முறையான்
மனையறமுந் துறவறமு மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட் டிவையுரைத்த
தொன்மைசால் மிகுகுணத்தெந் துறவரசைத் தொழுதேத்த
நன்மைசால் வீடெய்து மாறு.

இது தன்றளையானும் துள்ளலோசையானும் வந்தமையான் வெண்கலிப்பா.

### கலிவெண்பா

சுடர்த்தொடீஇ கேளாய் தெருவில் நாமாடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானு மிருந்தேமா இல்லீரே
உண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா யென்றாள் என யானும்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு
அன்னா யிவனொருவன் செய்ததுகாண் என்றேனா
அன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனா அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண் ணாற்கொல் வான்போல் நோக்கி
நகைக்கூட்டஞ் செய்தானக் கள்வன் மகன்

(கலித்தொகை-51)

இது வெண்டளைத் தட்டு வெள்ளோசைத் தழுவி யொருபொருண்மேல் வந்தமையான் வெண்கலிப்பா.

என்னை;

ஒருபொரு ணுதலிய வெள்ளடி யியலான்
திரிபின்றி வருவது கலிவெண் பாட்டே
(தொல். பொருள்.465)

என்றார் தொல்காப்பியர்.

வெண்டளை தன்றளை யென்றிரு தன்மையின்
வெண்பா வியலது வெண்கலி யாகும்

என்றார் காக்கைபாடினியார்.

இனிப் பிறதளையான் வருமாறு:-

### வெண்கலிப்பா

ஏர்மலர் நறுங்கோதை யெருத்தலைப்ப விறைஞ்சித்தன்
வார்மலர் தடங்கண்ணாள் வலைப்பட்டு வருந்தியவென்
தார்வரை யகன்மார்பன் றனிமையை யறியுங்கொல்
சீர்மலி கொடியிடை சிறந்து.
(யா. வி. சூ. 85 உரைமேற்கோள்கள்)

இது ஆசிரியத்தளையானும், தன்றளையானும் வந்த வெண் கலிப்பா. பிறவும் வருவன யாப்பருங்கல விருத்தியுட் கண்டு கொள்க. (11)

## 10. உரைச்சூத்திரக் காரிகை

### உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகை

உ.ஆ.10.நின்று விளங்கு மணிப்பசும் பொன்னிற மாறுறுப்பும்
ஒன்றிய வண்ணக வொத்தா ழிசைக்கலி
யோசைகுன்றாத்
துன்றிய வாளார் மழையுஞ் சுடர்த்தொடீஇ யேர்மலரும்
என்றிவை வெண்கலிப் பாவிற் கிலக்கிய மேந்திழையே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவிற்கும் வெண்கலிப்பாவிற்கும் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க. (9)

## கொச்சகக் கலிப்பாவின் வகைகள்

32. தரவே தரவிணை தாழிசை தாமுஞ் சிலபலவாய்
மரபே யியன்று மயங்கியும் வந்தன வாங்கமைத்தோள்
அரவே ரகலல்கு லம்பேர் நெடுங்கண்வம்
பேறுகொங்கைக்
குரவே கமழ்குழ லாய்கொண்ட வான்பெயர்
கொச்சகமே.

இக்காரிகை தரவு கொச்சகக் கலிப்பாவும்,தரவிணைக் கொச்சகக் கலிப்பாவும், சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவும், பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பாவும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவும் ஆமாறுணர்த்துதற்பாற்று.

இதன் பொழிப்பு:- ஒரு தரவே வந்துந் தரவிரண்டாய் வந்துந் தாழிசை சிலவாய் வந்துந் தாழிசைப் பலவாய் வந்துந் தரவு, தாழிசை. அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறுறுப்புந் தம்முண் மயங்கியும், வெண்பாவினோடும், ஆசிரியத்தினோடும், மயங்கியும் வருவன வெல்லாங் கொச்சகக் கலிப்பா என்று பெயரிட்டு வழங்கப்படுமென்றவாறு.

ஒரு தரவு வந்தால் தரவுகொச்சகக் கலிப்பா என்றுந் தரவிரண்டாய் வந்தால் தரவிணைக் கொச்சகக்கலிப்பா வென்றும், சில தாழிசை வந்தாற் சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பாவென்றும், பல தாழிசை வந்தாற் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா வென்றும், தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகமெனு மாறுறுப்புந் தம்முண் மயங்கியும் வெண்பாவி னோடும் ஆசிரியத்தினோடும் மயங்கியும் பிறவற்றினோடு மயங்கியும் வந்தால் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா வென்றும் வழங்கப்படுமென்றவாறு.

'சொல்லின் முடிவினப் பொருண் முடித்தல்' என்பது தந்திரவுத்தியாகலின் தரவு கொச்சகம் முதலாயின அவ்வப் பெயரானே வழங்கப்படுமென்றவாறு.

'தாமும்' என்று சிறப்பித்த வதனால் தனிச்சொல்லும், சுரிதகமும் இடையிடை வரப்பெறுமெனக் கொள்க.

'மரபே யியன்றும்' என்று சிறப்பித்த வதனால் வரலாற்று முறைமையோடுங் கூட்டிக் கலியுறுப்பில் மிக்கும், குறைந்தும் பிறழ்ந்தும், உறழ்ந்தும், மயங்கியும் கலியுள் வாரா என்ற நேரீற்றியற்சீரும் நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் ஐஞ்சீரடியும் வந்து ஒத்தாழிசை கலிப்பாக்களோடு ஒவ்வாது வருவனவெல்லாம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்று வழங்கப்படுமெனக் கொள்க.

'வாங்கமைத் தோள் - குழாய்' என்பது மகடூஉ முன்னிலை.

'கொண்ட வான்பெயர் கொச்சகமே' என்பது இறுதி விளக்கு எனக்கொள்க.

அவற்றிற்குச் செய்யுள் வருமாறு.

**தரவு கொச்சகக் கலிப்பா**

**செல்வப்போர்க் .................... மருமம்பாய்ந் தொளித்ததே**

*(காரிகை - 11 மேற்கோள்)*

இது சுரிதகமில்லாத தரவு கொச்சகக் கலிப்பா.

**தரவு கொச்சகக் கலிப்பா**

**குடநிலைத் தண்புறவிற் .............. சென்ற வாறே**

*(காரிகை - 21 மேற்கோள்)*

இது தனிச்சொல்லும், சுரிதகமும், பெற்றுவந்த தரவு கொச்சகக் கலிப்பா.

## தரவிணைக் கொச்சகக் கலிப்பா

**வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய**
**கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனாங்**
**கொடிபடு மணிமாடக் கூடலார்[1] கோமானே.**

*இது தரவு.*

**என வாங்கு,**

*இது தனிச்சொல்.*

**துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் துறப்புண்டாங்**
**கிணைமலர்த்தா ரருளுமே லிதுவிதற்கோர் மாறென்று**
**துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரோ.**

*இது தரவு.*

**அதனால்**

*இது தனிச்சொல்.*

**செவ்வாய்ப் பேதை யிவடிறத்**
**தெவ்வா றாங்கொலிஃ தெண்ணிய வாறே**

*(யா. வி. சூ.86 உரைமேற்.)*

*இது சுரிதகம்.*

இது இடையிடைத் தனிச்சொற்பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் இற்ற தரவிணைக் கொச்சகக் கலிப்பா.

சுரிதகமில்லாத தரவிணைக் கொச்சகக் கலிப்பா வந்த வழிக் கண்டு கொள்க.

## சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா

**பரூஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின்**
**மிசைத்தோன்றிக்**
**குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழப்**

1. வரைமாடக் கோழியார்

படைப்பரிமான் தேரினோடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே.

*இது தரவு.*

ஆங்கொருசார்

*இது தனிச்சொல்.*

உச்சியார்க் கிறைவனா யுலகமெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனாப் பாவித்தார்
வச்சிரங்கைக் காணாத காரணத்தான் மயங்கினாரே.

ஆங்கொருசார்

*இது தனிச்சொல்.*

அக்கால மணிநிரைகாத் தருவரையாற் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனாப் பாவித்தார்
சக்கரங்கைக் காணாத காரணத்தாற் சமழ்த்தனரே

ஆங்கொருசார்

*இது தனிச்சொல்.*

மால்கொண்ட பகைதணிப்பான் மாத்தடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங் கொடியவனாப் பாவித்தார்
வேல்கொண்ட தின்மையால் விம்மிதராய் நின்றனரே

*இவை மூன்றுத் தாழிசை.*

அஃதான்று

*இது தனிச்சொல்.*

கொடித்தே ரண்ணல்[1] கொற்கைக் கோமான்
நின்றுபுக ழொருவன் செம்பூட் சேஎய்
என்றுநனி யறிந்தனர் பலரே தானும்
ஐவரு ளொருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி

---

1. கொடித்தேர்த் தோன்றல்

மன்னன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே

*(யா. வி. சூ.86 உரைமேற்.)*

இது சுரிதகம்.

இது நான்கடித்தரவும், மூன்றடித்தாழிசை மூன்றுமாய் சுரிதகமுமாய், இடையிடை தனிச்சொற்பெற்று நேரிசை யொத்தாழிசைக் கலிப்பாவிற் சிறிது வேறுபட்டு வந்தமையால் சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.

**பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா**

தண்மதியோர் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியு முடநிறையு முடன்தளர முன்னாட்கட்
கண்மதியோர்ப் பிவையின்றிக் காரிகையின் நிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ

*இது தரவு.*

இளநல மிவள்வாட விரும்பொருட்குப் பிரிவாயேல்
தளநல முகைவெண்பல் தாழ்குழல் தளர்வாளோ;

தகைநல மிவள்வாடத் தரும்பொருட்டுப் பிரிவாயேல்
வகைநல மிவள்வாடி வருந்தியி லிருப்பாளோ;

அணிநல மிவள்வாட அரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநல மகிழ்மேனி மாசோடு மடிவாளே;

நாம்பிரியோ அணியென்று நறுறுதலைப் பிரிவாயேல்
ஓம்பிரியோ மென்றநின் உயிர்மொழியும் பழுதாமோ

குன்றளித்த திரடோளாய் கொய்புனத்திற் கூடியநாள்
அன்றளித்த அருண்மொழியால் அருளியதும் அருளாமோ.

சில்பகலு மூடியக்காற் சிலம்பொலிச்சீ றடிபரவிப்
பல்பகலுந் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ..

*இவை ஆறுந்தாழிசை.*

எனவாங்கு,

*இது தனிச்சொல்.*

அரும்பெற லிவனினும் தரும்பொரு ளதனினும்
பெரும்பெற லரியன வெறுக்கையு மற்றே
விழுமிய தறிமறி அறிவாம்
கெழுமிய காதலிற் றரும்பொருள் சிறிதே

*(யா. வி. சூ.86 உரைமேற்.)*

*இது சுரிதகம்.*

*இது நாலடித்தரவும், இரண்டடித்தாழிசை ஆறும், தனிச் சொல்லும், நான்கடிச் சுரிதகமும் பெற்றுவந்த பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா.*

## மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

மணிகிளர் நெடிமுடி மாயவனுந் தம்முனும்போன்று
அணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
நுரைநிவந் தவையன்ன நொப்பறைய சிறையன்னம்
இரைநயந் திரைகூரு மேமஞ்சால் துறைவகேள்;

மலையென[1] மழையென மஞ்சௌத் திரைபொங்கிக்
கனலெனக் காற்றெனக்[2] கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி யிறக்கிலா
தெழுமுந்நீர் பரந்தோங்கு மேமஞ்சால் துறைவகேள்;

*இவை இரண்டுந் தரவு.*

கொடிபுரையு நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்தோள்
தொடிநிகழ்ந்த தோள்கண்டுந் துறவலனே யென்றியால்;

கண்கவரு மணிப்பைம்பூட் கயில்கவைஇய சிறுபுறத்தோள்
தெண்பனிநீ ருகக்கண்டுந் திரியலனே யென்றியால்;

நீர்பூத்த நிரையிதழ்க்க ணின்றொசிந்த புருவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே யென்றியால்;

---

1. வரையென, 2. கரையெனக் கடலெனக்

கனைவரல்யாற் றிடுகரைபோற் கைந்நில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் னிலைகண்டு நீங்கலனே யென்றியால்

வீழ்சுடரி னெய்யேபோல் விழுமநோய் பொறுக்கல்லா
தாழுமென் னிலைகண்டு மகல்நிலனே யென்றியால்

கலங்கவிழ்ந்த நாய்கன்போற் களைதுணை பிறிதென்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்;

*இவை யாறுந் தாழிசை.*

அதனால்

*இது தனிச்சொல்.*

அடும்பமல் இறும்பி நெடும்பனை மிசைதொறுங்
கொடும்புற மடலிடை யொடுங்கின குருகு;

செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறிதருந் திமில்;

அரசுடை நிரைபடை விரைசெறி முரசென
நுரைதரு திரையொடு கரைபொருங் கடல்;

அலங்கொளி யவிர்சுட[1] ரிலங்கெழின் மலர்தொறும்[2]
கலந்தெறி காலொடு புலம்பின பொழில்,

*இவை நான்கும் அராகம்;.*

விடாஅது கழலுமென் வெள்வளையுந் தவிர்ப்பாய்மன்
கெடாஅது பெருகுமென் கேண்மையு நிறுப்பாயோ;

ஒல்லாது கழலுமென் னொளிவளையுந் தவிர்ப்பாய்மன்
நில்லாது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ;

தாங்காது கழலுமென் தகைவளையுந் தவிர்ப்பாய்மன்
நீங்காது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ;

மறவாத வன்பினேன் மனனிற்கு மாறுரையாய்
துறவாத தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்;

---

1. அலங்கொளி விரிசுடர் 2. இலங்கொளி மலர்தோறும்

காதலர் மார்பன்றிக் காமர்க்கு மருந்துரையாய்
ஏதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்;
இணைபிரிந்தார் மார்பன்றி யின்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேன் துயர்தீரு மாறுரையாய்

*இவை யாறுந் தாழிசை.*

என வாங்கு,

*இது தனிச்சொல்.*

பகைபோன்றதுதுறை பரிவாயினகுறி;
நகையிழந்ததுமுகம் நனிநாணிற்றுளம்;
தகையிழந்ததுதோள் தலைசிறந்ததுதுயர்
புகைபரந்ததுமெய் பொறையாகின்றென்னுயிர்

*இவை இருசீரோரடி எட்டம்போதரங்கம்.*

அதனால்.

*இது தனிச்சொல்.*

இனையது நினையா லனையது பொழுதால்
நினையல் வாழி தோழி துனைவரல்[1]
பனியொடு கழிக உண்கண்
என்னொடு கழிகவித் துன்னிய நோயே

*(யா. வி. சூ.86 உரைமேற்.)*

*இவை சுரிதகம்.*

இது தரவு இரண்டும், தாழிசை ஆறும், தனிச்சொல்லும், அராகம் நான்கும், பெயர்த்தாறு தாழிசையுந் தனிச்சொல்லும், இருசீரோரடி யெட்டம்போதரங்க உறுப்பும் பெற்று நான்கடி ஆசிரியச் சுரிதகத்தாலிற்றுக் கலிக்கோதப்பட்ட ஆறுறுப்பும் மிக்கும் குறைந்தும், பிறழ்ந்தும், உறழ்ந்தும், மயங்கியும் வந்தமையான் மயங்கிசைச் கொச்சகக் கலிப்பா.

1. தொலையாப்.

வெண்பாவோடும் ஆசிரியத்தோடும் மயங்கி வந்த மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா **'காமர் கடும்புனல் கலந்தெம்மோடாடுவாள்'** *(கலித்.39)* என்னும் பழம்பாட்டிற் கண்டுகொள்க.

இன்னும் 'மரபே யியன்றும்' என்று சிறப்பித்தவதனால் ஒரு போகு முதலா உடையனவற்றை எல்லாம் இதனாற் பெயர் கொடுத்துக் கொச்சகம் என்று வழங்கப்படும் எனக்கொள்க. என்னை,

> **எருத்திய லின்றி யிடைநிலை பெற்றும்**
> **இடைநிலை யின்றி யெருத்துடைத் தாயும்**
> **எருத்த மிரட்டித் திடைநிலை பெற்றும்**
> **இடைய திரட்டித் தெருத்துடைத் தாயும்**
> **இடையு மெருத்து மிரட்டுற வந்தும்**
> **எருத்த மிரட்டித் திடைநிலை யாறாய்**
> **அடக்கியல் காறு மமைந்த வுறுப்புக்**
> **கிடக்கை முறைமையிற் கீழமைய தாயுந்**
> **தரவொடு தாழிசை யம்போ தரங்கம்**
> **முடுகியல் போக்கிய லென்றிவை யெல்லாம்**
> **முறைதடு மாற மொழிந்தவை யின்றி**
> **யிடையிடை வெண்பாச் சிலபல சேர்ந்தும்**
> **மற்றும் பிறபிற வொப்புறுப் பில்லன**
> **கொச்சக மென்னுங் குறியின வாகும்.**
>
> *(யா. வி. சூ.86 உரைமேற்.)*

என்றார் காக்கைபாடினியார்.

> **தரவே தரவிணை தாழிசை சிலபல**
> **வரன்முறை பிறழ அயற்பா மயங்கியுந்**
> **தனிச்சொற் பலவா யிடையிடை நடந்தவும்**
> **ஒத்தா தாழிசைக்கலி யுறுப்பினிற் பிறழ்ந்தவும்**
> **வைத்தவழி முறையால் வண்ணக விறுவாய்**

மயங்கி வந்தவு மியங்குநெறி முறைமையிற்
கொச்சகக் கலியெனக் கூறினர் புலவர்

(யா. வி. சூ.86 உரைமேற்.)

[என்றார் காமவேளைக் கருத்த புத்தேள் நாமம் தாங்கிய நல்லாசிரியர் (மயேச்சுரர்)]

ஓதப் பட்ட வுறுப்பு வகையெல்லாம்
ஏதப் படாமற் கலிக்கியல் பெய்தி
மிக்குந் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும்
வண்ணமு மடியுந் தொடையு மயங்கியும்
அடக்கிய லந்தஞ் தொடுத்தன பல்கியும்
கலிவயிற் கடிந்த சீரிடை மிடைந்தும்
நாற்சீ ரிறந்த சீரோடு சிவணியும்
முச்சீ ரிருசீ ரம்போ தரங்கம்
அச்சீர் முடிவிடை யழிவில தழுவியுங்
கொச்சகக் கலியெனக் கூறவும் படுமே

(யா. வி. சூ. 86 உரைமேற்.)

என்றார் பிறரும்.

கூறிய வுறுப்பிற் குறைபா டின்றித்
தெளிய விரண்டுந் தேவ பாணியுந்
தரவே குறையினுந் தாழிசை ஒழியினும்
யிருவகை முத்திறத் தெண்ணே நீங்கினும்
ஒருபோ கென்ப வுணர்ந்திசி னோரே

என்றாராகலின்.*

தரவின் றாகித் தாழிசை பெற்றுத்
தாழிசை யின்றித் தரவுடைத் தாகியும்
எண்ணிடை யிட்டுச் சின்னங் குன்றியும்
அடக்கிய லின்றி யடிநிமிர்ந் தொழுகியும்

---

கூறிய உறுப்பிற்......... என்றாராகலின்* எனும் இப்பகுதி இச்சுவடிப் பிரதியில் மட்டும் காணப்படுகிறது.

யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது
கொச்சக வொருபோ காகு மென்ப
(தொல். பொருள். 461)

என்றார் தொல்காப்பியனார்.

இவற்றிற் கிலக்கியம் யாப்பருங்கல விருத்தியுட் கண்டு கொள்க. (12)

### 11. உரைச்சூத்திரக் காரிகை
### உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகை

உ.ஆ.11.குடநிலைத் தண்செல்வப் போர்க்கதக் கண்ணன் றரவுகுன்றா
வடிவுடை யாகுந் தரவிணை மன்னும் பஃஉத்தடக்கை
இடமிக வாஞ்சிஃ றாழிசை தண்மதி யேர்பலவாய்
மடலவிழ் கோதை மணிகிள ராகு மயங்கிசையே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே கொச்சகக் கலிப்பாக்கட்குக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க. (10)

### கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம்

33. அடிவரை யின்றி யளவொத்து மந்தடி நீண்டிசைப்பிற்
கடிதலில் லாக்கலித் தாழிசை யாகுந் கலித்துறையே
நெடிலடி நான்காய் நிகழ்வது நேரடி யீரிரண்டாய்
விடினது வாகும் விருத்தந் திருத்தகு மெல்லிலே

இக்காரிகை கலித்தாழிசையுங், கலித்துறையுங், கலி விருத்தமும் ஆமாறுணர்த்துதற்பாற்று.

'அடிவரை யின்றி அளவொத்தும் அந்தடி நீண்டு இசைப்பிற் கடிதலில்லாக் கலித்தாழிசை யாகும்' என்பது;

இரண்டடியானும் பலவடியானும் வந்தீற்றடி மிக்கு அல்லாத வடிகள் தம்முளளவொத்து வருமெனினது கலித்தாழிசை யெனப்படுமென்றவாறு.

அளவொத்து மென்ற வும்மையால் ஈற்றடி மிக்கேனையடி யொத்து மொவ்வாதும் வரப்பெறுமெனக் கொள்க.

'கடிதலில்லாக் கலித்தாழிசை' என்று சிறப்பித்த வதனால் ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வருவது சிறப்புடைத்துத் தனியே வரப்பெறுமாயினுமெனக் கொள்க.

வரலாறு:-

## கலித்தாழிசை

கொய்தினை காத்துங் குளவி யடுக்கத்தெம்
பொய்தற் சிறுகுடில் வாரல்நீ ஐய நலம்வேண்டின்

ஆய்தினை காத்துங் அருவி யடுக்கெத்தெம்
மாசில் சிறுகுடில் வாரல்நீ ஐய நலம்வேண்டின்

மென்தினை காத்து மிகுபூங் கமழ்சோலைக்
குன்றச் சிறுகுடில் வாரல்நீ ஐய நலம்வேண்டின்

*(யா. வி. சூ. 87 உரைமேற்.)*

இவை யிரண்டடியாய் ஈற்றடி மிக்கு ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வந்தமையால் கலித்தாழிசை.

வாள்வரி வேங்கை வழங்கும் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தில் எழால்வாழி வெண்டிங்காள்
கேள்வரும் போழ்தி னெழாலாய்க் குறாலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்

*(யா. வி. சூ.87 உரைமேற்.)*

இஃதீற்றடி மிக்கு ஏனையடி மூன்றுந் தம்முளவொத்து இடைமடக்காய்த் தனியே வந்த கலித்தாழிசை.

பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையான் ஆடுமே
நீண்ட சடையான் ஆடு மென்ப
மாண்ட சாயல் மலைமகள் காணவே காணவே.

(யா. வி. சூ. 87 உரைமேற்.)

இஃது ஈற்றடி மிக்கு இரண்டாமடி குறைந்து, முதலடியும் மூன்றாமடியும் ஒத்து வந்த கலித்தாழிசை.

என்னை,

அடியெனத் தாகியும் ஒத்துவந் தளவினிற்
கடையடி மிகுவது கலித்தா ழிசையே

(யாப்பருங்கலம்-87)

அந்தடி மிக்குப் பலசில வாயடி
தந்தமி லொன்றிய தாழிசை யாகும்.

(யா. வி. சூ. 87 உரைமேற்.)

என்றார் காக்கைபாடினியார்.

சீர் வரையறுத்திலாமையால் எனைத்துச் சீரானும் அடியானும் வரப்பெறுமெனக் கொள்க.

'கலித்துறையே, நெடிலடி நான்காய் நிகழ்வ'' என்பது ஐஞ்சீரடி நான்காய் ஒத்து வருவது கலித்துறை எனப்படு மென்றவாறு.

வரலாறு:-

யானுந் தோழியும் ஆயமும் ஆடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாம் கரியன்றே.

(யா. வி. சூ. 88 உரைமேற்.)

எனவும் கொள்க.

இவை நெடிலடி நான்காய் வந்த கலித்துறை. என்னை,.

**ஐஞ்சீர் முடியி னடித்தொகை நான்மையோ**
**டெஞ்சா மொழிந்தன வெல்லாங் கலித்துறை**

*(யா. வி. சூ. 88 உரைமேற்.)*

என்றார் காக்கைபாடினியார்.

**நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை**

*(யாப்பருங்கலம்-88)*

என்பதி யாப்பருங்கலம்.

'நேரடி ஈரிரண்டாய் விடினதுவாகும் விருத்தம்' என்பது நாற்சீரடி நான்காய் வருவது கலிவிருத்தமென்று வழங்கப்படு மென்றவாறு.

வரலாறு:-

### கலிவிருத்தம்

**வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலின்**
**ஆய்தலின் ஒண்சுடரா ழியா னான்தமர்**
**வாய்தலின் நின்றனர் வந்தென் மன்னர்முன்**
**நீதலை சென்றுரை நீள்கடை காப்போம்**

*(சூளாமணி)*

எனவும்,

**தேம்பழுத்தினிய ...........தவள மாடமே**

*(காரிகை-12 மேற்கோள்)*

என்றும் கொள்க.

இவை நாற்சீர் நாலடியாய் வந்தமையான் கலிவிருத்தம்.

என்னை,

**அளவடி நான்கின கலிவிருத் தம்மே**

*(யாப்பருங்கலம்-89)*

என்பதி யாப்பருங்கலம்.

**நாலொரு சீரால் நடந்த வடித்தொகை**
**ஈரிரண் டாகி யியன்றவை யாவும்**
**காரிகை சார்ந்த கலிவிருத் தம்மே**

*(யா. வி. சூ. 89 உரைமேற்.)*

என்பர் காக்கைபாடினியார்.

'திருத்தகு மெல்லியலே' யென்பது மகடூஉ முன்னிலை. **(13)**

## 12. உரைச் சூத்திரக் காரிகை
## உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகை

**உ.ஆ.12.கொய்தினை யாய்தினை மென்தினை வாள்வரி பூண்டபறை**
**எய்திய தாழிசை யானும்வென் றானுங் கலித்துறையே**
**மைதிக ழோதி வரிநெடுங் கண்ண வனமுலையாய்**
**மெய்தரு வேய்தலை தேம்பழுத் தென்ப விருத்தங்களே.**

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே கலிப்பா வினங்கட்குக் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க. (11)

**கலிப்பாவும் அதன் இனமும் முற்றும்.**

---

## 4. வஞ்சிப்பாவினமும் வஞ்சிப்பாவும்

(நால்வகைப் பாக்களுள் ஒன்றாகிய வஞ்சிப்பாவின் இலக்கணத்தைக் காரிகையாசிரியர் கூறுமிடத்து, முந்தைய பாக்களுக்கு இலக்கணம் - கூறிய முறைமையிலிருந்து மாறுபட்டு இவண் முதற்கண் இனங்களுக்கும் பின் பாவிற்கும் இலக்கணம் இயம்பியுள்ள பான்மையை உரைவழிக் காண்போம்.)

### வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம் வஞ்சிப்பா

34. குறளடி நான்கின மூன்றொரு தாழிசை கோதில்வஞ்சித்
துறையொரு வாது தனிவரு மாய்விடிற் சிந்தடிநான்
கறைதரு காலை யமுதே விருத்தந் தனிச்சொல்வந்து
மறைதலில் வாரத்தி னாலிறும் வஞ்சிவஞ் சிக்கொடியே

இக்காரிகை வஞ்சித்தாழிசையும், வஞ்சித்துறையும், வஞ்சி விருத்தமும் வஞ்சிப்பாவிற்கு ஈறாமாறும் உணர்த்துதல் நுதலிற்று.

'குறளடி நான்கின மூன்றொரு தாழிசை கோதில்' என்பது;

இருசீரடி நான்காய் மூன்று செய்யுட் கூட்டி ஒரு பொருண் மேல் மூன்று அடுக்கி வருவது வஞ்சித் தாழிசை எனப்படுமென்றவாறு.

வரலாறு:-

**வஞ்சித்தாழிசை**

இரும்பிடியை யிகல்வேழம்
பெருங்கையான் வெயின்மறைக்கும்
அருஞ்சுர மிறந்தார்க்கே
விரும்புமென் மனனேகாண்.

யாப்பரு. காரிகை-20

மடப்பிடியை மதவேழம்
தடக்கையான் வெயின்மறைக்கும்
இடைச்சுர மிறந்தார்க்கே
நடக்குமென் மனனேகாண்
பேடையை யிரும்போத்துத்
தோகையான் வெயின்மறைக்கும்
காடக மிறந்தார்க்கே
ஓடுமென் மனனேகாண்

*(யா. வி. சூ. 91 உரைமேற்.)*

இவை இருசீரடி நான்காய் ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வந்தமையால் வஞ்சித்தாழிசை.

'கோதில்' என்று மிகுத்துச் சொல்லியவதனால் அவையொரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவது சிறப்புடைத்து. [என்னை,

குறளடி நான்கின் கூடின வாயின்
முறைமையின் அவ்வகை மூன்றிணைந் தொன்றி
வருவன வஞ்சித் தாழிசை யாகும்.

*(யா. வி. சூ. 91 உரைமேற்.)*

என்றார் காக்கைபாடினியார்.]

'வஞ்சித் துறையொருவாது தனிவரு மாய்விடின்' என்பது, இருசீரடி நான்காய்த் தனியே வருவது வஞ்சித்துறை யெனப்படு மென்றவாறு.

வரலாறு:-

## வஞ்சித்துறை

மைசிறந்தன...........விரைக்கொண் மாலையாய்

*(காரிகை-13 மேற்கோள்)*

[இது குறளடி நான்காய் ஒருபொருள்மேல் தனியே வந்தமையான் வஞ்சித்துறை]

குறளடி நான்மையிற் கோவை மூன்றாய்
வருவன வஞ்சித் தாழிசை தனிவரின்
துறையென மொழிப துணிந்திசி னோரே.

(யாப்பருங்கலம்-91)

என்றாராகலின்,

ஒன்றினை நான்மை உடைத்தாய்க் குறளடி
வந்தன வஞ்சித் துறையென லாகும்

(யா. வி. சூ. 91 உரைமேற்.)

என்றார் காக்கைபாடினியார்.

'சிந்தடி நான்கறை தருகாலை விருத்தம்' என்பது மூச்சீரடி நான்காய் வருவது வஞ்சி விருத்தம் எனப்படுமென்றவாறு.

வரலாறு :

**வஞ்சி விருத்தம்**

சோலை யார்ந்த சுரத்திடைக்
காலை யார்கழ லார்ப்பவும்
மாலை மார்பன் வருமாயின்
நீல வுண்கணி வள்வாழுமே

எனவும்,

இருது வேற்றுமை .................. வேல்தடங் கையினாய்

(காரிகை-13 மேற்கோள்)

எனவுங் கொள்க. [இது சிந்தடி நான்காய் வந்தமையான் வஞ்சி விருத்தம்.]

சிந்தடி நான்காய் வருவது வஞ்சிய
தெஞ்சா விருத்த மென்மனார் புலவர்

(யாப்பருங்கலம்-92)

என்றாராகலின்,

'தனிச்சொல் வந்து மறைதலில் வாரத்தினாலிறும் வஞ்சி' என்பது; குறளடி வஞ்சிப்பாவும், சிந்தடி வஞ்சிப்பாவுந் தனிச் சொற்பெற்று ஆசிரியச் சுரிதகத்தாலிறும் என்றவாறு.

'மறைதலில் வாரம்' என்று சிறப்பித்த வதனால் வஞ்சிப்பா ஆசிரியச் சுரிதகத்தால் இறுவதல்லது வெள்ளைச் சுரிதகத்தால் இறப்பெறாது எனக்கொள்க.

வரலாறு:

**குறளடி வஞ்சிப்பா**

**பூந்தாமரை............... பெருவண் மையானே**

*(காரிகை-9 மேற்கோள்)*

என்னும் குறளடி வஞ்சிப்பா 'நாளும்' என்னுந் தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தாலிற்றதெனக் கொள்க.

**சிந்தடி வஞ்சிப்பா**

**கொடியவாலன குருநிறத்தன குறுந்தாளன**
**வடிவாளெயிற் றழலுளையின வள்ளுகிரன**
**பணையெருத்தின் இணையரிமா னணையேறித்**
**துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனாகி**
**எயினடுவ ணினிதிருந் தெல்லோர்க்கும்**
**பயில்படுவினை பத்தியலாற் செப்பினோன்**
**புணையெனத்**
**திருவுறு திருந்தடி திசைதொழ**
**வெருவுறு நாற்கதி வீடுநனி யெளிதே**

இச்சிந்தடி வஞ்சிப்பா 'புணையென' என்னுந் தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தாலிற்றது.

**தொன்னலத்தின்......... சேணிவந் தற்றே**

*(காரிகை-13 மேற்கோள்)*

எனும் இச்சிந்தடி வஞ்சிப்பா 'எனப்பெரிதும்' என்னும் தனிச்சொற்பெற்று ஆசிரியச் சுரிதகத்தாலிற்றதெனக் கொள்க.

[என்னை,

தூங்கல் இசையன வஞ்சி மற்றவை
ஆய்ந்த தனிச்சொலோ டகவலின் இறுமே
(யாப்பருங்கலம்-90)

என்பதி யாப்பருங்கலம்.]

'அமுதே' என்பதும் 'வஞ்சிக்கொடியே' என்பதம் மகடூஉ முன்னிலை. (14)

## 13. உரைச்சூத்திரக் காரிகை

### உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகை

உ.ஆ.13.மடப்பிடி பேடை யிரும்பிடி வஞ்சியின் தாழிசையாம்
வடுப்புரை கண்ணினல் லாய்மை சிறந்தன வான்றுறையாந்
தடப்பெருஞ் சோலை விருத்தம தாகுந் தயங்கு வஞ்சிக்
கொடித்தொடி பூந்தா மரைகொடி வால னுதாரணமே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே வினங்கட்கும் வஞ்சிப்பாவிற்கும் காட்டிய இலக்கியங்களை முதனினைத்துக் கொள்க. (12)

வஞ்சிப்பாவின் இனமும் வஞ்சிப்பாவும் முற்றும்.

## 5. மருட்பா

(மருட்பா என்பது வெண்பா, ஆசிரியப்பா எனும் இரு பாக்களின் மயக்கத்தாகையால் காரணப்பெயர்த்தாயிற்று. இத்தகு இயல்பினை யுடைய மருட்பாவிற்குக் காரிகை ஆசிரியர் முதற்கண் முற்றும் முழுதுமாக மாறுபட்டு, எவ்வெவ்பாடுபொருளில் இம்மருட்பாவினைப் பாட வேண்டுமென வரையறுத்துப் பின்பு இலக்கணம் கூறியுள்ளதைச் சான்றுகள் வழிக் காண்போம்.)

35. **பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்**
**தொண்பாச் செவியறி வென்றிப் பொருண்மிசை யூனமில்லா**
**வெண்பா முதல்வந் தகவல்பின் னாக விளையுமென்றால்**
**வண்பான் மொழிமட வாய்மருட் பாவெனும் வையகமே.**

இக்காரிகைப் புறநிலை வாழ்த்து மருட்பாவும், கைக்கிளை வாழ்த்து மருட்பாவும் வாயுறை வாழ்த்து மருட்பாவும் செவியறிவுறூஉ மருட்பாவும் ஆமாறுணர்த்து தற்பாற்று.

இதன் பொழிப்பு: புறநிலை வாழ்த்தும், கைக்கிளையும், வாயுறை வாழ்த்தும், செவியறிவுறூஉ என்னும் நான்கு பொருள் மேலும் வெண்பா முதலாயாசிரியமீறாய் வருமெனினது மருட்பா வென்று வழங்கப்படுமென்றவாறு.

'வண்பான் மொழி மடவாய்' என்பது மகடூஉ முன்னிலை.

**வெள்ளை முதலா வாசிரிய மிறுதி**
**கொள்ளத் தொடுப்பது மருட்பா வாகும்**

**கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ**

என்றார் காக்கைபாடினியார்.

வரலாறு:-

## புறநிலை வாழ்த்து மருட்பா

தென்ற லிடைபோழ்ந்து தேனார் நறுமுல்லை
முன்றில் முகைவிரியு முத்தநீர்த் தண்கோளூர்க்
குன்றமர்ந்த கொல்லேற்றான் நிற்காப்ப - என்றுந்
தீரா நண்பின் தேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே

(தொல். செய்யுள்.110 உரைமேற்.)

இது வழிபடு தெய்வ நிற்புறங்காப்பப் பழிதீர் செல்வமொடு ஒரு காலைக்கொருகாற் சிறந்து பொலிக என்றமையாற் புறநிலை வாழ்த்து மருட்பா.

வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமி னென்னும் புறநிலை
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ

(தொல்-பொருள்.422)

என்றார் தொல்காப்பியனார்.

## கைக்கிளை மருட்பா

திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயும் - அரிபரந்த
போகிதழ்[1] உண்கணும் இமைக்கும்
ஆகு மற்றிவள் அகலிடத் தணங்கே

(புறப்பொருள் வெண்பாமாலை. கைக்கிளை-3)

இது துணிதலை நுதலிய ஒருதலைக் காமமாதலிற் கைக்கிளை மருட்பா.

---

1. சேயிதழ்.

[என்னை,

காட்சி முதலாக் கலவியி னொருதலை
வேட்கையிற் புலம்புதல் கைக்கிளை; யதுதான்
கேட்போ ரில்லாக் கிளவிகள் பெறுமே

*(களவியல். காரிகை. 24)*

என்றாராகலின்]

## வாயுறை வாழ்த்து மருட்பா

பலமுறையும் ஓம்பப் படுவன கேண்மின்
சொலல்முறைக்கண் தோன்றிச் சுடர்மணித்தேர் ஊர்ந்து
நிலமுறையின் ஆண்ட நிகரிலார் மாட்டுஞ்
சிலமுறை யல்லது செல்வங்கள் நில்லா
இலங்கும் எறிபடையும் ஆற்றலும் அன்பும்
கலந்ததம் கல்வியும் தோற்றமும் ஏனைப்
பொலன்செய் புனைகலனோ டிவ்வாற னாலும்
விலங்கிவரும் கூற்றை விலக்கலும் ஆகா
தனைத்தாதல் நீயிருங் காண்டிர் - நினைத்தக்க
கூறிய வெம்மொழி பிழையாது
தேறிநீ ரொழுகின் சென்றுபயன் தருமே.

*(யா. வி. சூ. 55 உரைமேற்.)*

இது மெய்ப்பொருளே சொன்னமையால் வாயுறை வாழ்த்து மருட்பா. என்னை,

வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்புங் கடுவும் போல[1] வெஞ்சொல்
தாங்குத லின்றி வழிநனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே

*(தொல். பொருள். 424)*

என்றார் தொல்காப்பியனார்.

1. கரும்பும் போல்வன.

## செவியறிவுறூஉ மருட்பா

பல்யானை மன்னர் முருங்க அமருழந்து
கொல்யானைத் தேரொடுங் கோட்டத்து - நல்ல
தலையாலங் கானம் பொலியத் -தொலையாப்
படுகளம் பாடுக் காற்றிப் பகைஞர்
அடுகளம் வேட்டோன் மருக - அடுதிறல்
ஆளி[1] நிமிர்தோட் பெருவழுதி யெஞ்ஞான்றும்
ஈர முடையையாய் என்வாய்ச்சொற் கேட்டி
அரிய உழவரை நெஞ்சனுங்கக் கொண்டு
வருகா லுழவர்க்கு வேளாண்மை செய்யல்
மழவ ரிழைக்கும் வரைக்கா னிதியீட்டங்
காட்டும் அமைச்சரை யாற்றத் தெளியல்
அடைத்த[2] அரும்பொரு ளாறன்றி வெளவல்
இனத்தைப் பெரும்பொரு ளாசையாற் சென்று
பெருங்குழி மன்ற மறுக அகழாதி - என்றும்
மறப்புற மாக மதுரையா ரோம்பும்
அறப்புற மாசைப் பாடேற்க - அறத்தால்
அவையார் கொடுநாத் திருத்தி - நவையாக
நட்டார் குழிசி சிதையாதி - ஒட்டார்
செவிபுதைக்குந் தீய கடுஞ்சொற் - கவிபடைத்தாய்
கற்றார்க் கினனாகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்
செற்றார்ச் செலுத்துநிற் சேர்ந்தாரை ஆக்குதி
அற்றம் அறிந்த அறிவினாய் - மற்றும்
இவையிவை வீயா தொழுகின் நிலையாப்
பொருகட லாடை நிலமகள்
ஒருகுடை நீழல் துஞ்சுவள் மன்னே

*(யா. வி. சூ. 55 உரைமேற்.)*

இது வியப்பின்றி உயர்ந்தோர்கண் அவிந்தொழுகுதல் கடனென அரசர்க்குரைத்தமையாற் செவியறிவுறூஉ மருட்பா.

---

1. ஆழி. 2. படைத்த

என்னை,

**செவியுறை தானே**
**பொங்குத லின்றிப் புரையோர் நாப்பண்**
**அவிதல் கடனெனச் செவியுறுத் தற்றே**

*(தொல். பொருள். 426)*

'என்றிப் பொருள்மிசை' என்று மிகுத்துச் சொல்லிய வதனால் இந்நான்கு பொருண் மேலுமன்றி மருட்பா வரப்பெறாதெனக் கொள்க.

**புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்**
**திறநிலை மூன்றுந் திண்ணிதின் தெரியின்**
**வெண்பா வியலினும் ஆசிரிய வியலினும்**
**பண்புற முடியும் பாவின வென்ப**

*(தொல். பொருள். 473)*

என்றார் தொல்காப்பியர்.

**கைக்கிளை தானே வெண்பா வாகி**
**யாசிரிய வியலான் முடியவும் பெறுமே**

*(தொல். பொருள். 431)*

என்றார் தொல்காப்பியனாராகலின்.

'பண்பார் புறநிலை' என்றும் 'ஒண்பாச் செவியறிவு' என்றுஞ் சிறப்பித்த வதனால் புறநிலை வாழ்த்தும் வாயுறை வாழ்த்தும், செவியறிவுறூஉவும் இவ்வாறின்றி வெண்பாவே யாவும், ஆசிரியமேயாயும் வரப்பெறும். கலியும் வஞ்சியுமாய் வரப்பெறா எனக்கொள்க. என்னை,

**கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ**

**வாயுறை வாழ்த்தே அவையடக் கியலே**
**செவியறி வுறூஉவென இவையு மன்ன**

*(தொல். பொருள். 422, 423)*

என்றாராகலின்.

'பாங்குடைக் கைக்கிளை' என்று சிறப்பித்த வதனால் கைக்கிளை எல்லாப்பாவானும் வரப்பெறும். மருட்பா வேயாய் வருகவென்னும் யாப்புறவில்லை என்றும், கைக்கிளை வெண்பா முதலாக ஆசிரியம் ஈறாக வரும்வழி ஆசிரியவடி இரண்டேயாய் அவற்றுள் ஈற்றயலடி மூச்சீராய் வரும் என்றும், வெண்பாவடியும், ஆசிரியவடியும் ஒத்து வருவன சமநிலை மருட்பா என்றும் ஒவ்வாதன வியனிலை மருட்பா என்றும் வழங்கப்படும் என்றுங் கொள்க.

'ஊனமில்லா வெண்பா' என்று சிறப்பித்து வேற்றுவண்ணம் விரவாது வெள்ளை வண்ணம் எல்லா வண்ணத்துள்ளுஞ் சிறப்புடைத்தாய் மங்கல மரபிற்றாம்; அவ்வாறே வேற்றுத் தளையும் அடியும் சீரும் விரவாமையால் எல்லா பாவினுள்ளும் வெண்பா சிறப்புடைத்தென்று முன் வைக்கப்பட்டதென்பது அறிவித்தற்கு எனக்கொள்க.

## வெண்பா

[நாற்சீரடியால் நடைபெறுதலும், வேற்றுப்பாவினால் இறாமையும், எல்லாப் பொருள் மேலும் சொல்லப்படுதலும் என்றிவற்றால் ஆசிரியத்தோடு ஒத்தலும், உயர்ந்த ஓசைத் தாகலும் உத்தம சாதி ஆகலும், வேற்றுத்தளையும், வேற்றடியும், வேற்றுப்பாவும் விரவாமையும் என்னும் அதிக குணமுடைமையும் நோக்கி வெண்பா ஆசிரியத்தின் முன் வைக்கப்பட்டது.

## ஆசிரியப்பா

அளவடியால் நடைபெறுதலும், தனது நடையால் தானினிதிறுதலும், எல்லாப் பொருள்களையுந் தன் கண்ணே அடக்குதலும், ஒருவாத பொருளிற்றாதலும் என்னும் ஒருபுடையால் வெண்பாவோடொத்தலும் அகவியவோசைத் தாகலும், அரசர் குலத்தினதாகலும், வேற்றுத்தளையும் அடியும் விரவி வருதலும் என்னும் வேறுபாடுடைமையும் நோக்கி வெண்பாவின் பின் ஆசிரியப்பா வைக்கபட்டது.

## கலிப்பா

நேரடியாய் நிலைபெறுதலும், அயலடியும் அயற்றளையும் விரவி வருதலும், ஆசிரியத்தோடு ஒத்தலும், அயற்பாவினா லிறுதலும், புறநிலை வாழ்த்து முதலிய பொருள்கண்மேற் புகாமையும், வணிக குலத்தினதாகலும், துள்ளலோசைத்தாகலும் நோக்கி ஆசிரியத்தின் பின் கலிப்பா வைக்கப்பட்டது.

## வஞ்சிப்பா

புறநிலை வாழ்த்து முதலிய பொருள்கள் மேற்புகாமையும், அயற்றளையும், அயலடியும் விரவி வருதலும், அயற்பாவினா லிறுதலும், என்றிவற்றாற் கலிப்பாவினோடொத்தலும் நாற்சீரடியால் நடவாமையும், தாழ்ந்த குலத்தினதாகலும், தூங்க லோசைத்தாகலும் அகப்பொருள்கள்மேல் அருகியன்றி வாராமையும் நோக்கிக் கலிப்பாவின் பின் வஞ்சிப்பா வைக்கப்பட்டது. இது நிறுத்தமுறைமை.

வெண்பா முதலாக நால்வகைப் பாவும்
எஞ்சா நாற்பால் வருணக் குரிய

பாவினத் தியற்கையு மதனோ ரற்றே
என்றார் வாய்ப்பியம் உடையார்.

வேதவாய் மேன்மகனும் வேந்தன் மடமகளும்
நீதியாற் சேர்ந்து நிகழ்ந்த நெடுங்குலம்போல்
ஆதிசால் பாவு மரசர் வியன்பாவும்
ஓதியவா றொன்ற மருட்பாவா யொங்கிற்றே

பண்ணுந் திறமும்போற் பாவு மினமுமாய்
வண்ண விகற்ப வகைமையால் – பண்மேல்
திறம்விளரிக் கில்லதுபோற் செப்ப லகவல்
இசைமருட்கும் இல்லை இனம் ]

(யா. வி. சூ. 55. 56 உரைமேற்கோள்கள்)

இவற்றை விரித்துரைத்துக் கொள்க. (15)

## 14. உரைச்சூத்திரக் காரிகை
## உதாரண இலக்கிய முதனினைப்புக் காரிகை

உ.ஆ.14.தென்ற லிடையுந் திருநுதல் வேர்வரும் பல்முறையென்
றொன்றிய பாவும்பல் யானையும் என்பவொண் போதமைந்த
பொன்றிக ழோதி புறநிலை கைக்கிளை வாயுறைவாழ்த்
தென்றிவற் றிற்கும் செவியறி விற்கும் இலக்கியமே.

இவ்வுரைச் சூத்திரக் காரிகையின் வழியே மருட்பா நான்கிற்கும் காட்டிய இலக்கியங்களை முதல் நினைத்துக் கொள்க. (13)

## 15. செய்யுளியல் முதனினைப்புக் காரிகை

உ.ஆ.15.வெண்பா வளம்பட ஈரடி யொன்றுடன் நேரிசையும்
கண்பானல் போன்மயி லந்தமின் மூன்றுங் கடைதருக்கி
நண்பார் தரவொன் றசைதர வேயடி யோடுகுறள்
பண்பார் புறநிலை செய்யு ளியலென்ப பாவலரே.

(14)

செய்யுளியல் முற்றும்.

-----

## ஒழிபியல்

(உறுப்பியல், செய்யுளியல் என்னும் இவ்விரு வியல்களில் கூறப்படாமல் எஞ்சி நின்ற செய்திகளையும், விகாரம் முதலான யாப்புறுப்புகளையும் விளக்கு கின்றதாதலால், இவ்வியல் ஒழிபியல் என்னும் காரணப்பெயர்த்தாயிற்று. மேற்குறித்த செய்திகளை ஒன்பது காரிகைகள் வாயிலாக விளக்க இவ்வியல் முற்படுகிறது.

இக்காரிகைகளுள் நேரசை, நிரையசையைக் கொண்டு தொடங்கும் காரிகைகள் முறையே மூன்றும் ஆறுமாக இடம் பெற்றுள்ளன. இவற்றுள் நேரசை காரிகைகளின் எழுத்து எண்ணிக்கை நூற்றுத் தொண்ணூற்றிரண்டு. நிரையசை காரிகைகளின் எழுத்தெண்ணிக்கை நானூற்றெட்டு. இவ்விரு திறமுங் கூட்ட அறுநூறு எழுத்தாம். இவற்றின் மொத்த கிரந்தம் பதினெட்டுக் கிரந்தமும், இருபத்து நான்கு எழுத்தாம்.

இவ்வியலின் இறுதியில் உரையாசிரியர் குணசாகரரால் இயற்றப்பட்ட ஒழிபியல் செய்யுட்களின் முதனினைப்புக் காரிகை ஒன்றும் இடம்பெற்றுள்ளது.

இவ்வகையில் இதுகாறும் இயல்வாரியாகப் பகுத்துக் காணப்பட்ட கிரந்த எண்ணிக்கைகளின் பட்டியல் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.)

### எழுத்துக்கள் அலகுபெறாதன, பெறுவன

(இவ்வியலின் முதற்கண் உறுப்பியலில் கூறப்படாத அசைக் குறுப்பாகும் எழுத்துக்கள் சிலவற்றிற்குரிய ஒழிபிலக்கணத்தைக் கூறும் இரண்டு காரிகைகளின் கருத்துக்களை இனி உரையாசிரியர் வழிநின்று காண்போம்.)

36. சீருந் தளையுஞ் சிதையிற் சிறிய இஉஅளபோ
டாரு மறிவ ரலகு பெறாமைஐ காரநைவேல்
ஓருங் குறிலிய லொற்றள பாய்விடி னோரலகாம்
வாரும் வடமுந் திகழு முகிழ்முலை வாணுதலே.

இவ்வோத்தென்ன பெயர்த்தோவெனின் உறுப்பிய லோத்தினுள்ளுஞ் செய்யுளியலோத்தினுள்ளுஞ் சொல்லா தொழிந்த பொருள்களது இயல்புணர்த்திற்று ஆதலால் ஒழிபியலோத்து என்னும் பெயர்த்து.

இவ்வோத்தினுளிக் காரிகை யென்னுதலிற்றோ வெனின் ஒரு சாரெழுத்துக்கட் கெய்தியதோர் இலக்கண முணர்த்தற்பாற்று.

'சீருஞ் தளையுஞ் சிதையிற் சிறிய இஉஅளபோ டாருமறிவ ரலகு பெறாமை' என்பது;

சீருந் தளையுங் கெடவந்த விடத்துக் குற்றியலிகரமும், குற்றியலுகரமும், உயிரளபெடையும் அலகு காரியம்பெறா என்றவாறு.

'ஒற்றளபாய் விடினோ ரலகாம்' என்றுரைத்தமையால் ஈண்டு உயிரளபெடையே கொள்ளப்பட்டது.

'ஆருமறிவர்' என்று மிகுத்துச் சொல்லிய வதனால் குற்றியலிகரமும், குற்றியலுகரமும் ஒற்றியல்பினவாய் நிற்கும். உயிரளபெடைகள் நெட்டெழுத்தியல்பினவாய் நிற்கும் அலகிடும் இடத்தெனக்கொள்க.

எனவே; எதிரது மறுத்தலென்னும் இலக்கணத்தாற் சீருந் தளையுந் திருந்த நிற்புழிச் 'சிறிய இஉஅளபோ டாரு மறிவரலகு பெறுதல்' என்றதன் கருத்துச் சீருந் தளையுங் கெடாமை வந்தவிடத்துக் குற்றியலிகரமுங் குற்றியலுகரமு முயிரளபெடையும் அலகுபெறுமென்றவாறு.

ஈண்டு 'ஆருமறிவர்' என்னும் விதப்பினால் அவை அலகு பெறும்பொழுது குற்றிகரக் குற்றுகரங்கள் குற்றெழுத்தின் பயத்தவாம். உயிரளபெடை அலகு காரியம் பெறுமாறு தத்தங் காரிகையுட் போக்கிச் சொல்லுதும்.

அவற்றுக்குச் செய்யுளீண்டு வருமாறு.

### நேரிசை வெண்பா

**சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்கால் நாளைப்**
**பெறுநன்றி பின்னும் பெரிதென் – றுறுநன்றி**
**தானவாய்ச் செய்வதூஉம் தானமன் றென்பவே**
**வானவா முள்ளத் தவர்** *(யா. வி. சூ. 4 உரைமேற்.)*

இதனுள், 'இன்றிவர்க்கியாம்' என்புழிக் குற்றிய லிகரம் வந்து வெண்பாவினுள் வஞ்சியுரிச்சீர் ஆயிற்று. வெண்பாவினுள் வஞ்சியுரிச்சீர் விரவும் என்னும் ஒத்தி லாமையால் வெண்பா அழிய நிற்கும் ஆதலால், ஈண்டுக் குற்றியலுகரத்தை இவ்விலக்கணத்தால் அலகு பெறாதென்று களையச் சீர் சிதையாதாம்.

### குறள் வெண்பா

குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர் *(குறள்:66)*

### குறள் வெண்பா

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல் *(குறள்: 254)*

இவற்றுள் 'குழலினி தியாழினிது என்புழி' ஆசிரியத் தளையும், 'அருளல்ல' தியாதெனின் என்புழிக் கலித்தளையுந் தட்டு, வெள்ளைத்தன்மை குன்றிப்போஞ் 'சீர்கனி புகிற்புல்லா அயற்றளை' என்னும் இலக்கணத்தால்

வெள்ளையுட் பிறதளை வாரா. அல்லனவற்றுள் எல்லாத்தளையும் மயங்கியும் வழங்கும் என்னும் இலக்கணத்தோடும் மயங்கும் ஆதலால் ஈண்டுக் குற்றிய லிகரத்தை இவ்விலக்கணத்தால் அலகுபெறாதென்று களையச் சீரும் தளையுஞ் சிதையாவாம்.

இனிக் குற்றியலுகரத்திற்குச் சொல்லுமாறு.

**வஞ்சிப்பா**

கொன்றுகோடுநீடு குருதிபாயவும்
சென்றுகோடுநீடு[1] செழுமலைபொருவன
வென்றுகோடுநீடு விறல்வேழம்
என்றுமூடுநீடு பிடியுளபோலும்

அதனால்

இரண்டிடை யிரவிவண் நசைஇவரின்
வண்டுண் கோதை உயிர்வா ழாளே

இவ்விரு சீரடி வஞ்சிப்பாவினுட் குற்றுகரம் பல வந்து ஆறசைச் சீராயின. இவ்வாறு வருக என்னும் ஒத்தில்லாமையிற் குற்றுகரத்தை இவ்விலக்கணத்தால் அலகு பெறாதென்று களையச் சீருந்தளையுஞ் சிதையாவாம்.

இனி உயிரளபெடைக்குச் சொல்லுமாறு .

**நேரிசை வெண்பா**

பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்
சொல்லுக்குந் தோற்றின்னந் தோற்றினவால் - நெல்லுக்கு
நூறோஒநூ றென்பான் நுடங்கிடைக்கும் வெம்முலைக்கும்
மாறோமா லன்றளந்த மண்.

(*யா. வி. சூ. 4 உரைமேற்கோள்கள்*)

1. சென்று சென்றுநீடு

இதனுள் 'நூறோஒநூ' றென்புழிப் பண்டமாற்றின் கண் அளபெடை அநுகரணம் வந்து வெண்பாவினுள் நாலசைச் சீராயிற்று. அவ்வாறு வருகவென்னும் ஒத்திலாமையால் இவ்வாறலகிட்டு உதாரண வாய்பாட்டால் ஓசையூட்டும்பொழுது ஓசையுண்ணாது செப்பலோசை பிழைத்து நிற்குமாதலால் ஈண்டு உயிரளபெடையை இவ்விலக்கணத்தால் அலகு பெறாதென்று நெட்டெழுத்தே போலக் கொண்டலகிடச் சீருந் சிதையாவாம்.

### நேரிசை வெண்பா

இடைநுடங்க ஈர்ங்கோதை பின்தாழ வாட்கண்
புடைபெயரப் போழ்வாய் திறந்து - கடைகடையின்
உப்போஒ வெனவுரைத்து மீள்வாள் ஒளிமுறுவற்
கொப்போநீர் வேலி உலகு

இதனுள் 'உப்போஒ' என்புழிப் பண்டமாற்றின்கண் அளபெடை யனுகரணம் வந்து கலித்தளை தட்டு வெண்பா அழிய நிற்குமாதலின் ஈண்டு உயிரளபெடையை இவ்விலக் கணத்தால் அலகு பெறாதென்று நெட்டெழுத்தே போலக் கொண்டு அலகிடத்தளை சிதையாவாம்.

இனிக் குற்றியலிகரக்குகரங்கள் குற்றெழுத்தே போல நின்று அலகுபெறுமாறு.

### நேரிசை வெண்பா

வந்துநீ சேரின்[1] உயிர்வாழும் வாராக்கால்
முந்தியாய் பெய்த வளைகழலும் - முந்தியாங்
கோளானே கண்டனங் கோல்குறியாய் இன்னுமோர்
நாளானே நரம்புணரு மாறு

(யா. வி. சூ. 4 உரைமேற்கோள்கள்)

இதனுள் 'வந்துநீ ' என்புழிக் குற்றியலுகரமும் 'முந்தியாய்' என்புழிக் குற்றியலிகரமும் வந்து சீருந்தளையுந்

1. பேரின்

திருந்தி நிற்புழிக் குற்றெழுத்தின் பயத்தவாய் அலகு பெற்றவாறு கண்டுகொள்க. என்னை,

இஉ இரண்டன் குறுக்கம் தளைதப
நிற்புழி ஒற்றாம் நிலைமைய ஆகும்
உயிரள பேழும் உரைத்த முறையான்
வருமெனின் அவ்வியல் வைக்கப் படுமே

*(யா. வி. சூ. 42 உரைமேற்கோள்கள்)*

என்றார் காக்கைபாடினியார்.

தளைசீர் வண்ணந் தாங்கெட வரினே
குறுகிய இகரமும் குற்றிய லுகரமும்
அளபெடை ஆவியும் அலகியல் பிலவே

*(யாப்பருங்கலம்-4)*

என்பதி யாப்பருங்கலம்.

'ஐகார நைவே லோருங் குறியியல்' என்பது; ஒன்றரை மாத்திரை என்றோதப்பட்ட ஐகாரக் குறுக்கம் குற்றெழுத்தே போலக் கொண்டு அலகிடப்பெறும் என்றவாறு.

'ஒரும்' என்பதிடைச்சொல்.

குறுமை யெழுத்தின் இயல்பே ஐகார
நெடுமையின் நீங்கியக் கால்

*(யா. வி. சூ.9 உரைமேற்.)*

என்றாருமுளரெனக் கொள்க.

[ஈறும் இடையும் இணைந்தும் இணையிசை
யாகும்ஐ என்ப அறிந்திசி னோரே]

*(யாப்பருங்கலம்-9)*

**குறள் வெண்பா**

அன்னையையான் நோவ தவமா லணியிழாய்
புன்னையையான் நோவன் புலந்து.

*(யா. வி. சூ. 9 உரைமேற்.)*

### நேரிசை வெண்பா

நடைக்குதிரை யேறி நறுந்தார் வழுதி
அடைப்பையாய் கோல்தா வெனலும் - அடைப்பையான்
சுள்ளற் சிறுகோல் கொடுத்தான் தலைப்பெறினும்
எள்ளா தியாங்கண் டிலை

(யா. வி. சூ.9 உரைமேற்.)

எனவும்,

### குறள் வெண்பா

கெண்டையை வென்ற கிளரொளி உண்கண்ணாள்
பண்டையை எல்லள் படி

(யா. வி. சூ.9 உரைமேற்.)

எனவும்,

ஐகாரக் குறுக்கம் குற்றெழுத்தேபோலக் குறிலோடும் நெடிலோடும் கூடிநின்று நிரையசையாயினவாறும், தனியே நின்று நேரசையாயினவாறும் கண்டுகொள்க.

'ஒற்றளவாய் விடினேரலகாம்' என்பது ஒற்றுக்கள் அளபெழுந்தவிடத்து நேரசையாம்; என்றவாறு.

என்னை;

ஆய்தமும் ஒற்றும் அளபெழ நிற்றுழி
வேறல கெய்தும் விதியின வாகும்

(யா. வி. சூ. 3 உரைமேற்.)

என்றார் காக்கைபாடினியார்.

அளபெழாத விடத்து ஒற்றுக்கள் அலகுபெறா வென்பதாம். கார்க்கடல் கார்ச்சேதம், கதிர்ச்செந்நெல், கடாய்க்கன்று என ஈரொற்றுடனிலையாய் நிற்பினுங் குற்றெழுத்தின் பயத்தவாய் அலகுபெறா என்பதூஉம், ஒற்றளபெனினும் மற்றோரெழுத்தி னோடுங்கூடி நிரையசை ஆகாதென்பதூஉம் பெறப்பட்ட தாயிற்று.

தனிநிலை ஒற்றிவை தாமல கியலா
அளபெடை யல்லாக் காலை யான

(யாப்பருங்கலம்-3)

எனவும்,

ஈரொற் றாயினு மூவொற் றாயினும்
ஓரொற் றியல என்மனார் புலவர்

(யா. வி. சூ.3 உரைமேற்.)

எனவுங்கொள்க.

கண்ண் டண்ண்ணெனக் கண்டும் கேட்டும்

இன்னிசை வெண்பா

கண்ண் கருவிளை கருமுல்லை கூரெயிறு
பொன்ன் பொறிசுணங்கு போழ்வாய் இலவம்பூ
மின்ன் நுழைமருங்கின் மேதகு சாயலாள்
என்ன் பிறமகளா மாறு[1].

எனவும்,

எஃஃகி லங்கிய கையராய் இன்னுயிர்
வெஃஃகு வார்க்கில்லை வீடு

எனவும்,

இவற்றுள் ஒற்றும் ஆய்தமும் அளபெழுந்து ஓரலகு பெற்றவாறு கண்டுகொள்க.

ஙஞண நமன வயலள வாய்த
ஈரிடத் தளபெழும் ஓரோவழி யான

(யா. வி. சூ.3 உரைமேற்கோள்கள்)

என்றாராகலின்.

'வாரும் வடமும் திகழு முகிழ்முலை வாணுதலே'
என்பது மகடூஉ முன்னிலை. (1)

1. குறமகளாமாறு

## அசைக்குப் புறனடை

37. விட்டிசைத் தல்லான் முதற்கட் டனிக்குறி னேரசையென்
றொட்டப் படாததற் குண்ணா னுதாரண மோசைகுன்றா
நெட்டள பாய்விடின் நேர்நேர் நிரையொடு நேரசையாம்
இட்டத்தி னாற்குறில் சேரி னிலக்கிய மேர்சிதைவே

இக்காரிகை ஒருசார் அசைகட் கெய்தியதோர் இலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

'விட்டிசைத்தல்லால் முதற்கண் தனிக் குறினேரசை யென்றெட்டப் படாது' என்பது

மேற்பொதுவகையால் தனிக்குறில் நேரசை என்றாராயினும், விட்டிசைத்து நின்றவழி யல்லது மொழி முதற்கணின்ற தனிக் குற்றெழுத்து நேரசையா மென்றுடம்படப் பெறாது என்றவாறு.

எனவே, விட்டிசையாதவழி மொழிமுதற்கண் தனிக்குறில் குறிலொடும், நெடிலொடுங் கூடி நிரையசையாம் என்பதாயிற்று.

'அதற்குண்ணான் உதாரணம்' என்பது;

### நேரிசை வெண்பா

உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான் - கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும் (நாலடியார்:9)

இதனுள் அஆ என்புழி அருளின்கண் குறிப்பாய் விட்டிசைத்து வந்த குற்றெழுத்து மொழிமுதற்கண் நேரசையாயினவாறு கண்டு கொள்க. அல்லாதவழிக் குறிலொடும், நெடிலொடுங் கூடி நிரையசையாயினவாறு கண்டுகொள்க.

### நேரிசை வெண்பா

வெறிகமழ் தண்சிலம்பின்[1] வீங்கி யுகளும்
மறிமுலை யுண்ணாமை வேண்டிப் – பறிமுன்கை
அஉ அறியா வறிவில் இடைமகனே
நொஅலையல் நின்னாட்டை நீ

எனவும்,

### குறள் வெண்பா

அஅவனும் இஇவனும் உஉவனுங் கூடியக்கால்
எ எவனை வெல்லா ரிகல்

(யா. வி. சூ.7உரைமேற்கோள்கள்)

எனவும்,

இவற்றின்கண் தனிக்குறில் முதற்கண் விட்டிசைத்து நேரசையாயினவாறு கண்டுகொள்க. இவ்விட்டிசைத்து அல்லான் முதற்கண் தனிக்குறில் நேரசை யாகாதென்னாது 'ஒட்டப்படாது' என்று மிகுத்துச் சொல்லிய வதனால் மொழிக்கு மூன்றிடத்தும் விட்டிசைத்து வந்து குற்றெழுத்து நேரசையா மென்பதூஉம் விட்டிசைத்து வருவது குறிப்பு, ஏவல், தற்சுட்டு, வினா, சுட்டு என்னும் ஐந்தன் கண்ணும் என்பதூஉம், குற்றெழுத்து விட்டிசைத்து நின்றவிடத்து மற்றொன்றினோடு கூடி நிரையசை யாகாதென்பதூஉம் பெறப்பட்டன.

இவற்றுள் 'அஉ அறியா' என்பது தற்சுட்டுக் குறிப்புச்சொல். 'நொ' என்பது செயவென் எச்சத்திறுதி தொக்கு முதனிலை குறுகிய ஏவற் குறிப்புச்சொல். அ அவனும் இ இவனும் உ உவனும் என்பது சுட்டு எ எவனும் என்பது வினா. இவ்வைந்து மொழி முதற்கண் விட்டிசைத்து வந்ததனுள் நொஅலையல் என்புழி நவ்வருக்கத்துள் தனிக்குறில் விட்டிசைத்து முதன்மொழிக் கண்ணே நேரசையாயின.

---

1. தன்புறவின்.

அ இ
உ எ ஒ இவை குறிய மற்றைய
ஏழ்நெட் டெழுத்தாய் நேரப் படுமே
(யா. வி. சூ.2 உரைமேற்.)

என்றார் அவிநயனார்.

இதனுள் மொழிக்கு மூன்றிடத்தும் விட்டிசைத்து வந்த குற்றெழுத்து நேரசையாயினவாறு கண்டுகொள்க.

ஏவற் குறிப்பே தற்சுட் டல்வழி
யாவையுந் தனிக்குறின் நேரசை[1] யாகா
சுட்டினும் வினாவினும் உயிர்வரு காலை
ஒட்டி வருஉம் ஒருசாரு முளவே

என்றார் மயேச்சுவரருமெனக் கொள்க.

யரல வழள விடையின மாமேனை
மரபு பிழையாத வைப்பு

எனவும்,

அ மருந்து தானை அதியர்தம் கோவே
துமருந்து தூயனவே கொண்டு
(யா. வி. சூ.7 உரைமேற்கோள்கள்)

எனவும்,

இவற்றுள் தற்சுட்டின் கண்ணும், ஏவற் கண்ணும் குற்றெழுத்து விட்டிசையாது பின்வந்த குற்றெழுத்தி னோடுங் கூட்டி நிரையசையாயினவாறு கண்டுகொள்க.*

'ஓசைகுன்றா நெட்டளபாய் விடின் நேர்நேர்' என்பது; நெட்டெழுத்து அளபெழுந்து வருமெனின் அஃதிரண்டு நேரசையாக வைக்கப் படுமென்றவாறு.

---

1. முதலசை.

யரல வழள..........கண்டுகொள்க.* எனும் இப்பகுதி இச்சுவடியில் மட்டுமே காணப்படுகிறது.

'ஓசைகுன்றா' வென்று மிகுத்துச் சொல்லிய வதனால் மூன்று மாத்திரையின் மிக வுச்சரிப்பினு நேர்நேராக வைக்கப்படு மென்றவாறு.

'நிரையொடு நேரசையாம் இட்டத்தினாற் குறில்சேரி' னென்பது; குற்றெழுத்தினொடு புணர்ந்த நெட்டெழுத்தள பெழுந்தால் அவ்விரண்டும் நிரை நேராக வைக்கப்படுமென்றவாறு.

'இலக்கியம் ஏளர்சிதைவே' என்பது

**குறள் வெண்பா**

**ஏ ள ர் சிதைய வழாஅல் எலாஅநின்**
**சேயரி சிந்தின கண்**

*(யா. வி. சூ.2 உரைமேற்.)*

என்னுமிப் பாட்டு நேர் நேராதற்கும், நிரை நேராதற்கும் இலக்கியமெனக் கொள்க.

'ஏளர்' நேர்நேராயிற்று

*அழாஅல், எலாஅ* என நிரைநேராயிற்று.

'இட்டத்தினாற் குறில்சேரின்' என்று சிறப்பித்த வதனால் பின்பு நின்ற குறிலொடும் நெடிலொடும் கூடி நிரையசை யாகாதெனக் கொள்க.

**தனிநிலை அளபெடை நேர்நே ரியற்றே**

**இறுதிநிலை யளபெடை நிரைநே ரியற்றே**

*(யா. வி. சூ. 4 உரைமேற்கோள்கள்)*

என்றார் நத்தத்தனராரெனக் கொள்க. (2)

## சீர், தளைக்குப் புறனடை

(உறுப்பியலில் செய்யுளுக்குறுப்பான சீர், தளைக்கு இலக்கணம் கூறியதோடமையால், செய்யுளியலில் அச்சீரும் தளையும் பாக்களில் இடம்பெறும் முறைமையைச் சுட்டினார். எனினும், எவ்வெவ்பாக்களுள் அச்சீரும் தளையும் பயின்று வரும் வராது என்பதைத் தெளிவு படுத்திடும் வகையில் ஒழிபியலில் இடம்பெற்றுள்ள இக்காரிகையை உரையாசிரியர் வழிநின்று காண்போம்.)

38. மாஞ்சீர் கலியுட் புகாகலிப் பாவில் விளங்கனிவந்
தாஞ்சீ ரடையா வகவ லகத்துமல் லாதவெல்லாந்
தாஞ்சீர் மயங்குந் தளையுமஃ தேவெள்ளைத் தன்மைகுன்றிப்
போஞ்சீர் கனிபுகிற் புல்லா தயற்றளை பூங்கொடியே.

இக்காரிகை சீருந் தளையுஞ் செய்யுளகத்து நிற்பதொரு முறைமை யுணர்த்துதற்பாற்று.

'மாஞ்சீர் கலியுட் புகா' என்பது; தேமா, புளிமா என்னும் இரண்டு நேரீற்றியற் சீருங் கலிப்பாவினுட் புகப்பெறாவெனக் கொள்க.

'கலிப்பாவில் விளங்கனிவந் தாஞ்சீரடையா' என்பது; கருவிளங்கனி கூவிளங்கனி என்னும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச் சீரண்டும் கலிப்பாவினுட் புகப்பெறா என்றவாறு.

'அகவலகத்தும்' என்பது ஆசிரியப்பாவினுள்ளும் கருவிளங் கனி, கூவிளங்கனி என்னும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் இரண்டும் புகப்பெறா என்றவா்று.

'அல்லாத வெல்லாந் தாஞ்சீர் மயங்கும்' என்பது; ஒழிந்த சீரெல்லாப் பாவினுள்ளும் பாவினத்துள்ளும் வந்து மயங்கப் படுமென்றவாறு.

'தளையுமஃதே' என்பது நான்கு பாவின் தளையும் எல்லாப் பாவினுள்ளும் பாவினத்துள்ளும் வந்து மயங்கப் பெறும் என்றவாறு.

'வெள்ளைத் தன்மைப் போஞ்சீர் கனிபுகில்' என்பது எல்லாச் சீரு மெல்லாப் பாவினுள்ளும் பாவினத்துள்ளும் புக்கு வழங்கப்படு மென்றவாறாயினும் வஞ்சியுரிச்சீர் நான்கும் வெண்பாவிற் புகப்பெறா. புகில் வெள்ளோசை யழிந்து வேறுபட்டு ஓசையுண்ணாது கெடுமென்றவாறு.

'புல்லா தயற்றளை' என்பது; எல்லாப் பாவினுள்ளும் பாவினத்துள்ளும் எல்லாத்தளையும் புக்கு மயங்கப்பெறு மென்றா ராயினும் வெண்பாவினுள் வெண்சீர் வெண்டளையும். இயற்சீர் விகற்பமுமாகிய இயற்சீர் வெண்டளையல்லது வேற்றுத்தளை விரவாது என்றவாறு.

வரலாறு:-

**தரவு கொச்சகக் கலிப்பா**

குடநிலைத் தண்புறவில்................... சென்றவாறே

(காரிகை-21 மேற்கோள்)

இத்தரவு கொச்சகக் கலிப்பாவில் நிரையீற்றாசிரிய வுரிச்சீரும், வெண்சீரும், நேர்நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வந்து வெண்டளையும் கலித்தளையு மாசிரியத்தளையும் வஞ்சித் தளையும் மயங்கி வந்தவாறு கண்டு கொள்க.

நேரீற்றாசிரிய உரிச்சீரும், நிரை நடுவாகிய வஞ்சி யுரிச்சீரும் வருதலில்லாமையுங் கண்டுகொள்க.

**நேரிசை யாசிரியப்பா**

நெடுவரைச் சாரற் குறுங்கோட்டுப் பலவின்
விண்டுவார் தீஞ்சுளை வீங்குகவுட் கடுவன்
உண்டு சிலம்பேறி யோங்கிய இருங்கழைப்
படிகம் பயிற்று மென்ப
மடியாக் கொலைவில் என்னையர் மலையே

(யா. வி. சூ .53 உரைமேற்.)

இவ்வாசிரியத்துள் தன்சீரும், வெண்சீரும் நேர் நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வந்து வெண்டளையும், தன்தளையும், கலித் தளையும், வஞ்சித்தளையும் மயங்கி வந்தவாறு கண்டுகொள்க.

**வஞ்சிப்பா**

மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் *(புறநானூறு-2)*

எனவும்,

**வஞ்சிப்பா**

புன்காற் புணர்மருதின்
போதரும்பிய புனல்தாமரை
தேன்காழ் தீங்கரும்பின்
பூந்தாட் புனற்றாமரை

எனவும்,

வார்காற் செங்கழுநீர்

எனவும் வரும் இக்குறளடி வஞ்சிப்பாக்களுள் நேரீற்றியற்சீரும் வந்து வஞ்சித்தளையும் கலித்தளையும் ஆசிரியத்தளையும், வெண்டளையும் மயங்கி வந்தவாறு கண்டுகொள்க.

**வெண்டுறை**

முழங்குதிரைக் கொற்கை வேந்தன்
*(காரிகை-27 மேற்கோள்)*

என்னும் வெண்டுறையுள் வஞ்சியுரிச்சீரும் வெண்சீரும் வந்து வஞ்சித்தளையு மாசிரியத்தளையும் கலித்தளையும் வெண் டளையும் வந்து மயங்கினவாறு கண்டு கொள்க.

## கலிவிருத்தம்

வளர்கொடியன மணம்விரிவன மல்லிகையொடு மௌவல்
தளிர்கொடியன நறுவிறையன நகுமலரன வகுளம்
குளிர்கொடியன குழைமாதவி குவிமுகையின கொகுடி[1]
ஒளிர்கொடியன உயர்தாளினொ டொழுகினான் வோட[2]

(சூளாமணி தூது:4)

இக்கலிவிருத்தத்தினுள் வஞ்சியுரிச்சீரு மியற்சீரும் மயங்கி வந்தவாறு கண்டுகொள்க. பிறவுமன்ன.

நேரீற்றியற்சீர் ஒத்தாழிசைக் கலியுள் வாராதவாறும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் கலிப்பாவுள்ளும், ஆசிரியத் துள் வாராதவாறும் வெண்பாவினுள்ளும், வஞ்சியுரிச்சீர் வாராதவாறும் வேற்றுத்தளை விரவாமையும் மேற்காட்டிய செய்யுளகத்தும் பிற செய்யுளகத்தும் ஆராய்ந்து கண்டு கொள்க.

நேரீற்றியற்சீரும் வெண்கலியுள்ளும், கொச்சகத் துள்ளும் வருதலும், நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் கொச்சகத்துள் அருகி வருதலுஞ் செய்யுளோத்துள்ளே சொல்லப்பட்டது.

## நேரிசை வெண்பா

குலாவணங்கு வில்லெயினர் கோன்கண்டன் கோழி
நிலாவணங்கு வெண்மணற்மேல் நின்று[3] – புலாலுணங்கல்
கொள்ளும்புட் காக்கின்ற கோவின்மையோ நீபிறர்
உள்ளம்புக் கியாப்ப துரை

(யா. வி. சூ .23 உரைமேற்.)

---

1. கோங்கம், 2. உயர்தளிரினொ டொழுகிணர்அண ஓடை.
3. நேர்மணல்மே லின்று

என்றித் தொடக்கத்தொருசார் வெண்பாவினுள் வஞ்சியுரிச்சீர் வந்தனவாலோவொனின் திருவள்ளுவப் பயனும், நாலடி நானூறும் முதலாகிய கீழ்க்கணக்குள்ளும், முத்தொள்ளாயிர முதலாகிய சான்றோர் செய்யுளகத்தினும் வஞ்சியுரிச்சீர் வந்திலாமையானும் வேற்றுத்தளை வெண்பாவினுள் விரவுக என்னும் ஒத்திலாமையானும் இத்தொடக்கத்தன குற்றம் அல்லது குணமாகாதென்பதூஉங் காக்கை பாடினியார் முதலாகிய தொல்லாசிரியர் துணிபு. அதுவே இந்நூலுடையார்க்கும் உடன்பாடு.

இயற்சீர் நேரிறல தன்தளை யுடைய
கலிக்கியல் பிலவே காணுங் காலை

வஞ்சி யுள்ளும் வந்த தாகா
வாயினும் மொரோவிடத் தாகு மென்ப

*(யா. வி. சூ. 15 உரைமேற்கோள்கள்)*

என்றார் பல்காயனார்.

வெள்ளை யொழிந்த பாவொடு பாவினஞ்
சொல்லிய தளைசீர் வரையில விரவும்

*(யா. வி. சூ. 22 உரைமேற்.)*

எனவும் சொன்னார் பிறருமெனக் கொள்க.

நிரைநடு வியலா வஞ்சி உரிச்சீர்
கலியினோ டகவலிற் கடிவரை யிலவே

*(யாப்பருங்கலம்-16)*

வெள்ளையுட் பிறதளை விரவா அல்லன
எல்லாத் தளையும் மயங்கியும் வழங்கும்

*(யாப்பருங்கலம்-22)*

என்பதியாப்பருங்கலம்.

பூங்கொடியே யென்றது மகடூஉ முன்னிலை.

(3)

## அடிக்குப் புறனடை

(உறுப்பியலில் அடியையும், அடிவகைகளையும் விளக்கிக் கூறிச் செய்யுளியல் முதல் காரிகையில் எவ்வெவ் வடிகளால் எந்தெந்தப் பாக்கள் பாடப்படவேண்டும் என்பதை விளக்கிய காரிகையாசிரியர் இவ்வொழிபியலில் எவ்வெவ்வடிகள் எந்தெந்தப் பாக்களில் விரவி வரப்பெறும் என்பதனை ஒழிபாகக் கூறுகிறார். இத்தகு இலக்கணச் செய்திகளை உரையாசிரியர் குணசாகரர் வழிநின்று காண்போம்.)

39. இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாத மகவலுள்ளான்
மயக்கப் படாவல்ல வஞ்சி மருங்கினெஞ் சாவகவல்
கயற்கணல் லாய்கலிப் பாதமு நண்ணுங்
கலியினுள்ளான்
முயக்கப் படுமுதற் காலிரு பாவும் முறைமையினே

இக்காரிகை அடிமயக்கமாமாறுணர்த்துதற்பாற்று.

'இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாத மகவலுள்ளாள் மயக்கப் படா வல்ல' என்பது;

இயற்சீர் வெண்டளையான் வந்த வெண்பா வடியும் வஞ்சியடியுமாசிரியப் பாவினுள் மயங்கப் பெறுமென்றவாறு. என்னை,

இயற்சீர் வெள்ளடி யாசிரிய மருங்கின்
நிலைக்குறி மரபின் நிற்கவும் பெறுமே
(தொல். பொருள். 371)

என்றார் தொல்காப்பியனார்.

வஞ்சி விரவ லாசிரிய முரித்தே
வெண்பா விரவினுங் கடிவரை[1] யின்றே
(யா. வி. சூ. 29 உரைமேற்.)

என்றார் பல்காயனார்.

---

1. கலிவரை..

இயற்சீர் வெள்ளடி வஞ்சி யடியிவை
மயக்கப்[1] படவரு மகவலு முளவே
(யாப்பருங்கலம்-29)

என்பதி யாப்பருங்கலம்.

அவற்றிற்குச் செய்யுள் வருமாறு.

### நேரிசையாசிரியப்பா

எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
உலைக்கல்[2] லன்ன பாறை யேறிக்
கொடுவில் லெயினர் பகழி மாய்க்குங்
கவலைத் தென்பவவர் தேர்சென்ற வாறே
அதுமற் றவலங் கொள்ளாது
நொதுமற் கழறுமிவ்[3] வழுங்க லூரே
(குறுந்தொகை-12)

இதனுள் 'எறும்பி யளையிற் குறும்பல் சுனைய' என்பது இயற்றளை வெள்ளடி.

இதனை,

எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
குறுந்தொடி யாஞ்செல் சுரம்

என உச்சரித்து வெள்ளடியாமாறு கண்டு கொள்க.

### நேரிசையாசிரியப்பா

இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் மாநிலம்[4]
உடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட ஏமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே[5]

---

1. அகப்பட வரூஉ 2. உலைக்கனல், 3. கலுழுமிவ்.
4. இருங்கடல் தானையொடு பெருநிலங் கவைஇ
5. மாய்ந் தோரே,

அதனால் நீயுங் கேண்மதி யத்தை வீயா
துடம்பொடு நின்ற உயிரு மில்லை
மடங்க லுண்மை மாயமோ வன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்கண்
உப்பிலாஅ அவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
திழிபிறப்பினோன் ஈயப்பெற்று
நிலங்கல னாக விலங்குபலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ[1] முன்னிய வினையே
முந்நீர் வரைப்பகம் முழுதுடன் துறந்தே

(*புறநானூறு : 363*)

இதனுள் 'உப்பிலாஅ அவிப்புழுக்கல்' 'கைக்கொண்டு பிறக்குநோக்கா' எனவும், 'இழிபிறப்பினோன் ஈயப்பெற்று' எனவும் வஞ்சியடி விரவி வந்தவாறு கண்டுகொள்க.

இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாத மகவலுள்ளான் மயக்கப்படுமென்னாது 'படாவல்ல' என்று இருகால் விலக்கிச் சொல்லிய வதனால், வெண்சீர் விரவிய வியற்றளை வெள்ளடியுங் கலியடியு மாசிரித்துளருகி வரப்பெறுமெனக் கொள்க.

*வரலாறு:-*

**நேரிசையாசிரியப்பா**

அங்கண் மதியம் அரவின்வாய்ப் பட்டெனப்
பூசல் வாயாப் புலம்புமனைக் கலங்கி
ஏதில் மாக்களை நோவர் தோழி
என்று[2] நோவா ரில்லை
தண்கடற் சேர்ப்ப னுண்டவென் நலக்கே

1. செய்ந்நனி. 2. ஒன்றும்

இந்த ஆசிரியத்துள் அங்கண் மதிய அரவின் வாய்ப்பட் டென்பது, வெண்சீர் விரவிய இயற்றளை வெள்ளடியதனை,

அங்கண் மதியம் அரவின்வாய்ப் பட்டெனப்
பொங்கிய பூசல் பெரிது

என உச்சரித்து வெள்ளடியாமாறு கண்டு கொள்க.

## நேரிசையாசிரியப்பா

குருகுவெண் டாளி கோடுபுய்த் துண்டென
மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது
மருள்பிடி திரிதருஞ் சாரல்
அருளா னாகுதல் ஆயிழை கொடிதே
(யா. வி. சூ. 29 உரைமேற்கோள்கள்)

இதனுள் இரண்டாமடி கலியடி. இதனை,

மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது
தீவழங்கு சுழல்விழிகட் சீயஞ்சென்று கழலுமே

என்று உச்சரித்துக் கலியடியாமாறு கண்டுகொள்க.

'வஞ்சி மருங்கினெஞ் சாவகவல் கலிப்பாதமு நண்ணும்' என்பது; வஞ்சிப்பாவினுளாசிரிய வடியுங் கலியடியும் வந்து மயங்கப்பெறுமெனக் கொள்க.

'எஞ்சா வகவல்' என்று சிறப்பித்த வதனால் வஞ்சி யுளாசிரியவடி பயின்றுவரும், கலியடியும் வெள்ளடியு மருகியன்றி வாராவெனக் கொள்க.

'கயற்கண் நல்லாய்' என்பது மகடூஉ முன்னிலை.

'பட்டினப்பாலை' என்னும் வஞ்சிநெடும்பாட்டினுள் ஆசிரிய வடியும், மயங்கி வந்த கலியடியும் வெள்ளடியு முளவெனக் கொள்க.

நேரிழை மகளி ருணங்குணாக் கவரும்

(பட்டினப் பாலை-23)

என்றித் தொடக்கத்தன ஆசிரியவடி.

இதனுள், 'கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை' என்பது வெள்ளடி, யதனை,

கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
யாழிசூழ் வையக் கணி

என்றுச்சரித்து வெள்ளடியாமாறு கண்டு கொள்க.

வயலாமைப் புழுக்குண்டு
வறளடம்பின் மலர்மிலைந்து

(பட்டினப்பாலை 64, 65)

என்பது கலியடி, இதனை,

வயலாமைப் புழுக்குண்டு வறளடம்பின் மலர்மிசைந்து
கயனாட்டக் கடைசியர்தங் காதலர்தோள் கலந்தனரே[1]

என உச்சரித்துக் கலியடியாமாறு கண்டு கொள்க.

வஞ்சியு ளகவல் மயங்கினும் வரையார்

(யாப்பருங்கலம்-31)

வஞ்சி விரவல் ஆசிரியர் உரித்தே
வெண்பா விரவினும் கடிவரை யின்றே

(யா. வி. சூ. 29 உரைமேற்.)

எனவுஞ் சொன்னாருமுளரெனக் கொள்க.

'கலியுனுள் முயக்கப் படுமுதற் காலிரு பாவும்' என்பது கலிப்பாவினுள் வெண்பாவும் ஆசிரியப்பாவும் புக்கு மயங்கப் பெறும் என்றவாறு.

வெண்பா வாசிரியங் கலிவஞ்சியெனக்
கிடந்த பாமுறை யான்முன்பி லிரண்டு

கொண்டுரைக்கப்பட்டது.*

---

1. மணந்தனரே

வெண்பா.........உரைக்கப்பட்டது.*எனும் இப்பகுதி இச்சுவடியில் மட்டும் காணப் படுகிறது.

'முறைமையினே' என்பது எல்லாப்பாவும் வரலாற்று முறைமையினோடுங் கூடி மயக்க முறைமை செய்து வழங்கப்படு மென்றவாறு.

### நேரிசை வெண்பா

**ஆசிரியப் பாவி னயற்பா வடிமயங்கும்**
**ஆசிரியம் வெண்பா கலிக்கணாம் – ஆசிரியம்**
**வெண்பாக் கலிவிரவும் வஞ்சிக்கண் வெண்பாவின்**
**ஒண்பா வடிவிரவா வுற்று**

*(யா. வி. சூ. 31 உரைமேற்.)*

இதனை விரித்துரைத்துக் கொள்க.

'காமர் கடும்புன லந்தேம் மோடாடு வாளென்னும்' மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவினுள் வெண்பாவு மாசிரியப்பாவு மயங்கி வந்ததெனக் கொள்க. 'ஆல்' இரண்டும் அசை. (4)

### அடிக்கும் தொடைக்கும் புறனடை

மேற்குறித்த வண்ணமே அமிதசாகரர் இக்காரிகை யிலும்(40) ஐஞ்சீர் கொண்ட நெடிலடி எவ்வெவ் பாக்களில் பயின்று வருமென்பதையும், இதிலேயே ஒழிபாகத் தொடைவிகற்பம் குறித்த செய்திகளையும் கூறுகின்றார். மேலும், தொடர்ந்து வரும் காரிகையில்(41) ஒழிபாக அடித்தொடைக் குறித்துக் கூறப்படுகின்ற செய்திகளையும் குணசாகரர் உரைவழி நின்று விளங்கக் காண்போம்.

40. **அருகிக் கலியோ டகவல் மருங்கினைஞ் சீரடியும்**
**வருதற் குரித்தென்பர் வான்றமிழ் நாவலர் மற்றொருசார்**
**கருதிற் கடையே கடையிணை பின்கடைக் கூழையுமென்**
**றிரணத் தொடைக்கு மொழிவ ரிடைப்புணர் வென்பதுவே.**

இக்காரிகை ஒருசார் அடிக்கும் தொடைக்கும் எய்தியதோ ரிலக்கண முணர்த்துதற்பாற்று.

'அருகிக் கலியோ டகவல் மருங்கனைஞ் சீரடியும் வருதற்குரித் தென்பர் வான்தமிழ் நாவலர்' என்பது:- ஒருசார் கலிப்பாவினுள்ளும் ஆசிரியப்பாவினுள்ளும் ஐஞ்சீரடியும் அருகி வரப்பெறுமென்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

வரலாறு:-

அணிகிளர் சிறுபொறி அவிர்துத்தி மாநாகத்து எருத்தேறித்
துணியிரும் பனிமுந்நீர் தொட்டுழந்து மலைந்தனையே

இக்கலிப்பாவில் முதலடி ஐஞ்சீரடி வந்ததெனக் கொள்க.

**நேரிசையாசிரியப்பா**

உமணர்ச் சேர்ந்து கழிந்த மருங்கின் அகன்றலை
ஊர்பாழ்த் தன்ன ஓமையம் பெருங்காட்டு
இன்னா என்றீ ராயின்
இனியவோ பெரும தமியேற்கு மனையே

(குறுந்தொகை-142)

இவ்வாசிரியத்துள் முதலடி ஐஞ்சீர் வந்தவாறு கண்டு கொள்க.

'சிறியகட் பெறினே' (புறம்-235) என்னும் இணைக் குறளாசிரியப்பாவினுள்ளும் ஐஞ்சீரடி வந்ததெனக் கொள்க.

வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்
ஐஞ்சீ ரடியு முளவென மொழிப

(தொல். பொருள். 372)

என்றார் தொல்காப்பியனார்.

வெண்பாவினுள் ஐஞ்சீரடி வரப்பெறாவெனக் கொள்க.

**ஐஞ்சீ ரடுக்கலு மண்டில மாக்கலும்**
**வெண்பா யாப்பிற் குரிய வல்ல**

என்று நற்றத்தனார்[1] அடிநூலில் எடுத்தோதினார் ஆகலானும் பிறநூன் முடிந்தது தானுடம்படுதல் என்பது தந்திரவுத்தி யாகலானும் மீண்டுரைக்கப்பட்டது.

'மற்றொருசார் கருதிற் கடையே கடையிணை பின்கடைக் கூழையுமென் றிரணத் தொடைக்கு மொழிவர் இடைப்புணர் என்பதுவே' என்பது:- ஒருசார் ஆசிரியர் கடை முரணுங் கடையிணை முரணும், பின்முரணும் கடைக் கூழை முரணும் இடைப்புணர் முரணுமென்று வேண்டுவர் என்றவாறு. இரணத்தொடை எனினும், பகைத்தொடை எனினும் முரண் தொடை எனினும் ஒக்கும். என்னை,

**மொழியினும் பொருளினும் முரணத் தொடுப்பன்**
**இரணத் தொடையென் றெய்தும் பெயரே**

என்றார் காக்கைபாடினியார்.

**மறுதலை உரைப்பினும் பகைத்தொடை யாகும்**
*(யா. வி. சூ. 38 உரைமேற்கோள்கள்)*

என்றார் அவிநயனார்.

**மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே**
*(தொல். பொருள். 407)*

என்றார் தொல்காப்பியனார்.

கடை முரணானது:- அடிதோறும் இறுதிச்சீர் மறுதலைப் படத்தொடுப்பது.

கடையிணை முரணாவது:- அடிதோறும் கடையிரு சீர் மறுதலைப்படத்தொடுப்பது.

பின் முரணானது:- இரண்டாஞ்சீர் கண்ணும், நான்காஞ் சீர் கண்ணும் மறுதலைப்படத்தொடுப்பது.

---

1. நக்கீரர் அடிநூல்

கடைக்கூழை முரணாவது:- முதற்சீர்க்கணின்றி யொழிந்த மூன்றுசீரின் கண்ணும் மறுதலைப்படத் தொடுப்பது.

இடைப்புணர் முரணானது:- நடுவிரு சீர்க்கண்ணும் மறுதலைப்படத் தொடுப்பது.

வரலாறு:-

**நேரிசையாசிரியப்பா**

கயன்மலைப் பன்ன கண்ணிணை **கரிதே**
தடமுலைத் திவளுந்[1] தனிவடம் **வெளிதே**
நூலின் நுண்ணிடை **சிறிதே**
ஆடமைத் தோழிக்கு[2] அல்குலோ **பெரிதே**

இஃதடிதோறும் கடைச்சீர்க்கண் மறுதலைப்படத் தொடுத்தமையால் கடைமுரண்.

**நேரிசையாசிரியப்பா**

மீன்றேர்ந்து வருந்திய **கருங்கால் வெண்குருகு**
தேனார் ஞாழல் **விரிசினைக் குழூஉம்**[3]
தண்ணந் துறைவன் **தவிர்ப்பவும் தவிரான்**
தேரோ **காணலம் காண்டும்**
பீடுரா[4] வண்ணமுஞ் **சிறுநுதற் பெரிதே**

இஃதடிதோறும் கடையிருச்சீர்க் கண்ணும் மறுதலைப் படத் தொடுத்தமையால் கடையிணை முரண்.

**நேரிசையாசிரியப்பா**

சார **லோங்கிய** தடந்தாள் **தாழை**
கொய்ம்மலர் **குவிந்து** தண்ணிழல் **விரிந்து**
தமியம் **இருந்தன** மாக **நின்றுதன்**

---

1. தவழும். 2. தோளி, 3. தொகூஉம். 4. பீரேர்

நயனுடைப் பணிமொழி நன்குபல பயிற்றி[1]
வீங்குதொடிப் பணைத்தோள் நெகிழத்
துறந்தோன் அல்லான்எம் மேனியோ தீதே

இஃதடிதோறுங் கடைச்சீரும், இரண்டாம் சீரும் மறுதலைப் படத் தொடுத்தமையால் பின் முரண்.

### நேரிசையாசிரியப்பா

காவியங் கருங்கண் செவ்வாய்ப் பைந்தொடி
பூவிரி சுரிமென் கூந்தலும்
வேய்புரை தோளும் அணங்குமா லெம்மே

இது முதற்சீரொழிந்த மூன்றுசீரும் மறுதலைப்படத் தொடுத்தமையால் கடைக்கூழை முரண்,

### நிலை மண்டிலயாசிரியப்பா

போதவிழ் குறிஞ்சி நெடுந்தண் மால்வரைக்
கோதையில் தாழ்ந்த ஓங்கு வெள்ளருவி
காந்தளஞ் செங்குலைப் பசுங்கூ தாளி
வேரல் விரிமலர் முகையொடு விரைஇப்
பெருமலைச் சீறுரிழிதரு நலங்கவர்ந்து
இன்னா வாயினான இனியோர் மாட்டே

(யா. வி. சூ. 39 உரைமேற்கோள்கள்)

இஃது இடையிருசீரும் மறுதலைப்படத் தொடுத்தமையால் இடைபுணர்முரண்.

இவ்வாறு சொன்னார் கையனார் முதலாகிய ஒரு சாராசிரியருமெனக் கொள்க.

இனி, முரண் தொடைக்கு மொழிவரென்றவும்மையால் ஒழிந்த தொடைக்கு மிவ்வாறே யொட்டிக் கொள்க. என்னை,

---

1. புகழ்ந்து

ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல் என்பது தந்திர வுத்தியாகலின். அவை கூட்டி வழங்குமாறு.

| | |
|---|---|
| கடைமோனை | கடையெதுகை |
| கடையிணைமோனை | கடையிணையெதுகை |
| பின்மோனை | பின்னெதுகை |
| கடைக்கூழைமோனை | கடைக்கூழையெதுகை |
| இடைப்புணர் மோனை | ,இடைப்புணர் எதுகை |
| எனவும், | எனவும், |
| கடையியைபு | கடையளபெடை |
| கடையிணையியைபு | கடையிணையளபெடை |
| பின்னியைபு | பின்னளபெடை |
| கடைக்கூழையியைபு | கடைக்கூழையளபெடை |
| இடைப்புணரியைபு | இடைப்புணரளபெடை |
| எனவும், | எனவுங்கொள்க. |

இவற்றிற்கிலக்கியம் யாப்பருங்கல விருத்தியுட் கண்டு கொள்க. (5)

## மோனை, எதுகைக்குப் புறனடை

41. வருக்க நெடிலினம் வந்தால் எதுகையு மோனையுமென்
றொருக்கப் பெயரா னுரைக்கப் படுமுயிர் ஆசிடையிட்டு
இருக்கு மொருசா ரிரண்டடி மூன்றா மெழுத்துமொன்றி
நிரக்கும் எதுகையென் றாலுஞ் சிறப்பில நேரிழையே.

இக்காரிகை ஒரு சாரெதுகைக்கும் மோனைக்கு மெய்தியதோர் இலக்கணம் உணர்த்தற்பாற்று.

'வருக்க நெடிலினம் வந்தாலெதுகையும் மோனையும் என்று ஒருக்கப் பெயரானுரைக்கப்படும்' என்பது; வருக்க எழுத்தும், நெடிலெழுத்தும்,, இனவெழுத்தும், எதுகையு மோனையுமாய் வந்தாலவற்றை வருக்க எதுகை,

யாப்பரு. காரிகை-25

நெடிலெதுகை இனவெதுகை என்றும், வருக்கமோனை, நெடில் மோனை, இனமோனை என்றும் பெயரிட்டு வழங்கப்படும் என்றவாறு.

*வரலாறு:-*

**இன்னிசை வெண்பா**

**நீடிணர்க் கொம்பர்க் குயிலாலத் தாதூதிப்**
**பாடும்வண் டஞ்சி அகலும் பருவத்துத்**
**தோடார் தொடிநிகழ்ந்தா ருள்ளார் படரொல்லா**
**பாடமை சேக்கையுட் கண்**

*(யா. வி. சூ. 37 உரைமேற்.)*

*இது டகர மெய் வருக்க எதுகை.*

**குறள் வெண்பா**

**அறத்தா றிதுவென வேண்டா சிவிகை**
**பொறுத்தா னோடூர்ந்தா னிடை** *(குறள்: 37)*

*இது றகர வருக்க எதுகை.*

**ஆவா வென்றே..........ஒரு சாரார்**

*(காரிகை: 27 மேற்கோள்)*

என்பது இரண்டாமெழுத் தொன்றாதாயினும் இரண்டா மெழுத்தின் மேலேறிய நெடில் ஒப்புமை நோக்கி நெடிலெதுகை என்று வழங்கப்படும்.

இனி இனவெதுகை மூன்று வகைப்படும். வல்லின வெதுகையும், மெல்லினவெதுகையும், இடையின வெதுகையும் என.

*வரலாறு:-*

**குறள் வெண்பா**

**தக்கார் தகவில ரென்ப தவரவ**
**ரெச்சத்தாற் காணப் படும்** *(குறள்: 114)*

இது வல்லின எதுகை.

### குறள் வெண்பா

அன்பீனு மார்வ முடைமை யதுவீனும்
நண்பீனும் நாடாச் சிறப்பு *(குறள்: 74)*

*இது மெல்லின எதுகை.*

### குறள் வெண்பா

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு *குறள்: 299)*

*இது இடையின எதுகை.*

*இனி, வருக்கமோனை முதலாகிய மூன்றும் வருமாறு.*

### நேரிசையாசிரியப்பா

பகலே, பல்பூங் கானற் கிள்ளை யோப்பியும்
பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇப்
பின்னுப்பிணி யவிழ்ந்த நன்னெடுங் கூந்தல்
பீரங்கப் பெய்து தேம்படத் திருத்திப்
புனையீ ரோதி செய்குறி நசைஇப்
பூந்தார் மார்ப புனத்துள் தோன்றிப்
பெருவரை யடுக்கத் தொருவே லேந்திப்
பேயு மறியா மாவழங்கு பெருங்காட்டுப்
பைங்கண் உழுவைப் படுகை வெரீஇப்
பொங்குசினம் தணியாப் பூநுத லொருத்தல்
போகாது வழங்கு மாரிருள் நடுநாள்
பௌவத் தன்ன பாயிருள் நீந்தி
இப்பொழுது வருகுபவை யாயின்
நற்றார் மார்ப தீண்டலஎங் கதுப்பே
*(யா. வி. சூ. 37 உரைமேற்.)*

*இது பகர மெய் வருக்க மோனை.*

### குறள் வெண்பா

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை

(முதுமொழிக்காஞ்சி-1)

இது முதலெழுத்தொன்றாதாயினும் முதலெழுத்தின் நெடில் ஒப்புமை நோக்கி நெடில் மோனை என்று வழங்கப்பெறு மென்றவாறு.

இனி, இனமோனை மூன்று வகைப்படும் வல்லின மோனையும், மெல்லினமோனையும், இடையின மோனையும் என.

### நேரிசையாசிரியப்பா

கயலே ருண்கண் கலுழ நாளும்
சுடர்புரை திருநுதல் பசலை பாயத்
திருந்திழை அமைத்தோள் அரும்படர் உழப்பப்
போகல் வாழி ஐய பூத்த
கொழுங்கொடி யணிமலர் தயங்கப்
பெருந்தண் வாடை வரூஉம் பொழுதே

(யா. வி. சூ. 37 உரைமேற்.)

இஃதெல்லா வடியு முதற்கண் வல்லெழுத்தே வந்தமையான் வல்லினமோனை என்று கையனார் காட்டிய பாட்டு, மெல்லின மோனையும் இடையின மோனையும் வந்தவழிக் கண்டுகொள்க.

வருக்க நெடிலினம் வரையா ராண்டே

(யாப்பருங்கலம்- 37)

அடிதொரு முதலெழுத் தடைவதை முதற்றொடை
இடையதன் முன்னொன் றியைவதே எதுகை
நெடிய பிறவும் இனத்தினு மாகும்.

(யா. வி. சூ. 37 உரைமேற்.)

எனவுஞ் சொன்னாரு முளரெனக் கொள்க.

'வருக்க நெடிலினம் வந்தாலெதுகையு மோனையு மென்றுரைக்கப் படுமென்னா தொருக்கப் பெயரென்று சிறப்பித்த வதனால் ஒரு சாராசிரியர் தலையாகெதுகை, இடையாகெதுகை, கடையாகெதுகை என்றும், தலையாகு மோனை, இடையாகு மோனை, கடையாகுமோனை, என்றும் வேண்டுவரெனக் கொள்க.

சீர்முழுது ஒன்றில் தலையாகெதுகை
ஓரெழுத் தொன்றின் இடைகடை பிறவே

*(யா. வி. சூ. 37 உரைமேற்.)*

என்னுஞ் சூத்திரத்தான் மோனைக்கும் இவ்வாறுரைத்துக் கொள்க.

[இம்மேற்சூத்திர விளக்கமாவது:-

அடிகளின் முதற்கண் சீர்முழுதும் எதுகை ஒன்றிவருவது தலையாகு எதுகை எனவும், அடிதோறும் இரண்டாமெழுத்து ஒன்றுமே ஒன்றிவருவது இடையாகு எதுகை எனவும், வருக்க எதுகை முதலாகப் பிறவழியால் வருவன கடையாகு எதுகை எனவும். அவ்வாறே அடிகளின் முதற்கண் சீர்முழுது மோனை யொன்றி வருவது தலையாகுமோனை எனவும், அடிதோறும் முதலெழுத்தொன்றுமே மோனையொன்றி வருவது இடையாகு மோனை எனவும், வருக்கமோனை முதலாகப் பிறவழியால் வருவன கடையாகுமோனை எனவும் வழங்கப்படும் எனக்கொள்க.]

## நேரிசை வெண்பா

சிலை விலங்கு.........போழ்து

*(தண்டி.சூ.16 மேற்கோள்)*

என்பது தலையாகெதுகை.

## குறள் வெண்பா

அகர முதல...........முதற்றே யுலகு *(குறள்-1)*

என்பது இடையாகெதுகை.

## குறள் வெண்பா

தக்கார் தகவிலார்..........காணப் படும் *(குறள்-114)*

என்பது கடையாகெதுகை.

## குறள் வெண்பா

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு *(குறள்-350)*

என்பது தலையாகு மோனை.

மாவும் புள்ளும்............அன்றே
*(காரிகை. 18 மேற்கோள்)*

என்பது இடையாகு மோனை.

பகலே பல்பூங்கானல்..............கதுப்பே
*(காரிகை . 41 மேற்கோள்)*

என்பது கடையாகு மோனை.

'உயிராசிடையிட் டிருக்கு மொருசாரிரண்டு மூன்றா மொழுத்துமொன்றி நிரக்கும் எதுகை என்றாலுஞ் சிறப்பில' என்பது; இன்னுமொரு சாரார் உயிரெதுகை, ஆசெதுகை, இடையிட்டெதுகை, இரண்டடியெதுகை, மூன்றாமெழுத் தொன்று எதுகை என்றித் தொடக்கத்து எதுகையுமுள வாயினும் பெரியதோர் சிறப்பில எனக்கொள்க.

வரலாறு:-

## நேரிசையாசிரியப்பா

துளியொடு மயங்கிய தூங்கிருள் நடுநாள்
அணிகிளர் தாரோய் அருஞ்சுர நீந்தி
வடியமை யெஃகம் வலன்வயின் ஏந்தித்
தனியே வருதி நீயெனின்
மையிருங் கூந்த லுய்தலோ அரிதே
*(யா. வி. சூ. 36 உரைமேற்.)*

இஃது இரண்டா மெழுத்தொன்றா தாயினுமிரண்டா மெழுத்தின் மேலேறிய உயிரொன்றி வந்தமையான் உயிரெதுகை. இது கையனார் காட்டிய பாட்டு.[1]

இனி, ஆசெதுகை சொல்லுமாறு.

யரலழ வென்னும் ஈரிரண் டொற்றும்
வரன்முறை பிறழாது வந்திடை உயிர்ப்பினஃ
தாசிடை யெதுகையென் றறிந்தனர் கொளலே

*(யா. வி. சூ. 37 உரைமேற்.)*

என்றார் காக்கைபாடினியார்.

வரலாறு:-

## கலித்துறை

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையால் திசைபோய துண்டே

*(சீவக.நாமகள்-31)*

இது யகர ஒற்றிடை வந்த ஆசெதுகை.

## கலிவிருத்தம்

மாக்கொடி மாலையு[2] மௌவல் பந்தரும்
கார்க்கொடி முல்லையுங் கலந்து[3] மல்லிகைப்
பூக்கொடிப் பொதும்பரும் பொன்னின் ஞாழலுந்
தூக்கொடி[4] கமழ்ந்துதான் துறக்க மொத்ததே

*(சூளாமணி. நாட்டு-29)*

இது ரகர ஒற்றிடை வந்த ஆசெதுகை.

---

1. யா. வி.இல்லில் செய்யுளியல் உடையார் காட்டும் பாட்டு எனக் குறிக்கப்பட்டுள்ளது.
2.யானையும், 3. கமழ்ந்த, 4 தூக்கடி.

### நேரிசை வெண்பா

ஆவே றுருவின வாயினும் ஆபயந்த
பால்வே றுருவின அல்லவாம் - பால்போல்
ஒருதன்மைத் தாகும் அறநெறி ஆபோல்
உருபு பலகொள லீங்கு (நாலடியார்-118)

இது லகர ஒற்றிடை வந்த ஆசிடை எதுகை,

### நேரிசை வெண்பா

அந்தரத் துள்ளே யகங்கை புறங்கையாம்
மந்தரமே போலும் மனைவாழ்க்கை - மந்தரத்துள்
வாழ்கின்றோ மென்று மகிழன்மின் வாழ்நாளும்
போகின்ற பூளையே போன்று

(யா. வி. சூ. 37 உரைமேற்.)

இது ழகர ஒற்றிடை வந்த ஆசெதுகை.

### குறள் வெண்செந்துறை

ஆர்கலி யுலகத்து............உடமை

(காரிகை - 26 மேற்கோள்)

இஃது ரகர வொற்றசிடையிட்ட வல்லின எதுகை பிறவும் வந்தவழிக் கண்டுகொள்க.

இனி; இடையிட்டெதுகை வருமாறு.

### நேரிசையாசிரியப்பா

தோடா ரெல்வளை நெகிழ நாளும்
நெய்த லுண்கண் பைதல் கலுழ
வாடா வவ்வரி புதைஇப்[1] பசலையும்
வைகல் தோறும் பைப்பையப் பெரிகின[2]
நீடா ரிவரென்னன நீமணங் கொண்டார்
கேளார் கொல்லோ காதலந் தோழி

---

1. புதைஇப், ததைஇ 2. பெருகலின்.

வாடாப் பௌவ மறமுகந் தெழிலி
பருவம் பொய்யாது வலனேர்பு வளைஇ
ஓடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே

(யா. வி. சூ. 37 உரைமேற்.)

இஃதடியிடையிட்டு வந்தமையால் இடையிட்டெதுகை. இது கையனார் காட்டிய பாட்டு.

தொல்காப்பியனார்

தாஅ வண்ணம்
இடையிட்டு வந்த எதுகைத் தாகும்

(தொல். பொருள். 523)

என்றாராகலின்.

இரண்டடியெதுகை வருமாறு.

**இன்னிசை வெண்பா**

துவைக்குந் துளிமுந்நீர்க் கொற்கை மகளிர்
அவைப்பதம் பல்லிற் கழகொவ்வா முத்தம்
மணங்கமழ்தார் அச்சுதன் மண்காக்கும் வேலின்
அணங்கு மமுதமு மந்நலார் பாட்டு

இது முன்பு இரண்டடியும் ஒரெதுகையாய்ப் பின் இரண்டடியும் மற்றோரெதுகையாய் வந்தமையால் இரண்டடி எதுகை.

இரண்ட்டி எதுகை திரண்டொருங் கியைந்தபின்
முரண்ட எதுகையும் யிரண்டினுள் வரையார்

(யா. வி. சூ. 37 உரைமேற்.)

என்றாராகலின். மோனைக்கு மிவ்வாறே யொட்டிக்கொள்க.

ஒன்றின முடித்தல் தன்னின முடித்தல் (நன்-14)
என்பதாகலின்.

வரலாறு:-

### கலிவிருத்தம்

ஆகங் கண்டகத் தாலற்ற ஆடவர்
ஆகங் கண்டகத் தாலற்ற வன்பினர்
பாகங் கொண்டு பயோதரஞ் சேர்த்தினார்
பாகங் கொண்டு பயோதரம் நண்ணினார்

*(யா. வி. சூ. 37 உரைமேற்.)*

இஃதிரண்டடி மோனைக்குக் காட்டியது.

மூன்றாமெழுத் தொன்றெதுகை வருமாறு.

### குறள் வெண்பா

பவழமும் பொன்னும் குவைஇய[1] முத்தின்
திகழரும் பீன்றனபுன்[2] னை

*(யா. வி. சூ. 36 உரைமேற்.)*

### குறள் வெண்பா

பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின் *(குறள்: 292)*

இவை மூன்றாமெழுத்து ஒன்றெதுகை. 'நிரக்கு மெதுகை' என்று சிறப்பித்த வதனால் விட்டிசை வல்லொற்றெதுகை என்றும், விட்டிசை மோனையென்றுஞ் சொல்லுவாரு முளரெனக் கொள்க.

வரலாறு:-

### குறள் வெண்பா

பற்றிப் பலகாலும் பான்மறி உண்ணாமை
நொ அலையல் நின்னாட்டை நீ

இது வல்லொற்றடுத்தாற்போல விட்டிசைத்துக் குற்றெழுத்தி னோடு புணர்ந்தமையான் விட்டிசை வல்லொற்றெதுகை.

---

1. குவையீஇ, 2. தீன்றதுபுன்.

அஇ உஎ ஔஎனும்[1] ஐந்தொழித் தல்லாத
வொத்தொலி[2] நீண்டிசை வண்ணமென் றோதிய
தோத்தாமோ
கசட[3] தப்பவிந் நாலய னான்கும் கருதாதே
முத்தொடு கோத்த முழாத்தலை வைப்பது மூடன்றே
(யா. வி. சூ. 53 உரைமேற்.)

என்பதுங் கொள்க.

## குறள் வெண்பா

அ அவனும் இ இவனும் உ உவனுங் கூடியக்கால்
எ எவனை வெல்லா ரிகல்
(காரிகை-37-மேற்கோள்)

இஃதிரண்டடிக் கண்ணும் முதலெழுத்து விட்டிசைத்து வந்தமையால் விட்டிசைமோனை. இவை யெல்லாம் சிறப்பிலவெனக் கொள்க.

இன்னும் 'ஒருக்கப்பெயரான்' என்ற விதப்பினாற் பாவினங்கள் எல்லாத் தொடையானும் வரப்பெறு மென்றாயினும், பெரும்பான்மையுஞ் தலையாகு மோனையிற் திரிந்தும் தலையாகு எதுகையில் திரிந்தும் வாரா என்பதூஉஞ் செந்தொடை யொழிந்த எல்லாத் தொடைகளும் இனவெழுத்து வரத்தொடுப்பதூஉம், வழிமுரண் வரத்தொடுப்பதூஉம் சிறப்புடைத்தெனவு கொள்க.

இனவெழுத்துப் பெற்று மோனை முதலாகிய தொடையும் தொடை விகற்பமும் போலாமை வேறுபடத் தொடுப்பது 'மருட்செந்தொடை' யாமென்றவாறு.

இனவெழுத்தாமாறு: தானமொத்த குறிலும் நெடிலும் தம்முள் இனமாம்.

---

1. அஇ உண்ணிருலுக் கெனினும், 2. ஒற்றொலி, 3. கச்சட.

அகரமும் ஆகாரமும் ஐகாரமும் ஔகாரமும் தம்முள் இனமாம்
இகரமும் ஈகாரமும் எகரமும் ஏகாரமும் தம்முள் இனமாம்
உகரமும் ஊகாரமும் ஒகரமும் ஓகாரமும் தம்முள் இனமாம்

சகர தகரங்களுந் தம்மு ளினமாம்
ஞகர நகரங்களுந் தம்மு ளினமாம்
மகர வகரங்களுந் தம்மு ளினமாம்

இவற்றை அனு என்று வழங்குவாரு முளரெனக் கொள்க.

அகரமோ டாகாரம் ஐகாரம் ஔகான்
இகரமோ டீகாரம் எஏ – உகரமோ
டூகாரம் ஒஓ ஞநமவ தச்சகரம்
ஆகாத அல்ல அனு

(யா. வி. சூ. 53 உரைமேற்கோள்கள்)

என்றாராகலின். அவற்றிற்குச் செய்யுள் வருமாறு.

### குறள் வெண்பா

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர் (குறள்: 228)

### குறள் வெண்பா

அமிழ்தினு மாற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ் (குறள்: 64)

இவை இனவெழுத்துப் பெற்று மோனை முதலாகிய தொடையும் தொடை விகற்பமும் போலாமை வேறுபடத் தொடுத்தமையான் மருட்செந்தொடை. பிறவுமன்ன.

இனி, வழியெதுகை வருமாறு.

### கட்டளைக் கலித்துறை

மண்டிலம் பண்டுண்ட திண்டோள வரகுணன் தொண்டியின் வாய்க்
கண்டலம் தண்டுறைக் கண்டதொன் றுண்டு கனமகராங்

குண்டலங் கெண்டை யிரண்டொடு தொண்டையுங்
கொண்டோர் திங்கள்
மண்டலம் வண்டலம் பக்கொண்டல் தாழ வருகின்றதே.
(யா. வி. சூ. 53 உரைமேற்.)

எனவும்,

கொங்குதங்கு..........................சித்தி தானே
(காரிகை-13-மேற்கோள்)

எனக்கொள்க. அனுப்பிராசம் என்னும் வடமொழியை, வழி யெதுகை என்பது தமிழ் வழக்கெனக் கொள்க.

இனி வழிமுரண் வருமாறு

### அறுசீர்க் கடிநெடிலடி யாசிரிய விருத்தம்

செய்யவாய்ப் பசும்பொ னோலைச் சீறடிப் பரவை யல்குல்
ஐயநுண் மருங்குல் நோவ வடிக்கொண்ட குவவுக் கொங்கை
வெய்யவாய்த் தண்ணென் நீலம் விரிந்தென விலங்கி நீண்ட
மையவா மழைக்கண் கூந்தல் மகளிரை வருக என்றான்
(சூளா. சீய. 101)

எனவும்,

### கட்டளைக் கலித்துறை

ஒருமால் வரைநின் றிருசுட ரோட்டிமுந் நீர்க்கிடந்த
பெருமா நிலனுஞ் சிறுவிலைத் தாவுண்டு பேதையர்கண்
பொருமா தவித்தொங்க லெம்கோன் பொரவல் லவன்பொதியிற்
கருமா விழிவெண்பற் செவ்வாய்ப் பசும்பொற் கனங்குழையே
(யா. வி. சூ. 53 உரைமேற்.)

எனவுங்கொள்க.

மோனை எதுகையிற் றிரிந்து பாவினம் வாராமை மேற் காட்டியவற்றும், பிறவற்றுள்ளும் கண்டுகொள்க.

நேரிழையே என்பது மகடூஉ முன்னிலை. (6)

## தரவு தாழிசைக்குப் புறனடை

(செய்யுளியலில் கலிப்பாவிற்குப் பொதுவிலக்கணம் கூறுமிடத்து முதன்மை உறுப்புகளாகத் தரவு தாழிசை கூறப்பட்டன. இவ்வொழிபியலில் அம்முதன்மை உறுப்பு களுக்கு ஒழிபாக பேரெல்லை, சிற்றெல்லையைச் சுட்டியிடும் இக்காரிகையை உரையாசிரியர் குணசாகரர் கூற்றுவழி நின்று காண்போம்.)

42. **சுருங்கிற்று மூன்றடி யேனைத் தரவிரு மூன்றடியே**
**தரங்கக்கும் வண்ணகக் கும்தர வாவது தாழிசைப்பா**
**சுருங்கிற் றிரண்டடி யோக்க மிரட்டி சுரும்பிமிருந்**
**தரங்கக் குழலாய் சுருங்குத் தரவினிற் தாழிசையே**

இக்காரிகை தரவு, தாழிசைகட்கு அடிவரையறை ஆமாறுணர்த்தற்பாற்று.

'சுருங்கிற்று மூன்றடி யேனைத்தரவு' என்பது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவும், வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவும் ஒழித்தல்லாத கலிப்பாவிற்குத் தரவு மூன்றடியே சிறுமை; பெருமை பாடுவோனது பொருள் முடிவுக்குறிப்பே வரையறை யில்லை யென்றவாறு.

'இரு மூன்றடியே தரங்குக்கும் வண்ணகக்குந் தரவாவது' என்பது; அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பாவிற்கும், வண்ணக வொத்தாழிசைக் கலிப்பாவிற்கும் பெருக்கஞ் சுருக்கமில்லை. ஆறடியே தரவாவதென்றவாறு.

'சுருங்கிற்று மூன்றடியேனைத் தரவு' என்றாராயினும் வெள்ளைக் கிரண்டடி என்னுங் காரிகையுள் கலிப்பாவிற்கு நான்கடிச்சிறுமை சொன்னமையால், தரவு கொச்சகக் கலிப்பாவிற்கு நான்கடியே சிறுமை வருவதென்றவாறு.

'தாழிசைப்பா சுருங்கிற் றிரண்டடியோக்க மிரட்டி' என்பது பொதுவகையால் தாழிசைகட் கிரண்டடிச் சிறுமை நான்கடிப்பெருமை, இடை மூன்றடியானும் வருவதென்றவாறு.

'சுரும்பிமிருந் தரங்கக் குழலாய்' என்பது மகடூஉ முன்னிலை

'சுரும்பிமிருந் தரவினிற் தாழிசையே' என்பது; தரவடியிற் தாழிசையடி சுருங்கி வருவதெனவுங் கொள்க.

இவற்றிற் கிலக்கியம் மேற்காட்டிய கலிப்பாவினுள்ளும் பிறவற்றினுள்ளுங் கண்டுகொள்க. (7)

**கூனுக்கும், கூறப்படாத யாப்புறுப்புகளுக்கும் புறனடை**

(செய்யுளியலில் ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பாவிற் குறுப்பாக வரும் கூனிற்கு ஒழிபும், எழுத்து முதலான ஆறுறுப்புக்களின்றி, யாப்பினில் யாப்புறுப்புகளாக இடம் பெற்றிடும் விகாரம், வகையுளி, வாழ்த்து, வசை, வனப்பு, பொருள்கோள் ஆகியவற்றைக் கூறிடும் இக்காரிகை குறித்த செய்திகளை உரையாசிரியர் வழி நின்று காண்போம்.)

43. பொருளோ டடிமுத னிற்பது கூனது வேபொருந்தி
இருள்சேர் விலாவஞ்சி யீற்றினு நிற்கு மினியொழிந்த
மருள்தீர் விகாரம் வகையுளி வாழ்த்து வசைவனப்புப்
பொருள்கோள் குறிப்பிசை யொப்புங் குறிக்கோள்
பொலங்கொடியே.

இக்காரிகை மேற்சொல்லப்பட்ட பாக்களுக் கெல்லா மிலக்கண முணர்த்துதற்பாற்று.

'பொருளோடடிமுத னிற்பது கூன்' என்பது; அடிமுதற்கண் பாவினது பொருளைத் தழுவித் தனியே நிற்பது கூன் எனப்படு மென்றவாறு.

'அதுவே பொருந்தி இருள்சேர்விலா வஞ்சி ஈற்றினு நிற்கும்' என்பது; அக்கூன் வஞ்சிப்பாவினிறுதிக் கண்ணும் நிற்குமென்றார். 'ஈற்றினும்' நிற்குமென்ற உம்மையான் வஞ்சியடியி னிடையேயும் கூன் வரப்பெறும் என்றவாறு.

'இருள்சேர்விலா வஞ்சி' என்று சிறப்பித்த வதனால் வஞ்சியடியினிறுதியும் நடுவும்அசை கூனாய்வருவது சிறப்புடைத்து. சீர் கூனாய் வந்து உகர ஈறாய் வியற்சீர் கூனாயல்லது வரப்பெறாவெனக் கொள்க.

[அசைச்சீர் எல்லாப் பாவினுள்ளும் அருகி அல்லது கூனாய் வாராது எனக்கொள்க. எனவே வெண்பா, ஆசிரியம், கலி என்னும் இவற்றின் இடையும் இறுதியுங் கூன் வரப் பெறாது எனக் கொள்க.] என்னை;

**அடியினிற் பொருளைத் தானினிது கொண்டு**
**முடிய நிற்பது கூனென மொழிப**
**வஞ்சியி னிறுதியும் ஆகும் அதுவே**
**அசைகூ னாகும் என்மனார் புலவர்**

(யா. வி. சூ. 94 உரைமேற்கோள்கள்)

என்றார் பல்காயனார்.

கூனைத் தனிச்சொல் லாய்வழங்கு வருமுளர் எனக்கொள்க. என்னை

**[தனியே.**
**அடிமுதற் பொருள்பெற வருவது தனிச்சொலஃ**
**திறுதியும் வஞ்சியுள் நடக்கும் என்ப**

(யா. வி. சூ. 94 உரைமேற்.)

என்றார் அவிநயனார்]

**அடிமுதற் பொருள்பெற வருவது தனிச்சொலஃ**
**திறுதியும் வஞ்சியுள் இயலும் என்ப**

(யாப்பருங்கலம்-94)

என்றாராகலின்.

[கொச்சகக் கலியுள் ஓரடி முழுவதும் கூனாய் வரப்பெறும். அவை சிறப்பில எனக் கொள்க.]

## நேரிசை வெண்பா

உதுக்காண், சுரந்தானா வண்கைச் சுவரன்மாப் பூதன்
பரந்தானாப் பல்புகழ்ப் பாடி – இரந்தார்மாட்
டின்மை யகல்வது போல இருணீங்க
மின்னும் அளித்தோ மழை.

*(யா. வி. சூ. 94 உரைமேற்.)*

இவ்வெண்பாவினுள் அடிமுதற்கண் 'உதுக்காண்' எனக் கூன் வந்தவாறு,

## நேரிசையாசிரியப்பா

அவரே, கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே
யானே, தோடா ரெல்வளை நெகிழ நாளும்[1]
பாடமை சேக்கையிற் படர்கூர்ந் திசினே
அன்னள் அளியள் என்னாது மாமழை
இன்னும் பெய்ய[2] முழங்கி
மின்னுந் தோழி யென்னுயிர்[3] குறித்தே

*(குறுந்தொகை-216)*

இவ் ஆசிரியப்பாவின் அடிமுதற்கண் 'அவரே' எனவும் 'யானே' எனவுங் கூன் வந்தவாறு.

## தரவு கொச்சகக் கலிப்பா

உலகினுள், பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாவே பிறழினும்
இருந்தகைய இறுவரைமேல்[4] எரிபோலச் சுடர்விடுமே
சிறுதகையார் சிறுதகைமை சிறப்பெனினும்[5] பிறழ்வின்றி
உறுதகைமை யுலகினுக்கோர் ஒப்பாகித் தோன்றாதே

இக்கலிப்பாவினுள் அடிமுதற்கண் 'உலகினுள்' எனக் கூன் வந்தவாறு.

---

1. ஏங்கிப் 2. பெய்யு 3. என்னின் னுயிர் 4. இருவரைமேல். 5. சிறப்பென்னும்

## குறளடி வஞ்சிப்பா

உலகே, முற்கொடுத்தார் பிற்கொளவும்
பிற்கொடுத்தார் முற்கொளவும்
உறுதிவழி யொழுகுமென்ப
அதனால்,
நற்றிறம் நாடுதல் நன்மை
பற்றற[1] யாவையும் பரிவறத் துறந்தே

இவ்வஞ்சிப்பாவின் அடிமுதற்கண் 'உலகே' எனக் கூன் வந்தவாறு.

மாவழங்கலின் மயக்குற்றன - வழி (புறம்-345-3)

என்னும் வஞ்சியடி யினிறுதிக் கண் 'வழி' யென அசைக் கூனாய் வந்தவாறு.

கலங்கழாஅலிற் - றுறை - கலக்குற்றன (புறம்-345-4)

என்னும் வஞ்சி யடியின் நடுவில் 'துறை' என அசைக் கூனாய் வந்தவாறு.

தேரோடத் துகள் கெழுமின - தெருவு
(யா. வி. சூ. 94 உரைமேற்.)

என்னும் வஞ்சியடியினது இறுதிக்கண் 'தெருவு' என உகர விறுதியாக இயற்சீர் கூனாயினவாறு கண்டுகொள்க.

'பொருந்திய' என்ற மிகையால், 'காமர் கடும்புனல்' (கலி. 38) என்னும் கொச்சகக்கலியுள் 'சிறுகுடியீரே! சிறுகுடி யீரே!' என ஓரடியாற் கூன் வந்தவாறு. பிறவு மன்ன.

'இனியொழிந்த மருடீஉர் விகாரம், வகையுளி, வாழ்த்து, வசை, வனப்பு, பொருள்கோள், குறிப்பிசை, ஒப்புங் குறிக்கோள்' என்பது;

---

1. பற்றிய

மேல் 'எழுத்தசை சீர் பந்தம் அடிதொடை பாவினங் கூறுவன் (தற்சிறப்புப்பாயிரம்) என்று அதிகாரம் பாரித்த காரிகையுள் ஓதப்படாத யாப்புறுப்பாய் மயக்கந்தீர வகுக்கப்பட்ட விகாரமும், வகையுளியும், வாழ்த்தும், வசையும், வனப்பும், பொருளும், பொருள்கோளும், குறிப்பிசையும் செய்யுள் ஒப்புமையும் ஆமாறு உபதேச முறைமையான் உண்ர்ந்து கொள்க என்றவாறு.

'பொலங்கொடியே' என்பது மகடூஉ முன்னிலை.

அவற்றுள் விகாரம் அறுவகைப்படும். அவை வலிக்கும் வழி வலித்தலும், மெலிக்கும் வழி மெலித்தலும், விரிக்கும் வழி விரித்தலும், தொகுக்கும் வழித் தொகுத்தலும், நீட்டும் வழி நீட்டலும், குறுக்கும் வழிக் குறுக்கலுமெ்ன. என்னை,

அந்நாற் சொல்லுந் தொடுக்குங் காலை
வலிக்கும்வழி வலித்தலும் மெலிக்கும்வழி மெலித்தலும்
விரிக்கும்வழி விரித்தலும் தொகுக்கும்வழித் தொகுத்தலும்
நீட்டும்வழி நீட்டலும் குறுக்கும்வழிக் குறுக்கலும்
நாட்டல் வலிய என்மனார் புலவர்

(தொல். சொல். 403)

என்றார் தொல்காப்பியனார்.

வரலாறு:-

1. குறுத்தாட் பூதஞ் சுமந்த
அறக்கதி ராழியெம் மண்ணலைத் தொழவே

இதனுள் குறுந்தா ளெனற் பாலதனைக் 'குறுத்தாள்' என வலிக்கும் வழி வலித்தவாறும்.

2. தண்டையி னினக்கிளி கடிவோள்
பண்டையள் அல்லள் மானோக் கினளே

இதனுள் தட்டை எனற் பாலதனைத் 'தண்டை' யென்று மெலிக்கும் வழி மெலித்தவாறும்.

3. வெண்மண லெக்கர் விரிதிரை தந்தநீர்
கண்ணாடி மண்டிலத் தூதாவி யொத்திழியுந்
தண்ணந் துறைவர் தகவிலரே தற்சேர்ந்தார்
வண்ணங் கடைப்பிடியா தார்

இதனுள் 'தண்டுறைவர்' எனற் பாலதனைத் 'தண்ணந் துறைவர்' என விரிக்கும் வழி விரித்தவாறும்.

## நேரிசை வெண்பா

4. பூத்தாட் புறவிற் புனைமதில் கைவிட்டார்
காத்தவிக் காவல ரேனையார் – பார்த்துறார்
வேண்டார் வணக்கி விறன்மதில் தான்கோடல்
வேண்டுமால் வேண்டார் மகன்

இதனுள் 'வேண்டாதாரை வணக்கி' யெனற் பாலதனை 'வேண்டார் வணக்கி' எனத் தொகுக்கும் வழித் தொகுத்தவாறும்.

## நேரிசை வெண்பா

5. பாசிழை யாகம் பசப்பித்தான் பைந்தொடியை
மாசேனன் என்று மனங்கொளீஇ – மாசேனன்
சேயிதழ்க் கண்ணி தருதலாற்[1] சேர்த்தியென்
நோய்தீர நெஞ்சின்மேல் வைத்து

*(1-5, யா. வி. சூ. 95 உரைமேற்.)*

இதனுட் 'பச்சிழை' யெனற் பாலதனைப் 'பாசிழை' யென்று நீட்டுவழி நீட்டியவாறும்.

6. யானை, யெருத்தத் திருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருத்தார்நன் றென்றேன் தியேன்

*(காரிகை-24 மேற்கோள்)*

இதனுட் 'தீயேன்' எனற் பாலதனைத் 'தியேன்' எனக்குறுக்கும் வழிக் குறுக்கியவாறுங் கண்டு கொள்க.

1. தருகிலான்

'மருள்தீர் விகாரம்' என்று சிறப்பித்த வதனால் வரலாற்று முறைமையோடுங் கூடிப் பொருந்தி வாரா நின்றன வல்லது 'துவைக்குப் பாலில்லை' எனற் பாலதனைத் 'தூவைக்குப் பாலில்லை' என்றாற்போலப் புணர்க்கப்படாது என்க.

இன்னும் 'மருள்தீர் விகாரம்' என்று சிறப்பித்த வதனால் தலைக்குறைதல், இடைக்குறைதல், கடைக்குறைதல் யென்று வருவனயவையும் வரலாற்று முறைமையோடுங் கூட்டி வழங்கப்படும் எனக்கொள்க.

வரலாறு:-

**மறையிதழ் புரையும் அஞ்செஞ் சீறடி**

*(யா. வி. சூ. 94 உரைமேற்.)*

இதனுள் 'தாமரை' எனற் பாலதனை 'மரை' எனத் தலைக் குறைத்து வழங்கினவாறு.

**வேதின வெரிநின் ஓதிமுது போத்து**

*(குறுந்தொகை-140)*

இதனுள் 'ஓந்தி' எனற் பாலதனை 'ஓதி' என இடைக்குறைத்து வழங்கினவாறு.

**அகலிரு விசும்பின் ஆஅல் போல**
**வாலிதின் மலர்ந்தன புன்கொடி மூசுண்டை**

*(மலைபடு. 100, 101)*

இதனுள் 'ஆரல்' எனற் பாலதனை 'ஆல்' என இடைக்குறைத்து வழங்கினவாறு.

**நீலுண் டுகிலிகை கடுப்ப**

இதனுள் 'நீலமுண் துகிலிகை பலவுடன்' எனற் பாலதனை 'நீலுண் துகிலிகை' என்று கடைக் குறைத்து வழங்கியவாறு கண்டு கொள்க. பிறவுமன்ன.

'அந்நாற்சொல்லுந் தொடுக்குங்காலை' என்ற வழி நான்கு சொல்லாவன இயற்சொல், திரிசொல், திசைச்சொல் வடசொல் என இவை.

என்னை;

> **இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்**
> **றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே**
> *(தொல்.சொல். 397)*

என்றாராகலின்.

அவற்றுள் இயற்சொல் வருமாறு.

> **இயற்சொல் தாமே இயம்புங் காலைச்**
> **செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்**
> **தம்பொருள் வழாஅமை இசைக்குஞ் சொல்லே**
> *(தொல்.சொல். 398)*

என்றாராகலின்.

அவை சோறு, கூழ், பால், பாளிதம் என்னுந் தொடக்கத்தன.

[இவை நடக்கும் எல்லை யாவையோவெனின் வையை யாற்றின் வடக்கும், மருதையாற்றின் தெற்கும் கருவூரின் கிழக்கும், மருவூரின் மேற்குமாகிய நான்கு எல்லைக்குட்பட்ட சோணாடு என்க.

என்னை;

> மன்ற வாணன் மலர்திரு வருளால்
> தென்றமிழ் மகிமை சிவணிய செய்த
> அடியவர் கூட்டமும் ஆதிச் சங்கமும்
> படியில்மாப் பெருமை பரவுறு சோழனுஞ்
> சைவமா தவருஞ் தழைத்தினி திருக்கு
> மையறு சோழ வளநாட் டென்ப

என்றாராகலின்.]

திரிசொல்லாவன ஒரு பொருளைக் குறித்த வேறு சொல்லாகியும் வேறுபொருள் குறித்தவொரு சொல்லாகியும் வருவன.

என்னை;

**ஒருபொருள் குறித்த வேறுசொல் ஆகியும்**
**வேறுபொருள் குறித்த ஒருசொல் ஆகியும்**
**இருபாற் றென்ப திரிசொல் கிளவி**

*(தொல்.சொல். 399)*

என்றாராகலின்.

வரலாறு:-

ஒரு பொருள் குறித்த வேறுசொல் அடுக்கல், பிறங்கல், விலங்கல், விண்டு, குவடு, வெற்பு என்பன போல்வன. வேறு பொருள் குறித்த ஒரு சொல் உந்தி. இதற்கு ஆற்றிடைக் குறையும், கொப்பூழும், தேருருளும், யாழகத்தோருறுப்பு என்பன போல்வன.

திசைச்சொல்லாவன கிள்ளை, மஞ்ஞை யென்பன போல்வன. செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்துந் தங்குறிப்பினால் வழங்குஞ் சொல். என்னை;

**செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தினும்**
**தம்குறிப் பினவே திசைச்சொற் கிளவி**

*(தொல்.சொல். 400)*

என்றாராகலின்.

அவை தாயைத் தள்ளை யென்பன போல்வன.

[செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரு கொடுந்தமிழ் நிலமாவன.

## நேரிசை வெண்பா

**தென்பாண்டி குட்டங் குடம்கற்கா வேண்பூதி**
**பன்றி அருவா அதன்வடக்கு - நன்றாய**

சீத மலாடு புனல்நாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்

(தொல். சொல். 400 உரைமேற்.)

இதை விரித்துரைத்துக் கொள்க.]

வடசொல்லாவன:- ஆசிரியத்திற்குந் தமிழிற்கும் பொது வெழுத்தானியன்ற சொல். என்னை;

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே

[சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்]

(தொல். சொல். 401, 402)

என்றாராகலின்.

அவையாவன உலகம், குங்குமம், நாகுணகம் என்பன போல்வன.

இனி வகையுளி என்பது முன்னும் பின்னும் அசை முதலாகிய உறுப்புகள் நின்றவழி யறிந்து, குற்றப்படாமல் வண்ணம் அறுத்தல்.

### நேரிசை வெண்பா

அருணோக்கு நீரா ரசைசீ ரடிக்கண்
பொருள்நோக்கா தோசையே நோக்கி - மருணீக்கிக்
கூம்பவுங் கூம்பா தலரவுங் கொண்டியற்றல்
வாய்ந்த வகையுளியின் மாண்பு

(யா. வி. சூ. 95 உரைமேற்.)

என்றாராகலின்.

### குறள் வெண்பா

கடியார்பூங் கோதை கடாயினான் திண்டேர்
சிறியார்தஞ் சிற்றில் சிதைத்து

(யா. வி. சூ. 95 உரைமேற்.)

இதனுள் 'கடியார்' என்றும் 'பூங்கோதை' யென்றுங் கடாயினானென்று மிவ்வாறு அலகிடின் ஆசிரியத்தளையும் கலித்தளையும் தட்டு வெள்ளைத்தன்மை குன்றிப்போஞ் சீர்கனிபுகிற் புல்லா தயற்றளை என்னும் இலக்கணத்தோடு மாறு கொள்ளுமாதலால் இதனைக் 'கடியார்பூ' என்று புளி மாங்காயாகவுங் 'கோதை' என்று தேமாவாகவும் இவ்வாறு அலகிடத் தளை சிதையாதாம்.

## குறள் வெண்பா

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் *(குறள்-4)*

இதனுள் 'நிலமிசை' யென்றும், 'நீடு' என்றும், 'வாழ்வார்' என்றும் அலகிடின் ஆசிரியத்தளை தட்டு வெண்பாவி னிறுதிக்கண் அசைச்சீர் ஆகற்பாலது இயற்சீராய், 'நிகரில் வெள்ளைக் கோரசைச்சீரும் ஒளிசேர் பிறப்பும் ஒண்காசும் இற்ற சீருடைச் சிந்தடியே முடிவாம்' என்னும் இலக்கணத்தோடு மாறுபடு மாதலின் 'நிலமிசை' எனக் கருவிளமாகவும், 'நீடுவாழ்' எனக் கூவிளமாகவும், 'வார்' என்றது நாளென்னும் ஓரசைச் சீராகவு மலகிடச் சீரும் தளையும் வண்ணமுஞ் சிதையாதாகும்.

## நேரிசை வெண்பா

பாடுநர்க்கும் ஆடுநர்க்கும் பண்டுதாம் கண்டவர்க்கும்
ஊடுநர்க்கும் கூடுநர்க்கும் ஒத்தலால் – நீடுநீர்
நல்வய லூரன் நறுஞ்சாந் தணியகலம்
புல்லலின் ஊடல் இனிது

*(யா. வி. சூ. 95 உரைமேற்.)*

இப்பாட்டினுள் டுகர, நகரங்கள் பிரிந்திசைத்தனவால் இரண்டடியும் நாலசைச்சீராயின. டுகர நகரங்கள் இரண்டினையுங் கூட்டி நிரையசையாக அலகிட வண்ணம் பிழையாதாகும். அல்லாவிடின் நாலசைச்சீராய் வண்ணம் அழிந்து நிற்குமெனக் கொள்க. பிறவுமன்ன.

வாழ்த்து இரண்டு வகைப்படும். மெய்வாழ்த்தும், இருபுற வாழ்த்துமென.

*வரலாறு:-*

### நேரிசை வெண்பா

கார்நறு நீலங் கடிகயத்து[1] வைகலும்
நீர்நிலை நின்ற பயன்கொலோ[2] - கூர்நுனைவேல்
வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியாற்
கொண்டிருக்கப் பெற்ற குணம்

*(முத்தொள்ளாயிரம்-65)*

இது மெய்வாழ்த்து

### நேரிசை வெண்பா

பண்டு மொருகாற்றன் பைந்தொடியைக் கோட்பட்டு
வெங்கடம்[3] வில்லேற்றிக் கொண்டுழந்தான் - தென்களந்தைப்
பூமான் றிருமகளுக் கின்னும் புலம்புமால்
வாமான்தேர் வையையார் கோ

இது இருபுற வாழ்த்து.

வசையுமிரண்டு வகைப்படும். மெய்வசையும், இருபுற வசையுமென.

*வரலாறு:-*

### நேரிசை வெண்பா

தந்தை இலைச்சுமடன் தாய்தொழீஇ தான்பார்ப்பான்
எந்தைக்கீ தெங்ஙனம் பட்டதுகொல்-முந்தை
அவியுணவி னார்தெரியின் யாவதாங் கொல்லோ
கவிகண்ண னார்தம் பிறப்பு

*(யா. வி. சூ. 96 உரைமேற்கோள்கள்)*

இது மெய் வசை.

---

1. கடியகத்து 2. தவங்கொலோ 3. வெங்கடத்து

### நேரிசை வெண்பா

**படையொடு போகாது நின்றெறிந்தான் என்றுங்**
**கொடையொடு நல்லார்கட் டாழ்ந்தான்-படையொடு**
**பாடி வழங்கும் தெருவெல்லாம் தான்சென்று**
**கோடி வழங்கு மகன்**

*(யா. வி. சூ. 96 உரைமேற்.)*

இது இருபுற வசை.

இனி வனப்பெட்டு வகைப்படும். அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என. [என்னை;

**அம்மை அழகு தொன்மை தோல் விருந்து**
**இயைபு புலனிழைபு எனவனப் பெட்டே**

என்றாராகலின்.]

அவற்றுள் 'அம்மை' என்பது சிலவாய, மெல்லியவாய சொற்களால் ஒள்ளியவாய பொருள்மேற் சிலவடியாற் சொல்லப் படுவது.

என்னை;

**சின்மென் மொழியாற் சீர்புனைந்து யாப்பின்[1]**
**அம்மைதானே அடிநிமிர் வின்றே**

(தொல்-பொருள்-547)

என்றாராகலின்.

வரலாறு:-

### குறள் வெண்பா

**அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்**
**தன்னோய்போற் போற்றாக் கடை** (குறள்-315)

எனக் கொள்க.

'அழகு' என்பது செய்யுட் சொல்லாகிய திரிசொற் களான் ஓசை இனியதாகப் புணர்க்கப்பட்டது.

---

1.சீரிது நுவலின், தாயபனுவலின்.

என்னை;

செய்யுள் மொழியால் சீர்புனைந் தியாப்பின்
அவ்வகை தானே அழகெனப் படுமே

(தொல்-பொருள்-548)

என்றவாறு. வரலாறு:-

## நேரிசையாசிரியப்பா

துணியிரும் பௌவம்[1] குறைய வாங்கி
அணிகிள ரடுக்கல் முற்றிய எழிலி
காலொடு மயங்கிய கனையிருள் நடுநாள்
யாங்குவந் தனையோ ஓங்கல் வெற்ப
நெடுவரை மருங்கில் பாம்பென[2] இழிதரும்
கடுவரற் கலுழி நீந்தி
வல்லியம் வழங்கும் கல்லதர் நெறியே

(யா. வி. சூ. 95 உரைமேற்.)

எனக்கொள்க.

'தொன்மை' என்பது பழையதாகி நிகழ்ந்த பெற்றி யுரைக்கப் படுவது. என்னை;

தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே

(தொல்-பொருள்.549)

என்றாராகலின்.

வரலாறு:-

செறிதொடி உவகை கேளாய் செஞ்சுடர்த்
தெறுகதிர்ச் செல்வன்..........

என்பதூஉம்; மகாபாரதமும், இராமாயணமும் முதலாகிய உடையனவுங் கொள்க.

---

1. பரப்பகம் 2. பரம்பற

'தோல்' என்பது இழும் என்னும் மெல்லிய வாகிய சொற்களால் விழுமியவாய்க் கிடப்பனவும், எல்லாச் சொற்களோடும் பலவடி யுடையவாய்க் கிடப்பனவுமென இருதிறத்தவாம்.

என்னை;

இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியான் அடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்னெறிப் புலவர்
*(தொல்-பொருள்-550)*

என்றாராகலின்.

வரலாறு:-

**நிலைமண்டில ஆசிரியப்பா**

பாயிரும் பரப்பகம் புகையப் பாம்பின்
ஆயிர மணிவிளக் கழலும் சேக்கைத்
துணிதரு வெள்ளம் துயில்புடை பெயர்க்கும்
ஒளியோன் காஞ்சி எளிதெனக் கூறின்
இம்மை இல்லை மறுமை இல்லை
நன்மை இல்லைத் தீமை இல்லை
செய்வோர் இல்லைச் செய்பொருள் இல்லை
அறிவோ ரியாரஃ திறுவுழி இறுகென்
*(யா. வி. சூ. 95 உரைமேற்.)*

இது மார்க்கண்டேயனார் காஞ்சி, இஃது இழுமென் மொழியால் விழுமியது நுவன்றது.

திருமழைத் தலைஇய விருணிற விசும்பின்
*(மலை படுகடாம்-1)*

என்னும் மலைபடுகடாம் பரந்த மொழியால் அடிநிமிர்ந்து தொழுகியது.

'விருந்து' என்பது புதிய ஆயினவற்றின் மேற்று.

என்னை;

விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே
(தொல்-பொருள்-551)

என்றாராகலின். அவை இப்பொழுதுள்ளாரைப் பாடுவன வந்தவழிக் கண்டுகொள்க.

'இயைபு' என்பது ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாக வந்த பாட்டு. என்னை;

ஞகாரை முதலா ளகாரை ஈற்றுப்
புள்ளி இறுதி இயைபெனப் படுமே
(தொல்-பொருள்-552)

என்றாராகலின். அவை வந்தவழிக் கண்டுகொள்க.

'புலன்' என்பது இயற்சொல்லாற் பொருடோன்றச் செய்யப்படுவது. என்னை;

தெரிந்த[1] மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே
(தொல்-பொருள்-553)

என்றாராகலின்.

வரலாறு:-

## நேரிசையாசிரியப்பா

பார்க்கடல் முகந்த பருவக் கொண்மூ
வார்ச்செறி முரசின் முழங்கி ஒன்னார்
மலைமுற் றின்றே வயங்குதுளி சிதறிச்
சென்றவள் திருமுகங் காணக் கடுந்தேர்

1. சேரி

இன்றுசெலக்[1] கடவுமதி பாக உதுக்காண்
மாவொடு புணர்ந்த மாஅல் போல
இரும்பிடி உழைய தாகப்
பெருங்காடு மடுத்த காமர் களிறே

(யா. வி. சூ. 95 உரைமேற்.)

எனவுங் கொள்க.

'இழைபு' என்பது வல்லொற்றியாதும் தீண்டாது செய்யுளியலுடையாரால் எழுத்தெண்ணி அடிவகுக்கப் பட்ட குறளடி முதலாகப் பதினேழ் நிலத்து ஐந்தடியும் முறையானே உடைத்தாய் ஓங்கிய சொற்களால் வருவது. என்னை;

ஒற்றொடு புணர்ந்த வல்லெழுத் தடக்காது
குறளடி முதலா ஐந்தடி ஒப்பித்
தோங்கிய சொல்லால்[2] ஆங்கனம் ஒழுகின்
இழைபின் இலக்கணம் இயைந்த தாகும்.

(தொல்-பொருள்-554)

என்றாராகலின்.

செய்யுளியலுடையார் நாற்சீரடி தன்னையே நான்கெழுத்து முதலா ஆறெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியையுங் குறளடி என்றும்,

ஏழெழுத்து முதலா ஒன்பதெழுத்தின்காறும் உயர்ந்த மூன்றடியையும் சிந்தடி என்றும்,

பத்தெழுத்து முதலாப் பதினான்கெழுத்தின்காறும் உயர்ந்த ஐந்தடியையும் அளவடி என்றும்,

பதினைந்தெழுத்து முதலாப் பதினேழெழுத்தின்காறும் உயர்ந்த மூன்றடியையும் நெடிலடி என்றும்,

பதினெட்டு எழுத்து முதலாக இருபது எழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் கழிநெடிலடி என்றும், இருபது எழுத்தின் மிக்க நாற்சீரடிப்பா இல்லையென்றும் வேண்டுவர்.

1. இன்று புகக். 2. மொழியால்

அவ்வெழுத்து எண்ணுகின்றுழிக் குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஆய்தமும், ஒற்றும் ஒழித்து ஒழிந்த உயிரும், உயிர்மெய்யுமே கொண்டு எண்ணப்படுமெனக் கொள்க.

### நேரிசை வெண்பா

குற்றிகரம் குற்றுகர மென்றிரண்டும் ஆய்தமும்
ஒற்று மெனவொரு நான்கொழித்துக் – கற்றோர்
உயிரு முயிர்மெய்யு மோதினார் எண்ணச்
செயிரகன்ற செய்யு ளடிக்கு

*(யா. வி. சூ. 25 உரைமேற்.)*

என்பவாகலின்,

[நாற்சீர் கொண்ட தடியெனப் படுமே

நாலெழுத் தாதி ஆக ஆறெழுத்
தேறிய நிலத்தே குறளடி யென்ப

ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
யீரெழுத் தேற்றம் அவ்வழி யான

பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
ஒத்த நாலெழுத் தேற்றலங் கடையே

மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப

மூவா றெழுத்தே கழிநெடிற் களவே
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப

*(தொல். பொருள். 341, 345-349)*

### நேரிசை வெண்பா

ஈரிரண்டு மோரேழு மீரைந்து மூவைந்தும்
பாரியன்ற நாற்சீர் பதினெட்டும் – ஓரா

விளையும் பதினேழ் நிலத்துக் குறள்சிந்து
அளவு நெடில்கழிலோ டைந்து

(யா. வி. சூ. 25 உரைமேற்.)

என்றாராகலின்.]

வரலாறு:-

**நேரிசையாசிரியப்பா**

பேர்ந்து சென்று சார்ந்து சார்ந்து
தேர்ந்து தேர்ந்து மூசி நொந்து
வண்டு சூழ விண்டு வீங்கி
நீர்வாய் கொண்டு நீண்ட நீலம்
ஊர்வாய் ஊதை வீச ஊர்வாய்
மதியேர் வண்டோ டொல்கி மாலை
நன்மணங் கமழும் பல்நெல் லூர
அமையேர் மென்றோள் ஆயரி நெடுங்கண்
இணையீ ரோதி ஏந்திள வனமுலை
இறும்பென மலரிடை எழுந்த மாவின்
நறுந்தழை துயல்வரூஉஞ் செறிந்துஏந் தல்குல்
அணிநடை அசைஇய வரியமை சிலம்பின்
மணிமருள் வணர்குழல் வளரிளம் பிறைநுதல்
ஒளிநிலவு வயங்கிழை உருவுடை மகளொடு
நளிர்முழவு முழங்கிய அணிநிலவு நெடுநிகர்
இருந்தளவு மலரளவு சுரும்புலவு நறுந்தொடை
கலனளவு கலனளவு நலனளவு நலனளவு
பெருமணம் புணர்ந்தனை என்பவஃ
தொருநீ மறைப்பின் ஒழிகுவ[1] தன்றே[2]

(யா. வி. சூ. 95 உரைமேற்.)

எனக் கொள்க.

1. ஒழுகுவ 2. இச்செய்யுளின் பாடம் பலவாறு வேறுபட்டுள்ளது.

இனிப் பொருள்கோள் என்பது உம்மைத்தொகை. பொருளும் பொருள்கோளும் என.

### குறள் வெண்பா

அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல் (குறள்-254)

என்பதனுள் அருளும் அருளல்லதும் என உம்மைத்தொக்காற் போலக் கொள்க.

பொருளாவது ஐந்திணையும் அவை சார்பாகத் தோன்றிய அகமும், அகப்புறமும், புறமும், புறப்புறமும் என்றவையே.

ஐந்திணையாவன குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதமென விவை. என்னை;

குறிஞ்சி பாலை முல்லை நெய்த
லிந்த மருதமோ டைந்து மகமே

என்றாராகலின்; அவை வருமாறு;

மொய்வரை கூதிர் முன்பனி நள்ளிருள்
ஐவனந் தினைவெதி ரறிவரும் புணர்ச்சி
பெருந்தண் சிலம்பன் வெற்பன் பொருப்பன்
கருங்கழற் சென்ற கானவர் குறவர்
தேம்பிழி வெறிகொள் சிறுகுடி குறிஞ்சி
யருவி தீஞ்சுனை யானை வேங்கை
பொருவில் காந்தள் பொறிமயின் முருகிய
மின்றீங் குறிஞ்சியோ டின்னவை பிறவுஞ்
சென்றுயர் குறிஞ்சித் திணையது வகையே

இது குறிஞ்சித்திணை.

வெம்பாலைத் தம்வேனில் பின்பனி செம்பக
ருணர்செனடைப் பிரிதல் மீளி விடலை

காளை கலையொடு வேட ரெயினர்
வெறிபடை நிரைகொள் குறும்பலா நீர்நெல்லி
யம்பசுங்கா யுரமில வென்மை யொமைமராஅம்
பருந்தே கொஃறுடி பஞ்சுரம் பிறவும்
திருந்திய பாலைத் திணையது வகையே

*இது பாலைத்திணை.*

தவலரும் புறவந் தண்கார் மாலை
வரகொடு முதிரை மனைவயி னிறுத்த
லண்ண றொன்றல் கண்ணொளிர் நெடுமா
லிடையார் யாரினன்றுந் தொண்டி விடைக்கொள்
வள்ளி தத்தைக் கான பாறிரலை
குருந்த மெல்லிணர் முல்லை கானங்
கோழிப் பண்சா தாரியோ
டெனவு முல்லைக் கெய்திய உறுப்பே.

*இது முல்லைத்திணை.*

அருங்கடல் பின்பனி யந்தி மீன்விலை
யிரங்கல் கொண்கன் றுறைவன் சேர்ப்பன்
திரைதரு வருணன் றிமிலர் நுளையர்
பரதவர் விரைமதுப் பணிகர் .....
லொருமையில் பாக்கம் பட்டின முவர்க்குழி
பொருமுரண் முதலை புன்னை கைதையதன்
முழுபறை மன்னு செவ்வழி யோடின்னவை
நெய்தற் கெய்திய உறுப்பே

*இது நெய்தற்றிணை.*

ஒல்லென் பழனம் ஒழிபனி விடியல்
பல்கதிர்ச் சென்னெல் பரத்தையிற் பிரிதல்
புகழ்தரு..........பு....................யூடன்
மகிழ்நன் ஊரன் மலர்த்தா ரிந்திரன்
அந்தணர் அரசர் வணிகர் வினைஞர்

தெங்கந் தேறல் சிறையர் உடல்பெரும்
பதிமூதூர் பொய்கை தீம்புனல் குருகுங்
காட்டெருமை காஞ்சித் தாமரை தாரா
முழவ மருதமோ டெனவும்
சீர்சார் மருதத் திணையது வகையே

இது மருதத்திணை.

*அகமாவது களவுங் கற்புமென விரண்டாம். என்னை;*

ஐந்திணைத் தழுவிய அகமெனப் படுவது
கந்தருவே நெறிமையிற் களவொடு கற்பே

*என்றாராகலின்.*

அவற்றுள்,
களவெனப் படுவது
ஊழ்காரண மாகஉள் மாண்பொத்த கிழவனும்
கிழத்தியுந் தாமே யறிந்த காமப்
புணர்ச்சியுண் மகிழ்தலும் பிரிதலை வற்புறுத்
தொருசிறை நீங்கலும் நினைதலு மாங்கினம்
புணர்தலும் புணர்வில் காலைப் புரைதீர்ப்
பாங்கனை யுன்னுதலுங் குறுகலு முரைத்தலுங்
கழறலு மவ்வுரை மறுத்தலுமவ னவ்வாரணங்
கெவ்விடத் தெவ்வகைத் தென்றலும் பிழைத்தலும்
சென்றவட் கண்டுவந்திடங் காட்டலு மொன்றலும்
அவரை யாண்டுரிமை யன்றே குனிற்றுணை
விழுமுற படுதலும் மதியுடம் படுதலும்
வரையொடு புகுதலும் வரையா துணர்த்தலும்
கேட்ட வருணர்வும் சேட்படை நிலைகளும்
நாட்டவர் கூறலும் நகையொடு மறுத்தலும்
மடன்மா கோளும் மற்றது விலக்கலும்
தன்சிறப் புரைத்தலுந் தலைவிக் கவன்குறை
யின்ன தென்றலு மிடமவர்க் கிசைத்தலுங்
குறிப்பொடு கடுஞ்சொற் கூறலு முறையின்

நெறிப்பட யுரைத்தலும் நீங்கலும் புணர்தலும்
செறிப்பின மறிவுறுத்தலு மிருட்குறி வேண்டலு
மறுத்தலும் பிரிவு நேர்தலும் செலவு
மறியு நீர்மையு மடையும் பெற்றிங்
குறியிடை யூறும் நெறியிடை விலக்கு
மல்லகுறியு மலரும் பொருள்வயின் பிரிதலு
மொருவழித் தணத்தலும் வரைவு கடாதலும்
வரைவெதிர் மறுத்தலும் போக்கா ராய்ச்சியு
மறத்தொடு நிலைகளும் ஆக்கிய
பிறவும் பாற்பட வருமே களவு.

இஃது களவு.

கற்பெனப் படுவது காண்போ டியையப்
பொற்புடை யரிவைப் புணர்தலும் புகறலும்
யதுவிலக் காதுயிது பயனென்றலுங் காதற்
றோழியை கைப்படுத் தொழியப் போதலுந்
தாயற் புலம்பலுஞ் செவிலி சுரத்திடை
சேறலுங் கண்டவர் மொழிகளும் வடமா
செலவு மாயிடைக் கொண்டலு மணத்தலும்
பிரிவுந் தணப்பிலு வகையு மழுங்கலும்
வலித்தலும் அஃதவட் கிசைத்தலும் வழுவில்
தேர்ச்சியும் வன்பொறை மறுத்தலும் பிரிவு
மாற்றலும் பெயர்வு மெதிர்ச்சியும் நீடிய
புணர்ச்சி நிகழ்வும் பரத்தையிற் கூடிய
பிறவு மறிதற் குறிகளும் வாயில்
வகையும் மனையொ டுணியும் புலவியு
மூடலுந் தலைமக னுணர்த்தலு முழுவ
லன்பொடுண ராதூடிக் கெழுமா நீர்மையுங்
கிழவோன் புலவியும் ஊடிய கிழத்தி
யுணர்தலும் புணர்வோடு கூடிய
பிறவுங் கூறுதற் குரித்தே கற்பு.

இஃது கற்பு.

*எய்திய இரண்டுங் கைகோளென்ப. இஃதகப் பொருள்.*

கிழவன், பாங்கன், கிழத்தி, தோழி
வழுவிறேர்ப் பாகன் செவிலி நற்றாய்
வியனெறி யறிவன் வேலவன் கட்டுவிச்சி
யயலூர் சேரி யடுக்குநர் தொடுப்போர்
பாணன் கண்டோர் மறலியர் பார்ப்பார்
காமக் கிழத்தி பரத்தைய ரென்றிவர்
அவ்விடத் தானவ் வரவர் கேட்பச்
செவ்விதிறுந் திறத்தன கூற்றோ வறிதிற்
கூறலும் மனதொடஃ றிணைநெறியிற் கேட்குந
போலவும் வருமே இன்னவை பிறவும் அகத்திணை.

*அகப்புறமாவன*

காந்தமும் வள்ளியுந் சுரநடையு முதுபாலையும்
பாசறை முல்லையு மில்லாண் முல்லையுங்
குற்றிசையுங் குறுங்கலியுந் தாபதமும் தபுதாரமு
மென்றிவை பத்துங் கைக்கிளை பெருந்திணை
யென்றிவை யிரண்டு மெனக் கொள்க.

*என்னை;*

ஆய்ந்த அகப்புறம் ஐயிரண்டு ஆயுங்கால்
காந்தள் கலிமடன்மா ஏறுதல் காமமிக்
காய்ந்தவர் வள்ளி வெறியாட்டம் வாய்ந்த
சுரநடை மாதர் வருத்தம் சுரனுள்
முதுபாலை தன்னை மொழியின் மதுமலர்த்தார்க்
காவலன் வீயக் கவன்ற றதுவாகும்
பாசறை முல்லை தலைமகன் பாசறைக்கண்
மாசறு மாதரை உள்ளுதல் மாசற்ற
இல்லவள் முல்லையும் அஃதேயாம் சொல்லுங்கால்
குற்றிசை கோல்வளை யாளைத் தலைமகன்
முற்றத் துறந்த துறவாங் குறுங்கலி

முற்றத் துறந்த தலைமகனை முன்னின்று
பொற்றொடி மாதர் பழிதூற்றாம் குற்றந்தீர்
தாபதம் காதற் தலைமகளை நீங்கிய
மேவரு மாதர் நிலையாகும் மேவருஞ்சீர்
நீக்கப்பட் டாளை உவந்த தலைமகன்
பார்த்துறூஉம் தன்மை யதுவாம் தபுதாரம்
பத்தும் அகத்தின் புறமே.

*(யா. வி. சூ. 96 உரைமேற்.)*

அகத்தின் புறமாவது

கைக்கிளை என்பது ஒருதலைக்காமம், பெருந்திணை என்பது பொருந்தா காமம், கைக்கிளை பெருந்திணை இரண்டும் அகப்புறத்திணை.

என்னை;

கைக்கிளை பெருந்திணை யென்றிவை யகப்புறம்

கைக்கிளை யென்றா பெருந்திணை யென்றா
அத்திணை யிரண்டும் அகத்திணைப் புறனே

*(யா. வி. சூ. 96 உரைமேற்.)*

அவற்றுள்,
கைக்கிளையாவது
காட்சி முதலாகக் கலவியி னொருதலை
வேட்கையிற் புலம்புதல் கைக்கிளை; அதுதான்
கேட்போ ரில்லாத கிளவிகள் பெறுமே

*(களவியல். காரிகை. 24))*

காட்சி முதலா கையறு றுயர்கொடு
கூட்ட மல்லா வொருதலைக் காமம்

பெருந்திணை யாவது
ஒப்பில் கூட்டமு மூத்தோர் முயக்கமுஞ்
செப்பிய அகப்பொருட் சிதைவும் பெருந்திணை

எனவுங் கொள்க.

காந்தளும் வள்ளியுங் குறிஞ்சிக்குப் புறனே

சுரநடை முதுபாலை யென்றிவை யிரண்டும்
பயனிலை யில்லாப் பாலைக்குப் புறனே

பாசறை முல்லையு மில்லாண் முல்லையு
மாசறு சிறப்பின் முல்லைக்குப் புறனே

குற்றிசைக் குறுங்கலி மருதத்துப் புறனே

தாபத நிலையுந் தபுதார நிலையும்
நீர்க்கடல் சூழ்ந்த நெய்தலது புறனே

எனவும் சொன்னாராகலின்.

இனிப் புறமாவது; வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பையென இவை ஏழும் எனக் கொள்க.

என்னை;

வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சியும்
குடையுழிஞை நொச்சி தும்பை யென்கிற
ஏழும் புறமென மொழிப.

இது பன்னிரு படலம் என்றாராகலின்.

அவை வருமாறு.

வெட்சி நிரைகவர் தல்மீட்டல் கரந்தையாம்
உட்கார் மேற்செல்வது வஞ்சியா – முட்காதே
யெதிரூன்றல் காஞ்சியா மெயில்காத்தல் நொச்சி
அதுவளைத் தலாகும் உழிஞை அதிரப்
பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கோர்
செருவென் றதுவாகை யாம்

(வீரசோழியம். சூ. 104 உரைமேற்.)

எனக் கொள்க.

புறப்புறமாவன:- வாகையும் பாடாண் பாட்டும் பொதுவியலுமென்ற மூன்றுமெனக் கொள்க. என்னை;

**வாகைப் பாடாண் பொதுவியல் திணையெனப்**
**போகிய மூன்றும் புறப்புற மாகும்.**

(பு. வெ. மா. சூ. *19-4,5)*

என்றாராகலின்.

இவற்றின் விகற்பமெல்லாம் வெண்பா மாலையுள்ளும் பன்னிரு படத்துள்ளும் கண்டுகொள்க.

ஒருசா ரகத்திணை, புறத்திணை, அகப்புறத்திணை என மூன்றா யடங்கு மென்ப.

அஃதாமாறு அவினயத்துட் கண்டுகொள்க.*

இனிப் பொருள்கோள் ஒன்பது வகைப்படும். நிரனிறைமொழிமாற்றுஞ், சுண்ணமொழிமாற்றும், அடிமறிமொழிமாற்றும், அடிமொழிமாற்றும், பூட்டுவிற் பொருள்கோளும், புனல்யாற்றுப் பொருள்கோளும், தாப்பிசைப்பொருள்கோளும், கொண்டுகூட்டுப்பொருள் கோளுமே.

அவற்றுள், நிரனிறை யிரண்டு வகைப்படும். பெயர் நிரனிறையும், வினைநிரனிறையுமென. அவற்றுட் பெயர் நிரனிறை வருமாறு.

## இன்னிசை வெண்பா

**கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி**
**மதிபவள முத்தம் முகம்வாய் முறுவல்**
**பிடிபிணை மஞ்ஞை மடைநோக்குச் சாயல்**
**வடிவினளே வஞ்சி மகள்**

(நேமிநாதம்-92 மேற்கோள்)

எனக் கொள்க.

---

ஐந்திணையாவன......அவிநயத்துட் கண்டுகொள்க.* என்பது வரை உள்ள நெடிய பகுதிகள் இச்சுவடிப் பிரதியில் மட்டுமே காணப்படுகின்றன. பிற அச்சுப் பிரதிகளில் காணப்படவில்லை.

இனி வினைநிரனிரை வருமாறு.

### நேரிசை வெண்பா

காதுசேர் தாழ்குழை யாய்கன்னித் துறைச்சேர்ப்ப
போதுசேர் தார்மார்ப ! போர்ச்செழிய - நீதியால்
மண்ணமிர்தம் மங்கையர்தோள் மற்றாரை ஏற்றார்க்கு
நுண்ணிய ஆய பொருள்

*(யா. வி. சூ. 96 உரைமேற்.)*

எனவும்,

### இன்னிசை வெண்பா

அடல்வேல் அமர்நோக்கி நின்முகங் கண்டே
யுடலு மிரிந்தோடு மூழ்மலரும் பார்க்கும்
கடலும் கனையிருளும் ஆம்பலும் பாம்பும்
தடமதிய மாமென்று தாம்

*(யா. வி. சூ. 95 உரைமேற்.)*

எனவுங் கொள்க.

இனி முறைநிரனிறை, எதிர்நிரனிறை, மயக்க நிரனிறை, எழுத்துநிரனிறை, மிகையெண் நிரனிறை, குறையெண் நிரனிறை என்று வேண்டுவாரு முளரெனக் கொள்க. அவை வந்தவழிக் கண்டுகொள்க. என்னை;

அவற்றுள்
நிரனிறை தாமே
வினையினும் பெயரினும் நினையத் தோன்றிச்
சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்

(தொல். சொல்-45)

என்றாராகலின்.

[அவற்றுட் சில வருமாறு.

### எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கூற்றுவனை வில்மதனை யரக்கக் கோனைக்
 கூனிலவைக் குஞ்சரத்தை இஞ்சி மூன்றை
ஏற்றுலகின் புறவுருவ மாளத் தோள்கள்
 இறவெறிப்ப விமையப்பெண் வெருவ வேவக்
காற்றொழிலால் நயனத்தால் விரலாற் கற்றைக்
 கதிர்முடியாற் கரதலத்தால் கணையாற் பின்னும்
ஊற்றழிய உதைத்தெரிந்து நெரித்துச் சூடி
 உரித்தெரித்தான் அவனெம்மை யுடைய கோவே

எனவும்,

### நேரிசை வெண்பா

காதம சூக விநுதிதுனி கண்புருவஞ்
சீதமுகங் கொங்கை திரண்டவாய் - ஓதந்
கரும்பார் மழபாடிக் காங்கேயன் பட்டத்
தரும்பார் குழலளகத் தார்க்கு

எனவும் கண்டுகொள்க.]

இனிச் சுண்ணமொழி மாற்று வருமாறு.

### இன்னிசை சிந்தியல் வெண்பா

சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை

(யா. வி. சூ. 59 உரைமேற்.)

இதனுள் 'சுரை' என்பதனோடு 'மிதப்ப' என்பது பொருள் கொள்ளவும். 'அம்மி' என்பதனோடு 'ஆழ' என்பது பொருள் கொள்ளவும், 'யானை' என்பதனோடு 'நீத்து' என்பது பொருள் கொள்ளவும் வந்தமையான் சுண்ணமொழிமாற்று.

என்னை;

சுண்ணந் தானே
பட்டாங் கமைந்த யீரடி எண்சீர்
ஒட்டுவழி யறிந்து துணிந்தன ரியற்றல்
(தொல். சொல்-406)

என்றாராகலின்.

இனி அடிமறிமொழிமாற்று வருமாறு:-

சூரல் பம்பிய ...............நீவர லாறே
(காரிகை-28 மேற்கோள்)

என்பது வேண்டிற்றோர் அடியான் முதலாகச் சொன்னாலும் ஓசையும் பொருளும் பிழையாது வந்தமையால் அடிமறிமொழி மாற்று. என்னை;

அடிமறிச் செய்தி யடிநிலை திரிந்து
சீர்நிலை திரியாது தடுமா றும்மே
(தொல். சொல்-407)

என்றாராகலின்.

இனி அடிமறி மொழிமாற்று வருமாறு:-

குறள் வெண்பா

ஆலத்து மேல குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு (யா. வி. சூ. 95 உரைமேற்.)

என்பதனுள் ஆலத்து மேலகுரங்கு, குளத்துள குவளை என்று இரண்டினையும் மொழிமாற்றிப் பொருள் கொண்டமையால் அடிமொழிமாற்று. என்னை;

மொழிமாற் றியற்கை
சொன்னிலை மாற்றிப் பொருளெதி ரியைய
முன்னும் பின்னுங் கொள்வழிக் கொளாஅல்
(தொல். சொல்-409)

என்றாராகலின்.

### பஃறொடை வெண்பா

சொல்லாதல் சொல்லின் பொருளாதல் முன்முறைவைத்
தவ்வகை நேர்கொள் நிரல்நிறையாம் அவ்வவ்
விடையிட் டெதிரும் விராய்ச்சொல் இடையிடை
இட்டன சுண்ணம் இரண்டடியாற் சொல்வர
நிற்ப அடிமொழி மாற்றல் அலதடி
மறியா முழுவதும் யாப்பு

(யா. வி. சூ. 95 உரைமேற்.)

இதனை விரித்துரைத்துக் கொள்க.*

இனிப் பூட்டுவிற் பொருள்கோள் வருமாறு:-

### நேரிசை வெண்பா

திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்து படிற்பெரிதாம் ஏதம்-உறந்தையர்கோன்
தண்ணார மார்பின் தமிழர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு

(முத்தொள்ளாயிரம்-24)

இதனுட் 'திறந்திடுமின்' என்பது 'கதவு' என்பதனோடு நோக்கு உடைமையிற் பூட்டுவிற் பொருள்கோளாயிற்று.

இனிப்புனல்யாற்றுப் பொருள்கோள் வருமாறு:-

அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலும் குற்றஞ்
சொலற்பால அல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்

(நான்மணிக்கடிகை - 28)

இஃது அடிதோறும் பொருளற்று வந்தமையால் புனல் யாற்றுப் பொருள்கோள்.

---

சொல்லாதல்..........விரித்துரைத்துக் கொள்க.* எனும் இப்பகுதி இச்சுவடிப் பிரதியில் மட்டும் காணப்படுகிறது. பிற அச்சுப்பிரதிகளில் காணப்பெறவில்லை.

இனி அளைமறி யாப்புப் பொருள்கோள் வருமாறு:-

**தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைத்து தண்டூன்றித்**
**தளர்வாய் தாமுஞ்**
**சூழ்ந்த வினையாக்கை சுடவிளித்து நாற்கதியிற்**
**சுழல்வார் தாமும்**
**மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்றே**
**முனிவார் தாமும்**
**வாழ்ந்த பொழுதினே வானெய்த நெறிமுன்னி**
**முயலா தாரே**

*(யா. வி. சூ. 95 உரைமேற்.)*

இதனுள் 'வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதார்' என்னும் இறுதிச் சொல் இடையும், முதலும் சென்று பொருள் கொண்டமையால் அளைமறி யாப்புப் பொருள்கோளாயிற்று.

இனித் தாப்பிசைப் பொருள்கோள் வருமாறு.

**குறள் வெண்பா**

**உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊனுண்ண**
**அண்ணாத்தல் செய்யா தளறு** (குறள்-255)

இதனுள் உண்ணாமையுள்ள துயிர்நிலை யெனவும், ஊனுண்ண வண்ணாத்தல் செய்யாதளறெனவும், நடுவு நின்ற 'ஊன்' என்னும் சொல் முதலு மிறுதியுஞ் சென்று பொருள் கொண்டமையாற் றாப்பிசைப் பொருள் கோளாயிற்று.

இனிக் கொண்டு கூட்டுப் பொருள்கோள் வருமாறு.

### இன்னிசை வெண்பா

**தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்**
**வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி**
**அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே**
**வங்கத்துச் சென்றார் வரின்**

*(நேமிநாதம். சூ. 92 மேற்கோள்)*

இதனுள் அஞ்சனத்தன்னப் பைங்கூந்தல் எனவும், தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி பசலையெனவுஞ் சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொண்டமையாற் கொண்டு கூட்டுப் பொருளாயிற்று.

### நேரிசை வெண்பா

**ஆரிய மன்னர் பறையின் எழுந்தியம்பும்**
**பாரி பறம்பின்மேல் தண்ணுமை - காரி**
**விறல்முள்ளூர் வேங்கை வெதிர்நாணுந்[1] தோளான்**
**நிறனுள்ளூ ருள்ள தலர்.**

*(யா. வி. சூ. 95 உரைமேற்.)*

இதனுள் 'தண்ணுமை நாணுந்தோள்' எனவும், 'நிறம் வேங்கை' எனவும், 'அலர் ஆரிய மன்னர் பறையி னெழுந்தியம்பும்' எனவும் சொற்களைக் கூட்டிப் பொருள் கொண்டமையால் இதுவுங் கொண்டு கூட்டுப் பொருள் கோள். பிறவுமன்ன.

இனிக் 'குறிப்பிசை' என்பது எழுத்தால் ஓசையான் வந்த முற்கும், வீணையும் இலதையும் அநுகரணமும் முதலாக உடையன செய்யுளகத்து வந்தால் அவற்றைச் செய்யுணடை யழியாமல் அசையுஞ் சீருந் தளையு மடியுந் தொடையும் பிழையாமற் கொண்டலகிட்டு வழங்கப் படுமெனக் கொள்க.

---

1.வேங்கைவீ தானாணுந்

வரலாறு:-

## நேரிசை வெண்பா

மன்றலங் கொன்றை மலர்மிலைந் துஃகுவஃ
கென்று திரியு மிடைமகனே - சென்று
மறியாட்டை உண்ணாமல் வண்கையால் வல்லே
அறியாயோ அண்ணாக்கு மாறு.

எனக்கொள்க. ஒழிந்தனவு மிடைக்காடனார் பாடிய ஆசிரிய[1] முறியுட் கண்டுகொள்க.

என்னை;

எழுந்த விசையன அசையின சீர்க
ணிறைத்தவும் படுமென்று நேர்ந்திசி னோரே
(யா. வி. சூ. 95 உரைமேற்கோள்கள்)

[எழுத்தல் விசையை யசைகொடு சீர்தளை
நிறைக்கவும் படுமென நேர்ந்திசி னோரே]

என்றாராகலின்.

'ஒப்பும்' என்பது மேற்சீரும் தளையும் அடியும் வரையறுக்கப் பட்ட பாவும், பாவினமுஞ் சொன்ன பெற்றியில் திரிந்தும், மிக்கும், குறைந்தும் வந்தாலும் அவற்றை ஒருபுடையொப்புமை நோக்கி யொழிந்த செய்யுட்களின் பாற்சாத்தி வழங்கப்படும் என்றவாறு.

வரலாறு:-

கோழியுங் கூவின குக்கில் குரலியம்புந்[2]
தாழியுள் நீலத் தடங்கணீர் போதுமினோ
ஆழிசூழ் வையத்தெ மண்ண லடியேத்திக்[3]
கூழை நனையக் குடைந்துங் குளிர்புனல்
ஊழியும் மன்னுவா மென்றேலோ ரெம்பாவாய்
(யா. வி. சூ. 95 உரைமேற்.)

---

1. ஊசிமுறி, 2. குரல் காட்டுந் 3. அறிவனடியேத்தி

வேயே தடமென்றோள் வில்லே கொடும்புருவம்
வாயே வளர்ப்பவளம் மாந்தளிர் மாமேனி
நோயே முலைசுமப்ப வென்றார்க் கருகிருந்தார்
போயே உயிர்பாலருத் திபேடியோ வென்றன்
இலங்கு மணிப்பூணி நாழிப்படியே வென்றாள்*

எனவும், நாற்சீர் நாலடியான் வருவதுமென்று வரையறுத்துச் சொன்னார். இஃது ஐந்தடியான் வந்தது ஆயினும் ஒருபுடையொப்புமை நோக்கிக் கலிவிருத்தத்தின் பாற்படுத்து வழங்கப்படும். இதனைத் தரவு கொச்சக மெனினும் இழுக்காது.

சுற்றுநீர் சூழ்கிடங்கிற்
பொற்றாமரைப்பூம் படப்பைத்தெண்ணீர்
நல்வய லூரன் கேண்மை
யில்லிருங் கூந்தற் கலரா னாவே

(யா. வி. சூ. 95 உரைமேற்.)

வஞ்சிப்பாவிற்கு மூன்றடிச் சிறுமை யென்றெடுத்தோதினார். இஃதிரண்டடியான் வந்ததாயினும் ஒருபுடையொப்புமை நோக்கி வஞ்சிப்பாவின் பாற்படுத்து வழங்கப்படும். பிறவும் புராணக் கவிஞராற் பாடப்பட்ட இலக்கியங்கள் மிக்குங் குறைந்தும் வரினும் இவ்விலக்கணத்தா லொருபுடையொப்புமை நோக்கி ஒன்றன்பாற்படுத்து வழங்கப்படும்.

'ஒப்பும்' என்றவும்மையால் வண்ணமும் புனைந்துரையும் அடியின்றி நடப்பனவும் ஓரடியான் நடப்பனவும் நூலும் பாட்டுரையும் மந்திரமும் முதுசொல்லுமா மாறுரைத்துக் கொள்க.

அவற்றுள் வண்ணம் நூறு திறத்தன. அவை சொல்லுமாறு. தூங்கிசை வண்ணம், ஏந்திசை வண்ணம், அடுக்கிசை வ்ண்ணம், பிரிந்திசை வண்ணம், மயங்கிசை

வண்ணம் எனவிவை. இவ்வைந்தினை முதலாக வைத்து அகவல் வண்ணம், ஒழுகிசை வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம் என நான்கினையு மிடை வைத்துக் குறில் வண்ணம், நெடில் வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இடையிசை வண்ணம் என விவ்வைந்தினையுங் கடை வைத்துக் கூட்டி யுறழ்ந்திட நூறு வண்ணம் பிறக்கும். அவை வருமாறு.

**தூங்கேந் தடுக்கல் பிரிதல் மயங்கிசைவைத் துப்பின்னும்**
**பாங்கே யகவ லொழுகல் வலிமெலிப் பாற்படுத்திட்**
**டாங்கே குறினெடில் வல்லின மெல்லின மோடிடையைத்**
**தாங்கா துறழ்தரத் தாம்வண்ண னூறுந் தலைப்படுமே**

என்றாராகலின்.

இஃதன் வழிவண்ணம் நூறு முறழ்ந்து கொள்க.

வரலாறு:-

## தூங்கிசை வண்ணம்

குறிலகவற்றூங்கிசை வண்ணம், நெடிலகவற்றூங்கிசை வண்ணம், வலியகவற்றூங்கிசை வண்ணம், மெலியகவற் றூங்கிசை வண்ணம், இடையகவற்றூங்கிசை வண்ணம் எனவும்,

குறிலொழுகற் றூங்கிசை வண்ணம், நெடிலொழுகற் றூங்கிசை வண்ணம், வலியொழுகற் றூங்கிசை வண்ணம், மெலியொழுகற்றூங்கிசை வண்ணம், இடையொழுகற் றூங்கிசை வண்ணம் எனவும்,

குறில் வல்லிசைத் தூங்கிசை வண்ணம், நெடில் வல்லிசைத் தூங்கிசை வண்ணம், வலிவல்லிசைத் தூங்கிசை வண்ணம், மெலிவல்லிசைத் தூங்கிசை வண்ணம், இடைவல்லிசைத் தூங்கிசை வண்ணம் எனவும்,

குறில் மெல்லிசைத் தூங்கிசை வண்ணம், நெடில் மெல்லிசைத் தூங்கிசை வண்ணம், வலி மெல்லிசைத் தூங்கிசை வண்ணம், மெலி மெல்லிசைத் தூங்கிசை வண்ணம், இடை மெல்லிசைத் தூங்கிசை வண்ணம் எனவும் ஆகத் தூங்கிசை வண்ணம் இருபது.

## ஏந்திசை வண்ணம்

குறிலகவல் ஏந்திசை வண்ணம், நெடிலகவல் ஏந்திசை வண்ணம், வலியகவல் ஏந்திசை வண்ணம், மெலியகவல் ஏந்திசை வண்ணம், இடையகவல் ஏந்திசை வண்ணம் எனவும்,

குறிலொழுகல் ஏந்திசை வண்ணம், நெடிலொழுகல் ஏந்திசை வண்ணம், வலியொழுகல் ஏந்திசை வண்ணம், மெலியொழுகல் ஏந்திசை வண்ணம், இடையொழுகல் ஏந்திசை வண்ணம் எனவும்,

குறில் வல்லிசை ஏந்திசை வண்ணம், நெடில் வல்லிசை ஏந்திசை வண்ணம், வலி வல்லிசை ஏந்திசை வண்ணம், மெலி வல்லிசை ஏந்திசை வண்ணம், இடைவல்லிசை ஏந்திசை வண்ணம் எனவும்,

குறில்மெல்லிசை ஏந்திசை வண்ணம், நெடில் மெல்லிசை ஏந்திசை வண்ணம், வலி மெல்லிசை ஏந்திசை வண்ணம், மெலிமெல்லிசை ஏந்திசை வண்ணம், இடைமெல்லிசை ஏந்திசை வண்ணம் எனவும் ஆக வேந்திசை வண்ணம் இருபது.

## அடுக்கிசை வண்ணம்

குறிலகவலடுக்கிசை வண்ணம், நெடிலகவலடுக்கிசை வண்ணம், வலியகவலடுக்கிசை வண்ணம், மெலியகவலடுக்கிசை வண்ணம், இடையகவலடுக்கிசை வண்ணம் எனவும்,

குறிலொழுகலடுக்கிசை வண்ணம், நெடிலொழுகலடுக்கிசை வண்ணம், வலியொழுகலடுக்கிசை வண்ணம், மெலியொழுகலடுக்கிசை வண்ணம், இடையொழுகலடுக்கிசை வண்ணம் எனவும்,

குறில் வல்லிசையடுக்கிசை வண்ணம், நெடில் வல்லிசை யடுக்கிசை வண்ணம், வலி வல்லிசையடுக்கிசை வண்ணம், மெலி வல்லிசையடுக்கிசை வண்ணம், இடை வல்லிசையடுக்கிசை வண்ணம் எனவும்,

குறில் மெல்லிசையடுக்கிசை வண்ணம், நெடில் மெல்லிசை யடுக்கிசை வண்ணம், வலிமெல்லிசை யடுக்கிசை வண்ணம், இடைமெல்லிசையடுக்கிசை வண்ணம் எனவும் ஆக அடுக்கிசை வண்ணம் இருபது.

### பிரிந்திசை வண்ணம்

குறிலகவற் பிரிந்திசை வண்ணம், நெடிலகவற் பிரிந்திசை வண்ணம்,வலியகவற் பிரிந்திசை வண்ணம், மெலியகவற் பிரிந்திசை வண்ணம், இடையகவற் பிரிந்திசை வண்ணம் எனவும்,

குறிலொழுகற் பிரிந்திசை வண்ணம், நெடிலொழுகற் பிரிந்திசை வண்ணம், வலியொழுகற் பிரிந்திசை வண்ணம், மெலியொழுகற் பிரிந்திசை வண்ணம், இடையொழுகற் பிரிந்திசை வண்ணம் எனவும்,

குறில் வல்லிசைப் பிரிந்திசை வண்ணம், நெடில் வல்லிசைப் பிரிந்திசை வண்ணம், வலி வல்லிசைப் பிரிந்திசை வண்ணம், மெலி வல்லிசைப் பிரிந்திசை வண்ணம், இடை வல்லிசைப் பிரிந்திசை வண்ணம் எனவும்,

குறில் மெல்லிசைப் பிரிந்திசை வண்ணம், நெடில் மெல்லிசைப் பிரிந்திசை வண்ணம், வலி மெல்லிசைப் பிரிந்திசை வண்ணம், மெலி மெல்லிசைப் பிரிந்திசை வண்ணம், இடை மெல்லிசைப் பிரிந்திசை வண்ணம் எனவும் ஆக பிரிந்திசை வண்ணம் இருபது.

## மயங்கிசை வண்ணம்

குறிலகவல் மயங்கிசை வண்ணம், நெடிலகவல் மயங்கிசை வண்ணம், வலியகவல் மயங்கிசை வண்ணம், மெலியகவல் மயங்கிசை வண்ணம், இடையகவல் மயங்கிசை வண்ணம் எனவும்,

குறிலொழுகல் மயங்கிசை வண்ணம், நெடிலொழுகல் மயங்கிசை வண்ணம், வலியொழுகல் மயங்கிசை வண்ணம், மெலியொழுகல் மயங்கிசை வண்ணம், இடையொழுகல் மயங்கிசை வண்ணம் எனவும்,

குறில் வல்லிசை மயங்கிசை வண்ணம், நெடில் வல்லிசை மயங்கிசை வண்ணம், வலி வல்லிசை மயங்கிசை வண்ணம், மெலி வல்லிசை மயங்கிசை வண்ணம், இடை வல்லிசை மயங்கிசை வண்ணம் எனவும்,

குறில் மெல்லிசை மயங்கிசை வண்ணம், நெடில் மெல்லிசை மயங்கிசை வண்ணம், வலி மெல்லிசை மயங்கிசை வண்ணம், மெலி மெல்லிசை மயங்கிசை வண்ணம், இடை மெல்லிசை மயங்கிசை வண்ணம் எனவும் ஆக மயங்கிசை வண்ணம் இருபது. ஆக வண்ணம் நூறு மிவ்வாறே உறழ்ந்து கண்டுகொள்க.

இனித் தொல்காப்பியனார் முதலாகிய வொரு சாராசிரியர் வண்ணமிரு பதென்றெடுத் தோதினர்.

என்னை;

வண்ணந் தாமே நாலைந் தென்ப
(தொல். பொருள்-525)

அவைதாம்,
பாஅ வண்ணம் தாஅ வண்ணம்
வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்
இயைபு வண்ணம் அளபெடை வண்ணம்
நெடுஞ்சீர் வண்ணம் குறுஞ்சீர் வண்ணம்

சித்திர வண்ணம் நலிபு வண்ணம்
அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்
ஒழுகு வண்ணம் ஒரூஉ வண்ணம்
எண்ணு வண்ணம் அகைப்பு வண்ணம்
தூங்கல் வண்ணம் ஏந்தல் வண்ணம்
உருட்டு வண்ணம் முடுகு வண்ணமென்
றாங்கவை என்ப[1] அறிந்திசி னோரே

*(தொல். பொருள்-525)*

*என்றாராகலின்.*

[அவற்றுட்
பாஅ வண்ணஞ்
சொற்சீர்த் தாகி நூற்பா பயிலும்.

தாஅ வண்ணஞ்
இடையிட்டு வந்த எதுகைத் தாகும்.

வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே.

மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே.

இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே.

அளபெடை வண்ணம் அளபெடை பயிலும்.

நெடுஞ்சீர் வண்ணம் நெட்டெழுத்துப் பயிலும்.

குறுஞ்சீர் வண்ணம் குற்றெழுத்துப் பயிலும்.

சித்திர வண்ணம் குறியவும் நெடியவும்
ஒத்துநேர்ந் தடுக்கிய வியற்கைத் தென்ப.

நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்.

அகப்பாட்டு வண்ணம்
முடியா ததுபோன்று முடிந்ததன் மேற்றே.

---

1. ஆங்கன மறிய, ஆங்கன மொழிப.

புறப்பாட்டு வண்ணம்
முடிந்தது போன்று முடியாத தாகும்.
ஒழுகு வண்ண மோசையி னொழுகும்.
ஒரூஉ வண்ணம் ஒரூஉத்தொடை தொடுக்கும்.
எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்.
அகைப்பு வண்ணம் அறுத்தறுத் தொழுகும்.
தூங்கல் வண்ணம் வஞ்சி பயிலும்.
ஏந்தல் வண்ணம்
சொல்லிய சொல்லிற் சொல்லியது சிறக்கும்.
உருட்டு வண்ணம் அராகந் தொடுக்கும்.
முடுகு வண்ணம் அடியிறந் தொழுகும்.]

*(தொல். பொருள். 526-545)*

*இவை எல்லாம் தொல்காப்பியத்துள்ளும் யாப்பருங்கல விருத்தியுள்ளும் கண்டு கொள்க.*

*இனிப் புனைந்துரை இரண்டு வகைப்படும். பெரியதனைச் சுருக்கிச் சொல்லுதலும், சிறியதனைப் பெருக்கிச் சொல்லுதலு மென. என்னை;*

உரைக்கப் படும்பொருட் கொத்தனை யெல்லாம்
புகழ்ச்சியின் மிக்க புனைந்துரை ஆகும்

*என்றாராகலின். வரலாறு:-*

## நேரிசை வெண்பா

அடையார்பூங் கோதையாட் கல்குலுந் தோன்றும்
புடையார் வனமுலையுந் தோன்றும் - இடையாதுங்
கண்டுகொளா தாயினுங் காரிகை நீர்மையாட்
குண்டாகல் வேண்டும் நுசுப்பு

*(யா. வி. சூ. 95 உரைமேற்கோள்கள்)*

*இது பெரியதனைச் சுருக்கிச் சொல்லுதல்.*

### நேரிசை வெண்பா

அவாப்போல் அகன்றத னல்குற்மேற் சான்றோர்
உசாப் போல வுண்டே மருங்குல் - உசாவினைப்
பேதைக் குரைப்பான் பிழைப்பிற் பெருகினவே
கோதைக்கொம் பன்னாள் குயம்

இது சிறியதனைப் பெருக்கிற்று.

பொன்மலி கூடல் பூமலி கச்சு
மாரி யீகை மணியணி மாடம்

(யா. வி. சூ. 95 உரைமேற்.)

எனயிவையும் சிறியதனைப் பெருக்கின வெனக் கொள்க.

இனி அடியின்றி நடப்பன பாட்டுரையும் நூலுரையும் மந்திரமும் பிசியும் முதுசொல்லும் அங்கதமும் வாழ்த்தும் முதலாக உடையன எனக்கொள்க. என்னை;

உரையொடு நூலிவை அடியில நடப்பினும்
வரைவில வென்பு வாய்மொழிப் புலவர்

(யா. வி. சூ. 95 உரைமேற்.)

என்றார் பல்காயனார்.

வாய்மொழி பிசியே முதுசொல் என்றாங்
காமுறை மூன்று மன்ன வென்ப

(யா. வி. சூ. 95 உரைமேற்.)

என்றார் நற்றத்தனார்.

பாட்டுரையும் நூலுரையும் மந்திரமும் பிசியும் முதுசொல்லும் அங்கதமும் வாழ்த்தும் என்றின்னவை பிறவும் ஓரடியானும், பலவடியானும் வரப்பெறுமெனக் கொள்க. என்னை;

செயிர்தீர் செய்யுட் டெரியுங் காலை
அடியி னீட்டத் தழகுபட் டியலும்
ஓரோவடி யானும் ஓரோவிடத் தியலும்

அவைதாம்

பாட்டுரை நூலே மந்திரம் பிசியே
முதுசொ லங்கதம் வாழ்த்தொடு பிறவு
மாக்கின வென்ப வறிந்திசி னோரே

(யா. வி. சூ. 95 உரைமேற்கோள்கள்)

என்றார் பல்காயனார்.

இவை அடியின்றி நடப்பனவு ஓரடியான் நடப்பனவுஞ் சொன்னவாறு.

இனி நூலாவது மூவகைத்தாய், மூவரின் நடைபெற்று, நால்வகைப் பயத்ததாய், ஏழுவகை ஆசிரியமத விகற்பத்தாய்ப் பத்துவகைக் குற்றந்தீர்ந்து பத்துவகை மாட்சித்தாய்ப் பதின்மூன்று வகையான உரைபெற்று முப்பத்திரண்டு தந்திர யுத்தியோடும் புணர்ந்ததெனக் கொள்க.

அவற்றுள் மூவகை நூலாவன தந்திரம், சூத்திரம், விருத்தி யென விவை. முதனூல், வழிநூல், சார்புநூல் எனவுமமையும்.

மூவரின் நடைபெறுதலென்பது:- அவை மூன்றும் நடாத்துவார் மூவாசிரியரெனக் கொள்க.

நால்வகைப் பயனாவன:- அறம், பொருள், இன்பம், வீடெனவிவை.

ஏழுவகை ஆசிரிய மத விகற்பமாவன:- உடம்படுதல், மறுத்தல், பிறர்தம் மதமேற்கொண்டு களைதல், தானாட்டித் தனாஅது நிறுத்தல், இருவர் மாறுகோள் ஒருதலை துணிதல், பிறர்நூற் குற்றங்காட்டல், பிறிதொரு படாஅன் தன்மதம் கொளல் என்னும் இவை.

பத்துவகைக் குற்றமாவன:- குன்றக்கூறல், மிகைபடக் கூறல், கூறியதுகூறல், மாறுகொளக் கூறல், வழூஉச் சொற் புணர்த்தல், மயங்க வைத்தல், வெற்றெனத் தொடுத்தல், மற்றொன்று விரித்தல், சென்று தேய்ந்திறுதல், நின்று பயனின்மை எனவிவை.

பத்துவகை மாட்சியாவன:- சுருங்கச்சொல்லல், விளங்க வைத்தல், நவின்றோர்க்கினிமை, நன்மொழிப் புணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், உலக மலையாமை, முறையின் வைத்தல், விழுமியது பயத்தல், விளங்கிய உதாரணத்தாதல் எனவிவை.

பதின்மூன்று வகையுரையாவன:- சூத்திரம் தோன்றல், சொல் வகுத்தல், சொற்பொருளுரைத்தல், வினாதல், விடுத்தல், விசேடங் காட்டல், உதாரண வரவுக் காட்டல், ஆசிரிய வசனங் காட்டல், அதிகார வரவுக் காட்டல், தொகுத்து முடித்தல், விரித்துக் காட்டல், துணிவுக் கூறல், பயனொடு புணர உரைத்தல் எனவிவை.

முப்பத்திரண்டு தந்திரவுத்தியாவன:- நுதலிப்புகுதல், ஒத்து முறை வைத்தல், தொகுத்துக் காட்டல், வகுத்துக் காட்டல், முடிவிடம் கூறல், முடித்துக் காட்டல், தானெடுத்துக் காட்டல், மொழிதல், பிறன்கோட் கூறல், சொற்பொருளுரைத்தல், இரட்டுற மொழிதல், ஏதுவின் முடித்தல், எடுத்தமொழியின் எய்தவைத்தல், இன்னதல்லது இதுவென மொழிதல், ஒன்றென முடித்தல், தன்னினம் முடித்தல், எஞ்சிய சொல்லினெய்தக் கூறல், மாட்டெறிந்து மொழிதல், பிறநூர்ன் முடிந்தது தானுடம்படுதல், தன்குறி வழக்கமிக விரித்து உரைத்தல், இறந்தது விலக்கல், முன்மொழிந்து மேற்கோடல், பின்னது நிறுத்தல், எடுத்துக் காட்டல், முடிந்தது முடித்தல், சொல்லின் முடிவில் அப்பொருள் முடித்தல், தொடர்சொற் புணர்தல், யாப்பறுத்து அமைத்தல், முடித்தோமென்றல், முடித்தாம் என்றல், விகற்பத்தின் முடித்தல், தொகுத்துடன் முடித்தல், ஒருதலை துணிதல், உய்த்துணர வைத்தல் எனவிவை.

இவ்வாறு சொன்னார் பாடலனார் என்னும் ஆசிரியரெனக் கொள்க. தந்திரவுத்தி முப்பத்திரண்டினும் பலவென்பாருமுளரெனக் கொள்க. (8)

## காரிகைகள் கூறிய பொருளும் தொகையும்

(இதுகாறும் காரிகைகளில் சுட்டிக்கூறப்பட்ட யாப்பிலக்கணப் பொருளும், அவற்றின் தொகையையும் தொகுத்துரைக்கும் இக்காரிகையைக் காண்போம்.)

44. எழுத்துப் பதின்மூன் றிரண்டசை சீர்முப்ப
தேழ்தளையைந்
திழுக்கி லடிதொடை நாற்பதின் மூன்றைந்து
பாவினமூன்
றொழுக்கிய வண்ணங்க ளூறென்ப தொண்பொருள்
கோளிருமூ
வழுக்கில் விகாரம் வனப்பெட் டியாப்புள் வகுத்தனவே

இக்காரிகை இந்நூல் வகுத்த பொருளெல்லாம் தொகுத் துணர்த்துதல் நுதலிற்று.

எழுத்துப் பதின்மூன்றாவன:- குற்றெழுத்து, நெட்டெழுத்து, உயிரெழுத்து, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஆய்தம், மெய், வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர்மெய், அளபெடையென விவை.

இரண்டசையாவன:- நேரசை, நிரையசை எனவிவை.

சீர் முப்பதாவன:- ஈரசைச்சீர் நான்கும், மூவசைச்சீர் எட்டும், நாலசைச்சீர் பதினாறும், ஓரசைச்சீர் இரண்டுமெனவிவை.

ஏழ்தளையாவன:- நேரொன்றிய ஆசிரியத்தளை, நிரையொன்றிய ஆசிரியத்தளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை எனவிவை.

ஐந்தடியாவன:- குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி எனவிவை.

தொடை நாற்பத்து மூன்றாவன:- அடிமோனை, அடியியைபு, அடியெதுகை, அடிமுரண், அடியளபெடை, அந்தாதித்தொடை, இரட்டைத்தொடை, செந்தொடை இவையும் இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடை விகற்பமும் எனவிவை.

ஐந்து பாவாவன:- வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா எனவிவை.

இனம் மூன்றாவன:- தாழிசை, துறை, விருத்தம் எனவிவை.

ஒழுக்கிய வண்ணம் நூறாவன:- குறிலகவற்றூங்கிசை வண்ணம் முதலாக வுடையன.

ஒன்பதொண் பொருள்கோளாவன:- நிரனிறை பொருள் கோள், மொழி மாற்றுப் பொருள்கோள், சுண்ணமொழி மாற்றுப் பொருள்கோள், அடிமறிமொழி மாற்றுப் பொருள்கோள், பூட்டுவிற் பொருள்கோள், புனல் யாற்றுப் பொருள்கோள், அளைமறியாப்புப் பொருள் கோள், தாப்பிசைப் பொருள்கோள்; கொண்டு கூட்டுப் பொருள்கோள் எனவிவை.

இருமூவழக்கில் விகாரமாவன:- வலிக்கும் வழி வலித்தலும், மெலிக்கும் வழி மெலித்தலும், விரிக்கும் வழி விரித்தலும், தொகுக்கும் வழி தொகுத்தலும், நீட்டும் வழி நீட்டலும், குறுக்கும் வழிக் குறுக்கலும் எனவிவை.

வனப்பெட்டாவன:- அம்மை, யழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு எனவிவை.

யாப்பின் வகுத்தனவே யென்பது யாப்பருங்கலம் என்னும் யாப்பினுட் சொல்லப்பட்டன என்றவாறு.

ஏகார மீற்றசையே

'ஐந்திழுக்கிலடி' என்று சிறப்பித்த வதனால் திணை வழுவும், பால் வழுவும், மரபு வழுவும், வினா வழுவும், விடை வழுவும், கால வழுவும், இட வழுவும் என்று ஓதப்பட்ட வேழு வழுவும் படாமற் புணர்க்கப்படுமெனக் கொள்க.

என்னை;

> திணைபால் மரபு வினாச்செப்புக் கால
> மிடனோ டேழாகு மிழுக்கு
>
> (நேமி. சொல். 95 உரைமேற்.)

என்பார் அவிநயனார்.

திணை வழுவாவது:- உயர்திணையை அஃறிணை யாகவும், அஃறிணையை உயர்திணையாகவும் புணர்க்கப் பட்டது. வருமாறு சாத்தன் வந்தது. எருது வந்தான் எனக்கொள்க.

பால் வழுவாவது:- ஆண்பாலைப் பெண் பாலாகவும், பெண்பாலை ஆண்பாலாகவும், ஒருமைப்பாலாகவும் புணர்ப்பது.

வரலாறு:- சாத்தன் வந்தாள், கொற்றியுண்டான், பேடன் வந்தார், மகள் வந்தான், பெண்டிர் உண்டான், குமரிகள் கிடந்தான், அது வந்தன, அவை வந்தது எனக்கொள்க.

மரபு வழுவாவது:- வரலாற்று முறைமையின் வழுவச் சொல்லுவது, மரபு வழுவாவது கடம்பூர்க்கு வழியாது என்றாளிடம் பூணியென்னாவின் கன்று என்றாற்போல; ஒன்று வினாவ வொன்றுரைப்பது.

கால வழுவாவது:- எதிர்காலம், இறந்த காலம், நிகழ்காலம் என்ற மூன்று காலமும் மயங்கச்சொல்லுவது.

வரலாறு:- நெருநல்லுண்ணும், இன்றுண்பன், நாளை யுண்டாம் என்றாற்போலச் சொல்வது.

இடவழுவாவது:- தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்றிடமுந் தம்முன் மயங்கச் சொல்வது.

வரலாறு:- யான் வந்தாய், நீ வந்தேன், அவன் வந்தது என்றார்ற் போலச் சொல்லுவது.

இனி வழுவாவது திணை, பால், மரபு என்ற வழி மரபியன் மொழிகளிற் சில வருமாறு.

ஆடு விடையே றெருது மோத்தை
சேவல் செம்மல் செத்தகர் கலைகளி
றேற்றை கடுவன் கடாஅப் போத்திரலை
பகடென் றின்னவை ஆண்பெயர்

மகமு பிடிமந் தினாகு அளகு
பாட்டி பெடைகுமரி கன்னி பிணாஅப்
பெண்பிணை மகள்பிண வள்மூடென்
றின்னவை பெண்பெயர்

குழவி மகார் மறிகுருளை குட்டிபறழ்
பார்ப்புப் பிள்ளை பைதண் கன்றென்
றின்னவை யிளமைக் கெய்திய பேரே

இவையிற்றின் விகற்பம் வந்தவழிக் கண்டு கொள்க.

இனி வண்ணம் நூறு என்னாது 'வழுக்கிய வண்ண'மென்று சிறப்பித்த வதனால் ஒருசாராசிரியர் பாஅ வண்ணம் முதலாகிய வண்ணம் இருபதென்று சொல்லுவாரு முளரெனக் கொள்க.*

இருமூ விகாரமென்னாது 'வழுக்கில் விகாரம்' என்று சிறப்பித்தவதனால் எழுத்துக்குற்றஞ், சொற்குற்றம், பொருட்

---

என்னை; திணைபால்.......உளரெனக்கொள்க.* எனும் இப்பகுதி . இச்சுவடிப் பிரதியில் காணப்படுகிறது. பிற அச்சுப்பிரதிகளில் காணப்படவில்லை.

குற்றம், யாப்புக்குற்றம், அலங்காரக் குற்றம், ஆனந்தக் குற்றம் என்னும் இவ்ஆறு குற்றமும் படாமல் புணர்க்கப்படுஞ் செய்யுளெனக் கொள்க.

அவற்றுள் எழுத்துக் குற்றமாவன:- எழுத்ததிகாரத் தொடு மாறுகொள்ளுவது.

*வரலாறு:-*

**நேரிசை வெண்பா**

**வெறிகமழ் தண்சிலம்பின் வேட்டமே யன்றிப்**
**பிறிதுங் குறையுடையான் போலுஞ் - செறிதொடீஇ**
**தேமா னிதணத்தான் நாமாக நம்புனத்தே**
**மாமான்பின் வந்த மகன்**

இதனுள் தேமா வென்ற பாலதனைத் தேமா னென்று னகர வொற்றுப்பட புணர்ந்தமையின் எழுத்துக் குற்றமாயிற்று.

என்னை;

**முன்னிலை நெடிலு மாவும் மாவும்**
**னம்மிகப் புணரு மியங்குதிணை யான**

என்பதாகலின்.

இனிச் சொற்குற்றமாவது:- சொல்லதிகாரத்தோடு மாறு கொள்வது; என்னை;

**சொல்லின் வழுவே சொல்லோத்து மரபிற்**
**சொல்லிய குற்றந் தோன்ற லான.**

(யா. வி. சூ. 95 உரைமேற்கோள்கள்)

என்பதாகலின்.

வரலாறு:-

### நேரிசை வெண்பா

இசையெல்லாங் கொட்ட எழிற்றானை யூர்ந்து
வசையிலா மன்னர்வந் தேத்த - இசையு
மடிசில் பருகி யணியார்த்துப் போந்தான்
கொடிமதிற் கூடலார் கோ[1]

(யா. வி. சூ. 95 உரைமேற்.)

இதனுள், 'இசையெல்லாமார்ப்ப' எனவும், 'எழிற் றானை நாப்பண் எனவும், அடிசில் அன்று எனவும், அணியணிந்து எனவு மிவ்வாறு பொதுவினாலெடுத்துக் கொண்டு பொதுவினான் முடிக்கற்பாலதனைச் சிறப்பு வினையான் ஒன்றற்கேயுரிய சொற் புணர்த்தமையாற் சொற்குற்ற மாயிற்று. என்னை;

வேறுவினைப் பொதுச்சொல் ஒருவினைக் கிளவார்

(தொல். சொல்.46)

எனவும்,

வேறுவினை யுடைய பொதுவினை கிளப்பப்
பொதுவினை யுடைய வேற்றுமை உண்டோ

(யா. வி. சூ. 95 உரைமேற்.)

என்றாராகலின்.

வரலாறு:-

### நேரிசை வெண்பா

முன்னுந் தொழத்தோன்றி முள்ளெயிற்றாய் அத்திசையே
யின்னுந் தொழத்தோன்றிற் றீதேகாண் - மன்னும்
பொருகளிமால் யானைப் புகர்க்கிள்ளி பூண்போற்
பெருகொளியால் மிக்க பிறை

(தொல்.பொருள்-114 உரைமேற்.)

இது நாண் நாட்டம்.

---

1. கோழியார்

### நேரிசை வெண்பா

பண்டிப் புனத்துப் பகலிடத் தேனலுட்
கண்டிக் களிற்றை யறிவன்மற் - றிண்டிக்
கதிரன் பழையனூர்க் கார்நீலக் கண்ணா
யுதிர முடைத்திதன் கோடு

இது நடுங்க நாட்டம்.

இதுவும் பொருளதிகாரத்தொடு மாறுகொண்டமை யாற் பொருட்குற்றமாயின. என்னை;

நாணவு நடுங்கவு நாடாள் தோழி
காணுங் காலைத் தலைமகள் தேத்து

என்றாராகலின்.

### நேரிசை வெண்பா

வாளை மேய்ந்த வளைகோட்டுக் குதிரை
கோழிலை வாழைக் கொழுமடல் உறங்கும்
ஊரன் செய்த கேண்மை
தேரை வாலினும் பெரிதா கின்றே

இதுவுழிப் பொருடிரண்டதின்மையாற் பொருட் குற்றமாயிற்று. இதனைப் பிறிது பொருட்டொடர்மொழி யென்னும் அலங்காரக் குற்றம் என்பாருமுளர்.

இனி யாப்புக்குற்றமாவது யாப்பதிகாரத்தோடு மாறு கொள்வது. என்னை;

யாப்பின் வழியே யாப்பின திலக்கணங்
கோப்ப வாராக் கோவைத் தாகும்

(யா. வி. சூ. 95 உரைமேற்கோள்கள்)

என்றாராகலின். வருமாறு:-

**கானக நாடன் கருங்கோன் பெருமலைமேல்**
**யானை கிடந்தாற் போலாய பெருங்கற்கள்**
**தாமே கிடந்தன கொல்லோ அவையேற்றிப்**
**பெற்றிப் பிறக்கி வைத்தா ருளர்கொல்லோ**

(யா. வி. சூ. 95 உரைமேற்.)

இது முதலெடுத்துக் கொண்ட வோசையிற் கெட்டுப்பின் பாவிற் கட்டுரையான் வந்தமையான் யாப்புக் குற்றமாயிற்று.*

இனி அலங்காரக் குற்றமாவது:- அலங்காரத்திற் சொன்ன முறைமையின் வழுவுவது.

வரலாறு:-

## நேரிசை வெண்பா

**வெண்டிங்கள் பொன்றிலங்கு வெண்சங்கு சங்கனைய**
**வண்டிலங்கு தாழை வளர்தோடு - விண்டடங்குங்**
**கள்ளாவி நாறுங் கருங்கடல்சூழ்[1] கானத்தே**
**முள்ளாவி வாட்டு முருவு**

இதனுள் வெண்டிங்கள் போலுஞ் சங்கு போலும் தாழைப்பூ வென்றுவமைக்குவமை சொன்னமையான் 'அடுத்துவரல்' என்னும் அலங்காரக் குற்றமாயிற்று. என்னை;

**உவமைக் குவமை யில்லென மொழிப**

என்றாராகலின்.

இனி யானந்தம் அறுவகைப்படும். என்னை;

**உறுபுகழ் மரபின் உயர்ந்தோர் கூறிய**
**அறுவகை மரபின ஆனந் தம்மே**

---

அவற்றுள் எழுத்துக் குற்றமாவன...........யாப்புக் குற்றமாயிற்று.* என்பது வரையுள்ள இப்பகுதி இச்சுவடிப்பிரதியில் காணப்படுகிறது. பிற அச்சுப் பிரதிகளில் இடம்பெறவில்லை. .1. கருங்குழிசூழ்

அவைதாம்

எழுத்தினெறி[1] திரிந்த எழுத்தா னந்தமுஞ்
சொன்னெறி திரிந்த[2] சொல்லா னந்தமும்
பொருநெறி[3] திரிந்த பொருளா னந்தமும்
யாப்புநிலை திரிந்த யாப்பா னந்தமும்
தூக்குநிலை[4] திரிந்த தூக்கா னந்தமுந்
தொடைநிலை[5] திரிந்த தொடையானந்தமுந்
நடைநெறி புலவர் நாட்டிய வகையே

*(யா. வி. சூ. 96 உரைமேற்.)*

எனக்கொள்க. அவற்றுள் சில வருமாறு.

### நேரிசை வெண்பா

ஆழி இழைப்பப் பகல்போம் இரவரின்
தோழி துணையாத் துயர்தீரும் – வாழி
நறுமாலை தாராய் திரையவோஒ என்னுஞ்
செறுமாலை சென்றடைந்த போழ்து

*(யா. வி. சூ. 4 உரைமேற்.)*

இது பொய்கையார் வாக்கு.

இதனுள் 'திரையவோஒ' என்று இயற்பெயரைச் சார்ந்து அளபெழுந்தமையால் எழுத்தானந்தம்.

என்னை;

இயற்பெயர் சார்த்தி எழுத்தள பெழினே
இயற்ப டில் லா எழுத்தா னந்தமே

*(யா. வி. சூ.96 உரைமேற்.)*

[இயற்பெயர் சார்த்தி – யெருத்தளை பெழினே
இயற்பா டில்லா எழுத்தா நந்தம்]

என்றார் அகத்தியர்.

1. இயனெறி, 2. சொன்னெறி வழிஇய, 3. புகழ்ச்சிநிலை, 4. தூக்குநெறி, 5.தொடை நெறி.

சொல்லானந்தம் வருமாறு.

### நேரிசை வெண்பா

என்னிற் பொலிந்த திவண்முகம் என்றெண்ணித்
தன்னிற் குறைபடுப்பான் தண்மதியம் - மின்னி
விரிந்திலங்கு வெண்குடைச் செங்கோல் விசயன்
எரிந்திலங்கு வேலின் எழும்

இதனுள் பாட்டுடைத் தலைமகன் மேல் எரிந்தது என்னும் சொல் புணர்ந்தமையால் சொல்லானந்தம். என்னை;

இயற்பெயர் மருங்கின் மங்கலம் அழியத்
தொழிற்சொற் புணர்ப்பினது சொல்லா னந்தம்

*(யா. வி. சூ. 96 உரைமேற்கோள்கள்)*

என்றாராகலின்.

கைக்கோண் மறந்த கருவிரன் மந்தி
அருவிடர் வீழ்ந்ததன் கல்லாப் பார்ப்பிற்கு
முறிமே யாக்கைக் கிளையொடு நுவன்றிச்
சிறுமை யுற்ற களையாப் பூசல்

*(மலைபடு-311-14)*

இதனுள் ஐந்திணைக்குரிய பொருளை .......யிகழ்வுபடச் சொன்னமையா னிதுவும் பொருளானந்தம். என்னை;

இறைச்சிப் பொருளை ஊறுபடக் கிளப்பினும்
புகழ்ச்சிக் கிளவியிற் பொருந்தா கூறலும்
உவமைக் காட்சியின் ஊனம் தோன்றினும்
இவையல பிறவும் இன்னவை வரினே
அவையென மொழிப பொருளா னந்தம்

*(யா. வி. சூ. 96 உரைமேற்.)*

என்றார் அகத்தியனார்.

பிறவானந்தங்களும் வரக் கண்டுகொள்க.*

---

கைக்கோள்......வரக் கண்டுகொள்க.* என்பது வரையுள்ள இப்பகுதி இச்சுவடிப் பிரதியில் மட்டுமே காணப்படுகிறது. பிற அச்சுப்பிரதிகளில் காணப்படவில்லை.

இனியலங்காரக் குற்றத்தில் சில வரலாறு:-

### நேரிசை வெண்பா

இந்திரனே போலு இளஞ்சாத்தன் சாத்தற்கு
மந்திரமே போன்றிலங்கு மல்லாகம் – மந்திரத்துத்
தாழருவி போன்றுளது தார்மாலை அம்மாலை
ஏழுலகு நாறும் இணர்[1]

(யா. வி. சூ. 96 உரைமேற்.)

இதனுள் சாத்தன் என்னும் கீழ்மகனை அரசரை உவமித்தாற் போல உவமித்தது. இதனுள் இளஞ்சாத்தனை யிந்திரனோடு மந்திரத் தொடுங்குல மன்னராயுவமித்தாற் போலவன் பொறுக்கலாகா வண்ணம் வுவமித்தமையா னிளஞ்சாத்தற்குப் பரிக்கலாகா வண்ணம் இறப்ப உயர்த்திச் சொன்னமையான் ஆனந்த வுவமை யென்னும் அலங்காரக் குற்றமாயிற்று.

### நேரிசை வெண்பா

[வள்ளெற்றுப் பேழ்வாய் ஞமலிக்கு மான்குழாம்
எள்ளி இரிந்தாற்போல் எவ்வழியும்-வள்ளற்கு
மாலார் கடலன்ன மண்பரந்த வாட்டானை
மேலாரு மேலார் விரைந்து

(யா. வி. சூ. 96 உரைமேற்.)

இதனுட் புலியினோடு உவமிக்கப்படுகின்ற தலைமகனாகிய வீரனோடு நாயை உவமித்தமையால் இறப்ப இழிந்த ஆநந்த உவமை.] என்னை;

இறப்ப உயரினும் இறப்ப இழியினும்
அறத்தகை வழீஇய ஆனந்த உவமை

(நவநீதப். அணி. 105 உரைமேற்.)

என்றாராகலின்.

---

1. இனிது

இனியெல்லாக் குற்றமுந் தீர்ந்த செய்யுள் வருமாறு.

தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த செஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றா லுங்கே

*(குறுந்தொகை-கடவுள் வாழ்த்து)*

(9)

## ஒழிபியல் செய்யுட்களின் முதனினைப்புக் காரிகை

உ.ஆ.16.சீரோடு விட்டிசை மாஞ்சீ ரியற்றளை சேர்ந்தருகி
வாரடர் கொங்கை வருக்கஞ் சுருங்கிற்று
வான்பொருளுஞ்
சீரிய தூங்கேந் தடுக்குச் சிறந்த வெழுத்துமன்றே
ஆரு மொழியியற் பாட்டின் முதனினைப் பாகுமன்றே

இருபது பதினைந்து ஒன்பது காரிகை உறுப்பியல் செய்யுளியல் ஒழிபியல் ஒத்தே. (1)

ஒழிபியல் முற்றும்.

*யாப்பருங்கலக் காரிகை குணசாகரர் உரையுடன் முற்றும்.*

---

குறிப்பு:- வயித்தயநாத பண்டாரம் படிப்பித்தள் புவனிவிடங்கன் ஏடு. புவனி விடங்கன் எழுத்து. அகோரமூர்த்தியுடைய புண்ணியம். கம்மாலையம்மை துணை.

## பின்னிணைப்பு -1

[பிற்காலத்தே பயின்று வழங்கும் கட்டளைக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை என்னும் செய்யுட்களுக்கு இந்நூலில் இலக்கணம் கூறப்பட்டில ஆதலின், அவற்றின் இலக்கணத்தை ஈண்டுத் தருதும்.

### கட்டளைக் கலிப்பா

மாச்சீர் முன்வரு நாற்சீ ரடியே
நேர்முதல் நிரைமுதல் நிரனிறை யானே
பதினோ ரெழுத்தும் பன்னீ ரெழுத்தும்
இயைந்து யடியாய் நடந்தஃ திரட்டித்து
ஒத்துநான் கிறுவது கட்டளைக் கலிப்பா

முதற்சீர் மாச்சீரும் பின் மூன்று சீரும் கூடியது அரையடியும், அவ்வாறே பின்வரும் நான்குசீர் கூடியது அரையடியும், ஆக அமைந்த எண்சீரடி நான்குடைத்தாய் முதலசை நேரசையாயின் அரையடிக்கெழுத்துப் பதினொன்றும் நிரையசையாயின் பன்னிரண்டும் பெற்று ஏகாரத்தால் முடிவது கட்டளைக் கலிப்பா. இஃது எழுத்தளவைப் பெறுதலால் கட்டளைக் கலிப்பா எனப் பட்டது. முதற்சீர் மாச்சீரும் ஏனை மூன்றும் கூவிளச் சீருமாக வருவது பெரும்பான்மை. 'மாஞ்சீர் கலியுட்புகா' என்ற இலக்கணம் இதற்கு விலக்கு.

### உதாரணம்

"இல்லை என்ப திலையோர் மருங்கிலே
எவ்வ றங்களும் உண்டோர் மருங்கிலே
கொல்லு கின்றது எழுதருங் கூற்றமே
கூறு மாற்றம் எழுதருங் கூற்றமே
வில்லு மேற்றிடு நாணும்பொன் னாகமே
விடுகணைக் குண்டு நாணும்பொன் னாகமே
மல்லன் மார்பின் மணிமுத்த மென்பதே
வாச மையர்க்கு மணிமுத்த மென்பதே"

"படுத்த பாயுட னேபிணி மூழ்கினும்
பல்விழுந்து நரைத்தற மூப்பினும்
அடுத்தது இங்கிவர்க் கேபெரு வாழ்வெனும்
அப்பெ ரும்பதி என்பதி என்பிரேல்

விடுத்து விட்டுஇந் திரதிரு வும்புவி
வெண்கு டைக்குள் இடுமர சாட்சியும்
கடுத்த தும்புகள் அத்தரைத் தேடுவார்
காத லித்துவ ரும்திருக் காசியே”

*-காசிக்கலம்பகம்*

### கட்டளைக் கலித்துறை

அடியடி தோறும் ஐஞ்சீ ராகி
முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்
கடையொரு சீரும் விளங்கா யாகி
நேர்பதி னாறே நிரைபதி னேழென்று
ஓதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே

*ஐஞ்சீரடி நான்காய் ஒவ்வோர் அடியினும் முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாமல் இருக்க, இறுதிச்சீர் கூவிளங்காய், கருவிளங்காய் என்பனவற்றுள் ஒன்றினைப் பெற்று, முதற்சீரின் முதலசை நேராயின் ஒரடிக்கெழுத்துப் பதினாறும், நிரையாயின் பதினேழும் உடைத்தாய் ஏகாரத்தான் முடிவது கட்டளைக் கலித்துறையாகும். இஃதும் எழுத்தளவைப் பெறுதலால் போந்த பெயர். கோவைக் கலித்துறை, திலகக்கலித்துறை என்பன இதன் வேறு பெயர்கள். அப்பர் திருவிருத்தமும், நம்மாழ்வார் திருவிருத்தமும் இக்கலித்துறையான் அமைந்தன ஆகலின், இதற்கு விருத்தம் என்னும் பெயரும் உண்மை புலனாகின்றது.*

“அற்றாரைத் தாங்கிய வைவேல் அசதி அணிவரைமேல்
முற்றா முகிழ்முலை எவ்வாறு சென்றனள் முத்தமிழ்நூல்
கற்றார் பிரிவும்கல் லாதார் இணக்கமும் கைப்பொருளொன்
றற்றார் இளமையும் போலக் கொதிக்கும் அருஞ்சுரமே.”

*-அசதிக்கோவை*

“கரும்புஞ் சுரும்பும் அரும்பும் பொருபடைக் காமர்வில்வேள்
இரும்பும் கரைந்துரு கச்செய்யு மாலிறும் பூதுஇதுஅன்றே
விரும்பும் பெரும்புலி யூர்எம்பி ரானருள் மேவிலொரு
துரும்பும் படைத்தழிக் கும்அகி லாண்டத் தொகுதியையே.”

*-சிதம்பரச்செய்யுட்கோவை]*

## பின்னிணைப்பு-2

### உரையாசிரியரால் நூலின் அளவாகத் தற்சிறப்புப் பாயிரத்தில் சுட்டப்பட்டுள்ள எழுத்தெண்ணிக்கை இயல்கள் வாரியான விவரப்பட்டியல்.

| இயலின் பெயர் | காரிகைகளின் தொடக்கஅசை | | இவ்விரு காரிகைகளின் எண்ணிக்கை | காரிகைகளின் எழுத்து எண்ணிக்கை | | இவ்விரு காரிகைகளின் மொத்த எண்ணிக்கை | கிரந்த எண்ணிக்கை | மீதி எழுத்துக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | நேரசை | நிரையசை | | நேரசை | நிரையசை | | | |
| உறுப்பியல் | 11 | 09 | 20 | 704 | 612 | 1316 | 41 | 04 |
| செய்யுளியல் | 07 | 08 | 15 | 448 | 544 | 992 | 31 | — |
| ஒழிபியல் | 03 | 06 | 09 | 192 | 408 | 600 | 18 | 24 |
| மொத்தம் | 21 | 23 | 44 | 1344 | 1564 | 2908 | 90 | 28 |

## பின்னிணைப்பு-3

### உரையாசிரியர் குணசாகரரின் உரைச் சூத்திரக் காரிகைகளின் அளவு எண்ணிக்கை இயல்கள் வாரியான விவரப்பட்டியல்.

| இயலின் பெயர் | காரிகைகளின் தொடக்கஅசை | | இவ்விரு காரிகைகளின் எண்ணிக்கை | காரிகைகளின் எழுத்து எண்ணிக்கை | | இவ்விரு காரிகைகளின் மொத்த எண்ணிக்கை | கிரந்த எண்ணிக்கை | மீதி எழுத்துக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | நேரசை | நிரையசை | | நேரசை | நிரையசை | | | |
| உறுப்பியல் | 01 | --- | 01 | 64 | --- | 1316 | 02 | --- |
| செய்யுளியல் | 11 | 03 | 14 | 704 | 204 | 908 | 28 | 12 |
| ஒழிபியல் | 01 | — | 01 | 64 | --- | 64 | 02 | — |
| மொத்தம் | 13 | 03 | 16 | 832 | 204 | 1036 | 32 | 12 |

## பின்னிணைப்பு - 4
## யாப்பருங்கலக்காரிகை உறுப்பியல்
## அகரவரிசை

| வ.எண். | உறுப்பியல் காரிகைகளின் அகரவரிசை | காரிகைகளின் தொடக்க அசை | | காரிகை பக்க எண். | பக்க எண். |
|---|---|---|---|---|---|
| | | நேரசை | நிரையசை | | |
| 1 | அந்தம் முதலா | 1 | -- | 17 | 57 |
| 2 | அறத்தாறு இதுவென | -- | 1 | 15 | 51 |
| 3. | இருசீர்மிசையிணை | -- | 2 | 19 | 63 |
| 4 | ஈரசை நாற்சீர் | 2 | -- | 06 | 27 |
| 5 | எழுவாய்எழுத்தொன்றின் | -- | 3 | 16 | 54 |
| 6 | கந்தம் மடிவில் (தற்சிறப்புப் பாயிரம்) | 3 | -- | 01 | 2 |
| 7 | குறள் இருசீரடி | -- | 4 | 12 | 43 |
| 8 | குறிலே நெடிலே | -- | 5 | 05 | 24 |
| 9 | குறில் நெடில் ஆவி | -- | 6 | 04 | 11 |
| 10 | குன்றக்குறவன் | 4 | -- | 09 | 33 |
| 11 | சுருக்கமில் (அவையடக்கம்) | -- | 7 | 03 | 9 |
| 12 | தன்சீர்தனதொன்றின் | 5 | -- | 10 | 37 |
| 13 | தண்ணிழல்தண்பூ | 6 | -- | 08 | 30 |
| 14 | திருமழை உள்ளார் | -- | 8 | 11 | 40 |
| 15 | திரைத்த விருது | -- | 9 | 13 | 44 |
| 16 | தேமா புளிமா | 7 | -- | 07 | 29 |
| 17 | தேனார் கமழ் (அவையடக்கம்) | 8 | -- | 02 | 8 |
| 18 | மாவும் புள்ளும் | 9 | -- | 18 | 59 |
| 19 | மோனை விகற்பம் | 10 | -- | 20 | 65 |
| 20 | வெள்ளைக்கிரண்டடி | 11 | -- | 14 | 49 |

## பின்னிணைப்பு - 5
## யாப்பருங்கலக்காரிகை செய்யுளியல்
## அகரவரிசை

| வ.எண். | செய்யுளியல் காரிகைகளின் அகரவரிசை | காரிகைகளின் தொடக்க அசை | | காரிகை எண். | பக்க எண். |
|---|---|---|---|---|---|
| | | நேரசை | நிரையசை | | |
| 1 | அசையடி முன்னர் | -- | 1 | 31 | 131 |
| 2 | அடிவரையின்றி | -- | 2 | 33 | 148 |
| 3. | அந்தமில் பாதம் | 1 | -- | 26 | 99 |
| 4 | ஈரடி வெண்பா | 2 | -- | 23 | 82 |
| 5 | ஒன்றும் பலவும் | 3 | -- | 24 | 88 |
| 6 | கடையயற்பாதம் | -- | 3 | 28 | 110 |
| 7 | குறளடி நான்கின | -- | 4 | 34 | 153 |
| 8 | தரவேதரவிணை | -- | 5 | 32 | 138 |
| 9 | தரவொன்றுதாழிசை | -- | 6 | 30 | 122 |
| 10 | தருக்கியல் தாழிசை | -- | 7 | 29 | 115 |
| 11 | நேரிசை இன்னிசை | 4 | -- | 25 | 93 |
| 12 | பண்பார் புறநிலை | 5 | -- | 35 | 158 |
| 13 | மூன்றடியானும் | 6 | -- | 27 | 103 |
| 14 | வளம்பட என்பது | -- | 8 | 22 | 78 |
| 15 | வெண்பா அகவல் | 7 | -- | 21 | 72 |

## பின்னிணைப்பு - 6
## யாப்பருங்கலக்காரிகை ஒழிபியல்
## அகரவரிசை

| வ.எண். | ஒழிபியல் காரிகைகளின் அகரவரிசை | காரிகைகளின் தொடக்க அசை | | காரிகை எண். | பக்க எண். |
|---|---|---|---|---|---|
| | | நேரசை | நிரையசை | | |
| 1 | அருகிக்கலியோடு | -- | 1 | 40 | 188 |
| 2 | இயற்றளை வெள்ளடி | -- | 2 | 39 | 183 |
| 3. | எழுத்து பதின்மூன்றின் | -- | 3 | 44 | 251 |
| 4 | சீரும் தளையும் | 1 | -- | 36 | 167 |
| 5 | சுருங்கிற்று | -- | 4 | 42 | 206 |
| 6 | பொருளொடடிமுதல் | -- | 5 | 43 | 207 |
| 7 | மாஞ்சீர் கலியுட் | 2 | -- | 38 | 178 |
| 8 | வருக்க நெடிலினம் | -- | 6 | 41 | 193 |
| 9 | விட்டிசைத்து | 3 | -- | 37 | 174 |

## பின்னிணைப்பு - 7
## உரைச்சூத்திரக்காரிகைகளின்
## அகரவரிசை பட்டியல்

| வ.எண். | உரைச்சூத்திரக் காரிகைகளின் அகரவரிசை | தொடக்க அசை | | காரிகை எண். | இயல் | பக்க எண் |
|---|---|---|---|---|---|---|
| | | நேரசை | நிரையசை | | | |
| 1 | உருவு கண்டு | -- | 1 | 02 | செய் | 87 |
| 2 | கந்தமும் தேனுஞ் | 1 | -- | 01 | உறுப் | 69 |
| 3. | கன்று குணில் | 2 | -- | 08 | செய் | 121 |
| 4 | குடநிலைத்தண் | -- | 2 | 11 | செய் | 148 |
| 5 | கொண்டல் முழங்கின | 3 | -- | 06 | செய் | 109 |
| 6 | கொய்தினையாய்தினை | 4 | -- | 12 | செய் | 152 |
| 7 | சீரோடு விட்டிசை | 5 | -- | 16 | ஒழிபி | 262 |
| 8 | தென்றலிடையும் | 6 | -- | 14 | செய் | 165 |
| 9 | நற்கொற்றவாயில் | 7 | -- | 04 | செய் | 95 |
| 10 | நின்று விளங்கு | 8 | -- | 10 | செய் | 137 |
| 11 | நேரிசை யாகும் | 9 | -- | 07 | செய் | 115 |
| 12 | மடப்பிடிபேடை | -- | 3 | 13 | செய் | 157 |
| 13 | மாவாழ் புலிவாழ் | 10 | -- | 05 | செய் | 99 |
| 14 | வாள் நெடுங்கண் | 11 | -- | 09 | செய் | 130 |
| 15 | வைகலும் வைகல் | 12 | -- | 03 | செய் | 93 |
| 16 | வெண்பா வளம்பட | 13 | -- | 15 | செய் | 165 |

# சரசுவதி மகால் நூலக வெளியீடுகள்

| | |
|---|---|
| தமிழ் எண்ணும் எழுத்தும் | 150-00 |
| தமிழ் ஆய்வுக் கடடுரைகள்-1 | 100-00 |
| தமிழ் ஆய்வுக் கட்டுரைகள்-2 | 150-00 |
| சரபேந்திர பூபால குறவஞ்சி | 100-00 |
| தமிழறி மடந்தை கதை | 80-00 |
| அறப்பளீசுர சதகம் | 150-00 |
| திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் | 160-00 |
| தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு | 450-00 |
| பாபநாச க்ஷேத்திர மகாத்மியம் | 250-00 |
| கணபதி உபாசனை | 120-00 |
| தல வரலாற்று ஆய்வுக்கட்டுரைகள் | 180-00 |
| காலவிதான பத்ததி | 150-00 |
| காலப்பிரகாசிகை | 250-00 |
| பலதிரட்டு வைத்தியம் | 140-00 |
| அகத்தியர் ஆயுர்வேத சாத்திரம் | 400-00 |
| வைத்திய பலதிரட்டு | 200-00 |
| மகாமகம் - 2016 சிறப்பு மலர் | 250-00 |
| அருணாசல புராணம் | 150-00 |
| மதுரைவீரன் அம்மானை | 120-00 |
| கர்ப்பிணி பால ரோக சிகிச்சை | 300-00 |
| சரநூல் | 200-00 |
| சிற்ப ரத்தினம் | 500-00 |
| நட்சத்திர சிந்தாமணி பாகம்-1 | 310-00 |
| நடசத்திர சிந்தாமணி பாகம்-2 | 200-00 |
| நடசத்திர சிந்தாமணி பாகம்-3 | 250-00 |
| வராகர் ஓரா சாத்திரம் | 500-00 |
| அகத்தியர் லோக மாரணம் | 150-00 |
| நீதித்திரட்டு | 600-00 |
| காலவிதான பத்ததி | 150-00 |
| கார்த்தவீர்யார்ஜுன-உபாஸ-பத்ததி | 100-00 |
| நீதி நூல் | 100-00 |

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், மருத்துவக் குறிப்புகளையும், இன்ன பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. அச்சுவடிகள் பழுதடைவதற்குள் சரசுவதி மகால் நூலகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பெரிதும் பயன்படும்.

இந்நூலகத்திற்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் நூலகம் உள்ளளவும் பெறுவர். அவை நூல் வடிவில் பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு. அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகால் நூலகத்திற்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்

இயக்குநர்,

சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம்,

தஞ்சாவூர்.



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரஸ்வதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்

8573